

மொழியே தானே மூச்சு
மொழியே தானே உணர்வு
மொரியே தானே வாழ்வு
மொழியே தானே இன்பம்

மொழியே தானே மனிதன்
மொழியே தானே வழிகள்
மொழியே தானே உலகம்
மொழியின் றேல்நாம் யாரோ?

- பாவேந்தர்

**தமிழைத் தாபிப்போம் வாரீர் !**

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்,
இலவச நூற்கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந் தோமில்லை.
தகத்தாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

- பாவேந்தர்

அமிழ்தம் பதிப்பகம்
எ4, மாதவ் குடியிருப்பு
5, டாக்டர் தாமசு சாலை
தியாகராயர் நகர்
சென்னை – 600 017

ந.சி.க. நூல் திரட்டு 9

# நமது மொழி நமது நாடு

ந.சி.க
நூல்திரட்டு
9

அமிழ்தம் பதிப்பகம்

# நமது மொழி நமது நாடு

## நமது தாய்மொழி – திராவிட மொழிகளும் இந்தியும் – தமிழ்ப் பழமையும் புதுமையும் – முச்சங்கம்

*ஆசிரியர்*

**ந.சி. கந்தையா**

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **நமதுமொழி நமது நாடு — திரட்டு 9** |
| ஆசிரியர் | : | **ந.சி. கந்தையா** |
| பதிப்பாளர் | : | **கோ. இளவழகன்** |
| முதல் பதிப்பு | : | 2003 |
| இரண்டாம் பதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16.0 கி. மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 12 + 236 = 248 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 230/- |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | பிரேம் |
| அச்சு | : | வெங்கடேசுவரா ஆப்செட்<br>20 அஜீஸ் முல்க் 5வது தெரு<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006 |
| கட்டமைப்பு | : | இயல்பு |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2 சிங்கார வேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 90304. |

## பதிப்புரை

*ந.சி. கந்தையா 1893இல் தமிழீழ மண்ணில் நவாலியூர் என்னும் ஊரில் பிறந்தவர். பிறந்த ஊரிலேயே பள்ளிப்படிப்பை முடித்து அவ்வூரிலேயே ஆசிரியப் பணியாற்றியவர். பின்னர் மலேசிய மண்ணில் சிலகாலம் தொடர்வண்டித் துறையில் பணியாற்றியுள்ளார். இவர் தமிழ் ஈழ மண்ணில் பிறந்திருந்தாலும் தமிழகத்தில் இருந்துதான் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்க்கும் நூல்கள் பல எழுதினார் என்று தெரிகிறது.*

*"குமரிநாட்டின் தமிழினப் பெருமையை நிமிரச் செய்தான்," "சிந்தையும் செயலும் செந்தமிழுக்கு சேர்த்த நூல் ஒன்றா இரண்டலா" என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் போற்றப்பட்ட தமிழீழ அறிஞர் **ந.சி. கந்தையா**வின் நூல்களை கடந்த 2003 இல் வெளியிட்டு தமிழ் உலகிற்கு வளம் சேர்க்கும் பணியைச் செய்தோம்.*

*தமிழுக்கும் - தமிழினத்துக்கும் தொண்டாற்றிய அறிஞர்களில் **ந.சி. கந்தையா** குறிப்பிடத்தக்கவர். தன்னை முன்னிலைப் படுத்தாது மொழியையும் இனத்தையும் முன்னிலைப்படுத்திய பெருமைக்குரியவர். உலகமொழிகளுள் தமிழ்மொழி தொன்மை மிக்கது. உலகமொழிகளுக்கு வேராகவும் சாறாகவும் அமைந்தது. தமிழர் சமயமும், கலையும், பண்பாடும், வரலாறும், தமிழன் கண்ட அறிவியலும் உலகுக்கு முன்னோடியாகத் திகழ்வன. இவற்றையெல்லாம் தம் நுண்ணறிவால் கண்டறிந்து பல நூல்களை யாத்தவர்.*

*தமிழியம் பற்றிய ஆய்வை ஆராய்ந்த அறிஞர்கள் பலருளர். இவர்கள் அனைவரும் கலை, இலக்கியம், சமயம், மொழி, வரலாறு, நாகரிகம், பண்பாடு போன்ற பல துறைகளில் பங்காற்றியுள்ளனர். ஆனால் நசி.க இத் துறைகளில் மட்டுமன்றிப்*

பொது அறிவுத் துறையிலும் புகுந்து புத்தாக்கச் செய்திகளைத் தமிழ் உலகிற்குக் கொடுத்தவர். இவருடைய மொழிபெயர்ப்பு படிப்பாரை ஈர்க்கக் கூடியவை: படித்தலின் நோக்கம் பற்றியும் பல்வேறு பொருள் பற்றியும் கூறுபவை. தமிழ் அகராதித் துறையில் இவர் எழுதிய **காலக்குறிப்பு அகராதி** தமிழ் உலகிற்குப் புதுவரவாய் அமைந்தது.

நிறைதமிழ் அறிஞர் மறைமலை அடிகளும், தமிழ் மலையாம் தேவநேயப் பாவாணரும் தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்க்கத்தக்க நூல்களைத் தமிழர்களுக்கு வைப்பாக எழுதிச் சென்றுளவர்கள். அந்த வரிசையில் இவர் தம் நூல்களின் வரிசையும் அடங்கும்.

கழகக் காலச்செய்திகளைப் படித்துப் பொருள் புரிந்து கொள்வது பலருக்குக் கடினமாக இருந்தது. இவற்றை எளிதில் படித்துப் பொருள் புரியும் உரைநடைப் போக்கை முதன்முதலில் கையாண்டவர். இவரது மொழிநடை, கருத்துக்கு முதனமை தருபவை. உரைநடை, எளிமையும் தெளிவும் உடையது. சிறுசிறு வாக்கிய அமைப்பில் தெளிந்த நீரோடை போன்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தென்னகம் பெற்றிருந்த நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளைக் கண்ணுக்கு காட்சியாகவும் படிப்பாரின் கருத்துக்கு விருந்தாகவும் அளித்தவர்.

1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் காலம் தொட்டு இவர் வாழ்ந்த காலம் வரை தமிழரின் வரலாற்றுச் சுவடுகளை நுட்பமாக ஆராய்ந்துள்ளார். தமிழும் சிவநெறியும் ஓங்கியிருந்தது - தாயாட்சிக் காலம் முதன்மை பெற்றிருந்தது. மொழியின் தோற்றம், சமற்கிருதம் எப்படித் தோன்றியது - ஆரியர் யார் - இவர்கள் இந்தியாவிற்கு எப்படி வந்தனர் - தமிழரோடு எவ்வாறு கலப்புற்றனர் - ஆதிமக்களின் தோற்றமும், பிறப்பும் - இந்திய மண்ணில் வேரூன்றிய வரலாறு ஆரியத்தால் தமிழுக்கு நேர்ந்த கேடுகள் - திருவள்ளுவர் குறித்த கதைகள் - வள்ளுவச் சமயம் - பண்டைய நாகரிக நாடுகள் - அந்நாடுகளில் பெண்களைப் பற்றிய நிலை - அகத்தியர் பற்றிய பழங்கதைகள் - திராவிட மொழிகள் பற்றிய குறிப்புகள் - உலகநாடுகளில் தமிழர் நாகரிகச் சுவடுகள் - திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் - ஐவகை நிலங்கள்,

பாகுபாடுகள் - பழக்கவழக்கங்கள் - சிந்துவெளி நாகரிக மேன்மை - புத்தரின் பிறப்பு -அவரைப் பற்றிய கதைகள் - இராமகாதை பற்றிய செய்திகள் - தென்னவரின் குலங்கள், குடிகள் - வடவரின் குலங்கள், குடிகள் - தமிழின் பழமை - தமிழக எல்லை அமைப்பு - பண்டைக்கால கல்வி முறை, வேதங்கள், வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் - நீர்வழி, நிலவழி வணிகம் சிறந்தோங்கிய நிலை - மலைவழி, கடல்வழி, நிலவழி பொருள்கள் நிரம்பிய காலம் - சுற்றம் தழைக்க வாழ்ந்த நிலை - தமிழ வணிகர், வேற்று நாட்டு வணிகருடன் தொடர்பு கொண்டு மிக்கோங்கியிருந்த காலம் - வான நூல் கலையும், சிற்பக் கலையும், கட்டடக் கலையும், இசைக்கலையும் சிறந்திருந்த காலம். பிறமொழி கலப்பற்ற தூய தமிழ் பெருகியிருந்த காலம் - உலக நாகரிகங்களுக்குத் தமிழர் நாகரிகம் நாற்றங்கால் - உலகப் பண்பாடுகளுக்குத் தமிழர் பண்பாடு தொட்டிலாக இருந்தமை காலம் அகராதிகள் - அறிவுத் தேடலுக்குரிய செய்திகள் - இவர்தம் நூல்களில் கொட்டிக்கிடக்கின்றன.

பழம்பெரும் மொழிகள் பல மாண்டும் சில காப்பக மொழிகளாகவும் அறிஞர்களின் பார்வை மொழிகளாகவும் இருந்து வரும் இக் காலத்தில் இன்றளவும் இளமை குன்றா வளம் நிறைந்த மொழியாக வாழும் மொழி தமிழ் மொழி தாய்மொழியாம் தமிழ்மொழி இன்று ஆட்சிமொழியாக, அலுவல் மொழியாக, இசைமொழியாக, கல்வி மொழியாக, அறமன்ற மொழியாக, வழிபாட்டு மொழியாக, குடும்ப மொழியாக இல்லாதது வெட்கப்படத்தக்க நிலையாக உள்ளது தாய்மொழியின் சிறப்பைப் புறந்தள்ளி வேற்றுமொழியைத் தூக்கிப் பிடிக்கும் அவல நிலை மிகுந்துள்ளது. முகத்தை இழந்த மாந்தன் உயிர்வாழ முடியாது. மொழியை இழந்த இனம் இருந்த இடம் தெரியாமல் அழியும் இது உலக வரலாறு காட்டும் உண்மை.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமெனில் மொழியை அழித்தால் போதும் உலக மக்களெல்லாம் தம் கையெழுத்தைத் தம் தாய்மொழியில் போடுவதைப் பெருமையாகக் கொள்வர். ஆனால் தமிர் மண்ணின் நிலையோ? எங்கணும் காணாத அவலம்

*நிறைந்தது. மொழியையும் இனத்தையும் உயர்வாகக் கருதிய இனங்கள் உலக அரங்கில் உயர்ந்து நிற்கும் உன்னதத்தையும், தாழ்வாகக் கருதிய இனங்கள் உலக அரங்கில் தாழ்வுற்று இருப்பதையும் பொறுப்பற்று இருக்கும் தமிழர்கள் இனியேனும் அறிவார்களா?*

*உடம்பு நோகாமல் கை நகத்தின் கண்களில் அழுக்குப் படாமல் தமிழகக் கோயில்களைச் சாளரமாகக் கொண்டு வாழும் கூட்டத்தால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் விளைந்த சீரழிவை இற்றைத் தலைமுறை அறிதல் வேண்டும். மறுமலர்ச்சிக்கும் உரிமைப் போருக்கும் உன்னத எழுச்சிக்கும் அந்தந்த நாடுகளில் இளைஞர்கள் முன்னெடுத்துச் சென்ற வரலாறு நம் கண்முன்னே காட்சியாகத் தெரிகிறது.*

*அயர்லாந்து, செருமனி, துருக்கி, சப்பானின் நாடுகளின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் - தமிழ் இளைஞர்கள் படிக்கவேண்டும் நம்நாட்டின் உயர்வுக்கு உழைக்க முன்வரவேண்டும் என்பதை நெஞ்சில் கொண்டு 2003 ஆம் ஆண்டில் வெளிவந்த இவ்வருந்தமிழ்ப் புதையலை தமிழ் மக்கள் நலன் கருதி 2009இல் மீள் பதிப்பாக வெளியிடுகிறோம். தமிழர்கள் நம்முன்னோரின் காலடிச் சுவடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள். இன்றைய தமிழர் நிலையை எண்ணிப்பாருங்கள். தமிழ் -தமிழர் நிலையை உயர்த்த முன்வாருங்கள்.*

**- பதிப்பாளர்.**

# தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் வாழ்வும் தொண்டும் (1893 - 1967)

*தமிழ்மொழியின் தொன்மையை அதன் தனித் தன்மையை உலக மொழிகளோடு ஒப்பிட்டு விரிவாக ஆய்வு செய்தவர் தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள். தமிழ் இனத்தின் மேன்மையை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்தவரும் அவரே.*

***'தொண்டு செய்வாய்! தமிழுக்குத்***
***துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே'***

*என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார். புரட்சிக் கவிஞரின் கனவை நினைவாக்கும் வகையில், தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் தமிழின் துறைதோறும் துறைதோறும் அரிய ஆய்வு நூல்களை எழுதியவர். தமது நூல்களின் வாயிலாக வீழ்ச்சியுற்ற தமிழினத்தை எழுச்சி பெறச் செய்தவர்.*

*ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் தமிழ்ப் பணியோ மலையினும் மாணப் பெரியது. ஆயினும் அவருடைய வாழ்க்கைப் பதிவுகளாக நமக்குக் கிடைப்பன தினையளவே யாகும். தமிழர்கள் அந்த மாமனிதரின் தமிழ்ப் பணியைக் கூர்ந்து அறிந்து தக்க வகையில் அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்யத் தவறி விட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது. இன்று அவருடைய வாழ்கைக் குறிப்புகளாக நமக்குக் கிடைப்பன மிகச் சிலவாகும். அவை:-*

*தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் ஈழ நாட்டில் கந்தரோடை என்னும் ஊரில் 1893 ஆம் ஆண்டில் திரு நன்னியர் சின்னத்தம்பி என்பாரின் புதல்வராய்ப் பிறந்தார். தக்க ஆசிரியரிடம் பயின்று கல்வியில் தேர்ந்தார். பின்னர் கந்தரோடை என்னும் ஊரில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். ஆசிரியர் பணியிலிருக்கும் போதே தக்க பெரும் புலவர்களைத் தேடிச் சென்று தமிழ் இலக்கிய இலக்கணங்கள் முறையாகப் பயின்று பெரும் புலவராய் விளங்கினார். ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்ற வல்லுநராய்த் திகழ்ந்தார். பின்னர் மலேசியா நாட்டிற்குச் சென்று சிறிதுகாலம் புகைவண்டி அலுவலகத்தில் பணியாற்றினார்.*

*ந.சி. கந்தையா பிள்ளையவர்களின் தமிழறிவு ஆழமும் அகலமும் கொண்டது. அவரது வாழ்க்கை முழுமையும் தமிழ் ஆய்வுப் பணியே பெரும் பணியாக அமைந்தது. அவர் பெற்ற ஆங்கில அறிவின் துணையால் தமிழ் மொழி, தமிழினம் தொடர்பான மேலை நாட்டு அறிஞர்களின் நூல்களை யெல்லாம் நுணுகிக் கற்றார் வியக்கத்தக்க கல்விக் கடலாய் விளங்கினார்.*

அறுபதுக்கு மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதினார்.

தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் தாம் எழுதிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்று வேட்கை கொண்டார். இலங்கையில் அதற்குப் போதிய வசதி இல்லை. ஆதலால் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்தார். சென்னையில் "ஒற்றுமை நிலையம்" என்னும் பதிப்பகத்தின் உரிமையாளராய்த் திகழ்ந்தவர் வீரபாகு பிள்ளை என்பவர். அவர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் நூல்கள் சிலவற்றை வெளியிட்டார். பின்னர் முத்தமிழ் நிலையம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆகியவற்றின் வாயிலாக ந.சி. கந்தையா பிள்ளையவர்களின் நூல்கள் வெளிவரலாயின.

ந.சி. கந்தையா பிள்ளையவர்களின் அருமைத் துணைவியார் இரத்தினம்மா எனப்படுபவர். இவருக்குத் திருநாவுக்கரசு என்றொரு மகனும் மங்கையர்க்கரசி என்றொரு மகளாரும் உண்டு. துணைவியார் பல ஆண்டுகளுக்கு முன்பே காலமானார். தமிழ்மொழி, தமிழினம் ஆகியவற்றின் மேன்மைக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை தமது எழுபத்து நான்காம் வயதில் 1967இல் இலங்கையில் மறைந்தார். எனினும் தமிழ் வாழும் வரை அவரது புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

தமிழறிஞர் கந்தையா பிள்ளை அவர்களின் தமிழ்ப்பணி மதிப்பு மிக்கது; காலத்தை வென்று நிலைத்துநிற்க வல்லது. தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, தமிழ்இனம் ஆகியவற்றின் வரலாற்றை எழுதியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு. அவருடைய ஆய்வுப் பணியைச் சிறிது நோக்குவோம்.

**அகராதிப் பணி**

தமிழ் மொழியில் முதன் முதலில் தோன்றிய அகராதி வீரமா முனிவர் எழுதிய சதுரகராதியே யாகும். பின்னர் பல்வேறு அகராதிகள் தோன்றின, வளர்ந்தன, வெளிவந்தன. அகராதி வளர்ச்சிப் பணியில் கந்தையா பிள்ளையவர்களுக்கும் பெரும் பங்குண்டு. அவர் படைத்த அகராதிகள் ஐந்து. 1. செந்தமிழ் அகராதி, 2. தமிழ் இலக்கிய அகராதி, 3. தமிழ்ப் புலவர் அகராதி, 4. திருக்குறள் அகராதி, 5. காலக் குறிப்பு அகராதி என்பன அவை.

ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் செந்தமிழ் அகராதி முன்னுரை யில் "நாம் தமிழ்த் தாய் மொழிக்குச் செய்யும் பணிகளுள் ஒன்றாக இந் நூலைச் செய்து முடித்தோம்" என்கிறார். "நூலொன்றைச் செய்து தமிழுலகுக்கு உதவ வேண்டும் என்னும் ஆவலால் பலவகையில் முயன்று இந் நூலைச் செய்து முடித்தோம்" என்று கூறுகிறார். தமிழ் இலக்கிய அகராதியில் அகத்தியர் முதல் வைராக்கிய தீபம் ஈறாக ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இலக்கியங்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. தமிழ்ப் புலவர் அகராதியில் பல நூற்றுக்கணக்கான தமிழ்ப்புலவர்களைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அவர் தொகுத்த திருக்குறள் சொற் பொருள் அகராதி பயன்பாடு மிக்கது. காலக்குறிப்பு அகராதி புதுமை யானது. தமிழ் மொழியில்

இது போன்ற அகராதி இதுவரை வெளிவந்த தில்லை "இந்நூல் ஓர் அறிவுக் களஞ்சியம்" என்கிறார் முனைவர். மா. இராச மாணிக்கனார்.

### இலக்கியப் பணி

புலவர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த தமிழ் இலக்கியச் செல்வத்தை எளிய மக்களும் படித்துப் பயன் பெறுமாறு உரைநடையில் வழங்கிய வள்ளல் கந்தையா பிள்ளை அவர்கள்.

பத்துப்பாட்டு, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலிங்கத்துப்பரணி, புறப்பொருள் விளக்கம், விறலிவிடுதூது போன்ற இலக்கியச் செல்வங்களை எல்லாம் இனிய எளிய நடையில் உரைநடையில் தந்தவர் கந்தையா பிள்ளை அவர்கள். திருக்குறளுக்கும், நீதிநெறி விளக்கத்திற்கும் அரிய உரை வரைந்தவர்.

### தமிழ்மொழி – தமிழினம்

தமிழ்மொழி - தமிழினம் தொடர்பாகப் பதினைந்துக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதியவர் கந்தையா பிள்ளை. தமிழகம், தமிழ் இந்தியா, தமிழர் சரித்திரம், தமிழர்யார்?, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர், நமதுமொழி, நமதுநாடு, தமிழ் ஆராய்ச்சி, தமிழ் விளக்கம், முச்சங்கம், அகத்தியர், சிந்துவெளி நாகரிகம், தமிழர் பண்பாடு, தமிழர்சமயம் எது? சிவன், சைவ சமய வரலாறு, தமிழ்ப் பழமையும் புதுமையும் போன்ற எண்ணற்ற அரிய ஆயவு நூல்களைப் படைத்தவர். ஆயிரக் கணக்கான நூற்கடலுள் மூழ்கி எடுத்த அரிய கொற்கை முத்துக்கள் அவரது நூல்கள். எத்தனை ஆண்டுகாலப் பேருழைப்பு! நினைத்தால் மலைப்புத் தோன்றும். தமிழின் - தமிழினத்தின் தொன்மையைத் தமிழர்தம் பண்பாட்டை - நாகரிகத்தை, தமிழர்தம் உயர் வாழ்வியலை உலகறியச் செய்த பேரறிஞர் கந்தையா பிள்ளை.

### திராவிட நாகரிகமும் – ஆரியத்தால் விளைந்த கேடும்

தொன்மை மிக்க திராவிட நாகரிகத்தின் சிறப்புகளை விளக்கும் வகையில் பல நூல்களை எழுதினார். அவை:-

திராவிடர் நாகரிகம், திராவிடம் என்றால் என்ன? திராவிட இந்தியா, தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் போன்ற அரிய ஆய்வு நூல்களை எழுதினார். ஆரியர்களால் விளைந்த கேடுகள் குறித்தும், ஆரியர் தமிழர் கலப்பு, ஆரியத்தால் விளைந்த கேடு, புரோகிதர் ஆட்சி, இராமாயணம் நடந்த கதையா? என்பன போன்ற நூல்களை எழுதினார்.

### பிற

மாணவர் தம் அறிவை விரிவு செய்யும் வகையில் எட்டு நூல்களும், மகளிருக்குப் பல்லாண்டுக் காலமாக இழைக்கப்பட்டு வரும் கொடுமைகள் குறித்து மூன்று நூல்களையும் எழுதினார். மேலும் மொழிபெயர்ப்பு நூல்கள் சிலவும் மனித இனத்தோற்றம் குறித்த நூல்கள் சிலவும் எனப் பல நூல்களை எழுதியுள்ளார். புரட்சிக் கவிஞர் கூறியவாறு துறைதோறும், துறைதோறும் எண்ணற்ற நூல்களை எழுதித் தமிழுக்கு வளம் சேர்த்தவர்.

*ந.சி. கந்தையா பிள்ளை. புட்சிக்கவிஞர் பாரதிதாசனார், தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களைப் பற்றிப் பின்வருமாறு பாராட்டுகிறார்.*

**"ந.சி. கந்தையா எனும் நல்லவன்,**
**வல்லவன் தமிழ் தமிழின வரலாறனைத்தையும்**
**தொல்பொருள் ஆய்வின் தொகை வகை, விரித்து**
**நிலநூல், கடல்நூல் சான்றுகள் நிறைத்தும்**
**தமிழ் நூற் சான்றுகள் முட்டறுத் தியம்பியும்**
**இலக்கிய இலக்கணச் சான்றுகள் கொடுத்தும்**
**பழக்க வழக்க ஒழுக்கம் காட்டியும்**
**வையகம் வியக்க வரலாறு எழுதினான்.**
**பொய் அகன்று மெய்க் கை உயர்ந்தது."**

*வாழ்க! ந.சி. கந்தையா பிள்ளையின் பெரும் புகழ்!*

*தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் வரலாறே தமிழர்களால் மறக்கப்பட்டு விட்டது. தமிழ்ப் பகைவர்களால் மறைக்கப்பட்டு விட்டது. அங்ஙனமிருக்க அம் மாமனிதரின் ஆய்வு நூல்கள் மட்டும் எங்ஙனம் கிடைக்கும்? ஆழ்கடலிலிருந்து முத்துக்கள் எடுப்பது போல, தங்கச் சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டி எடுப்பது போல, பெருமுயற்சி எடுத்து ந.சி. கந்தையா பிள்ளை அவர்களின் நூல்களைத் தேடினேன். நூல்நிலையங்களைத் தேடித்தேடி என் கால்கள் அலைந்த வண்ணம் இருந்தன. அதன் விளைவாக ஐம்பது நூல்கள் கிடைத்தன. பெரும் புதையலைத் தேடி எடுத்தது போல் பெருமகிழ்வுற்றேன்.*

*அன்பன்*

**கோ. தேவராசன்**

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | iii |
| | ந.சி. கந்தையாப் பிள்ளை வாழ்வும் தொண்டும். | ... | vii |
| **நூல்** | | | |
| 1. | தமிழ்ப் பழமையும் புதுமையும் | ... | 1 |
| 2. | முச்சங்கம் | ... | 31 |
| 3. | நமது தாய்மொழி | ... | 63 |
| 4. | திராவிடமொழிகளும் இந்தியும் | ... | 87 |
| 5. | நமது மொழி | ... | 107 |
| 6. | நமது நாடு | ... | 169 |

# தமிழ் - பழமையும் புதுமையும்

# முன்னுரை

இற்றைக்குச் சில ஆண்டுகளின் முன் ஒருவர், தமிழ் சமக்கிருதத் துக்கு முற்பட்டது என்றாலோ? சமக்கிருதத்திற் காணப்படும் சில சொற்கள் தமிழ் என்றாலோ, அவர்கள் தமிழுக்குப் பெரும் பணி செய்தவராகக் கருதப் படுவர். இன்றைய நிலை வேறு பள்ளிச்சிறாரும் தமிழ், சமக்கிருதத்துக்கு முற்பட்டது, சமக்கிருதம், தமிழில் பல சொற்களை இரவல் பெற்றிருக்கின்ற தென நன்கு அறிவர்.

நாம் எல்லோரும் தமிழ் உயர்நிலை அடையவேண்டும் என விரும்பு கின்றோம்.ஏன்? நாட்டுப்பற்று மொழிப்பற்று என்பன ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கக் கூடாதவாறு பின்னிக் கிடக்கின்றன. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒவ்வொருவரிடத்தும் தமிழ்ப் பற்று மிகுந்திருத்தல் இயல்பே. நாம் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளைப் பயின்றபோதும், எமது தாய்மொழி யிலிருப்பது போன்ற பற்று எமக்கு அம்மொழிகளிலிருப்பது இல்லை; ஏன்? அவை எங்கள் தாய் மொழிகளில்லாமையால். எங்களின் மத்தியில் சமக்கிருதத்தையே தாய் மொழியாகக் கொண்ட ஒரு கூட்டத்தினரும் உளர். அவர்கள் தமிழ் மொழியில் பற்று வைக்கிறார்கள் என நாம் நம்ப முடியாது. அவர்கள் தாய்மொழியெனக் கருதும் சமக்கிருதத்துக்கு ஆக்கம் தேடும் கருத்துடையராய், அம்மொழிச்சொற்கள் பலவற்றை அவ்வாறே தமிழிற் கலந்து வழங்கித் தமிழைக் கெடுத்து வருகின்றனர். நிரம்பிய கல்வியறிவில் லாத நம்மவர் பலரும் அவர் நடைகளைப் பின்பற்றுகின்றனர். இவை நம் முன்னோராற் கடியப்பட்டவை. ஆரியம் தெய்வ மொழி; தமிழ் மனிதமொழி என்னும் பொல்லாத கொள்கை தமிழ்நாட்டில் தோன்றியுள்ளது. இன்றும் சமக்கிருதம், சமயமொழியாகத் தமிழ்நாட்டில் இருந்து வருவதை நோக்கி, உண்மைத் தமிழன் ஒவ்வொருவனும் நாணமடைய வேண்டும்.

தமிழை வளர்க்க முன்வரும் மக்கள் முதலில் தமிழையே சமய மொழியாகக் கொள்ளவேண்டும். இவை போன்ற கிளர்ச்சிகள் எழுவதற்குத் தமிழைப்பற்றிய வரலாற்றை, நம்மனோர் நன்கு அறிந்திருத்தல் வேண்டு மன்றோ? அது கருதியே இச் சிறிய நூல் வெளிவரு தாயிற்று.

***"மலங்கெடுத்து மனங்கரைக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்***
***கனஞ்சடை யென்றுருவேற்றிக் கண்மூடிக் கதறு வரோ?"***
***(மனோன்மணீயம்)***

சென்னை
11-11-1946

*ந.சி. கந்தையா*

# தமிழ் - பழமையும் புதுமையும்

## தோற்றுவாய்

இவ்வுலகில் ஆதியில் மக்கட்குலம் ஒன்றாக விருந்தது. [1]மொழி சமயம் என்பனவும் அவ்வாறே இருந்தன. மக்கள் பிரிந்து அகன்று வாழத் தொடங்கினார்கள்; அப்பொழுது இயற்கைக் காரணங்களால் அவர்களின் நிறம் உடற்கூறு முதலியன மாறுபட்டன; அவ்வாறே மொழியும் சமயமும் மாறுபட்டன. மக்களின் பழைய வரலாற்றினை ஆராயும்போது இவை நன்கு தோன்றுகின்றன. அவ்வாறாயின் ஆதிமக்கள் யார்? ஆதி மொழி எது? ஆதிச்சமயம் யாது? என்பன போன்ற கேள்விகள் எழுதல் இயல்பு. இன்று இக் கேள்விகளுக்கு விடை அளித்தல் கடினமன்று.

ஒருகாலத்தில் மக்கள், மொழி எவ்வாறு தோன்றிற்று என அறியா திருந்தார்கள்; ஆகவே அது ஆதியில் கடவுளால் மக்களுக்குக் கற்பிக்கப் பட்டது என நம்பிவந்தார்கள். இதனை உணர்த்தும் பழங்கதைகள் காணப் படுகின்றன. மொழி, கடவுளால் கற்பிக்கப்பட்டதாயின் அது ஒன்றாயிராமல் பலவாயிருப்பான் ஏன் எனச் சிலர் கருதினார்கள். வானுலகத்துக்குச் செல்லும்படி சிலர் உயர்ந்த கோபுரம் ஒன்றைக் கட்டினார்கள். அதனை விரும்பாத கடவுள், ஒருவர் பேசுவதை மற்றவர் விளங்கிக் கொள்ள முடியாதபடி அவர்களின் பேச்சை மாறாடும்படி செய்தார். அதனால் மொழி கள் பலவாயின என்னும் கதை எழுந்தது. ஆதிகாலம் முதல் மக்கள், மொழியைப்பற்றிய ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர், ஆங்கிலர் முதலிய மேற்குத்தேச மக்கள், இற்றைக்கு நானூறு ஆண்டுகள் முதல் கிழக்குத் தேசங்களுக்கு வரத் தொடங்கினார்கள். அவர்கள் கிழக்கே பல நாடுகளைத் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார்கள். இவ்வாறே ஆபிரிக்கா அமெரிக்கா முதலிய நாடுகளிலும் அவர்கள் இராச்சியங்களைக் கோலினர். அப் பொழுது ஐரோப்பாவினின்றும் கிறித்துவப் பாதிரிமார் தமது மதத்தைப் பரப்பும் பொருட்டு உலகின் எல்லாப் பாகங்களுக்கும் சென்றார்கள்; மதத்தைப் பரப்புவதற்கு அவரவர்கள் சென்ற நாடுகளில் வழங்கும் மொழி களைப் பயிலவேண்டியதாயிற்று. அவர்கள் இவ்வாறு உலகிலுள்ள பல மொழிகளைக் கற்று அவ்வம் மொழிகளைப்பற்றி ஆராய்ந்து ஐரோப்பிய மொழிகளில்

1. The book of beginnings - Gerald Massey

நூல்கள் வெளியிட்டார்கள். உலக மொழிகளை எல்லாம் ஒருங்கு வைத்து மொழி ஆராய்ச்சி செய்யும்போது முன் அறியப்படா திருந்த பல உண்மைகள் புலனாயின.

தென்னாட்டிலே வாழ்ந்த கல்ட்வேல் என்னும் பாதிரியார் இற்றைக்கு எண்பது ஆண்டுகளின் முன் உலகின் பல பாகங்களில் வழங்கிய மொழி துரானியம் என்றும், அது மிகப் பழமையுடையதென்றும், தமிழ் அவ் வினத்தைச் சேர்ந்ததென்றும், திராவிடமொழியின் திரிபுகளே மற்றையத் துரானியமொழிகள் ஆகலாம் என்றும் கூறுவாராயினர். இக் கருத்துக்களை ஊன்றிப் பயின்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

> ***"சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுது நினதாயின் முது மொழி நீயனாதியென மொழிகுவதும் வியப்பாமே"***

எனக் கூறுவாராயினர். அக்காலத்தில் அவர் அவ்வாறு கூறியது மொழிப் பற்றினால் எனப் பலர் கருதியிருக்கலாம். இன்றைய ஆராய்ச்சியில் அவ் வுண்மை தெளிவாகின்றது. உலகம் முழுமையிலும் தமிழ் வழங்கிற்று எனக் கூறின் அது பலருக்கு வியப்பை அளிக்கலாம். உலகம் முழுமை யிலும் வழங்கிய தமிழ், இந்திய நாடு முழுமையிலும் வழங்கிப் பின் சிறிது சிறிதாகச் சுருங்கி எவ்வாறு தென்னிந்தியாவின் சிறிய விடத்தைத் தான் வழங்கும் பரப்பாகக் கொண்டுள்ள தென்பதை இச் சிறிய நூல் எடுத்து விளக்குகின்றது.

தமிழை வளர்க்கவேண்டும் என்னும் உணர்ச்சி வேகம் தமிழ் நாடு எங்கும் பரந்து இருக்கின்றது. சமயத்தினும் பார்க்க வேறொன்றும் மனிதனை அடிமைப்படுத்த மாட்டாது என வீராதி வீரனாகிய நெப்போலியனே கூறி யிருக்கின்றான். மனித சமூகத்தையே அடிமைக்கொள்ள வல்ல சமயத்தி லும், சமயக்கிரியைகளிலும் "இந்து சேர்மன்" மொழியாகிய சமக்கிருதம் நுழைந்து கொண்டது. அம் மொழிக்கு அதிகாரிகள் எனப்படுபவர்களோ தம் குல முதல்வர் வேதபாடல்களைச் செய்த (தமிழரல்லாத) முனிவர்கள் எனத் தமது "குலம் கோத்திரங்"களைக் கூறிக் கொள்வோர். தமிழ் உயர் வடைய வேண்டுமாயின் பெரிய புரட்சி உண்டாகவேண்டும். முதலில், ஆலயங்களில் சீர்திருத்த முண்டாக வேண்டும். இவ்வாறு உண்டாவதற்கு நாம் எல்லோரும் நமது மொழியைப்பற்றி நன்கு அறிந்து இருத்தல் வேண்டு மன்றோ.

## மொழி எவ்வாறு உண்டாகின்றது?

நாம் தமிழ்மொழியின் தொடக்கத்தைப் பற்றி அறிவதன் முன், மொழி எவ்வாறு உண்டாகின்றதென அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனிதன் விலங்கினத்தைச் சேர்ந்தவன்; விலங்குகளிலும் பார்க்க நுண்ணறிவுடைய வன். ஒன்றைச் சிந்தித்துக் கண்டுபிடிக்கும் ஆற்றல் உடையவன். ஆதியில் மொழி இருந்திருக்க மாட்டாது. மக்கள் ஒருவரோடு ஒருவர் தமது எண் ணங்களைக் கலந்து கொள்ள விரும்பினார்கள். இவ் வுணர்ச்சியினால்

தோன்றியதே மொழி. ஆதியில் மொழி பெரும்பாலும் முகக்குறி, கைக்குறி, பார்வை, உடல்நிலை போன்ற சைகை அளவிலேயே இருந்தது. ஊமரும் செவிடரும் இவ்வாறு சைகைகளால் பேசுவதை நாம் காண்கின்றோம். ஒருவர் மொழியை மற்றவர் அறிந்துகொள்ள மாட்டாத இருவர் சந்திக்க நேரின், அவர்களும் தம் கருத்துக்களைச் சைகைகளாலே உணர்த்துவர். மனிதனைச் சூழ்ந்து பலவகைப் பறவைகள் விலங்குகளும், ஆறு, மலை முதலியவை போன்ற இயற்கைப் பொருள்களும் உள்ளன. பறவை விலங் குகள் செய்யும் ஓசைகளையும், இயற்கைப் பொருட்களினின்று எழும் ஓசைகளையும், அவன் உற்றுக்கேட்டான். அவ் வோசைகளையே அவ்வப் பொருள்களுக்குப் பெயராக இட்டு வழங்கினான்; காகா எனக் கரையும் பறவையைக் காக்கை என்றான்; கூ கூ எனக் கூவும் குருவியைக் குயில் என்றான்; கோ கோ எனக் கத்தும் பறவையைக் கோழி என்றான்; மா மா என அமும் விலங்கை மாடு என்றான். இவ்வாறு அவன் தன்னைச் சூழ இருந்த பொருள்களைக் குறிக்கச் சில ஒலிக் குறிகளை உண்டாக்கிக் கொண் டான். பின்பு அவன் பொருள்களின் பண்புகளைக் குறிக்கச் சில ஒலிக் குறி களையும் உண்டாக்கிக் கொண்டான். பின்பு பொருள்களின் பண்பு தொடர் பாகவும், பொருள்களுக்குப் பெயரிட்டான். இப்பொழுது சைகைகளோடு ஒலிக்குறிகளும் சேர்ந்து மொழியாக வழங்கின. இவ்வாறு பழைய ஒலிக் குறிகள் தலைமுறை தலைமுறை தோறும் தொடர்ந்து வந்தன. ஒவ்வொரு தலைமுறைக் காலத்தும் பல புதிய சொற்களும் வந்து சேர்ந்தன. இவ்வாறு மொழி காலந்தோறும் வளர்ச்சியடைவ தாயிற்று.

## முத்தமிழ்

தமிழ், இயல் இசை நாடகம் என மூன்று வகைப்படும் எனச் சொல்லப் படுகின்றது. இவை, மொழி ஆதியில் அடைந்த வளர்ச்சி முறை பற்றி இடப்பட்ட பெயர்கள். ஆதியிற் றோன்றியது, நாடகத் தமிழ் அல்லது நடிப்பு முறையான பேச்சு. முற்பருவத்தில் மக்கள், ஒலிக்குறிகளாலல்ல சைகை களாலேயே பேசினார்கள் எனக் கூறினோம். இவ்வாறு பேசுதற்கு மிகுந்த திறமைவேண்டும். உள்ளத்தில் எழும் உணர்ச்சி உடம்பில் தோன்ற வேண்டும். அதற்கு ஏற்ற சைகைகளும் புரியவேண்டும். இவ்வகை நடிப்பு அவிநயம் எனப்படும். இன்று “சதிர்” என வழங்குவது ஒரு கருத்தைச் சைகைகளால் நடித்துக் காட்டுவதாகும். மக்கள் முற்பருவத்தில் கைக்கொண் டிருந்த அவிநயப் பேச்சு, நடிப்புக்கலை அல்லது நாட்டியக் கலையாக வளர்ச்சி யடைந்தது. இதுவே நாடகத்தமிழ் எனப்படும்.

மக்களிடையே ஒலி வடிவான பேச்சு உண்டாயிற்று. அப்பொழுது உள்ளத்து எழும் உணர்ச்சிகளுக் கேற்ப இயல்பாக எழும் ஓசைகளை அறிந்து அவ்வாறு ஒலித்தலிலிருந்து இசைகள் வளர்ச்சி யடைந்தன. கோபங் கொண்டவன், சோகம் கொண்டவன், மகிழ்ச்சியுற்றவன், பயம் அடைந்த

வன் முதலியோர் பேசுமிடத்து எழும் தொனிகள் வெவ்வேறாக இருக்கின் றனவன்றோ. பழைய பாடல்கள் ஒவ்வோர் சுவையுடையனவாக அமைக்கப் பெறும். சுவைக்கேற்பச் சொற்களை அமைத்தலால், பாடல்கள் வெவ்வேறு வகைப்படும். இவ்வகை அடிப்படையினின்றே இசைத்தமிழ் உண்டாயிற்று. சுவைக்கேற்ப உள்ளத்துணர்ச்சி எழும்; உள்ளத்துணர்ச்சிக் கேற்ப மெய்ப் பாடு உண்டாகும். ஆகவே பாடலுக்கும் ஆடலுக்கும் நெருங்கிய தொடர் புண்டு.

மேற்கூறியவைகளை அடிப்படையாகக் கொள்ளாது கருத்துக்களை விளக்கிக்கூறும் பொருட்டுச் செய்யப்பட்டுள்ள இலக்கியங்களும், இலக் கணங்களும் இயற்றமிழின் பாற்படும். இலக்கியங்களும் அவை பொதிந் துள்ள பொருள்களுக் கேற்ற தொனியில் படிக்கப்படும். மேடையில் நின்று பேசப்படும் பேச்சு, இசை, நடிப்புக்களைச் சேராவிட்டாலும், கூறும் பொருள் களுக்கேற்பத் தொனிகளை மாற்றியும், உயர்த்தியும் தாழ்த்தியும் பேசப்படு கின்றதன்றோ.

இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளின் முன், தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்னும் மூன்று தன்மைகளையும் எய்தி, ஒலிகளை வரி வடிவிற் பொறிக்கும் எழுத்துக்களையும் பெற்று விளங்கிற்று என்பது, மொகஞ்சதரோ அரப்பாப் புதை பொருள் ஆராய்ச்சிக்குப் பின் நன்கு தெளிவுறுவதாயிற்று. சிலர் 6000 ஆண்டுகள் எனக் கூறுவது கற்பனைக் கூற்று என்று நினைக்கலாம். இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளின் முன்னரே, இவ் வுலகத்தின் பெரும் பகுதி திருந்திய நாகரிகமும், செவ்விய ஆட்சி யுமுடையதாகத் திகழ்ந்ததென ஆராய்ச்சி வல்லார் நிறுவியுள்ளார்கள்.[1]

### தமிழின் பழமை

உலகின் இன்று 7296 மொழிகள் வழங்குகின்றன. இவைகள் எல்லாம் ஆரியம் துரானியம் என்னும் இருபெரும் பிரிவுகளில் அடங்கும். துரானிய மென்பது ஆரியமல்லாத மொழிகளுக்கு மேல் நாட்டு மொழி நூலார் இட்டு வழங்கும் பெயர். உலகில் தொடக்கத்தில் வாழ்ந்தோர். கறுப்பு அல்லது மங்கிய கறுப்பு நிறமுடைய மக்கள். பின்னரே வெண்ணிற மக்கள் தோன்றி னார்கள். வெண்ணிற மக்களே ஆரியர் எனப்படுவர். முன்பு எப்படி ஆரிய மக்கள் இல்லையோ, அப்படியே ஆரிய மொழியும் இல்லையாகும். மத்திய தரை மக்களின் ஒரு பிரிவினரே, குளிர் செறிந்த நாடுகளிற் சென்றடைந்து வெண்ணிற மடைந்தார்கள் என, எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்பார் சரித்திரக் காட்சி (Outline of History) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்து - ஐரோப்பியம் எனப்படும் ஆரிய மொழியிற் காணப்படும் பல சொற்கள், தமிழில் மறந்து விடப்பட்டனவாகிய சொல் மூலங்களாகும் என்று சொல் ஆராய்ச்சிவல்ல சுவாமி ஞானப்பிராகாசரவர்கள் ஆராய்ந்து கூறியுள்ளார்.[1]

1. Human Origins-S-Laing

துரானிய மொழிகள் தமிழைப் போன்ற ஒட்டுச் சொற்கள் உடையன. இவ்வகை மொழியே, உலகம் முழுமையிலும் வழங்கியது. பிற் காலத்தில் வந்த ஆரியம், முன் வழங்கிய மொழியைப் பலவிடங்களில் தன் மயமாக்கி விட்டது. துரானிய மொழிகளுள் தமிழ் அல்லது திராவிடம் மிகப் பழமையுடைய தென்பதை ஆராய்ச்சியாளர் எல்லாரும் உடன்படுகின்றனர். இதனை மொகஞ்சதரோப் பழம் பொருளாராய்ச்சி நன்கு வலியுறுத்துகின்றது.

## தமிழ் எழுத்து

பேச்சு வழக்கிலிருந்து பண்பட்ட பின்பே மொழிக்கு எழுத்து உண்டாவது இயல்பு. இற்றைக்கு ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன், தோன்றி நடைபெற்ற மிகப் பழைய தமிழ் எழுத்துக்கள் ஓவிய வடிவமாக அமைந்தன. மனிதனைக் காட்ட மனிதனையும், கை, கால் போன்றவைகளைக் காட்ட, அவ்வவ் வுறுப்புக்களையும், ஓவிய வடிவாக வரைந்து காட்டுதல் ஓவிய எழுத்துக்களுக்கு எடுத்துக்காட்டாகும் இவ்வாறே நடத்தல் இருத்தல் போன்ற செயல்களும், செயல்கள் புலப்படும்படி ஓவியங்கள் வரைந்து காட்டப்பட்டன. இம் முறையிலிருந்து எழுத்துக்கள் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தன. தமிழில் இவ்வகை எழுத்துக்கள் இருந்தனவேனும், அவை மறக்கப்பட்டுள்ளன. அவ் வெழுத்துக்களைக் குறிப்பிடும் பழைய நூற்பாக்கள் சில, பழைய உரைகளில் மேற்கோள்களாக ஆளப்பட்டுள்ளன. மொகஞ்சதரோ எழுத்துக்கள் ஒவ்வொரு சொல்லை உணர்த்த ஒவ்வோர் குறியீடாக அமைந்துள்ளன. மொகஞ்சதரோ எழுத்துக்களோடு கிழக்குத் தீவுகள், மேற்கு ஆசியா, ஆபிரிக்கா, அராபியா முதலிய நாடுகளில் வழங்கிய எழுத்துக்கள் ஒத்திருக்கின்றன. கிழக்கே ஜப்பான் தீவுகள் தொடக்கம், இஸ்பெயின் நாடு வரையில் ஒருகாலத்தில் ஒரே வகை எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. எனத் தெரிகின்றது. பழைய எழுத்து ஆராய்ச்சி யாளர், ஆதியில் தோன்றிய ஒரு எழுத்தினின்றே மற்றைய எழுத்துக்கள் வளர்ச்சியடைந்தன என்று முடிவு கண்டுள்ளார்கள். [2]மொகஞ்சதரோ

1. Pedigree of words - Rev S. Gnanapragasar O.M.I Quarterly Journal of Mythic Society vol. xxi. No.2

2. Resemblances more or less striking can be traced between the Indus script and most of the quasi-pictografic scripts of Western Asia and the nearer East. Indeed it is significant fact that of the Several experts who have made a study of the Indus writing, each has commented on the resemblance to some other script in each case the other script was different, in one Sumerain, in another proto-Elamite; in the third Minoan and a fourth Hittite. We must be careful not to let these obveous resemblances mislead us into immagining that the Indus script was directly borrowed from other country. Their underlying principles are the same and there is very likelihood that they all derived from one common origin which probably went back to neolithic times. Mohenjodaro and Indus civilization-vol-i-p. 41-Sir John Marshal Ibid. p. 41.

எழுத்துக்களிலிருந்து பிராமி எழுத்துக்கள் தோன்றின. பிராமி எழுத்துக்களி னின்றும் வட்டெழுத்துக்களும் வட்டெழுத்தினின்றும் இன்றைய எழுத்துக் களும் தோன்றலாயின. இந்திய நாட்டினின்றும், மத்தியதரைக் கடலோரங் களிற் குடியேறிப் பினீசியர் என்னும் பெயர் பெற்ற தமிழர், பிராமி எழுத்தையும் உடன் கொண்டு சென்றனர். பினீசியரிடமிருந்து கிரேக்கரும், கிரேக்கரிடமிருந்து உரோமரும், உரோமரிடமிருந்து மற்றைய ஐரோப்பிய சாதியினரும் எழுத்தெழுதும் முறையைப் பயின்றார்கள்.[1] பினீசிய மக்கள் பரதர் என்றே அறியப்பட்டார்கள். இவர்களே பிரித்தின் தீவிற் குடியேறி (பழைய) பிரித்தானியர் எனப் பெயர் பெற்றார்கள். பிரித்தன் என்பது, பரதன் என்பதன் திரிபு. இவ்வாறு வடல் (Waddell) என்னும் ஆசிரியர் கூறியுள்ளார். பிரித்தனில் அறிவாளிகள் "திராவிட்" என்று அழைக்கப்பட்டார்கள். துருயித் (Druid) என்னும் பிரிட்டன் பிரான்ஸ் முதலிய நாடுகளில் வாழ்ந்த பழைய மக்கள் திராவிடரே என்பதும், திராவிட் என்பதே துருயித் எனத் திரிந்த தென்பதும் ஆராய்ச்சியாளர் கருத்துக்களாகும். இன்றும் அயர்லாந்து தேசத்தில் பழைய தமிழருக்குரிய நாகரிகச் சின்னங்கள் பல காணப்படு கின்றன. அவற்றுள் சிவலிங்க வழிபாடு முக்கியமுடையது. பழைய அமெரிக்க மக்களுடைய எழுத்துக்களும், மொழியும், தமிழுக்கு இன முடையது எனப் "பிரடிரிக் ரைட்" என்பார் ஆராய்ந்து கூறியுள்ளார்.[2]

### ஒன்றாக வாழ்ந்த மக்கள் பிரிந்தமைக்குக் காரணம்

உலக வரலாற்றை நோக்குமிடத்து ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா, கிழக்குத் தீவுகள், தென்னமெரிக்கா, மேற்கு ஆசியா முதலிய எல்லா நாடுகளிலும், ஒரே வகைமொழி, நாகரிகம் முதலியன பரவியிருந்தன வென்பது விளங்குகின்றது. ஓரிடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள், கடல்கோளினால் நானாதிசைகளிலும் சிதறி ஓடிச் சென்று வாழ்ந்து பெருகி னார்கள் என்னும் கொள்கையே பொதுவில் வழங்குகின்றது.

வெசினர் (Wegener) என்னும் சேர்மனியர் ஒருவர் சில காலத்தின் முன் ஒரு புதிய கருத்தை வெளியிட்டார். தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, ஆஸ்தி ரேலியா, அண்டாட்டிக்கா முதலிய நிலப் பரப்புக்கள் ஒருகாலத்தில் தென் னாப்பிரிக்காவைச் சூழ்ந்து ஒன்றுசேர்ந்து இருந்தனவென்றும், நெருப்புக் குழம்பின் மேல் மிதந்து கொண்டிருக்கும் கண்டங்களின் கருங்கல் அடித் தளத்தில் வெடிப்பு உண்டாயினமையின், அவை ஒன்றினின்றும் ஒன்று பிரிந்து கடலில் மிதக்கும் பனிக்கட்டி போல மிதந்து விலகிச் சென்றுள்ளன என்றும், அவைகளை ஒன்றோடு ஒன்று பொருத்திவைப்பதானால் அவை பழையபடி பொருந்தக்கூடிய வகையில் ஓரங்கள் வளைவுடையனவாகக்

1. The script of Harappa and Mohenjodoro and its connection with other scripts. -G.R. Hunter.
2. Antiquity of man - Fredric Wright.

காணப்படுகின்றன என்றும் கூறியுள்ளார்[1]. இக் கூற்று உண்மை அன்று எனப் பலர் கருதக்கூடியதாயிருப்பினும், அதில் ஆழ்ந்த உண்மை இருப்பதாக, விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இக் கொள்கை உறுதிப்படின் உலகில் மக்கட்குலம், மொழி, நாகரிகம், சமயம் ஆகியன ஒரே வகையாக இருந் தமைக்குக் காரணம் அறிதல் எளிதாகின்றது. கிழக்கு ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதங்களிற் சில, பருமன் நிறை முதலியவைகளில், ஒரே வகையாக இருந்தமையை வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட இந்தியா என்னும் நூலாசிரியர் எடுத்துக்காட்டி யிருக்கின்றார். நீல நதியின் உற்பத்தியைக் கண்டுபிடிக்கச் சென்ற வெள்ளையர், புராணங்களில் கூறியபடி படம் வரைந்து கொண்டு சென்றார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைபோன்ற காரணங்களுக்கும் மேற்படி கொள்கை வாய்ப்பாகின்றது[2].

## தமிழ் என்னும் பெயர்

இதுவரையும் தமிழின் பழமையைப் பற்றியும், அம் மொழி உலகம் முழுமையும் ஒருகால் வழங்கிப், பின்பு மக்கள் தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து வாழத் தொடங்கியபோது, பற்பல மொழிகளாக மாறியுள்ளது என்பதைக் குறித்தும், ஏற்ற மேற் கோள்களோடு எடுத்து விளக்கினோம்.

நமது மொழிக்குத் தமிழ் என்னும் பெயர் மிகப் பழமை தொட்டு வழங்கி வருகின்றது. கி.பி. 480 வரையில் கெரதோதசு (Heradotus) என்னும் பேர்போன கிரேக்க சரித்திர ஆசிரியர் ஒருவர் இருந்தார் அவர் அக்கால மக்களின் வரலாறுகளை எழுதியுள்ளார். அக் காலத்தில் கிரேத்தா (Crete) என்னும் தீவில், தமிழ் நாட்டினின்றும் சென்ற மக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் மினோவர் (மீனவர்?) எனப்படுவர். மீனவர், தமிழர்களே என்பது வரலாற்றாசிரியர்கள் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கிரேத்தா மக்களை, கெரதோதசு ஆசிரியர், "தெமிலி" என்றே குறிப்பிட்டிருக்கின்றார். இதனால் கி.மு. 500க்கு முன் தொட்டே, தமிழ் என்னும் சொல் வழக்கில் இருந்ததென்பது நன்கு புலனாகின்றது. இப் பெயர் மிகப்பழமையுடைய தாதலின் இது எவ்வாறு உண்டாயிற்று? இச் சொல்லின் மூலம் யாது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடையறிந்து கூறுவது மிகக் கடினமாயிருக் கின்றது. ஆகவே தமிழ் என்னும் சொல்லின் பிறப்பைப் பலர் பலவாறு கூறி யுள்ளார்கள். அவர்கள் கூற்றுக்களில் வரலாற்றுத் தொடர்பான அடிப்படை, யாதும் இருப்பதாகத் தெரியவில்லை. முற்காலத்தில் ஒரு கோயிலைச் சுற்றியே மக்கள் வாழ்வார்கள். அக் கோயிலில் எழுந்தருளும் கடவுளின் பெயர் சம்பந்தமான பெயரை ஒவ்வொரு நகரமும் பெற்றிருக்கும். நாட்டின் பெயரால் மக்கள் அறியப்படுவார்கள். மக்கள் அல்லது நாட்டின் பெயரால் மொழியும் அறியப்படும். தெலுங்கானம், தெலுங்கர், தெலுங்கு; சேர்மனி,

1. Outline of scicnce Prof. Arthur Thomson. Science Digest - June. 1942-P 20.
2. Hindu America - p - 49 - Chamanlal.

சேர்மனியர், சேர்மனியம்; மலையாளம், மலையாளர், மலையாளி; வங்காளம், வங்காளர், வங்காளி என இவ்வாறு சொல்லிப் பார்க்கின் இது நன்கு விளங்கும்.

ஆதிமக்கள் எல்லோரும் ஞாயிற்றையே பெரிய கடவுளாகக் கொண்டு வழிபட்டார்கள். இது ஆராய்ச்சியாளர் நன்கு ஆராய்ந்து கண்ட முடிவு. அக்கால மக்கள் ஞாயிற்றைக் குறிக்க வழங்கிய பெயர்களுள், **எல்** என்பது மிகப் பழமையுடையது. எல் தொடர்பான இடப் பெயர்களை இலங்கை முதல் மேற்கு ஆசியா, அரேபியா முதலிய நாடுகள் வரையில் காணலாம். இன்றும் எல்லப்பன், எல்லம்மா முதலிய பெயர்கள் தெய்வங் களுக்கும் மக்களுக்கும் பெயராக வழங்குதலைக் காண்கின்றோம். மால் என்பதும் எல் என்பதன் திரிபே. அல்லா என்பதும் அவ் வகையினதே. பெரிய வெள்ளப் பெருக்கு நேர்ந்தபோது, மனு தங்கிய இடம் இளாவிருதம் எனப்படுகின்றது. இளா என்பது எல் என்பதன் திரிபே. இளாவிருதம் மேரு மலையில் உள்ளது. மேருமலையின் ஒரு கொடுமுடி இன்றைய இலங்கை எனப் புராணங்கள் கூறுகின்றன. மேரு, பூமிக்கு மத்தியில் உள்ளது எனப்படு தலின், அது தெற்கில் இருந்ததாதலே மிகப் பொருத்தமுடையது. இன்றும் எல் தொடர்பான இடப் பெயர்கள் இலங்கையில் உள்ளன.[1] அங்கு உலக மக்கள் எல்லாராலும் சிறப்பாகக் கொண்டு வழி படப்பட்ட எல்மலை ஒன்று உண்டு. அது சிவன் ஒளிமலை என வழங்கும். இங்குச் சிவன் என்றது ஞாயிற்றை. இலங்கைக்கு எல்லம் என்பது பழைய பெயர். எல்லம் நாட்டின் பழைய மொழி [2]எலு எனப்பட்டது. பிற்காலத்தில் எல்லம் ஈழமாகத் திரிந்தது. மிகப் பழைய காலத்தில் தமிழரின் இருப்பிடம், குமரிமுனைக்குத் தெற்கிலேயே இருந்ததெனத் தெரிகின்றது. தெற்கே கிடந்த நிலங்கள், கடலுள் மறைந்த காலங்களிலேயே மக்கள் வடக்கே சென்று வாழ்ந்தார்கள். மேற்கு ஆசிய நாடுகளிலும், எகிப்திலும், எற்கடவுள் [3]தாமுஸ் அல்லது தாமு என்னும் பெயருடன் வழிபடப்பட்டார். இக் கடவுள் எல்லாக் கடவுளரிலும், பெரிய கடவுளாகக் கருதப்பட்டார். தாமம் என்னும் சொல்லிலிருந்து தமிழ் பிறந்த தென்னும் ஐதிகம் உண்டு. இதனை மாகறல் கார்த்திகேய முதலியார் எடுத்துக் கூறியுள்ளார், வித்துவான் ரா. ராகவஐயங்கார் அவர்களும், தமிழ் என்னும் பெயர் ‘‘தாமுஸ்’’ என்னும் கடவுட்பெயரோடு தொடர் புற்றிருத்தல் வேண்டுமென ஐயுற்றார். தாமம் என்பது ஒளியையும், ஞாயிற்றையும் உணர்த்தும். எல்லம் ஒருபோது தாம் (தாமம்) எல்லம் என்னும் பெயர்

---

1. சம்புத்தீவு என்பதற்கு நாவற்றீவு என்னும் பொருள் வழங்கி வருகின்றது. சம்பு என்பது சிவனுக்குரிய பெயர்களுள் ஒன்று. சம்பு என்பது ‘கெம்பு’ (சிவப்பு) செம்பு என்று ஆகி சம்பு என்றாயிற்று எனக் கருதப் படுகின்றது. சிவந்த கடவுளின் தீவு அல்லது சிவன் கடவுளின் தீவு என்பதே சம்புத்தீவு என்பதன் பொருள். சிவன் என்பதற்கும் சிவந்தவன் என்று பொருள். Dravidic studies (Remarks by M. Collins)
2. The older form of Sinhalese is known as Elu - Origin and Development of Bengali Language. P. 15 - S.K. Chatterji.
3. Damuz of Damu - Tamuz and Ishtar P-6-L. Langdon.

பெற்றிருந்ததென யூகிக்கலாம். தாமம், எல்லம், தாமெலம் என மருவுதல் கூடுமானதே. தாமெல்லத்தில் வழங்கிய மொழிக்குத் தாமெலம், தமிழ் என்னும் பெயர் உண்டாயிருத்தல் சாலும். இக் கருத்து முடிவானதன்று. அறிஞர் சிந்திப்பார்களாக.

தமிழ், ஞாயிற்றுக் கடவுளினின்றும் தோன்றியது. (சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்) முருகக்கடவுள் தமிழை அகத்தியருக்கு அருளிச்செய்தார். சிவபெருமான் தமிழை அகத்தியருக்குச் சொன்னார் என்னும் பழங் கதை களும் வழங்குகின்றன. இக் கதைகள் யாதோ ஓர் அடிப்படையினின்று முளைத்திருக்கலாம். முருகன் சிவன், என்னும் பெயர்கள் ஞாயிற்றுக் கடவுளைக் குறிக்க வழங்கிய பெயர்களே. கடவுளையும், மொழியையும் குறிக்கும் பெயர்கள், ஞாயிறு என்னும் ஒரு பொருளையே குறிக்கும் சொற் களாதலின் தமிழ், சிவனோடும் முருகக் கடவுளோடும், சைவத்தோடும் பிரிக்கக்கூடாத தொடர்புடையது என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறிய கதைகள் எழுந்தனவாகலாம்.

### இந்திய நாட்டில் தமிழ் வழங்கிய எல்லை

தமிழ், உலகம் முழுமையிலும் ஒருகால் வழங்கிய தாயினும், அது இந்தியா ஒழிந்த மற்ற நாடுகளில் வெவ்வேறு மொழிகளாக மாறுபடுவ தாயிற்று. ஆரியர் இந் நாட்டிற்கு அடி எடுத்து வைக்கின்ற காலம் வரையில் கன்னியாகுமரி முதல் இமயம் வரையில் தமிழ்மொழியே வழங்கிற்று. இது மறுக்கமுடியாத உண்மை.[1] மொகஞ்சதரோ எழுத்துக்கள் வாசிக்கப்பட்ட பின்பு வடநாட்டில் தமிழ் வழங்கியதென்பது மறுக்கக் கூடாதவாறு வலி பெற்றுள்ளது. மொகஞ்சதரோ ஆராய்ச்சிக்கு முன்னரும், இந்தியா முழுமை யும் தமிழ் வழங்கிற்று என்பதை ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து காட்டியுள் ளார்கள். ஆரியரின் வேத பாடல்களில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின் றமையாலும்,[2] வடநாட்டு மொழிகள் எல்லாம் வடமொழியினின்று தோன்றி

1. The consequence deduced by Sir John Marshall after the study of the Mohenjodaro remains that this civilization probably is Dravidian is now fully confirmed by the development by the present writer of about one thousand eight hundredins criptions found in all these sites-The Journal of the University of Bombay-July 1936-Fr. Heras.
2. The language of the Rig-Veda is as yet purely Aryan or Indo-European in its form but its phonetics is already affeated by the Dravidian and it has already begun to borrow words from the Dravidian and Kol. Among words of probable Dravidian origin in the Rig Veda the following may be noted; anu-particle; arani-rubbing wood for fire, kapi-monkey; karmara-smith; kala-time; kunda-hole; gana band; nana-several; nila-blue; pushpa-flower; puja-worship; pala-fruit; bija-seed; majura-peafowl; ratri-night; rupa-form;- The origin and Development of Bengali -P.42.- S.K. Chaterji.

   Lecture on the ancient history of India-D.R. Bhandakar M.A.

யன எனப்படும் அம் மொழிகளில், தமிழ் மூலங்கள் காணப்படுதலினாலும், வடநாட்டில் தமிழ் வழங்கிற்று என்பது நன்கு உறுதிப்படுகின்றது.

### எழுத்துக்கள் ஒரே ஆதி எழுத்தின் திரிபாயின் மொழிகளில் எழுத்துக்கள் கூடியும் குறைந்தும் காணப்படுவதேன்?

ஒலி எழுத்துக்கள் எவ்வாறு உண்டாயின என்று அறிந்துகொண்டால் இது நன்கு விளங்கும். ஆதியில் எழுத்து ஓவிய வடிவில் இருந்தன என்றோம். பின்பு ஓவிய எழுத்துக்களோடு சில குறியீடுகளும் வழங்கின. ஓவிய எழுத்துக்கள் உச்சரிப்பு முறையான வாசிப்புக்கு ஏற்றனவாயிரா. பொருளை மாத்திரம் உணர்த்துவனவாயிருந்தன. ஒலி முறையாக எழுத முயன்ற மக்கள் தாம் எழுத எண்ணிய கருத்துக்கள் ஒலிமுறையில் அமையக்கூடியதாக, ஓவிய எழுத்துக்களை எழுதி அவை உணர்த்தும் பொருள்களின் ஒலி வடிவான உச்சரிப்பின் முதல் ஓசைகளை ஒன்று சேர்த்து வாசிக்கலாயினர். இவ்வாறு எழுதுவது மிக வருத்தமாயிருந்தமை யின், அவர்கள் ஒவ்வொரு உச்சரிப்புக்கும் ஒவ்வொரு குறியீட்டை வழங்குவாராயினர். சீன எழுத்துக்களின் அமைப்பு இவ் வகையினதே. இன்னும் மொழியை இலகுப்படுத்தும் பொருட்டு, மொழியில் வழங்கும் ஒலிகளை எல்லாம் உச்சரித்துப் பார்த்து அவர்கள் ஒவ்வொரு தனி ஒலிக்கும் ஒவ்வோர் குறியீடு அமைப்பார்களாயினர். இதனால் எழுத்துக் களைச் சேர்த்துச் சொற்களையும், சொற்களைச் சேர்த்து வசனங்களையும் ஆக்கும்முறை உண்டாயிற்று. மக்கள் வாழும் இடங்களுக்கும் வெப்ப தட்ப நிலைகளுக்கும் ஏற்ப அவர்களின் தொனிகளும் மாறுபடுகின்றன. வெப்ப நாடுகளில் வாழும் மக்களின் ஓசை ஒருவாறும், சீதள நாடுகளில் வாழும் மக்களின் ஓசை வேறு வகையாகவும் இருப்பதை நாம் காண்கின்றோம். இவ்வாறு மக்கள் வாழ்ந்த இடங்களுக்கேற்ப அவர்கள் பேசும் மொழியில் ஒரு மொழியிற் காணப்படும் ஒலிகள் இல்லாமலும், சில ஒலிகள் மிகுந்தும் இருக்கக் காணலாம். ஆகவே அம் மக்கள் புதிய ஒலிகளுக்குக் குறியீடு அமைத்துக் கொள்வர். இக் காரணத்தினாலேயே மொழிகள் தோறும் எழுத்துக்கள் கூடியும் குறைந்தும் காணப்படுகின்றன. தமிழ்மொழியில் வழங்கிய ஒலிகள் இருபத்தொன்பதே. ஒளவும் ஐயும் கூட்டெழுத்துக்கள். பிறநாட்டு மக்கள் தமிழரோடு கலக்க நேர்ந்தபோது, அவர்கள் மொழியில் வழங்கும் சொற்களையும் உச்சரிக்கும் இன்றியமையாமை தமிழருக்கு உண்டாயிற்று. அவ் வொலிகள் தமிழுக்கு இயல்பாக இல்லாமையால் புதிய ஒலிகளுக்கும் ஒவ்வொரு குறியீடு அமைத்து வழங்குதல் இழுக்குடைய தன்றாம்.

### இந்திய நாட்டின் மொழி பல மொழிகளாக வேறுபட்டதன் காரணம்

இந்திய நாட்டை முதல் முதல் வந்து அடைந்து புதிய மொழியை வழங்கும் மக்கட்கூட்டத்தினர் ஆரியராவர். இவர்கள் இந்திய நாட்டின் வட

மேற்குப் பகுதிகளில் குடியேறிப் பின்பு பஞ்சாப் மாகாணங்கள் முழுவதி லும் பரவுவாராயினர். இவர்கள், இந்திய நாட்டை அடைந்து, அறுநூறு ஆண்டுகளுள் அங்கு வாழ்ந்த பழைய மக்களோடு கலந்து ஒன்றுபட்டனர். வெவ்வேறு மொழியை வழங்கும் மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து புதிய சந்ததிகளைத் தோற்றுவிக்கும்போது, இரு மொழிச் சொற்களும் கலந்தும், சிதைந்தும் வழங்கிப் புதியமொழி தோன்றுதல் இயல்பு. ஆரியர் வடக்கே யுள்ள மக்களுடன் கலந்தமையால் வடநாட்டில் வழங்கிய தமிழ் மாறுத லடைவதாயிற்று. புத்தர் தனது உபதேசங்களைச் செய்த மகதமொழி (பாலி) தமிழின் திரிபு எனப்படுகின்றது[1]. மகதநாட்டில் ஒருகால் தமிழ் வழங்கின தென்றும் வடமொழிக்கு இல்லாதனவும் தமிழ் மொழிக்கு உரியனவுமாகிய எகர ஒகரக் குறில்கள் பாலி மொழியில் காணப்படுதல் அதற்குச் சான்றாகு மென்றும் ஆராய்ச்சி வல்ல பண்டர்க்கரும் ஓரிடத்திற் குறிப்பிட்டுள்ளார். ஆரியரின் மதத்துக்கு எதிரான மதக்கொள்கையைத் தோற்றுவித்த கௌதம புத்தரும் திராவிட மரபினரே என்பது வெர்லாங் முதலிய ஆராய்ச்சி அறிஞரின் கருத்து.[2]

ஆரியருக்குப்பின் இந்திய நாட்டை அடைந்தோர் கிரேக்கர். இவர் களின் ஆட்சி சிலகாலம் வட இந்தியாவில் நிலைத்தது. அக் காலத்தில் கிரேக்க நாட்டினின்றும் வந்த கிரேக்க மக்கள் வடநாட்டிற் குடியேறினர். இந்திய அரசரும் பிரபுக்களும் கிரேக்கப் பெண்களை மணந்தனர். கிரேக்க ஆடவரும் இந்தியப் பெண்களை மணந்தனர். இரு சாதிகளின் கலப்பினால் புதிய சந்ததிகள் தோன்றின. அரசரின் அந்தப்புரங்களில் கிரேக்க பெண்கள் இருந்தனர். அரசனின் மெய்காப்பாளரும் அவர்களேயாவர்[3]. இக் காரணங் களினால் கிரேக்க மொழியும் இந்திய மொழியும் கலந்த ஒருவகைப் புது மொழியும் வழங்கிற்று. இவ்வகை மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று வடக்கே கண்டுபிடிக்கப்பட்டது. ஆரியமும் தமிழும் கலந்து புதிதாகத் தோன்றியிருந்த மொழியோடு இப்பொழுது கிரேக்க மொழியும் கலந்துகொண்டது.

கிரேக்கரின் பின்பு, மங்கோலியர் வந்து வடக்கே வாழ்ந்த மக்க ளோடு கலப்பாராயினர். அதனால் மங்கோலிய மொழிச் சொற்களும் வந்து வடநாட்டு மொழியோடு கலந்துகொண்டது. பிற்பாடு சித்தியர் (Scythians)

1. The Bharata Land or Dravidian India-P. 9-Tamilian Antiquary - 1913.
2. Willson's philological lectures:- Dr. R.G. Bhandarkar collected works Vol. IV. P. 293
   Short studies on the science of comparative religions-P.10- Forlong.
3. India and the Western world-H. G. Rawlinson pp. 47,170

   It is probable that when the importation of Greek women, (who were often employed in the households of Indian chiefs and nobles at a time when Greek ladies married Indian princes) language ceased to exist also-The gates of India-P. 22-Colonel-Sir Thomas Holdich.

என்னும் மக்கள் வந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரை ஓரங்களில் குடியேறுவாராயினர். அதனால் சித்திய மொழிச்சொற்களும், வடக்கே வழங்கிய மொழியோடும் மேற்கு ஓரங்களில் வழங்கிய தமிழோடும் கலந்துகொண்டன. பின்பு அராபியர் வருவாராயினர். அதனால் அரபி மொழிச்சொற்களும் இந்திய மொழிகளில் வந்தேறுவனவாயின. இவர்களின் பின் வந்தோர் ஐரோப்பியர். இன்று ஆங்கிலமொழிச் சொற்கள் பெரிதும் வந்து இந்திய மொழிகளிற் கலக்கின்றன. இவ்வாறு புதிய மக்கள் காலந்தோறும் வந்து பழைய மக்களோடு கலப்பதாலும் இவ்வகைக் கலப்பினால் தோன்றிய மக்கள் பின்பு சென்று வேறு மக்களோடு கலத்தலினாலும் மொழிகள் பல வாறு மாறுபாடு அடைதல் இயல்பே யாகும்.

### வடநாட்டு மொழிகள் அமைப்பில் தமிழை ஒத்தன

ஒரு மொழியிலுள்ள பழைய சொற்கள் வழக்கு நின்றுவிடப், புதிய சொற்கள் அவைகளின் இடத்தை நிரப்புமாயினும் மொழி மாறுபடும். ஆனால் அம் மொழியின் அமைப்பு மாத்திரம் மாறுபடாது. இன்று வட நாட்டில் வழங்கும் மொழிகள் ஆரிய மொழிக்கு இனமுடையன வென்று கருதப் படுகின்றன. இதற்குக் காரணம் அவைகளின் சொற்கள் பெரும்பாலும் ஆரியப் போக்காகக் காணப்படுதலாகும். ஆனால் அம் மொழிகளின் இலக்கண அமைப்புத் திராவிட மொழிகளை ஒத்தது என, ஆராய்ச்சி அறிஞர் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர்.[1] இதனால் இன்றும் இந்தியநாடு முழுமையிலும் வழங்குவது தமிழே யென்பதும், பிற பெயர்களைப் பெற்று வழங்கும் அம் மொழிகள் பழைய தமிழ்ச்சொற்களுக்குப் பதில் புதிய சொற்களைப் பெற்று நிலவுகின்றன என்பதும் புலனாகின்றன.

### சமக்கிருதம் எப்படி உண்டாயிற்று?

ஆரியர் இந்தியநாட்டை அடைந்தபோது வழங்கிய மொழி பிராகிருதம். இது இலக்கண வரம்பில்லாத மொழி. ஆரியர் இந்தியநாட்டை அடைந்து அறுநூறு ஆண்டுகளுள் இம் மொழியில் பல பாடல்களைச் செய்தார்கள். அப் பாடல்களின் தொகுப்பு வேதம் எனப்படும். ஆரியர் பூர்வ மக்களோடு கலந்து ஒன்றுபட்டபோது அவர்களின் மொழியும் மாறுபடத் தொடங்கிற்று. அப்பொழுது அவர்களின் பிராகிருதமொழி இலக்கிய மொழியாயிற்று. பழமையில் பற்றுடைய மக்கள் தமது பழைய நூல்களைக் கற்று அறியும் பொருட்டு அம்மொழியைப் பயில்வாராயினர். ஆகவே அம் மொழி பேச்சுமொழி யாகாது இலக்கிய மொழியாக மாத்திரம் இருந்து வருவதாயிற்று. ஆரிய மக்கள் மத்திய ஆசியாவினின்றும் இந்திய நாட்டை அடைந்தவர்கள். அவர்கள் நாட்டில் காணப்படாத விலங்குகள், பறவைகள், மரஞ்செடிகள் முதலியவற்றையும் பிற புதியனவற்றையும் குறிக்க அவர்கள் பூர்வமக்களின் மொழிகளினின்றும் சொற்களைப் பெற்றார்கள். அவர்கள் வாழ்ந்து

1. History of the Tamils-P.2 - P.T.S. Iyengar M.A.

கொண்டிருந்த நாட்டைவிட இப் பொழுது வந்தடைந்த நாட்டின் வெப்பநிலை மாறுபாடுடையது. அதற்கேற்பவும் அவர்கள் சொற்களை உச்சரிக்கும் தொனியும் மாறுபட்டது. பூர்வ மக்களோடு பழகினமையின் அவர்கள் தமது மொழிச் சொற்களை உச்சரிக்கும் முறையினாலும் ஆரியச் சொற்களின் உச்சரிப்புக்கள் மாறுபட்டன. ஆகவே ஆரியர் இந்தியநாட்டுக்கு வரும்போது இருந்த ஆரியம் போலப் பிற்காலத்து ஆரியம் இருக்கவில்லை.

ஆரியமொழி இரசிய நாட்டின் சாமத்திய (Samaritan) மொழிகளுக்கும், கிரீசு, உரோமை இலக்கிய மொழிகளுக்கும், சேர்மனிய கெல்திய மொழிகளுக்கும் இனமுடையது. இம் மொழிகளுக்கு இந்து சேர்மனியம் எனப்பெயர் இடப்பட்டுள்ளது.[1] ஐரோப்பிய ஆரிய மொழிகளில் காணப் படாத புதிய சொற்கள் ஆரியத்திற் காணப்படுமாயின், அவை இந்திய மொழிகளினின்றும் ஆரியம் இரவல் பெற்றனவாகும் என கிரீர்சன் என்பார் கூறியுள்ளார். பிறிஸ்லுஸ்கி என்பார் ஆரிய மொழியில் பல முண்டா, திராவிடச் சொற்கள் சென்று ஏறியுள்ளதைக் காட்டியுள்ளார். இவை எல்லாம் எவ்வாறு ஆரியம் தனது பழைய இயல்பை இழந்து, சிறிது சிறிதாகத் திராவிடச் சார்பு பெற்று வந்துள்ளது என்பதை விளக்குவனவாகும். ஆரியம் இலக்கிய மொழியாக இருந்த காலத்தும், அது இந்திய மொழிகளினின்று பல சொற்களை இரவல் பெறலாயிற்று. பழமையைக் காப்பதில் கருத்துக் கொண்ட ஒரு சிலர், தமிழ்ப் புலவரைத் துணைகொண்டு இதுவரையும் இலக் கண வரம்பின்றி யிருந்த மொழிக்கு இலக்கண வரம்பு செய்து அதனைத் திருத்தி அமைத்து அதற்கு நன்றாகச் செய்யப்பட்டது என்னும் பொருளில் சமக்கிருதம் எனப் பெயரிட்டனர்; அது ஒருபோதும் பேசப் பயன்பட வில்லை.

இம் மொழியிலேயே சமய சம்பந்தமான பாடல்களும் நூல்களும் எழுதப்பட்டடிருந்தமையின், சமயத்துக்கு அதிகாரிகள் எனக்கொண் டிருந்த ஒரு வகுப்பினரே, இம் மொழியைப் பயில்வாராயினர். ஆகவே அது நாளடைவில் சாதிக்குரிய மொழியாகக் கருதப்பட்டது[2].

வேள்விக் கிரியைகளைப் பற்றி எழுதப்பட்டுள்ள வடமொழி நூல்கள் பிராமணம் எனப்பட்டன. அந் நூல்களைப் பயின்று வேள்விச் சடங்கு

1. Of European tongues, the nearest congeners to the Sanskrit are the Samaritan languages of the Russian empire, then the classical tongues of Rome and Greece then those of Germany and Keltic. This class of languages being caeled Indo-Germanic.......It will thus be observed that the Aryan or Sanskrit speaking races of India seem to have been closely connected with the Zend speaking, Greek speaking, Latin speaking, German-speaking and Slavonic speaking races and not at all with the Arabic, Phoenican and Herbbrew families-The Cyclopaedia of India-Balfour.

2. History of Sanskrit Literature P. 20-Macdonald.

களைச் செய்தோர் பிராமணர் எனப்பட்டனர். இவர்கள் தென்னாடு போந்து கோயில்களைக் கண் காணிப்பதால் பார்ப்பார் எனப் பெயர் பெற்றிருந்த கோயிற் குருக்கள் மாரோடு கலந்து அவர்களையும் தம் மதத்துக்குத் திருப்பினார்கள். அதனால் தென்னாட்டில் பார்ப்பன வகுப்பினரிடையே பிராமண மதம் பரவலாயிற்று. அதனால் பிராமணச் சாதிக்குரிய மொழி யாகிய சமக்கிருதம் ஆலயங்களிலும் இடம் பெறுவதாயிற்று. பிராமணமதம் தென்னிந்திய நாட்டுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. தமிழர் சென்று குடியேறிய சுமத்திரா, சாவகம், போர்ணியோ, மலாயா, சீயம், பர்மா முதலிய நாடுகளிலும் பரவுவதாயிற்று. இன்றும் சுமத்திராவுக்கு அயலே உள்ள பாலித் தீவில் பிராமண மதம் காணப்படுகின்றது. பிராமண மதம் தென்னாட்டிற் பரவியதாலும், பிற காரணங்களாலும், தமிழுடன் சமக்கிருதச் சொற்கள் சென்று கலப்பனவாயின.

எகிப்திய நாட்டில் ஆலயங்களிலும் கல்லறைகளிலும் எழுதப்பட் டிருந்த ஓவிய எழுத்துக்களைக் குருமாரே வாசிக்க அறிந்திருந்தார்கள். அவர்கள் அவ் வெழுத்துக்களை வாசிக்கும் முறையை மற்றவர்களுக்குத் தெரிவிக்க மறுத்தார்கள். அவ்வாறே அம் மொழியில் எழுதப்பட்ட சமய நூல்களையும் அவர்கள் பிறருக்கு வெளியிட மறுத்தார்கள். அவர்கள் ஓவிய எழுத்தைக் கடவுளின் மொழியெனவே கருதினார்கள். இதை ஒப்பவே சமக் கிருதமும் பிராமண வகுப்பினரிடையே பயிலப்பட்டது. அம் மொழியை எல்லோரும் பயிலுதல் கூடாதென்றும், அம் மொழியி லெழுதப்பட்ட நூல்கள் மிகப் புனிதமுடையன வென்றும் கருதப்படலாயின. குருமார் தம்மைக் கடவுளருக்கு அடுத்தபடியி லுள்ளவர்களாக மக்கள் மதிக்குமாறு சமய நூல்களை எழுதி, மக்களை நம்பச்செய்து வந்தார்கள். இது குருமார் தம்மை உயர்நிலையில் வைத்திருப்பதற்காகக் கையாண்ட ஒரு தந்திரமாகும்.

### சமக்கிருதப் போக்கைத் தழுவித் தமிழ் அமைக்கப்பட்டதென ஒரு சாரார் கூறுவது ஏன்?

வட நாட்டுப் பிராமணரோடு சமக்கிருதமும் கூடவந்து, தென் னாட்டை அடைந்து அவர்களின் முயற்சியால் அது சமய மொழியாக்கப் பட்டது. வரலாற்று ஆராய்ச்சி யில்லாத ஒரு காலத்தில் சமக்கிருதத்திலிருந்து தான் உலகில் எல்லா மொழிகளும் தோன்றின என்றும், அம் மொழியில் மாத்திரம் எல்லாவகை அறிவுக்குரிய நூல்களும் உண்டு என்றும் மக்கள் குருட்டுத்தனமாக நம்பி வந்தனர். ஆகவே, தமிழிற் காணப்படும் சொற் களோ, அவைகளின் சிதைவுகளோ வடமொழியிற் காணப்பட்டனவாயின், அவை சமக்கிருதத்தினின்றுமே தமிழுக்கு வந்தன என்று ஒரு சாரார் கூறுவா ராயினர். இவ்வாறே சில இலக்கண விதிகளும் கருதப்படலாயின. தமிழ் ஆரியத்துக்கு முற்பட்ட மொழி. ஆரியத்துக்கு எழுத்தைக் கொடுத்தது தமிழே. அம் மொழியைத் திருத்தி அமைத்து அதனை வளம்படச் செய்த

வர்களும் தமிழர்களே. இவை வரலாற்று ஆராய்ச்சியினால் நன்கு வலியுறு கின்றன. இன்றும் வடமொழியைத் தெய்வ மொழியெனக் கருதி அம் மொழிச் சொற்றொடர்களை "உருவேற்றிக் கண் மூடிக்கதறும்" மூடக் குழாங் களுமுள. அக் குழாங்கள் ஆரியத்தைப் பின்பற்றியே தமிழ் செய்யப்பட்ட தெனக் கூறுவதில் வியப்புக்குரியது யாதும் இல்லையாகும்.

## தமிழ் நாட்டு எல்லை

ஒரு சமயம் இந்தியநாடு முழுமையும் வழங்கிய தமிழ், விந்தத் துக்குத் தெற்கே கன்னியாகுமரி வரையும் வழங்கிற்று. பின்பு வடநாட்டுப் பிராமண மதமும், புத்த சைன மதங்களும், தென்திசை நோக்கிப் படை எடுத்து வந்தபோது, விந்தத்துக்குத் தெற்கே வழங்கிய தமிழ் சிறிது சிறிதாக மாறுதலடைவதாயிற்று. தொல்காப்பியம் என்னும் நூல் இன்று வழங்கும் தமிழ் நூல்களுட் பழமை யுடையதெனக் கருதப்படுகின்றது. அதன் காலம் இற்றைக்குச் சிறிது முன் பின் கி.மு. 350 வரையிலாகும். அக் காலத்தில் வடக்கே திருப்பதி மலையும், தெற்கே கன்னியாகுமரியும், கிழக்கும், மேற்கும் கடலுமாகிய எல்லைகளுக்குட்பட்ட நாடே தமிழ் வழங்கும் நாடாக விருந்தது.

## தமிழ் நாட்டின் உட்பிரிவுகள்

தமிழ் வழங்கும் நாடு சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தரால் ஆளப்பட்டது. மூன்று பேரரசர் நாடுகளும் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை: தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண்பூழி, பன்றி, அருவா, அருவாவடக்கு, சீதம், மலாடு, புனல், முதலிய நாடுகளாம். இந் நாடுகள் எல்லாவற்றிலும் தமிழ் மொழியே வழங்கிற்று.

## செந்தமிழ் நாடு

முன் கூறிய பன்னிரண்டு நாடுகளும் செந்தமிழ்நாடுகளே. பிற்கால இலக்கணக்காரர், செந்தமிழ் நாடு ஒன்று; அதனைச் சூழ்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகள் இருந்தன என்றும் பிழைபடக் கருதுவாராயினர். "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தன் குறிப்பினவே திசைச் சொற் கிளவி" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் பன்னிரண்டு நாடுகளிலும் செந்தமிழ் வழங்கவில்லை என்பதற்கு யாதும் ஆதாரம் காணப்படவில்லை. சங்க இலக்கியங்களிற் காணப்படும் சில குறிப்புக்களாலும், தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய வரலாறுகளாலும் மதுரையும் அதனைச் சூழ்ந்த இடங்களுமே தமிழ் வழக்குக்கு நடு இடமாகக் கருதப்பட்டனவெனத் தெரிகின்றது.

## திசைச்சொற்கள்

மேற்குறிக்கப்பட்ட வட்டத்துள் வழங்காது மற்றைய நாடுகளுள் மாத்திரம் வழங்கும் சிற்சில சொற்களும் வழங்கின. அவ்வகைச் சொற்கள் திசைச்சொற்கள் எனப்பட்டன. திசைச்சொற்கள் ஆங்கிலமொழியில்

“மாகாணச்சொற்கள்” (Provincialism) எனப்படும். இவ் வியல்பை அறியாத உரையாசிரியர்கள் திசைச்சொற்கள் வழங்கும் நாடுகளைத் தவறாகக் கொடுந்தமிழ் நாடுகள் என்றனர்.

“தென்பாண்டி நாட்டார், ஆ, எருமை என்பனவற்றைப் பெற்றம் என்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளை என்றும், நாயை ஞெள்ளை என்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் ஏடா என்பதை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும், பூமி நாட்டார் நாயை ஞமலி என்றும், சிறு குளத்தைப் பாழி என்றும், அருவா நாட்டார் செய்யைச் செறு என்றும், சிறு குளத்தைக் கேணி என்றும், அருவாவடதலை நாட்டார் குறுணியைக் குட்டை என்றும்” என உரையாசிரியர்கள் திசைச் சொல்லுக்குக் காட்டியுள்ள எடுத்துக்காட்டுக்களால் யாம் கூறியதன் உண்மை அறிக.

**திரிசொற்கள்**

தமிழிலே ஒருபொருளைக் குறிக்கும் பல சொற்களும், பல பொருளைத் தரும் ஒரே சொற்களும் காணப்படுகின்றன. சொற்கள், பலசொல் மூலங் களினின்றும் பிறக்கின்றன. வெவ்வேறு சொல் மூலங்களினின்றும் பிறந்து, சிறிது உச்சரிப்பு வேறுபாடுடைய சொற்கள், காலத்தில் ஒரே உச்சரிப்புடை யனவாகின்றன. அவ்வாறு திரிந்து வழங்கும் சொற்கள் பல பொருளைக் குறிப்பனவாயிருக்கின்றன. வெவ்வேறு தன்மையுள்ள ஒரே வகைப் பொருளைக் குறிக்க வெவ்வேறு சொற்கள் தோன்றி வழங்குகின்றன. தமிழில் மலையைக் குறிப்பதற்கு நாற்பதுக்கு மேற்பட்ட சொற்கள் காணப் படுகின்றன. அவைகள் எல்லாம் தொடக்கத்தில் வெவ்வேறு வகை மலை களையோ அவைகளின் பகுதிகளையோ குறிக்க வழங்கிய சொற்களாகும். காலத்தில் அச்சொற்களின் பழைய வழக்குகள் மறக்கப்பட்டன; அச் சொற்கள் எல்லாம் பொதுவாக மலையைக் குறிக்க வழங்குகின்றன. இவ் வகைச் சொற்களையும் திரிசொற்களிற் சேர்க்கலாம்.

**வடசொல்**

தொல்காப்பியம் என்னும் பழைய இலக்கணம் வட சொல்லைப் பற்றிக் கூறுகின்றது. வடசொல் என்பதற்குத் தமிழ்நாட்டுக்கு வடக்கே வழங்கும் மொழிச் சொற்கள் என்பது பொருள். அக்காலத்து வடநாட்டுப் பிராமண மதத்தினராலும், புத்த சைன மதத்தினராலும் கொண்டுவரப்பட்ட வடமொழிச் சொற்கள், தமிழோடு கலந்து வழங்கத் தலைப்பட்டன. வடசொற்கள் தமிழில் வந்து வழங்க நேர்ந்தால் அவை தமிழ் உச்சரிப்புக்கு ஏற்பத்திரித்து வழங்கப்படவேண்டும் எனத் தொல்காப்பியத்தில் விதி காணப்படுகின்றது.

> **"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
> **எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"**

என்பது தொல்காப்பியம்.

பிற்காலத்து உரையாசிரியர்கள், வடமொழி மண்ணுலகிலும் விண்ணுலகிலும் வழங்கும் கடவுள் மொழி எனப்புராண காலத்தெழுந்த கற்பனைக் கதையை நம்பி உரை விரிக்கலானார்கள்.[1]

## கொடுந்தமிழ்

பன்னிரண்டு நாடுகளிலும் கொடுந்தமிழ் வழங்கிற்று உன உரையாசிரியர்கள் கொண்டது தவறுடைத்து என முன் ஓரிடத்திற் கூறியுள்ளோம். கொடுமை என்பதற்கு வளைவு என்பது பொருள். திருத்தமின்றிப் பேசப்படும் தமிழ் கொடுந்தமிழ் எனப்படும். இதனை இழிசனர் வழங்கும் சேரி மொழி எனினுமாம்.

## தமிழ் நடை

தமிழ், உரை செய்யுள் என்னும் இருவகை நடை உடையது. உரை நடை என்பது, ஒருவர் மற்றொருவரோடு உரையாடுங்கால் ஆளும்நடை. செய்யுள் என்பதற்கு அளந்து செய்யப்பட்டது என்பது பொருள். தமிழில் எழுத்து நடை, செய்யுள் நடையாகவே இருந்து வந்தது. ஆதலின் பழைய நூல்கள் எல்லாம் செய்யுள் நடையிற் காணப்படுகின்றன. ஒரு மொழியில் ஒரு காலத்து வழங்கிய சொற்கள், காலம் செல்லச்செல்ல வழக்கொழிந்து போகின்றன. அவைகளுக்குப் பதில் புதிய சொற்கள் ஆளப்படுகின்றன. அதனால் முற்கால நூல்கள் எழுதப்பட்ட மொழியைப் பிற்காலத்தவர்கள் எளிதிற் பொருள் விளக்கிக் கொள்ள மாட்டாதவர்க ளாவர். அப்பொழுது பழைய நூல்களுக்குப் பேச்சு நடையில் உரை எழுதப்படும். இவ்வாறு எழுதப்படும் உரைநடைகளிலிருந்தே படிப்படியாக இன்றைய வசனநடை வளர்ச்சி அடைவதாயிற்று.

## தமிழ்ச் சங்கம்

தமிழ்நாட்டு மூவேந்தருள் பாண்டியன் தமிழ்ச்சங்கம் கூட்டித் தமிழை வளர்த்தான். சங்கத்தைப் பற்றிய வரலாறு பழைய நூல்களிற் காணப்படுகின்றன. மதுரையில் சங்கமிருந்து தமிழை வளர்த்தமையினாலேயே, மதுரையும் அதன் சூழல்களும் செந்தமிழ் வழக்குக்கு மத்திய இடமாகக் கொள்ளப்பட்டது. புத்தகசாலைகளை நிறுவுவதும், அரசர், புலவர்களை ஒன்றுகூட்டி மொழியை வளர்ப்பதும் புதிய செய்லகளல்ல. மேற்கு

1. Manuel of administration of the Madras Presidency-Vol I PP 41, 42.

**"ஆரியச்சொல் எல்லாத் தேயத்துக்கும், விண்ணுலகம் முதலியவற்றுக்கும் பொதுவாகலானும், அவ் வாரியச்சொல் தமிழ் நடைபெற்றதைத் திசைச்சொல் எனல் கூடாதெனக் கோடலுமாம்".– சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல்–விருத்தி.**

ஆசியா, கிரேக்கு, உரோம் எகிப்து முதலிய நாடுகளிலெல்லாம் பெரிய புத்தக சாலைகள் நிறுவப்பட்டிருந்தன. தமிழருக்குப் பெருமை விளைக்கக் கூடிய செய்திகளை மறுத்துக் கூறும் ஒரு கட்சியினர் தமிழருக்குள்ளேயே எப்பொழுதும் உளர். ஒரு சாரார் இந்தி எதிர்ப்பு என்று கிளர்ச்சிசெய்து சிறைக்குச் சென்றார்கள். இன்னொரு சாரார் அதே இடத்தில் இந்திப் பிரசார சபையை நாட்டினார்கள். இதுவே யான் கூறியதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மேற்கூறிய கட்சியினர், சிலர் தமிழ்ச்சங்கம் என்பது ஒரு கற்பனைக் கதையேயன்றி உண்மையில் நிகழ்ந்ததன்று எனக்கூறுவர். இதற்குக் காரணம் தென்னாட்டை ஆரியர் அடைவதன்முன், தமிழர் காட்டுமிராண்டிகளாக விருந்தார்களென்றும், ஆரியப்பிராமணரே தமிழரை நாகரிகப்படுத்தினர் என்றும், தமிழரை நாகரிகப்படுத்தியவர்களின் இனத்தினர் தாம் என்றும், ஒரு கூட்டத்தினர் கருதிக்கொண் டிருக்கின்றமையாகும். இன்று தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்ததென்பதை வரலாற்றாசிரியர்கள் எல்லோரும் ஒப்புக்கொள் கின்றனர்.

பழைய வரலாறுகள், சிலகாலம் கன்னபரம்பரை வழக்கில் தலை முறையாகத் தொடர்ந்துவரும். அப்பொழுது அவைகளுடன் சில கற்பனை களும் புகும்; சில மாறுதல்களும் உண்டாகும். பின்பு ஒரு காலத்தில் அவை ஒருவராலோ சிலராலோ எழுதி வைக்கப்படும். அவ்வாறு பலரால் எழுதி வைக்கப்பட்ட ஒரே செய்தியில் பல வேறுபாடுகள் காணப்படுதலும் இயல்பு. ஆனால் அந் நிகழ்ச்சியின் முக்கிய பகுதிகளில் மாற்றம் காணப்படாது. தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய வரலாறும் நீண்டகாலம் செவி வழக்கில் இருந்து வந்தது. தமிழில் இறையனார் அகப்பொருள் என ஒரு நூல் உள்ளது. அதற்கு நக்கீரர் என்னும் புலவர் உரை செய்தார். அவ்வுரை எழுதி வைக்கப் படாமல் நீண்ட காலம் செவி வழக்கில் வந்தது. உரை செய்யப்பட்டதற்குப் பின், பல தலைமுறைகள் கழிந்து வாழ்ந்த நீலகண்டனார் என்னும் புலவர் ஒருவர் அவ்வுரையை எழுதி வைத்தார். அவ் வுரையில் தமிழ்ச்சங்க வரலாறு காணப்படுகின்றது.

அடியார்க்கு நல்லார் என்னும் சிறந்த புலவர் ஒருவர் சிலப்பதிகாரம் என்னும் நூலுக்கு உரை செய்தார். அவ்வுரையிலும் தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்துக்கு நச்சினார்க் கினியர், பேராசிரியர் முதலியோர் எழுதிய உரைகளின் இடையிடையே தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவைகளைக் கொண்டு அக் காலத்தில் சங்க வரலாற்றைப் பற்றிய கன்ன பரம்பரை வரலாறுகள் இருந்தனவென்று நன்கு விளங்குகின்றது.

பழைய அரசர்களின் சபைகளில் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள், மொழியை வளர்ப்பதோடு அரசனுக்கு நன்மதியும் புகட்டினார்கள்; அரச பரம்பரையிலுள்ளவர்களின் புகழ்களையும் பாடல்களாகப் புனைந்து பாடி

னார்கள். அப்பாடல்கள் அரண்மனையில் நடக்கும் விழாக்காலங்களில் படிக்கப்பட்டன. இவ் வழக்கமே ஆலயங்களில் புராணம்[1] படிக்கும் வழக்க மாகவும் மாறியுள்ளது. புலவர்கள் அரசரைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் போன்றவைக்குப் புறாநானூற்றிற் காணப்படுவன போன்றவை எடுத்துக் காட்டுக்களாகும்.

முற்காலத்தில் இன்றுபோலத் தொடர்பாக ஆண்டுகளைக் கணக் கிட்டுக் கூறும் வழக்கம் இருக்கவில்லை. இன்ன அரசனின் ஆட்சிக் காலத் தில் இத்தனையாவது ஆண்டு எனக் கணக்கிடுவது வழக்கு. ஆகவே அரசர் களின் பெயர்களும் அவர்களின் ஆட்சிக் காலங்களும் தொடர்பாகக் குறித்து வைக்கப்பட்டன. சங்க வரலாற்றில், சங்கங்கள் இத்தனை அரசர் ஆட்சிக் காலத்தில் நடந்தன என்றும் கணக்குக் காணப்படுகின்றது. அவர்களின் மொத்தக் காலத்தைப் பற்றிக் கூறும் பகுதியில் சில பிழைகள் நேர்ந்திருக்க லாம். இவ்வகைத் தவறுதல்கள் எகிப்திய சீன அரசர்களைப் பற்றிக் கூறப் படுமிடத்தும் காணப்படுகின்றது. விவிலிய மறையின் பழைய ஏற்பாட்டி லும் இவ் வகைத் தவறுகளைக் காணலாம். சில அரசர் அறுநூறு அல்லது எழுநூறு ஆண்டுகள் இருந்தார்கள் என அந் நூலில் காணப்படுகின்றது.

**முச்சங்கம்**

தமிழ்ச் சங்கங்கள் பாண்டியருடைய தலைநகராகிய மதுரையில் தொடங்கப்பட்டது. அப் பட்டினம் கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்து கடலாற் கொள்ளப்பட்டது. ஆகவே அதைத் தென்மதுரை எனப் பிற்காலத் தவர்கள் குறிப்பிடுவார்களாயினர். இச் சங்கத்துக்கு 549 உறுப்பினர் இருந் தார்கள். 89 பாண்டியர்காலத்தில் இது நடைபெற்றது. ஒரு பாண்டிய அரசனின் ஆட்சிக் காலம் 20 ஆண்டுகள் எனக் கொண்டால், 89 பாண்டியரின் கால மும் 1780 ஆண்டுகளாகும். இச் சங்கத்தில் நூல்களையோ பாடல்களையோ செய்து அரங்கேற்றினோர் 4,449 புலவர்களாவர்.

தென் மதுரையைக் கடல்கொண்டது. அப்பொழுது பாண்டியர், தமது தலைநகரைத் தாம்பிரபர்ணி முகத்துவாரத்திலிருந்த கபாடபுரத்துக்கு மாற்றினர். பண்டியர் ஆட்சி கபாடபுரத்தில் ஆரம்பிப்பதற்கும், கடல் கோளுக்குமிடையில் சில காலம் கழிந்தது. கபாடபுரத்தில் மறுபடியும் சங்கம் கூட்டப்பட்டது. இச் சங்கம் இரண்டாவது சங்கம் அல்லது இடைச்சங்கம் எனப்படும். இச் சங்கம் 59 அரசர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. ஐம்பத்தொன்பது பாண்டியரின் காலமும் 1180 ஆண்டுகள் வரையிலாகும். இக் கழகத்துக்கு உறுப்பினர் 59 பேர். இங்குப் பாடல்களையோ நூல்

1. புராணங்கள் என்பன, கடவுளரையும் அரசரையும் தம்மையும் தொடர்புப்படுத்திப் பல கற்பனைக் கதைகளோடு பின்னிக் கோயிற் பூசகர்களால் எழுதப்பட்டவை. ஆகவே புராணங்களோடு புலவர்கள் கூறும் வரலாறுகளை ஒன்றாக வைத்து மயக்குதல் ஆகாது.

களையோ, அரங்கேற்றினோர் 3,700 புலவர்களாவர். இவர்களுள் ஐவர் பாண்டிய மன்னர்.

கபாடபுரத்தைக் கடல் கொண்டபின் பாண்டியர் தமது தலைநகரை மணலூருக்கு மாற்றினர். இது திருச்செந்தூருக்கு அயலே யுள்ளது. பின்பு கடம்பவனமாயிருந்த ஓர் இடத்தில், அவர்கள் தமது தலைநகரை அமைத்து அதற்கு மதுரை எனப் பெயரிட்டார்கள். அது திருப்பரங்குன்றத்துக்கு நேர் மேற்கில் இருந்ததாகும். இதனைத், திருச்செந்தூர் மதுரைக்கு மேற்கே உள்ளது என்னும் பொருளில் "கூடற்குடவயின்" எனத் திருமுருகாற்றுப் படையிற் கூறப்படுவதால் நன்கு அறியலாம். கடம்பவனத்தில் அமைக்கப் பட்ட மதுரையில் மூன்றாவதாகத் தமிழ்ச் சங்கம் கூட்டப்பட்டது. இச் சங்கத்தில் புலமையில் அரங்கேறினார் 449 பேர். இவருள் மூவர் பாண்டியர். இச் சங்கத்துக்கு உறுப்பினர் 49 பேர். இச் சங்கம் 49 அரசர் காலத்தில் நடைபெற்றது.

இம் மூன்று சங்கங்களும் 197 அரசர் காலத்தில் நடைபெற்றது. ஆகவே சங்கம் நடைபெற்ற முழுக்காலத்தையும் 3,940 ஆண்டுகள் எனக்கூறலாம்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் இச் சங்கம் குலைந்து போயிற்று. கி.பி. 470இல் வச்சிரநந்தி என்னும் திகம்பர சைனரால் தமிழ்ச் சங்கம் மறுபடியும் தொடங்கி நடத்தப்பட்டது. இது எவ்வளவு காலம் நடைபெற்ற தென அறிய முடியவில்லை.

**சங்க நூல்கள்**

சங்க நூல்கள் என்பவைகளுள், பல தனிச் செய்யுட்கள் காணப்படு கின்றன. அவை எட்டுத்தொகை பத்துப் பாட்டு என்னும் நூல்களாகத் திரட்டப் பட்டுள்ளன. எட்டுத்தொகை என்பதில், புறநானூறு அகநானூறு,. ஐங்குறு நூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப்பத்து என்னும் நூல்கள் அடங்கும். இந் நூல்களுள் தொகுக்கப்பட்ட பாடல்கள், தமிழ் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் வாழ்ந்த புலவர்கள் பலரால் இயற்றப்பெற்றவை. அவை தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பெற்று அங்கு படி எடுத்து வைக்கப்பட்டவை. சங்கம் குலைந்தபின் பாண்டிய அரசர் அப் பாடல்களைத் தமிழ்ப்புலவர்கள் சிலரைக் கொண்டு நூல்களாகத் தொகுப் பித்தார்கள். பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில், முருகாற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், பொருநராற்றுப்படை முதலிய பாடல்கள் அடங்கும். இவையே யன்றி, தொடர்ந்து பொருள்களையும், கதைகளையும் கூறும் நூல்களும் அக்காலத்து இருந்தன என்று தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலால் அறிகின்றோம். அவ்வகை நூல்கள் கிடைக்கவில்லை. தலமிசோத்தர் என்பவன் அலக்சாந்திரியாவில் 700,000 நூல்கள் தொகுத்து வைத்திருந்தான். அந்

நூல்கள் எல்லாம் இறந்தன. இளைய பிளினி என்னும் உரோமானியன் எழுதிய நூல் ஒன்றில், இருநூற்றுக்கு மேற்பட்ட நூல்களைக் குறிப்பிட்டிருக் கின்றன. அவைகள் ஒன்றேனும் இப்பொழுது கிடைக்கப்படவில்லை. கிரீசி லும், உரோமிலும் ஆயிரக்கணக்கான நூல்கள் செல்வர்களின் புத்தகசாலை களில் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. அவைகள் எல்லாம் அழிந்து போயின. அவைகளை ஒத்தப் பழைய தமிழ் நூல்கள் பல அழிந்து போயின. தமிழ் நூல்கள் அழிந்து போயின என்று கூறுதல் வெறும் கற்பனை எனக்கூறும் ஒருசாரார் நம்மிடையே காணப்படுகின்றனர். ஆதலின் அவர் பொருட்டுப் பழைய நூல்கள் இறந்து போதல் புதுமை அன்று என விளக்கியுள்ளோம்.

## நீதி நூல்கள்

தமிழ் மொழியில் காணப்படும் பழைய நீதிநூல் திருக்குறளாகும். இவ் வாறு முப்பாலாக நூல் செய்யும் வழக்கு உண்டு என்பது தொல்காப்பியத் தால் அறியப்படுகின்றது. ஆனால் திருக்குறளினும் முற்பட்ட பழைய நீதி நூல் எதுவும் காணப்படவில்லை. தமிழில் நீதிநூல்கள் பல காணப்படுதலால் தமிழர் ஒழுக்க முறைகளை அறியாதிருந்தார்கள் என ஒருசாரார் கூறுவாரா யினர். புதிய மக்கள் இன்னொரு மக்களோடு கலக்க நேர்ந்தால், அப்புதிய மக்கள் தாம் கலக்க நேர்ந்த மக்களிடையே காணப்படும் பழக்க வழக்கம் நீதி, வரலாறு, ஆகியவற்றை எழுதி வைத்தல் இயல்பு. இந்திய நாட்டையும் பிற நாடுகளையும் அடைந்த மேல்நாட்டவர்கள் இவ்வாறு செய்திருக்கின்ற னர். ஒவ்வொரு சாதியினரும் தம் சமூகத்துக்குரிய ஒழுக்கங்களை நன்கு அறிந்திருத்தல் இயல்பு. ஆகவே அவர்களுக்கு நீதிநூல்களை எழுதி வைக்கவேண்டிய அவசியம் இன்று. புதிய மக்களே முதன்முதல் அவ்வகை நூல்களை எழுதுவார்கள். பின்பு அவ்வகை நூல்கள் செய்தலாகிய வழக்கு உண்டாகும்.

போதாயனர், அபத்தம்பர், சாணக்கியர் முதலிய தமிழர்களே வட மொழியில் ஒழுக்க நூல்களை எழுதினார்கள். இதனால் ஒழுக்கம் அறியா திருந்த ஆரியருக்கும் தமிழரே ஒழுக்கம் கற்பித்தார்கள் என்பது படுமா?

## அகத்தியர்

அகத்தியரைப்பற்றிய வரலாறு மிகவும் குழப்பமாகவுள்ளது. ஆரியரின் வேதபாடங்களைச் செய்தவரும், உலோபாமுத்திரை என்னும் காசி அரசன் மகளைப் பாரியாகப் பெற்றவருமாகிய அகத்தியரொருவர் அறியப்படுகின்றார். இவரின் தந்தை மித்ரா வருணர் எனப்படுதலின், இவர் திராவிட வகுப்பினர் எனத் துணியப்படுவர். வசிட்டர், விசுவாமித்திரர் குடும்பங்களில் தோன்றியவர்கள் எல்லோரும் வசிட்டர், விசுவாமித்திரர் எனவே கூறப்பட்டனர். இவ்வாறு அகத்திய குடும்பத்திற் பிறந்தவர்களும், அகத்தியர் எனப்பட்டனர். பல்வேறு காலங்களில் வாழ்ந்த அகத்தியர்களின் வரலாறுகள் எல்லாம் கட்டுக்கதைகளோடு பின்னி, இன்றைய அகத்தியர்

வரலாறாக விளங்குகின்றது. வேத காலம்முதல், தேவாரம்பாடியவர்களுக்குப் பிற்பட்ட காலம் வரையில், அகத்தியரைப் பற்றிய வரலாறு கேட்கப்படுகின் றது. சிலர் அகத்தியர் என்றும் இறக்காதவர்; அவர் பொதிய மலைக்காடு களுள் இருக்கிறார் எனக் கூறுவர். இது கற்பனையே யன்றி வேறன்று. தமிழ்ச் சங்கம் இருந்ததைப் பற்றி ஐயுறுவோர், அகத்தியர் விந்தத்தை அடக்கினார் என்னும் புராணக்கதைக்குப் பொருள்கூற முயல்கின்றனர். புராணக் கற்பனைகளிலும் பார்க்கச் சங்க வரலாறு உண்மை நிகழ்ச்சி என்பதை அவர்கள் உணர்வதில்லை. அகத்தியர் தமிழுக்கு முதல் முதல் இலக்கணம் செய்தார் என்னும் ஒரு பழங்கதை வழங்குகின்றது. ஆனால் இதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. சங்க நூல்களில் அவ் வரலாறு குறிக்கப்பட வில்லை. மணிமேகலையில் ஈரிடங்களில் அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அந் நூலில் அகத்தியரின் கமண்டலநீர் கவிழ்ந்ததனால் நீரிலிருந்து காவிரிநதி உண்டானது என்னும் பழங்கதை கூறப்படுகின்றது. ஆனால் அவருக்கும் தமிழுக்கும் யாதும் தொடர்பு இருப்பதாக அந்நூல் கூறவில்லை. பேரகத்தியம் என்னும் ஒரு போலி நூல் வழங்குகின்றது. அதிற் காணப்படும் சூத்திரங்கள் பிற்காலத்தவர் எவராலோ பாடப்பட்டன வாகக் காணப்படுகின்றன.

உரையாசிரியர்கள் காலத்தில் அகத்தியம் என்னும் ஒரு நூல் இருந்ததாகத் தெரிகின்றது. அது ஒருபோது மணிமேகலை காலத்துக்குப் பின்வந்த ஒரு அகத்தியரால் செய்யப்பட்டதாகலாம். தொல்காப்பியர், அகத்தியர் மாணவர் என்னும் பழங்கதையும் வழங்குகின்றது. தொல்காப் பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் எழுதிய பனம்பாரனார், அதனைப் பற்றிச் சிறிதும் குறிப்பிடவில்லை. புறப்பொருள் வெண்பாப் பாயிரமும், பன்னிரு படலப்பாயிரமும் அவ் வரலாற்றைக் கூற, தொல்காப்பியப் பாயிரம் ஏன் அதனைக் கூறவில்லை என நாம் ஆராய்தல் வேண்டும். பன்னிருபடலப் பாயிரம் என்பதும், புறப்பொருள் வெண்பா செய்யப்பட்ட காலத்ததாதல் வேண்டும். தொல்காப்பியத்தில் நூல்களுக்குப் பாயிரம் செய்யும் விதி கூறப் படவில்லை. மணிமேகலை சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலிய நூல்களில், நூலிற் கூறப்படும் பொருள் அடக்கமே பாயிரமாக அமைந்துள்ளது. “நூலே நுவல்வோன், நுவலுந்திறன்” முதலியவைகளைக் கூறும் பாயிரம் பிற்கால வழக்கமாகும். அக் காலத்திலேயே பழைய கன்ன பரம்பரை வரலாறு களைத் தொகுத்துப் பனம்பாரனார் தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ் செய்திருத்தல் வேண்டும். பனம்பாரனார் பாயிரஞ் செய்கின்ற காலத்தில், அகத்தியர் தொல்காப்பியரின் ஆசிரியர் என்னும் வரலாறு தோன்ற வில்லைப்போலும்.

தமிழர் ஆரியர் போராட்டங்கள், தமிழ் நாட்டில் நெடுநாள் தொடர்ந்து நடந்து வருகின்றனவென்று முன் விளக்கியுள்ளோம். அகத்தியர் வட நாட்டினின்றும் வந்தார் எனப் புராணக்கதை யிருப்பதால் அவரை ஆரியர்

எனக் கொண்டு, அவ் வாரியரே தமிழுக்கு இலக்கணஞ் செய்தார் என்னும் கதையை ஆரியக் கட்சியினர் எவரோ காட்டினாராதல் வேண்டும். இவ்வாறு புதிய கற்பனைகளைப் புனைந்து கூறுவது பிற்காலத்தவர்களுக்குப் பெரிதும் பழக்கமாக இருந்தது. அவ்வகைக் கதைகள் பல, சைவராலும், வைணவராலும் கடவுளரைப்பற்றிக் கட்டப்பட்டுள்ளன. அப்பொய்க்கதை களின் தொடர்பாக விழாக்களும் நடத்தப்படுகின்றன. வைணவர் சைவ சமயத்துக்கு மாறாகவும், சைவர் வைணவ சமயத்துக்கு மாறாகவும் கட்டிய கதைகளை நோக்கி, யாம் கூறும் உண்மை உணர்க.

சுமத்திரா, யாவா, முதலிய நாடுகளில் அகத்திய உருவங்கள் வழி படப்பட்டன. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட அகத்தியர் சிலை அங்குக் காணப்பட்டது. அகத்தியர் மரபிலுள்ளோர் பலர் அரசராக இருந் தனர். பொதிய மலையில் அகத்தியர் என்னும் சிவபக்தர் ஒருவர் ஒரு காலத் தில் இருந்தார் ஆகலாம்.

அகத்திரிசி என்னும் ஒரு கூட்டத்தினர் [1]சித்திய மக்களிடையே இருந் தார்கள். இவர்களைப் பற்றி ஹெரதோதசு (Heradotus) ஆசிரியர் கூறியுள்ளார். சித்திய மக்கள் துரானிய வகுப்பினர். திராவிட மக்களும் அவ் வினத்தைச் சேர்ந்தவர்களேயாவர். சித்திய மக்கள் இந்திய நாட்டின் மேற்குக் கரைகளிற் குடியேறினார்கள். இவர்களை சித்தியத் தமிழர் எனப் பழைய உரோமை ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அகத்திரிசி என்னும் மக்கட்பெயர் மாத்திரமன்று, இடப்பெயரும் ஐரோப்பாவில் உள்ளது.[2] குறுக்கர் என்னும் ஒரு கூட்டத்தினர் தமிழ்நாட்டின் அயலில் காணப்படுகின்றனர். இவர்கள் சித்தியக் கலப்பினராவர். குறுக்குக், குடகு முதலிய பெயர்கள் தொடர்பினால் அகத்தியர் குறுமுனி எனப்பட்டிருக்கலாம். பிற்காலப் புராணிகர், அவை களின் பொருளை உணராமையினால், அகத்தியர் குறிய வடிவினர் எனக் கொண்டு அது தொடர்பாகப் பல கற்பனைக் கதைகளைக் கட்டிக் கூறினர். அகத்தியர் தமிழ் அறியாதவராக இருந்து பின், தமிழை அறிந்தார் எனப்படு தலின், அவர் குறுக்கர் நாட்டினின்றும் தமிழ்நாடு போந்த ஒருவர் எனக் கூறலாம்.

### தொல்காப்பியர்

இன்று தமிழில் வழங்கும் நூல்களில் பழமை உடையது தொல்காப் பியம் எனப்படுகின்றது. இந் நூலைச் செய்தவர் திரணதூமாக்கினி என்னும் பரசுராமரின் தந்தையாகிய வடநாட்டவர் என்னும் பழங்கதை ஒன்று உள்ளது. அதனை நச்சினார்க்கினியரும், தாம் தொல்காப்பியத்துக்கு எழுதிய உரையில் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் காலம் கி.பி. 350 வரை யில் என்பது, தொல்காப்பியம் எழுதப்பட்டுள்ள மொழி நடையினாலும் பிற சான்றுகளாலும் துணியப்படுகின்றது. பரசுராமர் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு

1. Scythians. 2. Ancient and Classical Geography Map-1. Index P.6.

அப்பால் வாழ்ந்தவர். தொல்காப்பியர் பரசுராமர் காலத்தவர் என்பது கட்டுக் கதையென நன்கு துணிகின்றோம்.

வீரமாமுனிவர் தாம் எழுதிய இலக்கணத்துக்குத் தொன்னூல் விளக்கம் எனப் பெயரிட்டுள்ளார். வீரமாமுனிவர் தமிழுக்கு இலக்கணம் முதன்முதல் எழுதியவரல்லர். வீரமாமுனிவர் எக் கருத்தைக்கொண்டு தான் எழுதிய இலக்கணத்துக்குத் தொன்னூல் விளக்கம் எனப் பெயரிட்டாரோ, அது போன்ற கருத்துப்பற்றியே தொல்காப்பியம் என்னும் பெயரும் தொல்காப்பியரின் நூலுக்கும் இடப்பட்டதாதல் வேண்டும். தொல்காப்பியம் எழுதியவரின் இயற்பெயர் மறக்கப்பட்டமையால், அவர் அந் நூலின் பெயரால் தொல்காப்பியர் என அறியப்படுவர். அது நன்னூல் எழுதியவரை நன்னூலார் என்பது போன்ற வழக்கு. இரு மொழிகளின் அமைப்புக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போதே பெரும்பாலும் இலக்கணம் தோன்றுகின்றது. மேல்நாட்டினின்றும் இந்தியநாடு போந்த ஐரோப்பியர், தமது நாட்டவர் தமிழ் மொழியைப் பயிலும் முறையில் மேல்நாட்டு மொழிகளைத் தமிழ் மொழியோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தமிழ் இலக்கணங்கள் பல இயற்றியுள் ளார்கள். இவ்வாறு அவர்கள் இலக்கணம் செய்தது தமிழ் மக்களுக்காக வன்று; தமது நாட்டவர்கள் எளிதில் தமிழ் இலக்கணத்தை அறியும் பொருட்டேயாகும். தொல்காப்பியர் தெலுங்கு மொழியில் பெரிதும் வழங்குவதும், தமிழில் திசைச்சொல் எனக் கொள்ளப்படுவதுமாகிய செப்பு என்னும் சொல்லைப் பலவிடங்களில் ஆண்டுள்ளார். இதனால், இவர் ஆந்திர நாட்டினரோ என்று கருத இடந்தருகின்றது. இவர் வடநாட்டு வழக்கங்களைத் தென்னாட்டு வழக்கங்களோடு ஒப்பிட்டு விளக்குகின்றார்.

> ***"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்***
> ***காமக் கூட்டம் காணும் காலை***
> ***மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்***
> ***துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"*** *(தொல். கள. 1)*

இதில் காமக்கூட்டம் என்றது தமிழ்நாட்டு வழக்கை. மறையோர் என்றது வடநாட்டுப் பிராமணரை. வீரமாமுனிவர் கத்தோலிக்கக் குருமாரை வேதியர் என்றதுபோல, இவரும் வடநாட்டுப் பிராமணரை இங்கு மறையோ ரெனக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டுப் பார்ப்பாருக்கே மறையவர் என்னும் பெயர் உரியது. ''நல்யாழ்த்துணைமையோர்'' என்றது, இமயமலைச் சாரல் களில் வாழும் கந்தருவர் என்னும் ஒருவகை மக்களை. கந்தருவர் இமய மலைச் சாரல்களில் வாழும் அழகிய தோற்றமும், தளர்ந்த ஆண் பெண் ஒழுக்கமுடைய ஒரு கூட்டத்தினரென்று வைத்தியா என்னும் ஆசிரியர் **இராமாயணத்தின் சிக்கல்கள்** (Riddles in Ramayana) என்னும் நூலில் கூறியுள்ளார். ஆங்கிலர் தம் போன்றவர்கள் தமிழை விளங்கிக் கொள்வ தற்கு எழுதியது போலவே, தொல்காப்பியமும் வட நாட்டவர் தமிழை அறிந்துகொள்வதற்கு எழுதப்பட்ட நூலாகும். வடமொழிக்குப் பல புதிய

சொற்களை உதவியும் அம் மொழியைத் திருத்தியும் அமைத்தவர்கள் தமிழர் களே. இதனை மேல்நாட்டு ஆசிரியர்கள் நன்கு ஆராய்ந்து கூறியுள் ளார்கள். இவ் வுண்மைகள், "சமக்கிருதத்தினின்றுதான் உலக மொழிகளெல் லாம் உண்டாயின; சமக்கிருதம் கடவுள் மொழி; அம் மொழிச் சொற்றொடர் களை உச்சரிப்பதால் கடவுளை அடையலாம்" என்னும் குழந்தை உள்ளம் படைத்த ஒரு கூட்டத்தினராகிய ஆராச்சியாளருக்குச் சிறிதும் புலப் படாவாம். தமது வாழ்வு கருதி அவர்களை மகிழ்விக்கும் பொருட்டுத் தமிழ் சமக்கிருதத்தைப் பார்த்துச் செய்யப்பட்டதெனக் கூறும் நம்மவர் சிலரும் உண்மை அறியமாட்டார். இவ்வுண்மைகளை நன்கு அறியமாட்டாத சிலர், தமிழ் இலக்கணம் வடமொழி இலக்கணத்தைப் பார்த்துச் செய்யப்பட்ட தெனத் தம் மனம்போனவாறெல்லாம் எழுதி வருகின்றனர். மொழியின் அமைப்பை ஒருவர் இருவர் மாற்ற முடியாது. மொழி, மக்களின் கூட்டுறவால் தோன்றி நடைபெறுவது. ஒரு போதும் வழக்கிலிராத ஒரு மொழியைப் பார்த்துப், பேச்சு வழக்கிலுள்ள மொழி, இலக்கணம் அமைத்துக் கொண்ட தென்பது பேதைமை. முன்பு இலக்கண வரம்பிலாத ஒரு மொழிக்கு இலக் கணம் அமைக்க நேர்ந்தால், உலக வழக்கிலுள்ள மொழியின் இலக் கணத்தைப் பார்த்து இலக்கணஞ் செய்து கொள்வதே இயற்கை விதி. வட மொழியினின்றும் தமிழ் இலக்கணத்தை இரவல் பெற்றதென வடமொழிப் பற்றுடையார் கூறும் கருத்துக்கள், நேர்மாறானவை என்பதே உண்மை யாகும். தொல்காப்பியரைப் பற்றிய பிற வரலாறுகளை, அகத்தியர் என்னும் தலைப்பின் கீழ் கூறியுள்ளோம்.

### சங்கத்துக்குப் பிற்பட்ட தமிழ்

சங்க காலத் தமிழ் மிகவும் தூய்மையுடையதாயிருந்தது. பிறமொழி களிலிருந்து எடுத்துத் தமிழில் ஆளப்பட்ட சில சொற்கள் தாமும், அம் மொழிச் சொற்கள் என்று அறிய முடியாதபடி தமிழ் வடிவாகவே இருந்தன. இம் முறையினை "வேர்வாய்ப்பட்ட எருப்போல்" எனச் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று ஆங்கிலத்தில் வழங்கும் (பெப்பர் Pepper) என்னும் மிளகைக் குறிக்கும் சொல், பெப்பரி என்னும் கிரேக்க சொல்லின் திரிபு. பெப்பரி என்னும் கிரேக்க சொல் திப்பிலி என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு"[1] திப்பலி என்னும் சொல், பிறமொழி களில் வழங்கும் போது அம் மொழி ஓசைகளுக்கேற்பத் திரிந்து வழங்கு வதை நோக்குக. இவ்வகை வழக்கு முற்காலத்தில் கடியப்படவில்லைப் போற் றோன்றுகின்றது. சங்க காலத்துக்குப் பிற்காலங்களில் தோன்றிய நூல்கள் பெரும்பாலும் சமயத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. அந் நூல்கள் பெரும்பாலும் சைன புத்த மதத்தினராற் செய்யப்பட்டவைக லானும்,

1. Our pepper comes to us from the Tamil Pipali through the Greek word peperi- Ancient India-E. J. Rapson

அவர்களின் முதல் நூல்கள் பிராகிருதம், பாலி, முதலிய மொழி களில் எழுதப்பட்டிருந்தமையானும் அவர்கள் சமயத்தொடர்பான பல பிறமொழிச் சொற்களைத் தமது நூல்களில் ஆண்டனர். ஆயினும் அவை களைத் தமிழ் உருவிலேயே வழங்கியிருக்கின்றனர். இவ்வாறு தமிழ், பிற மொழிக் கலப்புற்று வருதலும், கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதல், மணிப் பிரவாளநடை என ஒரு நடையும் தோன்றி நடைபெறுவதாயிற்று. இது சரிக்குச் சரி தமிழையும் வடமொழியையும் வழங்கும் நடை. இந்நடை பெரிதும் சைன வைணவர்களால் ஆளப்பட்டன. பெருந்தேவனார் பாரதத்தி னிடையே காணப்படும் வசன பாகங்கள் இந் நடையில் எழுதப்பட்டுள்ளன. சைன நூலாகிய ஸ்ரீ புராணம் இம்மொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் வடமொழி தெய்வமொழி என்றும், அம் மொழியி லிருந்தே தமிழ்மொழி தோன்றியதெனவும் அறியாமையால் வித்துவான்கள் சிலரிடையே தோன்றியிருந்த கருத்துக்களாகும். கம்பன், [1]வீரசோழியமுடை யார் முதலியோர், வடமொழியைத் தெய்வமொழி என்றே வணக்கத்தோடு குறிப்பிட்டுள்ளார்கள். பிற்காலத்து இலக்கணக்கொத்து உடையார், பிரயோக விவேக நூலார் என்போர், தமிழுக்கும் சமக்கிருதத்துக்கும் இலக்கணம் ஒன்றேயெனக் கருதினர். "ஐந்தெழுத்தாலொரு பாடையென்றறையவே நாணுவரறிவுடையோரே" என இலக்கணக் கொத்துடையார் கூறுதல் காண்க. கந்தபுராணஞ் செய்த கச்சியப்ப சிவாசாரியார் ளகர ழகர வேற்றுமையின்றி ழகரத்துக்கு முன்வரும் தகரத்தை டகரமாகத் திரித்துப் புணர்த்தியுள்ளார். வீரசோழிய முடையார் இவ்வாறு புணர்வதற்கு விதியும் கூறியுள்ளார். தமிழ் அறிஞர் இவைபோன்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. கி.பி. 17ஆம் நூற்றாண்டளவில் மணிப்பிரவாள நடை ஒழிந்தது; தமிழைத் தூய்மையாக வழங்கவேண்டும் என்னும் கிளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்தது. தமிழ் வடமொழியோடு வழங்கிய காலத்தில் "தமிழணங்கின் மேனி அம்மை வார்த்த உடம்புபோல இருந்ததென" திரு. சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் கூறியிருத்தல் மிகப் பொருத்தமானதே. சில ஆண்டுகளின்முன் தமிழிலுள்ள சில எழுத்துக்களை நீக்கிவிட வேண்டுமென்னும் கிளர்ச்சி நடைபெற்றது. அதனைத் தமிழ் அறிஞர் எதிர்த்து வெற்றி பெற்றார்கள். இவைபோன்ற கெடுதல்களுக் கெல்லாம் காரணம், மறைமுகமாகத் தமிழுக்கு எதிரான சத்தி ஒன்று நெடுநாளாக வேலைசெய்து வருகின்றமை யாகும். தமிழ் அறிஞர் தூங்கினால், அச்சத்தி அவர்களை எந்தச் சமயத்திலும் கீழ்ப்படுத்திவிடும். தமிழ் அறிஞர் என்றும் விழிப்பாயிருத்தல் வேண்டும்.

மடாதிபதிகள் ஓரளவு தமிழை வளர்த்தார்களாயினும், அவர்களும் வடமொழியைத் தெய்வமொழியெனவே நம்பி வந்தார்கள்; இன்னும் நம்பி வருகின்றார்கள். மடங்களுக்குள்ள பெரிய பொருள் வருவாயினால்

1. "இடையே வடவெழுத்தெய்தில் விரவியல் ஈண்டெதுகை நடையேதுமில்லா மணிப்பிரவான நற்றெய்வச் சொல்லின் இடையே முடியும் பதமு முடையத்தே........."! (வீரசோழியம்)

அவர்கள் தமிழுக்காகச் சாதித்தவை எவை? எனக் கேள்வி கேட்கும் நிலைமையே உள்ளது. இக் காலத்தில் மடங்களைப் பற்றி எவ்வகைக் கருத்து மக்களிடையே உலவுகின்றதோ, அதைவிட மேலான கருத்து முற் கால மக்களிடம் இருந்ததென்று கூறுதல் முடியாது. ஆதீன காலங்களில் சைவ சித்தாந்த நூல்களும், கோயிற் புராணங்களும், பெரும்பாலும் எழுதப்பட லாயின.

இன்று தமிழ் ஓங்க வேண்டும் என்னும் உணர்ச்சி சுடர்விட் டெரிகின் றது; ஆயினும் அதற்கேற்ற செயல்கள் குறைவாகவே இருக்கின்றன. தமிழில் அறிவுநூல்கள் தோன்றுவதற்குப் பதில் கற்பனைக்கதைகளைக் கூறும் ''நாவல்'' என்னும் நூல்களே வெளிவருகின்றன. புராணங்களைக் கற்பனை எனத் தூற்றும் சமூகம், மேலும் கற்பனைகளிலேயே காலத்தைச் செலவிடு தல் அறிவுடைமையா? என்னும் கேள்வி எழுகின்றது.


### ஹெரஸ்பாதிரியார், மொகஞ்சதரோ மொழி தமிழ் என உறுதிப்படுத்தியுள்ளார்

அவர் இந்திய வரலாற்று இதழில் மொகஞ்சதரோ எழுத்துக்களைப் பற்றிக் கூறியிருப்பது வருமாறு:-

யான் மொகஞ்சதரோ முத்திரைகளிற் பொறித்துள்ள எழுத்துக்களை ஒலிமுறையாக வாசித்து எழுதி வைத்திருந்தேன். யான் வாசித்திருந்தவை களை யாழ்ப்பாணம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் காட்டினேன். அவை செய்யுட்களின் பகுதிகளாயிருப்பதை அறிந்தபோது, யான் எய்திய வியப்புக்கு அளவில்லை. இப் பாடல்கள் பல அமைப்பில் எழுதப் பட்டுள்ளன. அவைகளுள் ஐந்து, குறள் வெண்பா அடிகளில் இயன் றுள்ளன. ஒன்றைப் படிக்க விரும்பலாம். மொகஞ்சதரோவில் காணப்பட்ட பழம்பொருள்கள் ஒன்றில் காணப்பட்ட எழுத்துக்களின் ஒலிமுறையான வாசிப்பு வருமாறு:-

2 **நண் று று று தூக்கு அடு கார்முகில் ஊர் வேலி ஒரூர்**

**எடு எட்டு று உயர்எல் இர்ஆர்இரி பேர் கடவுள்**



**(இதன்பொருள்)** ஓர் ஊர் என்னும் ஆண்டை அடைகின்ற ஓசை யிட்டு உயரச்செல்கின்ற ஞாயிற்றின் இரண்டு வழிகளையுடைய பச்சை (பயிர்) கடவுள் மழை முகில்களும் சத்தமுமுடைய நாட்டுக்கு வெளியே யுள்ளது.

2. (முதல்வரிக் கடைசியிலிருந்து வலம் இடமாக; இரண்டாவது வரி இடமிருந்து வலம்)

I. E. The two fishes of the shining one who is three of the flag that has paravanad (The country of the Paravas) that has two division-It refers to the two flag of paravanad.

❋ ❋ ❋

# முச்சங்கம்

# முன்னுரை

இன்று உலகின் பல நாடுகளில் பல்கலைக் கழகங்கள் (Universities) காணப்படுகின்றன. இவைகளை ஒத்த கழகங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தன. வடக்கே தக்கசீலம் பெரிய பல்கலைக் கழகமாக விளங்கிற்று. அதனை ஒப்பத் தெற்கே மதுரை பெரிய பல்கலைக் கழகமாக விருந்தது. தக்க சீலம் மருத்துவக் கலைக்குப் பேர்போனது. மதுரை தமிழ்க் கல்விக்குப் பேர் போனது. இச்சங்கத்தைப் பற்றிப் பழைய நூல்கள் கூறுகின்றன[1] தமிழுக்குச் சார் பான கருத்துக்கள் வெளிவந்தால், அவைகளை எதிர்த்துப் போராடும் ஒரு கூட்டத்தினர் என்றென்றும் தமிழ்நாட்டில் உளர் என்பதை நாம் எமது பிறநூல் களில் ஆங்காங்கு எடுத்து விளக்கியுள்ளோம். அக் கூட்டத்தினர் தமிழுக்குச் சார்பாகிய சங்க வரலாறு கற்பனைக் கதை எனக் கூறி, வழக்கம்போல் எதிர்வாதம் புரிந்து வந்தனர். அவருட் சிலர், சங்க நிகழ்ச்சி உண்மை வரலாறே; ஆனால் அது ஆரிய முனிவர் தலைமையில் நடைபெற்றதெனக் கூறி மகிழ்ந்தனர். இறுதியில் சங்க நிகழ்ச்சி மறுக்க முடியாத உண்மை வரலாறாக நிலைபெறுவதாயிற்று. சங்க வரலாற்றின் முடிவு இவ்வாறானதும், தமிழ், வடமொழியின் உதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றல் அற்றது என அக்குழாத்தினர் கழறினர்; கழறுகின்றனர். நம்மவரிலும் ஒருவர் இருவர் சேர்ந்து அவர்களோடு "ஒத்து ஊது"கின்றனர். இவ்வாதம் நேற்று இன்று தொடங்கிய தன்று. நூறு ஆண்டுகளின் முன்னரேயே கால்ட்வெல் இதைக் குறித்து ஆராய்ந்து தனது முடிவைக் கூறியுள்ளார். கால்ட்வெல் பலமொழிகளை ஆராய்ந்த மொழி ஆராய்ச்சி வீரர். அவர் திராவிட மொழிகள் தொடர்பாக எழுதிய நூல், இன்றும் உயர்தர மாணவருக்குப் பாடமாக இருந்து வருகின்றது. "தமிழ், விரும்பினால் தன்னிடத்தில் கலந்துள்ள சில ஆரியச் சொற்களை உதறிவிட்டுத் தான் தனித்து இயங்குவதோடு செழித்து வளரவும் ஆற்றல் படைத்தது" என அழகாகக் கால்ட்வெல் ஆசிரியர் நவின்றுள்ளார். இவ்வாறு நூறு ஆண்டுகளுக்கு முன், வாதங்களும் எதிர்வாதங்களும் நடந்து முடிவு காணப்பட்ட பழைய கருத்து ஒன்றை, ஏதோ புதிய கருத்தாக இன்று நம்மவர் ஒருவர் கிளப்பி ஆர்க்கின்றார். இவர் மாறுபட்ட கருத்துக்களுக்கு விடையை இந்நூலிற் காணலாகும்.

சென்னை,

10.10.47. *ந.சி.கந்தையா*

---

1. ....................... பாண்டியர், பாடு தமிழ் வளர்த்த கூடலின் வடாது – ஆசிரியமாலை
கூடலினாய்ந்த ஒண்டீந் தமிழ் – திருக்கோவையார்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நன்கனகக்கிழி தருமிக் களித்தான்காண் – திருநா. தேவாரம்.

# முச்சங்கம்

## தோற்றுவாய்

தமிழ் மிகப் பழைய மொழி. உலகில் நாகரிகத்தை முதன் முதல் தோற்றுவித்தவர்கள் எனக் கருதப்படும் சுமேரிய மக்கள், தமிழ்நாட்டி னின்றும் சென்றவர்களாவர்.[1] சுமேரிய மொழியில் திராவிடச் சொற்கள் பல காணப்படுகின்றன என்றும், மத்திய ஐரோப்பாவில் இந்து செர்மானிய மொழி பரவுவதன் முன் ஆறுகளின் பெயர்கள், இடப்பெயர்கள் முதலியன திராவிடப் பெயர்களாக விருந்தன வென்றும், அவை இன்றும் தமிழ் மொழி யிற் காணப்படும் சொற்களாயிருக்கின்றன என்றும் கிளிமென்ஸ் ஸ்கோனர்[2] (Clemens Schoener) என்னும் சேர்மனியர் காட்டியுள்ளார். இதனால் சிந்து வெளி நாகரிக காலத்து வழங்கிய மொழி தமிழே என்பது ஓர் அளவில் தெளிவுறுகின்றது. சுமேரிய நாகரிகம் கி.மு. 4000 வரையில் உச்சநிலை அடைந்திருந்ததென வரலாற்றாசிரியர்கள் நாட்டிள்ளார்கள். சுமேரியர், சிந்துவெளியிலும் தென்னிந்தியாவிலுமிருந்து சென்றவர்களாயின், தென்னிந்திய சிந்துவெளி மக்களின் நாகரிகம் மிகப் பழமையுடையதாதல் வேண்டும். இக் கருத்து டாக்டர் பிராங்போட் (Dr. Frankfort) என்னும் ஆராய்ச்சிவல்லுனரால் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழருடைய ஆட்சி மிக மிகப் பழங்காலத்திலேயே தோன்றி நடைபெற்றது என்பதை விளக்கும் பழைய வரலாற்றுக் குறிப்புக்களும் இருந்தன.[3] பக்கஸ் முதல் மகா அலக் சாந்தரின் படையெடுப்பு வரையில் 154 பாண்டிய அரசர் ஆட்சி புரிந்தார்கள் என்றும் அவர்களின் ஆட்சிக் காலம் 6,451 ஆண்டுகள் என்றும் பிளினி என்பார் குறிப்பிட்டுள்ளார். தயோனிசஸ் முதல் சந்திரகுப்தர் வரையில் 6,042 ஆண்டுகள் கழிந்தன என்று ஹீரன் (Heeren) என்னும் செர்மன் வரலாற்று ஆசிரியர் குறிப்பிட் டுள்ளார். மெகஸ்தீனசும் இவ்வாறே குறிப்பிட்டுள்ளார். கிரேக்க உரோமன் ஆசிரியர்கள் இந்திய அரசர் பெயர்களை பக்கஸ், தயோனிசஸ் என்று தமது மொழிப்பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்கள்.

---

1. Aryan rule in India - p. 51 - Havell.
   "Sumerians belonged to the Dravidian stock-Aryanization of India" p. 65
   N.K. Dutt.
2. Quarterly Journal of the mythic society Vol. XXIII p. 132 & Vol. XIX No. 3
3. "Science report" 1936 Geral Heard - p.188.
   Hindu Superiority - p. 4 Har Belas Sarda

இவர்கள் குறிப்பிட்ட காலக் குறிப்புக்கள் நம்பத்தகாத அவ்வளவு அதிகப் படியாகக் காணப்படலாம். இதனைப் பிறிதோரிடத்தில் விளக்குவோம்.

இவ்வாறு எகிப்தியர், சுமேரியர், பாபிலோனியர், அசீரியர், பினீசியர், மினோவர் (Creteians) முதலிய பண்டைய மக்கட்கெல்லாம் பழமையே நாகரிகம் பெற்று விளங்கிய தமிழர், புலவர்களைக் கூட்டி மொழியை வளர்த்தார்கள்; நூல் நிலையங்களை அமைத்தார்கள் என்னும் செய்தி உலக வரலாற்றை நோக்குவார்க்கு வியப்பாகத் தோன்றமாட்டாது. தமிழ் மொழியை வளர்க்கும் பொருட்டுப் பாண்டி நாட்டில் நெடுங்காலம் இருந்த சங்கத்தைப்பற்றி நாம் நன்கு அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது.

**சங்க வரலாறு**

சங்க வரலாறு, இறையனார் அகப்பொருள் உரையில் முதன் முதல் காணப்படுகின்றது. இறையனார் அகப்பொருள் என்னும் நூல், சங்க காலத்தில் இறையனார் என்னும் புலவர் ஒருவரால் செய்யப்பட்டது. அதற்கு உரை நக்கீரரால் செய்யப்பட்டது. இவ்வுரை சில காலம் செவி வழக்கில் வந்தது. சில தலைமுறைகளுக்குப் பின் நீலகண்டனார் என்னும் புலவர், அதனை ஏட்டில் எழுதி வைத்தார். பழைய நூல்களுக்கு ஆசிரியர் ஒருவர் பொருள் விரித்தலும் அவ்வுரை, ஆசிரிய மாணாக்க முறையில் தொடர்ந்து செவி வழக்கில் வருதலும் பண்டைய நாள் வழக்காகும். செவி வழக்கில் வரும் உரைகளோடு அவ்வக் காலத்தில் புதிதாக அறியப்படும் புதிய கருத்துக்கள் நுழைதலும் இயல்பு.

இறையனார் அகப்பொருளுரையில் காணப்படும் சங்க வரலாறு பின் வருமாறு:

"தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச் சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்ற மெறிந்த குமர வேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென, இத் தொடக்கத்தார் ஐஞ்நூற்று நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன வேத்துணையார் பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையுமென இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்க மிருந்தாரென்ப. அவர்களைச் சங்க **இரீஇயினார்,** காய்சின வழுதி முதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம்."

"இனி இடைச் சங்க மிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பிய னாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப்பிய

னும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோனும், கீரந்தையு மென இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்றுவர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், இசை நுணுக்கமும், பூத புராணமு மென இவை யென்ப. அவர் மூவாயிரத்தெழு நூற்றியாண்டு சங்க மிருந்தா ரென்ப. அவரைச் சங்கமிரீஇயினார், வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாற னீறாக ஐம்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவி யரங்கேறினார் ஐவர் பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக் காலத்துப் போலும் பாண்டி நாட்டைக் கடல் கொண்டது."

"இனிக் கடைச் சங்க மிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியரும் சேந்தம் பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்கிழாரும், இளந் திருமாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மருதனிள நாகனாரும். கணக்காயனார் மகனார் நக்கீரனாரு மென இத்தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந் தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும் கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையுமென்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல், அகத்தியமும் தொல்காப்பியமு மென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந் தது ஆயிரத் தெண்ணூற்றைம் பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்க **மிரீஇயினார்** கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத் திருமாறன் முத லாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவரும் கவி யரங்கேறினார் மூவர் பாண்டிய ரென்ப."

இதன் சுருக்கம் வருமாறு: முதல் சங்கம், எண்பத்தொன்பது பாண்டியர் ஆட்சியில் 4,440 ஆண்டுகள் நடைபெற்றது. அச் சங்கத்தில் 549 புலவர்கள் எப்பொழுதும் அங்கத்தவர்களாயிருந்தார்கள். அச் சங்கத்தில் நூல்களையோ பாடல்களையோ செய்து அரங்கேற்றினோர் 4449 பேர். இச் சங்கம் குமரி முனைக்குத் தெற்கே இருந்து கடல்கோட்பட்ட (தென்) மதுரை யில் நடைபெற்றது.

இரண்டாவது சங்கம், ஐம்பத்தொன்பது. பாண்டியர் ஆட்சியில் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. இச் சங்க உறுப்பினரின் தொகை, ஐம்பத் தொன்பது. நூல்களையோ பாடல்களையோ செய்து இச் சங்கத்தில் அரங் கேற்றிய புலவர்கள் 3700 பேர். இக் கழகம் பொருநை (தாம்பிரவர்ணி) முகத் துவாரத்திலுள்ள கபாடபுரத்தில் நடைபெற்றது.

மூன்றாஞ் சங்கம் நாற்பத்தொன்பது பாண்டியர் ஆட்சிக் காலத்தில் 1850 ஆண்டுகள் நடைபெற்றது. இச் சங்கத்தின் உறுப்பினர் தொகை நாற்பத் தொன்பது. இச் சங்கத்தில் நூல்களையோ பாடல்களையோ அரங்கேற்றிய

புலவர்களின் எண்ணிக்கை 449. இக் கழகம் கூடல் என்று வழங்கிய மதுரையில் நடைபெற்றது.

இறையனார் களவியலுரையின்படி, முச் சங்கங்களும் 197 பாண்டிய அரசர் காலங்களில் 9990 ஆண்டுகள் நடைபெற்றன. பிளினி, மெகஸ்தீனஸ், ஹிரன் முதலியோர், அக் காலத்தில் இந்திய நாட்டில் காணப்பட்ட குறிப்பின்படி, மௌரிய சந்திரகுப்தனுக்கு முற்பட்ட 154 அரசர் 6,451 ஆண்டுகள் வரையில் ஆண்டார்கள் எனக் கூறியிருப்பதை முன்னோ ரிடத்தில் காட்டியுள்ளோம்.

இறையனார் களவியல் உரையின்படி ஒரு அரசனுடைய ஆளுகைக் காலம் சராசரி 51 ஆண்டுகள் ஆகின்றது; பிளினி முதலியோர் கூறியபடி 42 ஆண்டு வரையில் ஆகின்றது. எகிப்திய பழைய வரலாற்றின் படி சராசரி ஒரு அரசனின் ஆட்சிக் காலம் 30 ஆண்டுகள் எனக் கணக்குச் செய்யப்பட் டுள்ளது. எகிப்திய வரலாற்றில், சில அரசரின் காலம் இக் கணக்குச் சரிவர வில்லை. ஆகவே அவர்கள் சிலர் நூறு ஆண்டுகளும், சிலர் முந்நூறு ஆண்டுகளும் வாழ்ந்தார்கள் எனக் கணக்குச் செய்யப்பட்டுள்ளது. முற் காலத்தில் காலங்கள் அரசர் ஆட்சிக் காலத்திலிருந்தே கணக்கிடப்பட்டன. ஆகவே ஒவ்வொரு அரசரின் காலமும் நன்கு குறித்து வைக்கப்பட்டிருந் தது. சில காலங்களில் வெவ்வேறு பரம்பரை அரசினர் ஆட்சி புரிந்தமை யாலும், பிற காரணங்களாலும் உண்டான தடுமாற்றங்களால் அரசர் பலரின் பெயர்களையும் அவர்கள் பற்றிய குறிப்புகளும் மறைந்து போயின. ஆகவே சில அரசர் நூறு அல்லது இருநூறு ஆண்டுகள் வாழ்ந்தார்கள் எனக் கணக்குச் செய்யும் வழக்கு உண்டாயிற்று. இவ்வாறு இலங்கை அரசர் வரிசையைக் கூறும் மகா வம்சம் என்னும் சிங்கள நூலில் சில பிழைகள் நேர்ந்தன. அவை அண்மையில் வரலாற்று ஆசிரியர்களால் திருத்தப்பட்டுள்ளன.

தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களைக் கற்பனை என்று கூறிவிடுதல் அமையாது. அதில் சில கற்பனைகளும் புகுந்திந் திருக்கின்றன என்பதும் உண்மையே. புலவர்கள், நூல்களின் பெயர்கள் சில, காலத்தை நோக்காமல் முன் பின்னாகவும், பின் முன்னாகவும் கூறப்பட் டிருத்தல் கூடும். இந்திய நாடல்லாத பிற நாடுகளில் காணப்படும் சில வரலாற்றுக் குறிப்புக்களை நாம் அறிவதால் இச் சங்க வரலாற்றில் கூறப் படும் காலக் கணக்கைப் பற்றிய உண்மையை நாம் அறிந்து கொள்ளுதல் கூடும். எரதோதஸ் (Heradotus 480 B.C.) எகிப்திய அரசர் ஆட்சிக் காலத்தைப் பற்றிக் கூறியிருப்பது வருமாறு:

‘‘எகிப்தை ஆண்ட முதல் அரசன் மெம்பிஸ். இவன் வல்கன் என்னும் ஆலயத்தைக் கட்டினான். அவனுக்குப் பின் அரசாண்ட 340 அரசர்களின் பெயர்களைக் குருமார் புத்தகத்தில் குறித்து வைத்திருக்கின் றார்கள். அங்கு முதல் ஆண்ட அரசன் முதல், கடைசியாக ஆண்ட அரசன் வரையில் உள்ள அவர்கள் உருவங்களும், அக் காலங்களில் வாழ்ந்த தலைமைக் குருமாரின்

வடிவங்களும் மரத்தில் செதுக்கி வைக்கப்பட்டிருக் கின்றன. குருமார் அவைகளை எனக்குக் காட்டி 341 தலைமுறைகள் கழிந்தன வென்று கூறினார்கள். அக் காலத்தில் ஒரே தொகையான அரசரும், அதே தொகை முதன்மைக் குருமாரும் இருந்தார்கள். 300 தலைமுறைகளும் பத்தாயிரம் ஆண்டுளாகும். மூன்று சந்ததியினர் தனித்தனி நூறு ஆண்டுகள் வாழ்ந்தனர். முப்பத்தெட்டுச் சந்ததியினரும் 1040 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். ஆகவே 341 அரசரின் காலமும் 11340 ஆண்டுகளாகும். இக் காலத்தில் நான்கு முறை சூரியன் வழக்கத்துக்கு மாறாக வேறுதிசையில் உதித்தது; இரு முறை மேற்குத் திசையினின்றும் உதயமாயிற்று என்று இவ்வாறு அவர்கள் கூறினார்கள். அவ்வரசர்கள் ஒருவர் மற்றவர் புதல்வன் என்றும், அவர் களுக்கு முன் தேவர்கள் எகிப்தை ஆண்டு மக்களிடையே வாழ்ந்தார்கள் என்றும், அத்தேவர்களுள் கடைசி அரசன் கிரேக்கரால் அப்பலோ என்று அழைக்கப்படும் ஹோரஸ் என்றும் அவர்கள் கூறினார்கள்”.

பாபிலோனிலே யுள்ள நிப்பூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள களிமண் ஏடு ஒன்று கி.மு. 2198 வரையில் எழுதப்பட்டுள்ளது. அது பெரியவெள்ளப் பெருக்குக்கு முன் 28,876 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த 134 அரசர்களின் பெயர்களை வரிசையாகக் கூறுகின்றது. இன்னொரு களிமண் ஏடு, பெரிய வெள்ளப் பெருக்குக்குப் பின் 25,063 ஆண்டுகள் ஆண்ட 139 அரசர்களைக் குறிப்பிடுகின்றது.[1]

பாபிலோனில் கிஷ் பரம்பரையில் காலுமம் (Galumum) என்னும் அரசன் 9000 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். சக்கிப் என்பவன் 840 ஆண்டு களும், ஆர்பி 720 ஆண்டுகளும், எட்டனா 625 ஆண்டுகளும், பர்சல் நூனா 1,200 ஆண்டுகளும் ஆண்டார்கள். எரச் அரச பரம்பரையில் மெஸ்கிங் சஷார் 325 ஆண்டுகளும், என்மேர்கார் 420 ஆண்டுகளும், லுகுல்பன்டா 1,200 ஆண்டுகளும் ஆண்டார்கள்.[2] பெரோசஸ் (Berosus கி.மு. 280) என்னும் பாபிலோனிய வரலாற்றாசிரியர் படைப்புக் காலம் முதல் மனிதன் வரலாற்றைக் கூறுகின்றார். அவர் முதல் அரசன் கடவுளால் தெரியப்பட்டா னென்றும் அவன் பெரிய வெள்ளப்பெருக்கு அளவும் 36,000 ஆண்டுகள் ஆண்டான் என்றும் கூறியுள்ளார்.[3]

[4] பழைய சீன அரசர் தனித்தனி பதினெண்ணாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள் என்று சீனப் பழங்கதைகள் கூறுகின்றன.

கிறித்துவமறையின் பழைய ஏற்பாட்டிற் காணப்படும் அரசர் பலர், எண்ணூறு, தொள்ளாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள்.

1. Cambridge ancient history - Vol 1. P. 365
2. Cambridge ancient history - Vol 1. P. 365.
3. History of Civilization p. 250 - Will Durant.
4. History of Civilization p. 647 - Will Durant.

இவ்வாறு பழைய வரலாறுகளில் அரசர் ஆட்சிக் காலங்கள் கூறப் பட்டுள்ளன. ஆகவே அரசர் ஆளவில்லை என்று பொருள்படாது. எழுதிய வர்கள் காலத்தை மிகைப்படுத்தி எழுதிவைத்தார்கள், அல்லது அவர்கள் காலக் கணக்குச் செய்ததில் ஏதோ தவறுதல் நேர்ந்துள்ளதென விளங்கு கின்றது. மற்றைய நாட்டுப் பழைய வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்துள்ள வைகளைவிடச் சங்ககாலக் கணக்கில் அதிக தவறு இருப்பதாகத் தோன்றாது. சங்கத்தை ஆதரித்த அரசர் 197 பேர் என்றும் அவர்கள் ஆட்சிக் காலம் 9990 ஆண்டுகள் எனவும் கூறப்பட்டுள்ளன. இதனால் ஒரு அரசனின் ஆட்சிக் காலம் சராசரி 51 ஆண்டுகள் அளவிலாகின்றது.

**பழைய வரலாற்றாசிரியர்கள் இரு வகையினர்**

முற்காலத்தில் அரசர்களுடைய வரலாறுகள் இரு வகையாக விருந்தன. கோயிற் குருமார் அல்லது பூசாரிகள் அரசரின் ஆட்சிக் காலங்களையும் அவர் காலத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளையும் குறித்து வைத்தனர். அவர்கள் சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளையே முக்கியமாகக் கருதினர். அரசரின் ஆட்சிக் காலத்திலிருந்தே காலங் கணிக்கப்பட்டமை யின், காலங்கள் மிகவும் கருத்தோடு குறித்து வைக்கப்பட்டன. கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து வரும் இலங்கை அரசரின் காலமும், இவ்வாறே புத்த குருமாரால் குறித்து வைக்கப்பட்டன. மெகஸ்தீனஸ், பிளினி முதலியோர் பழைய இந்திய அரசரையும் அவர் காலங்களையும் குறிப் பிட்டது இவ் வகைக் குறிப்புக்களைக் கொண்டேயாகும். இவ் வரலாறுகளே பிராமணரால் பலவாறு திருத்தியும், கூட்டியும் குறைத்தும், உலகில் நிகழக் கூடாத பல கற்பனைக் கதைகளைப் புகுத்தியும் எழுதிவைக்கப்பட்டன. அதனால் புராணங்கள், வரலாறுகள் என்னும் பெயரை இழந்து கற்பனை நூல்கள் என்னும் பெயரைப் பெற்றன. புராணங்களை நன்கு ஆராய்ந்த பார்கிடர் (Pargiter) என்பாரும், இக் கருத்தினையே வெளியிட்டார். ஆயினும், புராணங்கள் சிலவற்றில் காணப்படும் அரசர் காலங்கள் நேரா யிருத்தலை பார்க்கிடரும் பிறரும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

குருமாரல்லாத இன்னொரு வகையினரும் அரசர் வரலாறுகளைக் குறித்து வைப்பாராயினர். இவர்கள் அரசர் அரண்மனைகளிலிருக்கும் புலவர்கள். இவர்கள் தம்மைப் புரக்கும் அரசனுடையவும், அவன் முன்னோருடையவும் வீரம், கொடை, வெற்றி போன்ற செயல்களைக் குறித்துவைத்தனர். அவர்கள் அரண்மனையில் நடக்கும் சிறப்புக் காலங் களில் அவைகளைப் பாடிக் காட்டினர். இவ் வகை வழக்கு இந்திய நாட்டில் மாத்திரமன்று, பழைய நாகரிக நாடுகள் எல்லாவற்றிலும் இருந்து வந்தது. கலிங்கத்துப் பரணியில் சயங்கொண்டார், இராச பாரம்பரியம் கூறியதும் இவ்வகை வழக்குப் பற்றியே. கோயிற் குருமார் குறித்து வையாத பல செய்திகளைப் புலவர் குறித்து வைப்பர்.

இலங்கைப் புத்த குருமாரால் எழுதப்பட்ட மகாவமிசத்தில் காணப் படாத பல செய்திகள் சிங்களவரின் பிற நூல்களில் காணப்படுகின்றன. இதனால் குருமாரால் எழுதப்படாத பிற வரலாறுகளும் இருந்தனவெனத் தெரிகிறது.[1]

## இவ்வகை வரலாறுகள் எகிப்து பாபிலோன் முதலிய நாடுகளில் காணப்படுவதற்கும், நமது நாட்டிற் காணப்படாமைக்கும் காரணம்

எகிப்து, பாபிலோன் முதலிய நாட்டின் அரசர் வரலாறுகள் நீண்ட காலம் அறியப்படாமல் இருந்தன. அங்கு கிடைத்த எழுத்துப் பொறித்த பட்டையங்கள் வாசிக்கப்பட்ட பின்பே, அந் நாட்டு அரசர்களின் வரலாறுகள் அறியப்பட்டன. அந் நாடுகளில் மக்கள் நூல்களையோ வரலாற்றுக் குறிப்புக்களையோ களிமண் ஏடுகளில் எழுதி, அவைகளைச் சூளையிலிட்ட பின் வைத்துப் பாதுகாத்தார்கள். அவை நெருப்பு, வெய்யில், மழை முதலியவைகளால் அழிந்து போகத்தக்கனவல்ல. எகிப்திய சமாதி அறைகளில் வைக்கப்பட்டிருந்த பைபிரஸ் என்னும் நாணல் தாளில் எழுதிய நூல்களும் அழியாதிருந்தன.

தமிழ் மக்கள் பனை ஓலை, தாளிப் பனை ஓலை முதலியவை களையே எழுதுவதற்குப் பயன்படுத்தினார்கள். இவை நெருப்பு, வெய்யில், மழை முதலியவைகளால் எளிதில் அழிந்துவிடக் கூடியனவாயிருந்தன. முற் காலத்தில் போர்கள் மிகக் கொடுமை விளைப்பனவாயிருந்தன. பெரும்பாலும் நகரங்கள் தீயிட்டு அழிக்கப்பட்டன. "ஊர்சுடு புகை" என இலக்கியங்களில் பல முறை வருதலை நாம் காணலாம். ஒரு முறை ஒரு நகரம் அழிக்கப்பட்டால், மக்கள் பெரும்பாலும் பிறிதொரு இடத்தில் சென்று குடியேறுவார்கள். அழிக்கப்பட்ட நகரம் வாழ்வதற்கே தகுதியற்றதாக மாறிவிடும். மேற்கு ஆசிய நகரங்கள் பெரும்பாலும் தீயினால் அழிக்கப் பட்டன. சமீப காலத்தில் ஏழு பெரிய மதில்களோடு விளங்கிய விசய நகரமே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. போர்க் காலத்தில் மக்கள் தமது உயிர்களுக்காக ஓடும்போது நூல்களையும் உடன் கொண்டு சென்றார்கள் எனக் கூறமுடியாது. பிற் காலத்தில் மதப் போராட்டங்கள் உண்டாயின. அக் காலத்தில் பல நூல்கள் அழிக்கப்பட்டன. இவையல்லாமல் இடையிடையே நேர்ந்த வெள்ளப் பெருக்குகளாலும் தமிழ் நூல்கள் அழிந்துபோயின. இதனைக் குறித்து சி.வை. தாமேதரம் பிள்ளையவர்கள், தமது கலித் தொகைப் பதிப்புரையில் கூறியிருப்பது வருமாறு:

---

1 There are other historical works of subsequent date, nearly all written in the Singhalese language. Occasionally they contain supplementary details of the early period which are not found in these two books, thus showing that their composers had also access to some manuscripts that are now lost. Among such works may be noted the Rajavaliya, the Thupavansaya and the Dhatuvansaya - Ancient Ceylon - p. 11 - H. Parker.

"தமிழுக்குக் காலாந்தரத்தில் இரண்டு பெரும்பூதங்களால் இரண்டு பேரிடையூறுகள் நிகழ்ந்தன. குமரியாறும் அதன் தெற்கணுள்ள நாடுகளும் சமுத்திரத்தின் வாய்ப்பட்டமிழ்ந்தபோது தமிழ்ச் சங்கத்திற்கு ஆலயமாய்ச் சர்வ தமிழ்க் கிரந்த மண்டபமாயிருந்த கபாடபுரம் அதன் கண்ணிருந்த எண்ணாயிரத்தொரு நூற்று நாற்பத்தொன்பது கிரந்தங்களோடு வருண பகவானுக்கு ஆசமனமாயிற்று. பாண்டிய நாட்டின் வடபாலில் ஆங்காங்குச் சிதறுண்டு உலாவிய சாதாரண சன வினோர்த்தமான சில கிரந்தங்களும் பள்ளிக் கூடங்களிற் சிறுவர் தங்கள் தேர்ச்சிக்குரியனவாய் வழங்கிய சிறு நூல்களுஞ் சில்லறை வாகட சோதிடாதிகளுமே பிற்காலத்தார் கைக்கு எட்டுவனவாயின,

***"ஏரண முருவம் யோக மிசை கணக் கிரதஞ் சாலந்***
***தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோகம்***
***மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி***
***வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயருமாள"***

எனப் புலம்பிய நமது முன்னோரிடத்திலிருந்து நாம் அடைந்த பிதிரார்ச் சிதம் வெறும் பெயரினுஞ் சிலவேயாம்.

"இப்பால் வடமதுரைச் சங்கம் ஏற்பட்டு, இடமிடந்தோறும் நடை பெற்றுள்ள சுவடிகளைச் சேகரித்துத், தமிழ்ப்பரிபாலனம் பண்ணித் தன் காலத்தும் நானூற்றைம்பது புது நூல்களை அரங்கேற்றி வைத்தது. அதன் பின்னர்ச் சமணவித்துவான்கள் தலையெடுத்துப் பல பல நூல்கள் இயற்றித் தமிழை வளர்த்தனர். அதன்மேல் இதிகாச புராணாதிகள் சமற்கிருத மொழி யினின்று வித்துவான்களால் மொழி பெயர்க்கப்பட்டு மறுபடியும் தமிழ் தலையெடுத்தபோது, நாடு முகமதியர் கைப்பட, அவர்கள் குரானுக்கு மாறாகவும் வீறாவதோ கிரந்தங்கள் மண் மேல் என்று, மத வைராக்கியங் கொண்டு அந்தோ! நமது நூற் சாலைகள் அனைத்தும் நீறாக அக்கினி பகவானுக்குத் தத்தஞ் செய்தனர். இவர்கள் கைக்குத் தப்பிய சின்னூல்களே இந் நாளில் நமக்குப் பெரிய அரிய நூல்களாயின. அவைகளும் இக் காலத்து இன்னும் தமக்கு என்ன பேரவதி வருமோ வென்று பயந்தாற் போல, இங்கும் அங்கும் ஒளிந்துக் கிடந்து படிப்பாரும், எழுதுவாரும் பரிபாலிப்பாரு மின்றிச் "செல்லுத் துளைத்த புள்ளி யன்றி மெய்ப் புள்ளி விரவாத சென்னா ளேட்டிற் பல் துளைத்து வண்டு மணலுழுத வரியெழுத்து" உடையனவாய்ச் செல்லினால் அரிக்கப்பட்டும் பாணப்பூச்சிகளால் துளைக்கப்பெற்றும் மூன்றாவது பூதமான மண்ணின் வாய்ப்படுகின்றன."

பாண்டித் துரைத் தேவர் காலத்தில் நிறுவப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்த்து வைக்கப்பட்ட பல நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் எரிவாய்ப்பட்டன. அவ்வாறு எரிந்து போன கையெழுத்துப் படிகளுள் ஒன்று, உவைமன் கதிரைவேற் பிள்ளையால் தொகுக்கப்பட்ட தமிழ் அகராதியின் ஒரு பகுதியுமாகும்.

## சங்க காலத்தைப் பற்றிய முடிவு

[1]மதுரைத் தல புராணம், குலசேகர பாண்டியன் முதல் மதுரேஸ்வர பாண்டியன் இறுதியாயுள்ள 74 பாண்டியரைப்பற்றிக் கூறுகின்றது. மதுரேஸ்வர பாண்டியன் கூன் பாண்டியனின் மகனாவன், கூன்பாண்டியன் அல்லது நெடுமாறனின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இவன் காலத்தில் சங்கம் இருந்ததென்பதற்கு எழுத்து மூலமான சான்றுகளோ பரம்பரைக் கதைகளோ இல்லை. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகருக்குச் சங்க நிகழ்ச்சி பழைய வரலாறாக விருந்தது. மணிமேகலையும் சிலப்பதிகாரமும் சங்கத்தைப் பற்றிக் கூறவில்லை. ஆகவே, சங்ககாலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் ஆதல் வேண்டும். கன்ன பரம்பரையின்படி, சங்கத்தை ஆதரித்த கடைசிப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி யாவன். இவன் காலத்திலேயே, திருக்குறள், சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. தலபுராணத்தில் தமிழ் அரசர் பெயர்கள் வடமொழிப் படுத்தப்பட்டிருத்தலால் எழுபத்து நான்கு பாண்டி யரில் உக்கிரப் பெருவழுதி, எவன் என்று அறுதியிட்டறிய முடியாமல் இருக்கின்றது. உக்கிரப் பெருவழுதி கரிகாலனின் தந்தையாகிய இளம் சேட்சென்னியின் காலத்தவன் எனப்படுகின்றான். கரிகாலனின் காலம், கி.பி. 50க்கும் கி.பி. 90க்கும் இடையில் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சங்க காலம் கி.பி. முதல் நூற்றாண்டளவிலாதல் வேண்டும். அதற்குப் பின் சங்க மிருந்ததற்கு ஆதாரங்கள் கிட்டவில்லை. ஆகவே, சங்ககாலத்தின் இறுதி கி.பி. 30க்கும் கி.பி. 50க்கும் இடையில் எனக் கூறுதல் தப்பு ஆக மாட்டாது.

சங்கம் எப்பொழுது தொடங்கிற்று என ஆராய்வோம். சங்கம் 197 பாண்டியரால் ஆதரிக்கப்பட்டதென முன் கூறினோம். ஒரு அரசனின் ஆட்சிக்காலம் இருபது எனக் கொண்டால், 197 அரசரின் காலமும் 3940 ஆண்டுகளாகும். தென்மதுரையில் நடந்த சங்கம் 89 பாண்டியரால் ஆதரிக்கப்பட்டது. 89 பாண்டியரின் காலமும் 1780 ஆண்டுகளாகும். நாம் 3940 ஆண்டிலிருந்து 1780 ஆண்டுகளைக் கழித்தால் மீந்திருப்பன 2160 ஆண்டுகளாகும். இக்காலத்தில் தென் மதுரையைக் கடல் கொண்டிருக்க லாம். இக்கணக்கு கி.மு. 2105இல் பெரிய வெள்ளப்பெருக்கு உண்டானது எனக் கூறும் யூதரின் காலக்கணக்கோடு ஏறக்குறைய ஒத்திருக்கின்றது. ஆகவே, கி.மு. 3940-ல் தலைச்சங்கம் தொடங்கிற்று எனக் கூறலாம். கி.மு. 3500-ல் சிந்துவெளித் தமிழரின் நாகரிகம் உச்சநிலையில் இருந்ததென் பதையும், அக் காலத்தில் இந்தியாவுக்கும், மேற்கு ஆசிய நாடுகளுக்கும், எகிப்துக்கும் வாணிகத் தொடர்பு இருந்ததென்பதையும் நோக்கும்போது, இது நிகழக் கூடாத ஒரு செயல் என நாம் நினைக்க மாட்டோம்.

1. இது சங்க காலத்தைப் பற்றிய குறிப்பு எனப் பண்டித சௌரிராயனவர்கள் ஆங்கிலெத்தி லெழுதிய கட்டுரையின் பொழிப்பு.

தென்மதுரை, கடலுள் மறைந்துபோகக் கபாடபுரம் பாண்டியரின் தலைநகரமாயிற்று. அங்கு இரண்டாவது சங்கம் நடைபெற்றது. இராமாயண காலத்தில் பாண்டியரின் தலைநகர் கபாடபுரமாக விருந்த தெனத் தெரி கின்றது. கபாடபுரம் தாம்பிரவர்ணி முகத்துவாரத்திலுள்ளது. இச் சங்கத்தை 59 பாண்டியர் ஆதரித்தனர். இவர்களின் ஆட்சிக் காலம் 1180 ஆண்டுகளா கும். ஆகவே, இரண்டாவது சங்கத்தின் இறுதிக் காலம் கி.மு.980 வரையிலா கும். மூன்றாம் சங்கத்தின் ஆரம்பமும் இதுவேயாகும். கபாடபுரம் கடலால் அழிக்கப்பட்டதெனப்படுகின்றது. கபாடபுரத்தை ஆண்ட கடைசி அரசனே கூடலை அமைத்தான். தலபுராணத்தின்படி கடைச் சங்கத்தைத் தொடங் கியவன் உக்கிர பாண்டியனாவன். இவன் மாபாரதத்தில் பப்புரவாகன் எனப் படுவான். இவன் மலையத்துவச பாண்டியனின் பேரன், மலையத்துவச பாண்டியனின் மகளையே தலபுராணம் சுந்தரன் எனக் குறிப்பிடும் அருச்சுனன் மணந்தான். மலையத்துவசனை அருச்சுனன் மணலூரில் சந்தித்தானென்றும், மதுரை நகரை அமைத்த பாண்டியன் மணலூரிலிருந்து வந்தானென்றும் திருவிளையாடற் புராணங் கூறுகின்றது.[1]

இதனால் கபாடபுரத்தின் அழிவுக்கும் மதுரைநகர் அமைப்பதற்கு மிடையில் மணலூர் தலைநகராயிருந்ததெனத் தெரிகின்றது. மணலூர் என்பது தமிழ்ப் பெயராகக் காணப்படுகின்றது. திருச்செந்திலுக்குப் பக்கத்தே அலைவாய் என்னும் துறைமுகமிருந்தது. இதனையே இராமா யணகாரர் கவாடம் என வடமொழிப்படுத்திக் கூறினார். இவ்வலைவாய்க்குப் பக்கத்தில் மணலூர் இருந்தது. அலைவாய் அல்லது கபாடபுரத்தைக் கடல்கொண்டபோது மணலூரிலிருந்த பாண்டியன் மதுரையைத் தனது தலைநகராக்கினான். பாரதப்போருக்குப்பின்பே மதுரை அமைக்கப்பட்டது. மூன்றாவது சங்கம் 49 பாண்டியரால் ஆதரிக்கப்பட்டது. இவர்களின் காலம் 980 வரையில். இடைச் சங்ககாலம் எனக் குறிக்கப்பட்ட கி.மு. 980லிருந்து 560 ஆண்டுகளைக் கழிக்க, கிறித்துவ ஆண்டின் தொடக்கம் ஆகின்றது. கபாடபுரம் கடல்வாய்ப் படுவதற்கும், மதுரைநகர் அமைக்கப்படுவதற்கும் சிலகாலம் ஆகியிருக்கலாம். ஆகவே, கி.பி. 30 முதல் கி.பி. 50 வரையில் கடைச் சங்கத்தின் இறுதிக்காலம் எனக்கொள்ளுதல் மிகவும் பொருத்தமா கின்றது.

இன்னொரு வகையாலும் இக்காலத்தை ஆராயலாம். ஆலாசிய மான்மியம், குலசேகர பாண்டியன்முதல் மதுரேஸ்வர பாண்டியன் வரையி லுள்ள 73 பாண்டியர்களை மதுரையை ஆண்டவர்களாகக் குறிப்பிடுகின் றது. 72 வது குப்ய பாண்டியனென்பவனே கூன்பாண்டியனென்றும் இவன் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி யெனவும். துணியப்படு கின்றன.

1. "கின்னரம் பயில் கடம்ப மாவனத்தின் கீழ்சார்த்
தென்னர் சேகர னெனுங்குல சேகர னுலக
மன்னர் சேகரனரசு செய்திருப்பது மணவூர்" (நம்பி திருவிளையாடல்)

72 பாண்டியரின் காலம் 1440 ஆண்டுகளாகும். இதில் (கி.பி. 650) இருந்து கிறித்துவ ஆண்டின் தொடக்கம் வரையிலுள்ள 650 ஆண்டுகளை எடுத்துவிட்டால், மீந்திருப்பன 790. இதனால் கி.மு. 790இல் மதுரை தலைநக ரான தென்பதும் கடைச்சங்கம் கூட்டப்பட்டதென்பதும் ஆகும். இது கி.மு. 980-ல் கடைச்சங்கம் தொடங்கியதெனக் காட்டப்பட்ட கணக்கோடு ஏறத்தாழ ஒத்திருக்கின்றது.

**நூல் நிலையங்கள்**

உலகில் நூல்நிலையங்களை நிறுவுதலும் புலவர்களை ஒன்று சேர்த்து மொழியை வளர்ப்பதும், நூல்களை இயற்றுவிப்பதும், இன்று நேற்றுத் தொடங்கிய வழக்கங்களல்ல. இவ்வழக்குகள் இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் தொட்டே நடைபெற்றுவந்தமைக்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

எகிப்திலே எடிவ் என்னும் இடத்தில் நூல் நிலையமொன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதின் அறை ஒன்றில் நூல் நிலையத்திலுள்ள புத்தகங் களின் பெயர்கள் வரிசையாக எழுதப்பட்ட பைபிரஸ் சுருள் காணப்பட்டது. நூல் நிலையங்களிலுள்ள நூல்கள் பைபிரஸ் தாளில் எழுதப்பட்டவை. இந் நூல் நிலையம் கி.மு. 4000 வரையில் அமைக்கப்பட்டது.

முதலாம் சார்கன், அக்காலத்தில் நிறுவியிருந்த நூல்நிலையம், இதற்கு அடுத்தபடியிற் பழமையுடையது. கி.மு. 2700-ல் சுமேரியாவில் பெரிய நூல் நிலையங்கள் தோன்றி யிருந்தன. தெல்லோ என்னும் நகரில் ஒன்றின் மேல் ஒன்றாக ஒழுங்குபடுத்தி அடுக்கப்பட்ட 30,000 களிமண் ஏடுகள் காணப்பட்டன. கி.மு. 2000 வரையில் சுமேரிய வரலாற்றாசிரியர்கள் கழிந்த கால வரலாறுகளை எழுதிவைத்தார்கள். இவ் வரலாற்றின் பகுதிகள் பாபிலோனிய அரச பரம்பரையை விளக்கும் பகுதிகளுள் அங்கு மிங்கும் வந்துள்ளன. எகிப்திலே வரலாறு எழுதி வைக்கும் வழக்கு பழமையுடையது. பரோவா என்னும் எகிப்திய அரச பரம்பரைக்கு முற்பட்ட அரசரின் வரலா றுகள் தொடர்பாக எழுதிக் காப்பாற்றப்பட்டு வந்தன. அரசரின் வரலாறு களை எழுதும் புலவன், படை எடுப்புக் காலங்களில் அரசரோடு உடன்சென்று வெற்றிகளின் தன்மைகளை எழுதினான். கி.மு. 2500 வரையில் வரலாறு எழுதுவது சிறந்த கலையாகக் கருதப்பட்டது. கி.மு. 2500 முதல் எகிப்திய புலவர்கள், தங்கள் அரசரை வரிசைப்படுத்தி எழுதி, அவர்களிருந்த காலத்தைக் குறிப்பிட்டார்கள். நிகழ்ச்சிகள் இன்ன அரசன் காலத்தில் இன்ன ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டன.

பாபிலோனில் தெல்லோ, இலகாஷ், நிப்பூர் முதலிய இடங்களில் நூல் நிலையங்கள் இருந்தன. நூல்கள் சாடிகளில் ஒழுங்குபடுத்தித் தட்டுக்களில் வைக்கப்பட்டன. அவைகள் அழிந்துபோயின. அவைகளுள் மிகப் பெரியது போர்சிப்பா என்னும் இடத்திலுள்ள அழிபாடுகளிற் கண்டுபிடிக் கப்பட்டது.

அசுர்பானிப்பால் (கி.மு. 673) என்னும் அசீரிய அரசன் பெரிய நூல் நிலையமொன்றை நிறுவினான். அந் நிலையத்திலுள்ள நூல்கள் போர் சிப்பா, கூதா, அக்காட், ஊர், எரெக், இலார்சா, நிப்பூர் முதலிய நகரங்களி லிருந்த நூல் நிலையங்களின் நூல்களைப் பார்த்துப் படியெடுத்தனவாகும். அசுர்பானிப்பாலின் அரண்மனையிற் காணப்பட்ட 30,000 களிமண் ஏடுகள் பாபிலோனியரின் வாழ்க்கையைப் பற்றி அறிவதற்கு ஆதாரமாயுள்ளன. வரலாற்றாசிரியருள் பேர்போன பெரோசஸ் என்னும் ஆசிரியர் (கி.மு. 280) உலகப் படைப்பு, மனிதனின் ஆரம்ப வரலாறு முதலியவைகளைப் பற்றிக் கூறுகின்றார். முதல் பாபிலோனிய அரசன் கடவுளால் தெரியப்பட்டு 36,000 ஆண்டு அரசு புரிந்தான் என்று அவர் கூறியுள்ளார்.

தென் சீரியாவில் களிமண் ஏடுகளடங்கிய பழைய நூல் நிலைய மொன்று கண்டுபிடிக்கப்பட்டது. சில நூல்கள் செமித்திய எழுத்திலும் எழுதப்பட்டிருந்தன. இதன் காலம். கி.மு. 1300 வரையில்.

எகிப்திலே தாலமிசோதரால் அலக்சாந்திரியாவில் அமைக்கப்பட்ட நூல்நிலையம் மிகப் பெரியது. அதில் 70,000 நூல்கள் இருந்தன. புத்தகங்கள் பைப்பிரஸ் சுருள்களாகவும், ஆட்டுத்தோல் சுருள்களாகவும் இருந்தன.[1] இந் நூல் நிலையம் பலமுறை தீக்கிரையாயிற்று. கிறித்துவமதம் பரவியபோது கிறித்துவ வெற்றியாளர் அதற்குத் தீ வைத்தனர். பின்பு முகமதியர் எகிப்தை வென்ற போது ஓமர் என்னும் கலிவ் (கி.பி. 642) எஞ்சியிருந்த நூல்களை எரித்தான்.

உரோமில் முதல் முதல் நூல்நிலையம் கி.மு. 168-ல் நிறுவப்பட்டது. இது மசிடோனிய அரசருடைய நூல் நிலையத்திலிருந்து வெற்றிப் பொருளாகக் கவர்ந்த நூல்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. ஆகஸ்தஸ் என்பார் பலனதன், அட்டோவியன் என்னும் பெயருடைய இரண்டு நூல் நிலையங்களை அமைத்தார். கொன்ஸ்தாந்தின் என்பார் பைசாந்தியத்தில் ஒரு நூல் நிலையத்தை நிறுவினார்.

உரோமில் தனிப்பட்டவர்கள் தமது மாளிகைகளில் நூல் நிலை யங்கள் வைத்திருந்தனர். சிலரிடத்தில் ஆயிரக்கணக்கான நூல்கள் இருந் தன. இளைய பிளினி என்பார் எழுதிய நூல்களில் இருநூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் மேற்கோள்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை ஒன்றும் இன்று காணப்படவில்லை.

கெய்ரோ, பாக்டாட், கோர்டோவா என்னும் இடங்களில் அராபியர் பெரிய நூல் நிலையங்கள் நிறுவியிருந்தனர் அவைகளில் ஆயிரக் கணக்கான நூல்கள் இருந்தன.

---

1. அக்கால அறிஞர் அந்நூல்களிற் பலவற்றைக் கிரேக்கில் மொழிபெயர்த்தனர். அவைகளுள் எபிரேயத்தில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடும் ஒன்று.

சீனாவில் அரசாங்க நூல் நிலையங்களும், பிற நூல் நிலையங்களும் இருந்தன. சீனச் சக்கரவர்த்தி ஒருவன் வரலாற்றாசிரியர்கள் எழுதிய நூல் களையெல்லாம் தீயிலிட்டு எரிக்கும்படி கட்டளையிட்டான். பழையனவை யெல்லாம் நினைவில் வைக்கும் சுமை நீங்கவேண்டும் என்றும், தன்னி லிருந்து சீனவரலாறு தொடங்கவேண்டுமென்றும் அவன் கருதினான். சாத்திரத் தொடர்பான சில நூல்கள் எரியாமல் தடுக்கப்பட்டன. தடை செய்யப்பட்ட நூல்கள், அரசாங்க நிலையத்தில் வைக்கப்பட்டன. அரசினர் அனுமதி பெற்று மாணவர் அவைகளை படிக்கக் கூடியதாகவிருந்தது. அக்கால நூல்கள் மூங்கில் சட்டங்களில் எழுதப்பட்டவை. ஆகவே அவை மிகவும் பாரமுடையன. புத்தகங்களை எரியாது காப்பாற்றத் துணிந்தவர்கள் பல தொல்லைகளுக்குள்ளானார்கள். பல நூல்கள் கைப்பற்றப்பட்டன. 460 பேர் கொலைத் தண்டனை யடைந்தனர். கான்பியூசஸ் எழுதிய நூல்களை சிலர் மனப்பாடஞ் செய்திருந்தார்கள். மற்றவர்கள் கேட்டு மனப்பாடஞ் செய்யும்படி அவர்கள் அவைகளைச் சொன்னார்கள். அவ்வரசன் இறந்த பின் நூல்கள் மறுபடியும் பரவலாயின. ஆனால் அவைகளில் பல தவறுகள் நுழைந்தன.

சீனரின் அரசாங்க நூல் நிலையத்தில் 3,123 இலக்கியங்கள், 2,705 தத்துவ சாத்திரங்கள், 1,318 பாடல் நூல்கள், 2,568 கணித நூல்கள், 869 மருந்து நூல்கள், 790 போர் நூல்கள் முதலியன விருந்தன. 18ஆம் நூற்றாண்டில் மஞ்சு அரசர், புலவர்களின் பாடல்களைத் தொகுக்கும்படி கட்டளையிட் டனர். 2,300 புலவர்கள் பாடிய 48,900 பாடல்கள் அடங்கிய முப்பது நூல்கள் தொகுக்கப்பட்டன. அப்பொழுது நூல் நிலையத்தில் 54,000 நூல்கள் இருந்தன.

இந்திய நாட்டிலும் நூல் நிலையங்கள் பல இருந்தன. பனை ஓலைச் சட்டங்களிலும், மரப்பட்டைகளிலும் எழுதப்பட்ட நூல்கள் திபெத்திலும் இந்தியாவின் பல பாகங்களிலும் சேர்த்துவைக்கப்பட்டன. அவை நாமகளின் வீடுகள் எனப்பட்டன. தஞ்சாவூர் சரஸ்வதி மகால் முற்கால நூல் நிலையங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்ட தொன்றாகும். முகமதியர் கி.பி. 1000 வரையில் கடுதாசியை இந்தியாவுக்குக் கொண்டுவந்தபோதும் 17ஆம் நூற்றாண்டு வரையில் பட்டைகளும் ஓலைச் சட்டங்களுமே பயன்படுத்தப் பட்டன.

## இந்திய நாட்டில் நூல் நிலையங்கள்

இந்தியாவில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் பனை ஓலை, தாளிப் பனை ஓலை, மரப்பலகைகள், பஞ்சு ஆடை, பூர்சா பட்டை என்பவை. பனை ஓலையில் எழுதப்பட்ட நூல்கள் மத்திய ஆசியாவில் கிடைத்தன. அவை கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. புத்த ருடைய போதனைகள் அவர் மரணத்துக்குப் பின் கூடிய சங்கத்தில் அவர்

மாணாக்கரால் பனை ஓலைகளில் எழுதப்பட்டனவென்று ஹியன் தி சியாங் என்னும் சீன யாத்திரிகன் கூறியுள்ளான். தோல், தந்தம், செம்பு, வெள்ளித் தகடுகளும் எழுதப் பயன்படுத்தப்பட்டன. மௌரிய அரசர் காலத்தில் அரசாங்கக் கட்டளைகள் செப்புத் தகடுகளில் எழுதப்பட்டன. தூய்மையான நூல்களும் செப்புத் தகட்டில் எழுதி வைக்கப்பட்டன.

பதினோராம் நூற்றாண்டில் கடுதாசி பயன்படுத்தப்பட்டது மாளவத் திலும் கூர்ச்சரத்திலும் 14ஆம் நூற்றாண்டில் கடுதாசியில் எழுதிய நூல்கள் கிடைத்தன. மை, மசி எனப்பட்டது. நீர்ச்சஸ் (Nearchus) என்பார் இந்தியர் மரப்பட்டை, ஓலை, துணிகளில் மையால் எழுதுவதைப் பற்றிக் கூறியுள்ளார்.

நூல்நிலையம் [1]சரஸ்வதி பண்டாரம் எனப்பட்டது. புத்தர் காலத்தில் நூல் நிலையங்கள் பெரிதும் இருந்தன என்பதற்கு ஆதாரமுண்டு. பத்தாம் நூற்றாண்டுவரையில் நூல் நிலையங்கள் பெருகின. போர்க் காலங்களில் மக்கள் உயிர், உடைமைகளைக் காப்பாற்றுதலல்லாமல் நூல்களையும் காக்க வேண்டியிருந்தது. முகமதியர் வெற்றியாளரானபோது தம் கையிற்பட்ட நூல்களையெல்லாம் தீயிலிட்டனர். தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் 14ஆம் நூற்றாண்டளவில் நூல் நிலையங்கள் வளர்ந்தன. விசயநகர் அரசர் காலத்தில் இவை சிறப்புற்றிருந்தன. இன்று காணப்படுவன போன்ற நூல் நிலையங்கள் பல முன்பும் இருந்தன. நாலாந்தா, உதாண்டபுரம், விக்கிரம சீலா முதலிய இடங்களிற் பெரிய நூல் நிலையங்கள் இருந்தன. மடங்கள் கோயில்கள் அரண்மனைகளிலும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட் டிருந்தன.

நாலந்தாவில் நியாயம் தொடர்பான நூல்களும் தக்க சீலத்தில் மருத்துவக்கலை நூல்களும், விக்கிரமசீலத்தில் ஆகம நூல்களும் சிறப்பாக விருந்தன. அரண்மனைகளிலுள்ள நூல்கள் புலவர் அறிஞர்களால் மாத்திரம் பயன்படுத்தப்பட்டன.

கையெழுத்து நூல்களைப் படி எடுத்துச் செல்லப் பலர் அயல் நாடு களினின்றும் வந்தார்கள். கையெழுத்து நூல்களைப் படி எடுப்பதே பரம் பரைத் தொழிலாகவுள்ள பலர் இருந்தார்கள். சிறந்த அறிஞராகக் கொள்ளப் பட்டவர்களின் நூல் படி எடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்பப் பட்டன. மத்திய ஆசியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நூல்களால் இது அறியப் படுகின்றது. வசிட்டர், போதாயனர், கௌதமர் முதலியோரின் நூல்களினால், ஆண்டின் சில காலங்களில் அறிஞர் சிற்சில இடங்களில் கூடினார்கள் எனத் தெரிகின்றது. அவர்கள் நூல் நிலையங்கள் உள்ள இடத்தையே தாம் கூடும் இடங்களாகத் தெரிந்து கொண்டனர்.

1. தஞ்சாவூர் நூல் நிலையம் சரஸ்வதி மால் எனப்பட்டது இக் கருத்துப்பற்றியே யாகும்.

தென்னிந்தியாவில் நூல் நிலையங்கள் பல இருந்தன. அரசர் கல்வியைப் பெரிதும் ஆதரித்தமையின் அவர் அரண்மனைகளில் பெரிய நூல் நிலையங்கள் இருந்தன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் அமைக்கப் பட்ட நூல் நிலையம் அவைகளுள் ஒன்று. அந்நூல் நிலையங்களில் தொகுத்து வைக்கப்பட்ட பாடல்களின் தொகையே எட்டுத் தொகை, பத்துப் பாட்டு,[1] பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்குவன. யாப்பருங்கல விருத்தி பழைய உரைகள் என்பவைகளில் இன்று காணப்படாத பல நூல்களின் பகுதிகள், மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன.

முகமதியர் காலத்தில் டில்லி, ஆக்ரா என்னுமிடங்களில் பெரிய நூல் நிலையங்களிருந்தன. புத்தரின் விகாரை, சங்கிராமங்களில் நூல் நிலை யங்கள் இருந்தன; புத்தர் சைன மடங்களுக்கு நூல்களை படி எடுப்பதற்கு அரசராலும் பிரபுக்களாலும் நன்கொடைகள் அளிக்கப்பட்டன. முகமதியர் காலத்தில் நூல்கள் பெரிதும் அழிக்கப்பட்டன. மொகலாய சக்கரவர்த்தி ஒருவர், தான் தினமும் குளிக்கும் வெந்நீர், நூல் ஏடுகளால் தான் எரித்துச் சூடாக்கப்படவேண்டும் எனக் கட்டளையிட்டார்.[2]

கோயில்கள் மடங்கள் அரண்மனைகளிலன்றித் தனிப்பட்ட புலவர் களும் தமது வீடுகளில் நூல்களைத் திரட்டி வைத்திருந்தார்கள். உ.வே. சாமிநாத ஐயரவர்கள் ஏடுகள் ஆராயும்படி ஊர் ஊராகச் சுற்றி வந்த போது இவ்வகை நூல் நிலையங்கள் பலவற்றைப் பார்த்தார். அவ்வகை நூல் நிலையங்களிலிருந்தே அவர் பதிப்பித்த இலக்கிய ஏடுகள் கிடைத்தன.

## தமிழ்நாட்டில் ஆட்சிமுறையே சங்கமுறையாக விருந்தது

தமிழ் நாட்டில் ஆட்சிமுறை சங்கமுறையாகவிருந்தது. முற்காலக் கிராமச் சங்கங்கள் கூட்டம், ஊர், மன்றம், கழகம் முதலிய பெயர்களைப் பெற்றிருந்தன. தென்னிந்தியாவிற்றோன்றிய கிராம ஆட்சிமுறையே பாபி லோனுக்குச் சென்று, பின்பு ஐரோப்பிய நாடுகளிற் பரவிற்று என ஹேவிட் என்னும் வரலாற்றறிஞர் கூறியுள்ளார். கூட்டங்கள் அல்லது சங்கங்கள் வாயிலாக ஆட்சிபுரிவதும் கல்வி, கலைகளை வளர்ப்பதும் பழந்தமிழ ருக்குப் புதிய செயலாக இருக்கவில்லை. எகிப்து, மேற்கு ஆசியா முதலிய நாடுகளில் பழைய நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் அந்நாடுகளின் பழங்குடிகளல்லர் என்றும், அவர்கள் பிறநாடுகளினின்றும் சென்றும் குடி யேறியவர்கள் என்றும் உறுதிப்படுகின்றன. எகிப்தியர், சுமேரியர் முதலிய பழைய நாகரிக மக்கள் தென்னிந்தியாவினின்றும் சென்றவர்கள் என மேற்புல ஆராய்ச்சி அறிஞர் பலர் கூறுகின்றனர். ஆகவே எகிப்து பாபி

1. இவைகளுள் எல்லாம் சங்ககாலத்தனவல்ல.

2. It is said that one of the Mogul Emperors ordered that the books of the infedels should be utalized for boiling water with which his daily bath should be conducted - J.O.T. Andra historical society. Vol. vii No. 4

லோன் நாகரிகங்களுக்கு அடிப்படை தென்னிந்திய நாகரிகமே எனக் கருதப் படுகின்றது. தென்னிந்திய மக்கள் கையாண்ட நூல் நிலைய அமைப்பு, தமிழ்ச் சங்க அமைப்புப் போன்ற முறைகள் எகிப்திய பாபிலோனிய சின்ன ஆசிய மக்களாலும் கையாளப்பட்டன என்பது தவறாகமாட்டாது. அந் நாடு களில் காணப்பட்ட பழைய நூல் நிலையங்களே அதற்குச் சான்று.

**கடல்கோள்**

தெற்கே நிகழ்ந்த பல கடல்கோள்களைப்பற்றி இலங்கைப் புத்த நூல்களும் புராணங்களும் தமிழ் இலக்கியங்களும் கூறுகின்றன. சிலப்பதி காரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. அதில் "வடிவே லெறிந்த வான்பகை பொறாது பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல்கொள்ள" எனக் கூறுப்பட்டுள்ளது. சிலப்பதி காரம் செய்யப்படுகின்ற காலத்தில் கடல்கோள் நிகழ்ச்சி பழங்கதையாக மாறியுள்ளதென்பது "வடிவேலெறிந்த வான்பகை பொறாது" என வரும் கற்பனையால் அறியலாகும். இக்கடல்கோளைப் பற்றிய வரலாறு, சிலப்பதி காரத்துக்கு உரை செய்த அடியார்க்கு நல்லார் காலத்தில் நன்கு வழங்கிய தாகத் தெரிகின்றது. அவர் இன்று கிடைக்கப் பெறாத பல அரிய பழந்தமிழ் நூல்களைத் தமது உரையில் ஆங்காங்கு மேற்கோள்களாக எடுத்துக் காட்டி யுள்ளார். ஆகவே கடல் கோளைப் பற்றிய வரலாறு, அக்காலம் வழங்கிய நூல்களில் காணப்பட்டதென உய்த்தறியலாகும். 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என வரும் சிலப்பதிகார அடிக்கு, அடியார்க்கு நல்லார் கூறிய உரை வருமாறு: "தென்பாலி முகத்திற்கு வட வெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியாற்றிற்கு மிடையே எழுநூற்றுக் காவத ஆறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ்முன் பாலைநாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குண காரை நாடும், ஏழ்குறும்பனை நாடு மென்னும் இந்த நாற்பத் தொன்பது நாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலைநாடும், காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல் கொண்டது."

எழுநூறுகாவதம் என்றது கொள்ளத்தகாதது போல் தோன்றலாம். அக்காலம் காவதம் எனப்பட்டது எத்தனை மைல் தொலைவைக் குறித்தது என்று அறிய முடியவில்லை. யாப்பருங்கலவிருத்தி உரையால் ஒரு காவத மென்பது 8000 முழம் கொண்ட தொலைவு எனத் தெரிகின்றது. முற்கால மக்கள் கூறிய ஆண்டுக்கணக்குகள் அளவுக் கணக்குகள் பிழைபடுதலும் கூடும். அது கொண்டு அவர் கூற்றுக்கள் விலையற்றன என்று தள்ளிவிடு மாறில்லை. இவ்வுரையினால் இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கே பெரிய நிலப் பரப்பு கிடந்ததென்பது உண்மையே. உரோமர் காலத்து கன்னி யாகுமரியிலிருந்த கன்னித் தெய்வத்தின் கோயில் இன்று கடலுள் மறைந்து விட்டதெனத் தெரிகின்றது.

தலைச்சங்கம் இருந்த மதுரை தெற்கேயிருந்து கடல்கோட்பட்ட தெனப் படுகின்றது. பழைய கடல்கோளைப் பற்றிய வரலாறு காணப்படுத லின், தெற்கே இருந்த மதுரையைக் கடல் கொண்ட தென்பதைக் குறித்து நாம் ஐயுற வேண்டியதில்லை. **செங்கோன் தரைச் செலவு** என்னும் பழைய நூலின் சிறுபகுதி அச்சிடப்பட்டுள்ளது. அதில் காணப்படும் சில செய்திகளும் தெற்கே தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்த தென்பதை வலியுறுத்துவதாகும்.

***"செங்கோன் றரைச்செலவைச் சேந்தன் றனியூரான்***
***றுங்கன் றமிழ்த்தாப் புலித்தொடரால் - அங்கிசைத்தான்***
***சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி***
***யக்கரக்கோ நாமஞ்சுவாம்"***

என்னும் பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் ஏழ்தெங்க நாட்டு முத்தூர் அகத்தியன் கூற்றானுமிது அறிக.

***"தமிழ் தலைமை தலைக்கொண்டான்,***
***சக்கரன் றொக்கார் குழுவில்"***

"................***மணிக்கோடு***
***தங்குபெரு வளநாட்டிற்***
***றமிழிருந்து புறங்காக்குந் தமிழ் நாடியாங்கே"***

என்ன வரும் செங்கோன்றரைச் செலவானும் அதன் உரைப் பகுதிகளாலும் குமரிக்குத் தெற்கே தமிழ் வழங்கும் பெருநாடு இருந்த தென்பது நன்கு விளங்கும்.

### தமிழ்ச்சங்கம் வடநாட்டினின்றும் வந்த ஆரிய பிராமணரால் நிறுவப்பட்டதென்னும் வாதம்

தமிழ் ஆராய்ச்சி என்னும் நூல் [1]எழுதியவர் வட நாட்டினின்றும் வந்த ஆரியப் பிராமணரே தமிழருக்குச் சீர்திருத்தத்தை அளித்தார்கள் என்றும் முதற்சங்கம் ஆரியப் பிராமணர் கூட்டத்தின் தலைவராகத் தென்னாட்டுக்கு வந்த அகத்தியர் தலைமையில் நிறுவப்பட்ட தென்றும் கூறியுள்ளார். [2]இவர் கூற்றில் யாதும் உண்மையிருக்கவில்லை. தமிழர் வரலாற்றை எழுதும் பிராமண ஆசிரியர்கள் பெரும்பாலினர் இவ்வாறே எழுத முடியும். ஆரியர் தென்னாட்டுக்கு வந்தபோது தமிழர் அவர்களிலும் பார்க்க மிக மேலான நாகரிகம் பெற்றிருந்தார்கள் என்றும் அவர்கள் தமது கொள்கைகளை நாகரிகம் மிகுந்த தமிழரிடையே புகுத்த முடியாமல் இருந்தமையின் அவர்கள் அறியாதிருந்த புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் தழுவினர் என்றும் பழைய தக்காணத்தின் வரலாற்றுக் குறிப்புக்கள் என்னும்

1. Tamil Studies - M. Srinivasa Aiyengar.
2. It is admitted by both by Indian and European scholars that the Civilization of the Tamil nation was in the main, due to the Aryan colonists in the south and that the first academy owed its origin to Agastya, the reputed leader of the first band of Brahman imigrants, in south India. - ibid p.p. 233, 4.

நூலில் சுப்பிரமணிய ஐயர் கூறியுள்ளார். [1]ஆரியரின் பிராமண காலம் கி.மு. 1000-க்குப்பின். அதற்குப் பின்பே ஆரியப் பிராமணர் தென்னாடு வந்திருத்தல் கூடும். அகத்தியர் ஆரியப் பிராமணரைத் தலைமைதாங்கிக் கொண்டு வந்தவர் என்பதற்குத் தக்க பிரமாணங்கள் இல்லை. புராணக் கதைகள் பொய்யும் புளுகும் மலிந்தவை. அவைகளில் சொல்லப்படுபவை பிற ஆதாரங்களின்றி மெய்யெனக் கொள்ளுதல் இயலா. அகத்தியர் இராமாயண காலத்தில் கோதாவரிக் கரையில் இருந்தார். இராமாயணம் பாரதத்துக்குப் பிந்திய நிகழ்ச்சி எனப்படுகின்றது. பாரதப்போர் கி.மு. 1300 வரையில் நிகழ்ந்ததெனத் துணியப்படுகின்றது. கோதாவரிக் கரையில் இராமாயணக் காலத்தில் இருந்த அகத்தியர் எப்பொழுது பாண்டிய நாட்டுக்கு வந்தார்? ஹெரதோதசு சித்திய மக்களிடையே உள்ள அகத்திரிசிகளைப் பற்றிக் கூறுகின்றார். செங்கோன் தரைச் செலவில் முத்தூர் அகத்தியனென்னும் பெயர் காணப்படுகின்றது. வடநாட்டில் வேத காலத்திலிருந்த முனிவர்கள் இருடிகள் என்போர் எல்லோரும் திராவிடரல்லர் என "[2]முசிலிம்களுக்கு முற்பட்ட இந்தியா" என்னும் நூலில் இரங்காச்சாரியார் எழுதியுள்ளார். இவை போன்ற பல ஏதுக்களால் அகத்தியர் ஆரியர் என்று துணிவதற்கு எவ்வகை ஆதாரமும் காணப்படவில்லை. தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு பெற்ற அகத்தியர் தமிழ்ப்புலவர் ஒருவர் எனக் கொள்வதே தகுதியுடையது. இறையனார் களவியலில் கூறியவற்றை நோக்கும்போது திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றமெறிந்த குமரவேள் முதலிய கடவுளர் சங்கமிருந்தார்கள் என்பது போன்றதோர் பழங்கதையே அகத்தியர் சங்க மிருந்ததும் ஆகலாம். அகத்தியரைப்பற்றி மணிமேகலையில் வரும் செய்திகளால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் அவர் வரலாறு பழங்கதையாக மாறியுள்ள தெனத் தெரிகின்றது. மணிமேகலையில் அகத்தியர் தமிழோடு சம்பந்தப் பட்டவராக எங்கும் கூறப்படவில்லை. சங்கத்தொகை நூல்களில் பொதிய மலையைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவைகளில் பொதிய மலை அகத்தியர் இருப்பிடமென்றாவது, அங்கு தமிழ் வளர்க்கப்பட்டதென் றாவது யாதும் கூறப்படவில்லை. இவை ஆராயத்தக்கன.

பிராமணர் தாமே தமிழருக்கு நாகரிகத்தை உதவி, அவர் மொழியையும் சீர்திருத்தஞ் செய்தவர்கள் எனக் கூறிவந்தார்கள். இதனைத் தமிழ்ப் புலவர்கள் எதிர்த்தார்கள். அக் காலத்தில் வரலாற்று ஆராய்ச்சி அறியப்பட வில்லை. அதனால் இரு கட்சியினரும் தத்தமக்கு வலியனவென்று தோன்றிய

1. "In early times when the aryans penetrated the fastness of the Dekhan and came in contact with the races of people inhabiting it, they saw them already in possession of a cultured language and high degree of civilization so much so not only were they not able to impart upon them their own language and culture but had to assimilate fresh ideas and sentiments hitherto unknown to them." - Historical sketches of ancient Dekhan p 78-V - K. Subramaniaya Aiyer.

2. Pre-Musalman India - V. Rangacharya

சில கருத்துக்களைக் கொண்டு வாதங்கள் நடத்தினர். ஆரியர் இந்திய நாடு வந்தது முதல் இன்று வரையும் ஆரியர் தமிழர் என்ற பூசல்கள் நடந்தே வருகின்றன. இதனை

> ***"கும்பன் குதத்திற் றமிழ் தோன்றிற் றென்னத் குளறுகின்ற***
> ***வம்பருங் கொன்றன்றி வாழா மிலேச்சர்தம் வாயுமிழுந்***
> ***தம்பல மேயொக்கு மாரிய மென்னுஞ் சழக்கர்களும்***
> ***வெம்பகை யாவிகழ் சண்டாளர் தாமென்கை மெய்ம்மொழியே"***

என வரும் முருகதாசரின் பாடலாலும் அறியலாகும். சில சமயங்களில் பிராமணரேயன்றி நம்மவரே ஆரியம் உயர்ந்த தெனவும் தமது அறியாமை யால் வாதாடினர். இன்னும் அவ்வகையினர் சிலர் காணப்படுகின்றனர்.

தமிழருக்கும் ஆரியருக்கும் நெடுகிலும் பகையிருந்த தென்பதைச் சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் காண்கின்றோம். தமிழை இகழ்ந்த ஆரிய அரசர்மீது சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் சென்று அவர் முடிமிசை கல்சுமத்திக் கங்கையிற் படியவைத்துத் தமிழ்நாடு கொண்டு வந்தான் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. தமிழ்ச் சங்கத்துக்கும் ஆரியருக்கும் யாதேனும் தொடர்பு இருந்ததெனக் கூறுதல் அமையாது.

சி.வை. தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் கலித்தொகை நூல்களைப் பதிப்பிக்கின்ற காலத்தில் பல ஆரியக் கொள்கையினர் அவரை எதிர்த்துப் போராடினார்கள் என்பது அவர் தமது கலித்தொகைப் பதிப் புரையில் கூறியிருப்பவை கொண்டு நன்கு அறியப்படுகின்றது அவற்றுட் சில வருமாறு: "வடமொழியின் மகத்துவத்தை யான் எஞ்ஞான்றும் எட் டுணையும் அவமதித்தேனல்லன். தமிழ் அனாதியென்றாவது, சமற்கிருதத் துக்கு முந்திய தென்றாவது கொள்கிலேன். ஆரியர் வருவதற்கு முன், பரதகண்டத்திலிருந்த பாஷை தமிழென்றும், ஆரியரால் முறியடிக்கப்பட்ட தமிழர் தென் திசைச் சென்று சேர சோழ பாண்டிய இராச்சியங்களை ஏற்படுத் தினார்களென்றும், ஆதலால் பரதகண்டத்திற்குத் தமிழே முந்தியதென்றுஞ் சாதிப்பாருளராகவும், யான்

> ***"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரிசைவாய்ப்ப***
> ***இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசை பரப்பும்***
> ***இருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றா லிவ்***
> ***இருமொழியு நிகரென்று மிதற்கைய முளதேயோ"***

என்ற முனிவரர் பதத்தைச் சிரமேல் தாங்கி இருமொழியுஞ் சமத்துவ முடையன வென்றும், ஆகவே, தமிழிற்குச் சமற்கிருதந் தாய்மொழி யன்றென்றுந் தமிழின் பெயர் திராவிட மென்பதன் மரூஉவன்றென்னும் சாதிப்பான் நின்றனன்."

இவ்வாறு அவர்கள் பணிவோடு கூறியதற்கே மறுப்புகள் எழுந்தன. "ஆரிய சம்பந்தமின்றித் தமிழ்க் கிரந்தங்கள் கிடையா: தமிழெழுத்துக்களே கிரந்தாக்ஷரங்களின் திரிபு" எனப் பலர் கூடிக் கூச்சலிட்டனர். இவைகளால்

தமிழின் உயர்வை எடுத்து விளக்க முன் வருபவர்மீது ஒரு கூட்டத்தினர் வெகுளி கொண்டிருந்தார்கள் என்று நாம் அறியலாகும். இன்றும் அவ்வகை யினர் இல்லாமல் இல்லை. இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன் தமிழ்நாடு இருந்த நிலை வேறு; இன்றைய நிலை வேறு. ஆரியர் தமிழரை நீண்ட காலம் எவ்வாறு இழிவுபடுத்தினர் என்பதைத் தமிழர் சரித்திரபூர்வமாக அறிந் துள்ளார்கள். ஆரியக் கொள்கைகளைக் கூண்டோடு ஒழிப்பதே தன் மதிப் புள்ள தமிழனின் உயர்ந்த இலக்கு என்னும் உணர்ச்சி நாள்வீதம் ஓங்கு கின்றது. ஆரியர் தம் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுக் கடவுளின் பெயரால் கட்டிவைத்த கட்டுகள் ஒன்று ஒன்றாக அறுந்து போகின்றன. இன்று தமிழி னும் பார்க்க ஆரியம் உயர்ந்ததென்று வாதாடும் ஆற்றல் ஆரியக் கட்சி யினரிடம் மறைந்துவிட்டது. தம்மைக் கைவிட்டு விடக் கூடாதென அவர் இரந்து கேட்கும் காலம் தோன்றியுள்ளது சி.வை. தாமோதரம் பிள்ளை இரு மொழியும் சமமென வாதாடினார்; இன்றோ ஆரியம் தமிழனுக்கு வேண்டிய தில்லை; அது மிலேச்ச மொழி என்னும் வாதாட்டங்கள் நடக்கின்றன.

**சங்கப்பலகை**

திருநாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். இவர் காலத்தில் தமிழ்ச் சங்கத்தைப்பற்றிய வரலாறு பழங்கதையாக மாறியுள்ளது; சிவபெருமான் சங்கமேறித் தருமிக்குப் பொற்கிழி அளித்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். காலஞ் செல்லச் செல்லக் கற்பனைக் கதைகள் சங்க வரலாற்றோடு கலந்தன. அவை கதை சொல்லுவோரால் காலந்தோறும் சேர்க்கப்பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டளவில் சங்க வரலாறு பலவாறாக வளர்ந்துள்ளது. சோமசுந்தரக் கடவுள் சங்கப் புலவர்களுக்குச் சங்கப்பலகை அளித்தல், அது பொற்றாமரை வாவியில் மிதந்து கொண்டிருத்தல்; அது, இரண்டு சாண் நீளமுடைய தாதல், மெய்ப்புலமை மிக்கவர் ஏறியிருந்தால் ஒரு முழம் வளர்ந்து அவருக்கு இடங் கொடுத்தல்; சிவபெருமான் செய்த பாட்டில் நக்கீரர் பிழை காணுதல்; சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் காட்டு தல்; கீரன் பொற்றாமரை வாவியில் விழுதல்; அவன், கைலை பாதி காளத்தி பாதி பாடுதல்; அகத்தியர் கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தல்; நாற்பத்தெட்டு (வடமொழி) எழுத்துக்கள் வடிவான சரஸ்வதி, சாபத்தினால் நாற்பத்தெட்டுத் தமிழ்ப்புலவர்களாகப் பிறத்தல்; சிவபெருமான் அவர்களோடு தானுமொரு புலவராக வீற்றிருத்தல்; சங்கப்பலகை திருவள்ளுவருக்கு இடங்கொடுத்து மற்றப் புலவர்களைத் தடாகத்தில் விழும்படி விடுதல் போன்ற பல புதிய கற்பனைகள் பிற்காலத்தில் தோன்றின. இவ்வரலாறுகள் ஆராய்ச்சிக்குரியன வல்ல. சங்கப்பலகை என்பது சங்கப்புலவர்கள் இருப்பதற்கு இடப்படும் மணை. புலமையில் தேறியவர்கள் மாத்திரம் சங்க மண்டபத்தில் சங்கப் புலவர்களுக்கு இடப்படும் மணைமீது இருக்க அனுமதிக்கப்பட்டார்கள். இவ்வரலாறே சங்கப்பலகை வளர்ந்து புலவர்களுக்கு இடங்கொடுக்கும் வரலாறாக மாறியுள்ளதெனத் தெள்ளிதில் புலப்படுகின்றது.

## பட்டி மண்டபம்

தமிழ்ப்புலவர் அறிவுரைகளும் விரிவுரைகளும் வாதங்களும் புரியும் மண்டபம் பட்டி மண்டபமெனப்பட்டது. இவ்வகை மண்டபங்கள் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரம், திருவாசகம் முதலிய நூல்களால் இனிது அறியலாகும். கிரேக்க நாட்டில் இவ்வகை மண்டபங்கள் இருந்தன. கிரீஸ் நாட்டில் அதேன்சுக்கு அண்மையிலிருந்த சிலம்பக்கூடம் அக்கடமஸ்(Academus) எனப்பட்டது. இக் கட்டடம் அதேன்சியருக்கு சிமன் என்பவரால் கொடுக்கப்பட்டது. இங்கு பிளாட்டோ தனது மரண காலம் வரையில் (கி.மு. 348) ஐம்பது ஆண்டுகள் ஆசிரியராக விருந்தார். இம்முறையான கல்வி பின் வந்த தத்துவ சாத்திரிகளாலும் அளிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு கல்வி கற்பிக்கப்பட்ட காலம் “பழைய, இடை, புதிய அக்கடமிக்காலம்” எனப் படும். இன்று அக்கடமி என்பது இலக்கியம், இசை, விஞ்ஞானம், ஓவியம், சிற்பம் போன்ற கலைகளை வளர்க்கும் கழகங்களுக்குப் பெயராக வழங்கு கின்றது. இதனால் தமிழ்நாட்டில் மாத்திரமன்று, பிறநாடுகளிலும் சங்கங் களும் பட்டி மண்டபங்களும் இருந்தனவென்று தெரிகின்றது.

## தமிழ் வடமொழியி னுதவியின்றி இயங்காதென்னும் வாதம்

சங்க நூல்களில் காணப்படும் வடசொற்கள் மிகச் சிலவே. அச் சொற் களும் வடமொழிக் குரியனவோ என்பது ஐயத்துக்குரியது. மக்லீன் என்பார் சங்க நூல்களில் காணப்படும் வடசொற்கள் எனப்படுவன இரு மொழி களுக்கும் பொதுவாகிய சொற்களாகலாமெனக் கருதினர். தமிழ் ஆராய்ச்சி[1] என்னும் நூல் எழுதிய சீனிவாச ஐயங்கார் 1800 அடிகள் கொண்ட பதிற்றுப் பத்தில் பன்னிரண்டு வடசொற்கள் வரையில் காணப்படுகின்றன வென்றும், இதனால் தமிழ்மொழி பிறமொழிகளின் உதவியின்றி இயங்கும் வன்மை உடையதென்றும், தமிழிலுள்ள சிறிய சொற்களைச் சேர்த்து இக் காலப் புதிய கருத்துக்களை விளக்குவதற்குப் புதிய சொற்களை ஆக்கிக்கொள்ளல் இலகுவில் அமையுமென்றும் விளங்குகின்ற தெனக் கூறியுள்ளார். [2]பதிற்றுப் பத்தில் வந்துள்ள வடசொற்களெனக் காட்டப்பட்ட ஆவுதி, பலி, காலன், பாசம், பசாசம், ஆரம், அவுணர், ஆரியர், மந்திரம், சாந்தி என்ற சொற்கள் எல்லாம் வடமொழிக் குரியன வென்பது ஐயத்துக் கிடமானது. காலின்ஸ்

1. Tamil Studies - M. Srinivasa Aiyengar
2. The authors of this collection (பதிற்றுப்பத்து) have used Sanskrit derivatives (*tatbavas*) very sparingly and even these relate either to religion or mythology. They are ஆவுதி, பலி, மந்திரம், காலன், பாசம், பசாசம், ஆரம், சாந்தி, அவுணர், ஆரியர். Thus in a work of about 1,800 lines only a dozen words of Sanskrit origin are to be found, and it speaks of the purity of the Tamil language. It can exist without the least help from foreign languages as it had and even now has sufficient elementary words of native origin, out of which compounds can with a little attention to phonetic principles be formed to express modern thoughts-ibid - P. 280

என்பார் காலன் என்னும் சொல் தமிழ் எனத் 'திராவிட ஆராய்ச்சிகள்' என்னும் நூலிற் காட்டி யுள்ளார். பாசம், ஆரம் என்னும் சொற்கள் தமிழுக்கே உரியன வென்று எளிதில் நாட்டிவிடலாம்.

உலகில் உள்ள மொழிகள் எல்லாம் (தமிழ் உட்பட) ஆரியத்தி னின்றும் பிறந்தனவென்னும் மூடக்கொள்கை ஒரு காலத்தில் பரவி யிருந்தது. அக்காலத்திலும் தமிழ் தனித்தியங்க வல்லது; தமிழோடு பிறமொழிச் சொற்கள் கலத்தல் ஆகாது எனத் தமிழ்ப் புலர்கள் வற்புறுத்தி வந்தனர். இவர்கள் வற்புறுத்தலுக்கு மாறாக, "அன்றியும் தமிழ் நூற்கள விலை யவற்று - ளொன்றேயாயினுந் தனித் தமிழ் உண்டோ" என ஈசான தேசிகரென்னும் பிராமணரல்லாதார் ஒருவர் கூறுவாராயினர். ஈசான தேசிகர் மாத்திரமல்லர், இன்னும் அவரை ஒத்த அறியாமையுடைய ஒரு சிலர் காணப்படுகின்றர். மொழி ஆராய்ச்சிவல்ல கால்ட்வெல், "திராவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் தமிழ், தன்னிலேயே வளர்ச்சியடைந்து சீர்ப்பட்டதாயிருப்பதினால், அவசியமானால் அது தன்னோடு கலந்திருக் கும் சமக்கிருதத்தை முற்றாகக் களைந்துவிட்டுத் தனியே நிற்றல் மாத்திர மல்லாமல், சமக்கிருதத்தின் உதவி எள்ளளவு மின்றித் தனித்துச் செழித்துப் பிரகாசிக்கவும் கூடும்" எனக் கூறியுள்ளார்.[1]

[2]திராவிட இந்தியா என்னும் நூல் கூறுவது வருமாறு:

"சொற்கள் சம்பந்தப்பட்ட அளவில் தமிழில் சமக்கிருதச் சார்பு சிறிது உள்ளது என்பது உண்மையே. திராவிட மொழிகளில் வடசொற்கள் பெரிதும் காணப்படுதலால், சமக்கிருத மின்றி அம்மொழிகள் இயங்கும் ஆற்றல் அற்றன என்றும், தென்னிந்திய மொழிகளுக்குத் தாய், சமக்கிருதம் என்றும் பழம்போக்குடைய வடமொழிப் பண்டிதர் நியாயம் கண்டுபிடித்து வாதம் புரிகின்றனர். ஆராய்ச்சி முறையான கல்வி யில்லாத பழம் போக் காளருடையவும் கல்வி யில்லாதவர்களுடையவும் நம்பிக்கை இவ்வகை யினதே யாகும். திராவிட மொழிகளின் இலக்கண நூலார், தாம் கையாளுவது வடமொழியல்லாத மொழியைப் பற்றிய தெனத் தெளிவாகக் குறிப்பிட்டுள் ளார்கள். திராவிட மொழிகள் சமக்கிருதச் சொற்களை இரவல் பெற்றிருக்கின் றன. தெளிவாகக் கூறுமிடத்துத் தென்னாட்டில் வந்து குடியேறிய ஆரியர் திராவிட மொழியில் பல வடசொற்களைப் புகுத்தினார்கள். ஆங்கிலம், கிரேக்கு இலத்தின் மொழிச் சொற்களை இரவல் பெற்றமையால், அது அம் மொழிகளிலிருந்து தோன்றிற்று என எப்படிக் கூறமுடியாதோ, அப்படியே திராவிட மொழியும் வடமொழியினின்று தோன்றிய தெனக் கூறமுடியாத தாகும். வடமொழிச் சொற்கள் திராவிட மொழியில் இடம் பெற்றது போலவே,

1. The Tamil however, the most highly cultivated *abintra* of all Dravidian idioms can dispense with its Sanskrit altogether if need be, and not only stand alone but flourish without its aid - Dravidian Comparative grammer, p.31 - Caldwell.

2. Dravidian India p.p. 73 - 79 T.R. Sesha Iyengar.

திராவிடச் சொற்கள் வடமொழியில் இடம் பெற்றுள்ளன. இரவல் பெறுவது இருமொழிகளுக்கும் பொதுவான நிகழ்ச்சி. இதனால்தான் திராவிடம் சமக்கிருதத்திலிருந்து வேறான இனத்தைச் சேர்ந்ததெனத் தெளிவாகின்றது. வேதமொழி, சிந்து ஆற்று ஓரங்களை அடைந்தபோது திருத்தமற்றதாயும், ஒரு கூட்டத்தினரால் மாத்திரம் பேசப்படுவதாயும் இருந்ததென்றும், பல நூற்றாண்டுகளுக்குப் பின் பிற்காலச் சமக்கிருதம் தோன்றிற்றென்றும் அறிஞர் சிலர் கூறுகின்றனர். ஆரியர் வடமேற்கு எல்லைப் புறத்தில் திராவிடரை சந்தித்தபோது அவர்கள் (திராவிடர்) செழிப்படைந்திருந்தனர். திருத்தமில்லாத வேதமொழி, திருத்த மடைந்துள்ள திராவிட மக்களின் கூட்டுறவால் சமக்கிருதமாக மாறிற்று என்று நாம் துணிதலாகும். தென்னிந்திய மக்களின் மொழி மிகத் திருத்தமடைந்திருந்த தென்றும், அதனால் சமக்கிருதத்தில் திராவிட அடிப்படையைக் காணுதல் வியப்புக்குரியதன்று என்றும் பேராசிரியர் இராப்சன் என்பார் கூறியுள்ளார்.[1] இலத்தின் அல்லது கிரேக்க மொழியிற் காணப்படாதனவும் சமக்கிருதத்தில் மாத்திரம் காணப் படுவனவுமாகிய சில வேறுபாடுகள் ஆரியர் திராவிடரோடு கலக்க நேர்ந்த மையால் உண்டாயின வென்று எளிதில் அறிந்து கொள்ளலாகும். ஆரியர் வடநாட்டுக்கு வந்த காலங்களில் திராவிடமொழி அங்கும் வழங்கிற்று. இந்து ஐரோப்பியம் என்னும் ஆரியமொழி இந்தியாவுக்கு வந்த பின் அடைந்த மாறுதல்களைக் கொண்டு இது உய்த்து அறியப்படுகின்றது. இம் மாறுபாடு நேர்ந்ததற்குக் காரணம் அங்கு வழங்கிய பழையமொழி என்று மாத்திரம் கூற முடியும். இருக்கு வேதம் எழுதப்பட்டுள்ள இந்து ஐரோப்பிய மொழியை, அவெஸ்தா என்னும் பாரசீக வேதம் எழுதப்பட்ட பழைய இரானிய மொழியிலிருந்து, இரண்டாவதாக உச்சரிக்கப்படும் வல்லினமாகிய மெல்லெழுத் துக்களைக் கொண்டு வேறுபடுத்தி யறியலாம். மெல்லின உச்சரிப்புச் சமக்கிருதத்தில் காணப்படுகின்றது. இந்து ஐரோப்பிய மொழிகளுக்கு அது அன்னியமானது. மெல்லின ஓசைகள் திராவிடமொழிக்குச் சிறப்பாக அமைந்தவை. அனவரத வினாயகம்பிள்ளை அவர்களும் இம் மெல்லின மாற்றம் பழைய சமக்கிருதத்தில் காணப்படுகின்றதெனக் கூறியுள்ளார்.[2] இந்தியாவின் வடமேற்கினின்று இந்து ஐரோப்பிய மொழியைப் பல படிகளாகத் தணிவுபடுத்திய மொழி திராவிடம் என்று அறுதியிடலாம். இந்து ஐரோப்பிய மொழி இந்தியாவை அடைந்த பின் அது பல மாற்றங்களை அடைந்ததென பி.தி. சீனிவாச ஐயங்காரும் கூறியுள்ளார்.[3] பேராசிரியர் ரைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) என்பார், வேத மொழி சொற்களாலும் உச்சரிப்பு முறையாலும் திராவிடச் சார்பு பெற்றதென நவின்றுள்ளார். திராவிட மொழி சமக்கிருதத்தின் அமைப்பு, ஒலி, சொல்வைப்பு, சொற்கள் என்பவைகளைப் பெரிதும் தன் சார்புபடுத்திற்று. வேதமொழிக்கும் அதன் தந்தை மொழியாகிய

1. Cambridge History of India P.50 - Prof. Rapson.
2. Dravidic Studies No. III P. 56.
3. Age of the mantras - P.T. Srinivas Iyangar

இந்து செர்மானியத்துக்கும் உள்ள வேறுபாடு இந்தியா விலுள்ள மொழியாலுண்டானதே. எம். காலின்ஸ் என்பார், வட இந்திய மொழிகளில் திராவிட அடிப்படை இருப்பதைக் காட்டியுள்ளார். சமக் கிருதந் தொடர்பான மொழிகளில் மாத்திரமல்ல; சமக்கிருதத்திலும் திராவிடம் ஒலி முறையான மாறுதலை உண்டாக்கியுள்ளது. டாக்டர் குண்டெட் (Dr. Gundert) என்பார் சமக்கிருதம் எடுத்து வழங்கும் மிகப் பல சொன் மூலங் களை எடுத்துக் காட்டியுள்ளார். இதனைக் குறித்து வடநாட்டுப் பண்டிதர் யாதும் விள்ளுவதில்லை. டாக்டர் டெயிலர் (Dr. Taylor) இந்திய மொழிகளுக் கெல்லாம் மூலாதாரமாயுள்ளது தமிழ்மொழி எனத் தெளிவுபடுத்தியுள்ளார். இந்திய மொழிகளில் ஆராய்ச்சி செய்வோர் எல்லா இந்திய மொழிகளுக் கும், பழைய தமிழ் அடிப்படை இருத்தலையும், அது சமக்கிருதத்தையும் வேத மொழியையும் செம்மைப்படுத்தியதையும் காண்கின்றனர். ரைஸ் டேவிட்ஸ் என்பார் தமது '**புத்த இந்தியா**' என்னும் நூலில் வேதமொழி பழைய திராவிட மொழியோடு கலந்துள்ளதெனக் கூறியுள்ளார். மக்லீன் என்பார், திராவிடம் வடமொழிக்கு காலத்தால் மிக முற்பட்ட தென்பதில் சந்தேகமில்லை என நவின்றுள்ளார். மொகஞ்சதரோப் பழம்பொருள்களைப் பற்றி ஆராய்ந்தபின், தமிழிலுள்ள ஓரசைச் சொற்களைக் கொண்டு இந்தியா வின் கற்கால நாகரிகத்தைப்பற்றிப் படிக்கலாம் என்றும், மொகஞ்சதரோ வில் காணப்பட்ட ஓவிய முறையான எழுத்துக்கள் முற்காலத்தில் வழங்கிய மொழிக் குரியனவென்றும், அம் மொழி பழந்தமிழ் என்றும் பி.தி. சீனிவாச ஐயங்கார் கூறியுள்ளார். மேற்படி ஐயங்காரவர்கள் வட நாட்டில் வழங்கும் மொழிகள் சமக்கிருதச் சார்புபெற்ற பழந்தமிழ் என நம்புகின்றார். இதுவரை யில் கூறியவற்றால் திராவிடர் ஆரியரினின்றும் முற்றும் வேறான மக்கள் எனத் தோன்றுகின்றது. திராவிட மக்கள் திருத்தமான மொழியுடையவர் களாயிருந்தனர். இவர்கள், தாழ்ந்த சிறுதொகை ஆரியரைத் தம்மகத்தே விழுங்கி, அவர்களின் மொழிக்குத் தாம் அறிந்திருந்த தொழில்கள் செயல் களைக் குறிக்கும் சொற்களைக் கொடுத்து அதனை வளம்பெறச் செய் தார்கள் என்பதில் ஐயப்பாடு சிறிது மில்லையாகும்."

இவ்வுண்மைகளைச் சிறிதும் கருத்திற்கொள்ளாத **நம்மவருள் ஒருவர்**, தமிழ் தனித்தியங்கும் ஆற்றலில்லாதது; சங்க நூல்களில் மிகப் பல வடசொற்கள் இருக்கின்றன; தமிழிலுள்ள சொற்கள் வாழ்க்கையிற் பயன்படுத்தப் போதிய அளவு தானுமில்லையென எழுதிவருகின்றார். இவ் வாசிரியருக்குத் தமிழ்ச்சொற்கள் எவை, வடசொற்கள் எவையெனக் கண்டுபிடிக்கும் ஆற்றல் இல்லை என்பதை நாம், "**தமிழ் ஆராய்ச்சி**" என்னும் நூலிற் காட்டியுள்ளோம். வடமொழிப் பண்டிதர்களே திராவிடச் சொற்கள் எனக் கூறுகின்றவைகளையெல்லாம் இவர் வடசொற்கள் என்கி றார். தலைச் சுழற்சி உள்ளவனுக்கு உலகம் சுற்றுவது போல் தோன்றுவது இயல்பே யாகும். அவ்வாசிரியர் தாம் வடசொல் எனக் காட்டும் தமிழ்ச்

சொற்களை தக்கவாறு நாட்டும் அளவில் அவர் ஆராய்ச்சிக்கு எவரும் செவி கொடுப்பாரல்லர்.[1] ஆயினும் அவர் மனப்பான்மை யாது என்பதைத் தமிழ் அன்பர்கள் அறிந்துள்ளார்கள்.

### அகத்தியர்

அகத்தியரைப்பற்றிய செய்தி முதன் முதல் மணிமேகலை என்னும் பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றது. "ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்-தூங்கையிலெறிந்த தொடித்தொட் செம்பியன்" "அமர முனிவன் அகத்தியன் றனாது கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை" எனவரும் மணிமே கலை அடிகளை நோக்குக. மணிமேகலை ஆசிரியர் காலத்தில் அகத்தியர் வரலாறு பழங்கதையாக வழங்கியதென நன்கு தெரிகின்றது. கி.பி. முதல் நூற்றாண்டு வரையில் தெற்கே அகத்தியர் கோயில் இருந்ததென்பது பெதுருங்கேரியர் அட்டவணை என்னும் உரோமன் நூலால் தெரிகின்றது. அக்கோயில் அகத்தீச்சுரம் எனப்படுகின்றது.[2] அகத்தியர் என்னும் பெயர் உச்சரிப்பு வேறுபாட்டால் அகஸ்தஸ் எனக் கருதப்பட்டது. அது அகத்தி யரையே குறிக்கிறதென யோவியூடுபிருஎல் என்னும் பிரான்சியர் ஆராய்ந்து காட்டியுள்ளார். தென்னாட்டில் அகத்தீச்சுரம், அகத்தியான் பள்ளி முதலிய பழைய கோயில்கள் உண்டு. தென்னாட்டில் அகத்தியர் என்னும் பெய ருடைய சிவனடியார் ஒருவர் மிகப் பெருமை பெற்று விளங்கினார் எனத் தெரிகின்றது. இவருடைய வரலாற்றோடு பல கற்பனைக் கதைகளும் காலத் தில் வந்து சேர்ந்தன. அகத்தியர் பிராமணர் என்றும் அவர் ஆரியரென்றும் புராணக் கதைகளால் மக்கள் நம்பத் தொடங்கிய பிற்காலத்தில் ஆரியக் கட்சியினர் தமிழ்க்கட்சியினரை அடிப்பதற்கு ஆரிய முனிவர் ஒருவரே தமிழருக்கு இலக்கணம் செய்தார் என்னும் கற்பனைக் கதையைத் தோற்று வித்தனர். இவ்வாறு தோற்றுவிக்கப் பட்ட பல கற்பனைகளை சைவ வைணவ புராணங்களிற் காணலாகும். அகத்தியர் பிற்காலத்தில் தமிழோடு தொடர்பு

1. When a word is not to be found in any of the Indo-European languages allied to Sanskrit, but is found only in Tamil, that does not belong to Sanskrit. When a word is an isolated one in Sanskrit without a root and without derivatives, but is surrounded in Tamil with collateral derivative words. that word is of Tamil origin - Tamil Studies p. 155

2. It is with feeling of interest that we read that there existed in the little state of Cochin a temple. dedicated to Augustus at muziris. Let us open the book of R. Sewell "list of antiquarian remains" Vol. 1. Page 256. we read there that the pronunciation of Agastyesvaram a town on the sea coast which figures in the maps of the period was Agusteshuer and possessed a temple celebrated to the worship of Agastya. In my opinion the Roman maps of those days mentioned Aguste instead of temple Agastya. The worship of Augustus the emperor, in the south of India, is very unprobable and would be better accounted for by a confusion of names; in particular Augaste in the place of Agastya. Jouveau Duberuil - The V.J.O. mythic society vol - xix P. 180.

படுத்தப்பட்டாரென்பது, மேல் நாட்டாசிரியர்களுக்கும் உடன்பாடாகும்.[1] பண்டிதர் சவரிராயனவர்கள் அகத்தியர் என்னும் தலைப்பின் கீழ் கூறியுள்ள குறிப்பு வருமாறு: "அகத்தியர், தெற்கின் கண்ணுள்ள 'பொதியில்' (பொதிகை) மலையை அடைந்து அங்கு நிலை பெறு முன்னர், முதற்கண் இருந்தது காவிரியின் பிறப்பிடமாகிய குடகு மலையாம். அம்மலைப் பிரதேசம் பூர்வம் வில்லவன் வாதாபி என்ற அசுரர்க்கு உரியது; அவரைக் கொன்று அதனைக் கொண்டனர். இதற்குப் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் சில காலம் அவர் கோதாவரி தீர்த்தத்திலும் குடியிருந்ததாக இராமா யணத்தால் அறிகிறோம். இராமாயண காலத்தின் பின்னரே, அகத்தியர் தெற்கே சென்று பாண்டியர் அநுசரணை பெற்றுப் பொதியிற்கண் வாழ்ந்தன ராதல் வேண்டும். குடமும் பொதியிலும் அகத்தியர்க்கு இருப்பிடமான காரணத்தால் இவ்விரண்டிற்கும் 'மலயம்' என்ற பெயர் வடநூல் வழக் காயிற்று. இவர் குடகினின்றும் தெற்குப் போந்தராதலின் இவருக்குக் குடமுனி என்ற பெயருமுண்டு. இப்பெயருக்குக் காரணம் அறிய மாட்டா தார் குடமுனி என்பதற்குக் 'கும்பஜன்' என்று பொருள் கண்டு, அதற்கேற்பப் பொருந்தாக் கதைகளையும் நூல்களுள் எழுதிப் புகுத்தினர். அம்முனி வர்க்குக் "குறுமுனி" என்ற பெயர் 'குறுக்கு' (Kurukh) மொழி சம்பந்தமாக வந்த பெயர்போலும் 'குறுக்கு' குட நாட்டார் மொழி"[2] இதுபோலவே, ஆறு முகம் (அமைதியுள்ள முகம்) என வழங்கிய முருகன் பெயர், ஷண்முகம் என வடமொழிப்படுத்தப்பட்டுப் பின் முருகக் கடவுள் ஆறுதலையுடைய வராயினர் எனச் சிலர் கூறுகின்றனர். புலத்தியன் என்னும் பெயரை புல் - அகம் - தீயன் எனப் பிரித்துத் திரண தூமாக்கினி என வடமொழியாளர், தம் மொழிப்படுத்தினர் எனக் கூறுவாருமுண்டு. இவ்வாறு நிகழ்ந்தமைக்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

பழைய தமிழ் நூல்களில் வரும் மறை, நான்மறை என்பன இருக்கு முதலிய ஆரிய வேதங்களைக் குறிக்கின்றனவென்று வடமொழியாளர் கூறுகின்றனர். கி.பி. 5ஆம் நூற்றாண்டளவிற் செய்யப்பட்ட அமரகோசம் என்னும் நிகண்டில் வேதம் மூன்று எனக் கூறப்படுகின்றது. ஆகவே கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே, வேதம் நான்கு என்னும் வழக்கு உண் டாயிற்று. மூன்றாயிருந்த வேதத்தை வியாசர் நான்காக்கினார், வியாசர் என்னும் பெயர் அரசாங்க வரலாற்றுப் புலவருக்குப் பெயராக வழங்கிய தெனக் கூர்ம புராணம் கூறுகின்றது.[1]

---

1. The Tradition that the Brahman sage Agastya led the first Aryan colony to the Pothiya Hill and created Tamil literature probably rose in a later age, after the Brahman influences had gained the ascendant in the south, on the basis of the legends in the Sanskrit epics - Cambridge History of India P. 596 L.D. Barnett.

2. The Tamilian antiquary No. 7 P. 89

## தொல்காப்பியர்

தொல்காப்பியம் என்னும் இலக்கணம் இன்று உள்ள தமிழ் நூல் களுள் மிகப் பழமையுடையதெனக் கருதப்படுகின்றது. இந்நூல் செய்த வரின் பெயர் யாதென அறிய முடியவில்லை. ஆகவே அவர் தொல்காப் பியம் செய்தமையின் தொல்காப்பியர் எனப்படுவர். இவரின் இயற்பெயர் திரண தூமாக்கினி என்றும், இவர் தந்தை சமதக்கினி என்னும் பிராமணர் என்றும் நச்சினார்க்கினியர் காலத்தில் ஓர் வரலாறு வழங்கின தெனத் தெரிகிறது. ஆரியர், தமிழர் போராட்டக் காலங்களில் உண்டாக்கப்பட்ட கற்பனைக் கதைகளுள் இதுவும் ஒன்றாகும். சமதகினி முனிவர் கி.மு. 2000 வரையில் இருந்தவர் ஆவர். தொல்காப்பியர் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும் கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டது. ஆகவே தொல்காப்பியர் சமதக்கினியின் புதல்வர் என்பதும், அவர்பெயர் திரணதூ மாக்கினி என்பதும் கற்பனைகளேயாகும். காப்பியம் என்னும் பெயர் காவியம் என்பதன் திரிபு எனச் சிலர் வாதம் புரிகின்றனர். தொல்காப்பியம் என்னும் பெயர் பழைய இலக்கணவரம்பைக் காப்பது என்னும் பொருளில் அமைந்ததென்பது அறிஞர் கருத்து. தொல்காப்பியர் புதிதாக ஒரு நூலை இயற்றி அதற்குப் பழைய நூல் என்னும் பொருளில் தொல்காப்பியம் எனப் பெயரிட்டார் எனக் கூறுதல் பொருந்தாது. இப் பெயரைத் தொல்+காப்பி+அம், அல்லது தொல்+காப்பு+இயம் எனப் பிரிக்கலாம். காப்பி என்பதற்குக் காப்பது என்று பொருள். தொல்காப்பியத்தில் காவியத்துக்குள்ள பகுதிகள் எவையும் காணப்படவில்லை.

வீரமாமுனிவர் தமிழுக்கு இலக்கணஞ் செய்து அதற்குத் தொன்னூல் விளக்கம் எனப் பெயரிட்டனர். எக்கருத்துப்பற்றித் தொன்னூல் விளக்கம் எனப் பெயரிடப்பட்டதோ அதே கருத்துப்பற்றியே தொல்காப்பியம் என்னுப் பெயரும் இடப்பட்டதென்பது தெள்ளிதிற் புலனாகும்.

இவர் அகத்தியரின் மாணாக்கர் என்னும் வரலாறும் ஒன்றுள்ளது. தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் செய்த பனம்பாரனார் இவர் அகத்தியர் மாணவ ரென்றோ அல்லது, இவர் அகத்தியத்தைப் பின்பற்றி நூல் செய்தாரென்றோ கூறவில்லை. தொல்காப்பியரும் அவ்வாறு யாண்டுங் கூறவில்லை. அகத்தியர் தொல்காப்பியரை வடநாட்டுப் பிராமணரோடு தொடர்புபடுத்தும் புதிய கதைகள் தோன்றிய பின்பே இவ்வகைக் கதைகள் தோன்றியிருக்கலாம்.

தொல்காப்பியர் பலவிடங்களில் வடநாட்டு வழக்குகளைத் தென் னாட்டு வழக்குகளோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றமை கொண்டு மேல்நாட்டு வீரமாமுனிவர் டாக்டர் போப்பு முதலியோர் தமிழ்கற்கும் தம்மினத்தவர்

---

2. Vyasa was a term used to denote the state historigrapher vide கூர்ம புராணம் வியாதர் வரலாற்று Sargam - Tamil literature p.6. - Prof. M.S. Purnalingam Pillai.

கற்றுக்கொள்ளும் முறையில் இலக்கணஞ் செய்ததுபோலத் தொல்காப்பியரும் தமிழ் கற்பாரும் வடமொழி அறிந்தாருமாகிய ஆந்திர நாட்டவர் முதலியோரும் தமிழ் கற்றுக்கொள்ளும் பொருட்டுத் தொல்காப்பியஞ் செய்தாராகலாம். தமிழில் திசைச் சொல் எனப்படும் செப்பு என்னுஞ் சொல்லை இவர் பல இடங்களில் ஆண்டிருத்தல் பற்றி இவர் தெலுங்கு நாட்டவராகலாமோ என்பது சந்தேகத்திற்கு இடனாகின்றது. இந்திரனின் தலைநகராகிய அமராபதி கிருஷ்ணா நதி முகத்துவாரத்தில் உள்ளது. இந்திரனிலிருந்து ஐந்திரம் தோன்றியதாயின், ஐந்திரம் ஆந்திர நாட்டோடு சம்பந்தப்பட்ட நூலேயாகும்''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' எனப்படுதலால் இவர் ஆந்திரர் என்பது மேலும் வலியுறுவதாகும். இந்திரன் மதுரையில் சோமசுந்தரக் கடவுளைக் குறித்துத் தவஞ்செய்த வரலாறு திருவிளையாடற் புராணத்திற் காணப்படுகின்றது. இந்திரன் ஆரிய வர்க்கத்தில் உள்ளவனாகத் தெரியவில்லை. தொல்காப்பியர் இலக்கணஞ் செய்வதற்குமுன் தமிழில் பல இலக்கணங்கள் இருந்தன.

### சங்க நூல்கள்

*(1) நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ*
*றொத்த பதிற்றுப்பத் தோங்குப ரிபாடல்*
*கற்றறிந்தார் பேசுங் கலியோ டகம்புறமென்*
*றித்தகைத்த வெட்டுத் தொகை*

*(2) முருகு பெருகுநாறு பாணிரண்டு முல்லை*
*பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய*
*கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்*
*பாலை கடாத் தோடும் பத்து.*

*(3) நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
*பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்*
*மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே*
*கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு*[1]

### சில குறிப்புக்கள்

(1) திராவிடம் சம்பந்தமான மொழிகள் மத்திய மாகாணங்களிலும் அவைகளின் அயலேயுள்ள வடநாடுகளிலும் பேசப்படுகின்றனவென்று நன்கு அறியப்பட்டுள்ளது. பலுச்சிஸ்தானத்தில் தனித்து வழங்கும் பிராகூய் மொழியும் திராவிடத்துக்கு இனமானது என்று அறியப்படுகின்றது. இவைகளைக் கொண்டு ஆரியர் இந்திய நாட்டை அடைவதன்முன் வட நாட்டின் பெரும்பகுதி திராவிடர் வசம் இருந்ததென்பது ஐயம் இன்றி அறியப்படுகின்றது. கிரீசிலும் இந்திய ஆரியரின் சகோதரர்களாகிய ஆரியர் சென்று குடியேறினார்கள். இரண்டு நாடுகளிலும் புதிதாகக் கொண்டு வரப்பட்ட

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலன பிற்காலத்தவை. கி.பி. 10ஆம் நூற்றாண்டிலோ, அதற்குப் பின்னோ இருந்த புலவர் ஒருவர் சங்க காலத்தைப்பற்றிய விளக்கமின்மையால் இவ்வாறு பாடியுள்ளார்.

நாகரிகத்தில் பழைய மக்களின் நாகரிகம் பெரிதும் இருத்தலைக் காணலாம். பழைய காலத்தில் திராவிடம் அல்லது திராவிட சம்பந்தமான மொழிகள் வடக்கே வழங்கின என்று நாம் ஏற்றுக்கொண்டால் - இவ்வுண்மையால் - சமக்கிருதம், பிராகிருதம், பிராகிருதத்தின் வழி வந்தன வெனப்படும். இந்துஸ்தானத்தின் மொழிகளைப்பற்றிய பல உண்மைகள் வெளிச்சமடையும். பழைய மொழிகளுக்குப் பதில் புதிதாக வந்த ஆரியம் நாட்டப்பட்டது உணரப்பட்டாலும் பழைய மொழிகளின் அடையாளங்கள் அங்கும் இங்கும் தோன்றுகின்றன. இது அழுத்தமான தரையினிடையிடையே திடுமென மலைகள் கிளம்பித் தோன்றுவனபோலாகும். புதிய மொழிகளைப் பேசுகின்றவர்கள் பழைய தனிப்பட்ட ஒலிமுறைகளைக் காப்பாற்றுவார்கள். பழைய கருத்துக்கள் போக்குகளின் அடை யாளங்கள் புதிய போர்வையில் காணப்படலாம். பழைய பிரான்சின் **கால்** (Gaul) மொழியின் இடத்தை இலாத்தின் மொழி ஏற்றது. இது உரோமன் குடியேற்ற மக்களாலும் உரோமன் படை வீரராலும் நேர்ந்தது. இன்று பிரான்சு மொழியில் கால் மொழி உற்பத்திக்குரிய மிகப் பல சொற்கள் காணப்படுகின்றன; ஆனால், அதின் இலக்கணத்தில் இங்கும் அங்கும் கெல்திய சார்புகள் காணப்படு கின்றன. - Dravidic Studies - p 3 Mark Collins.

(2) கி.மு. 1000 வரையில் வங்காளத்தில் ஆரியம் வழங்கவில்லை எனத் தெரிகின்றது. - Origin and development of Bengali language p 70- S.K.Chatterji

(3) ஒரு காலத்தில் திராவிடர் கோமுஸ் (Hormuz) நீரிணைக் கூடாகத் தென்கிழக்கு அராபியாவிற் காணப்பட்டார்கள்.

- The new review Vol. 3- G.R. Hunter.

❋ ❋ ❋

# நமது தாய்மொழி

# முன்னுரை

ஒவ்வொருவரும் தமது தாய்மொழியைப் பற்றிய வரலாற்றை அறிந்திருப்பது அவசியம். நமது அன்னை நமக்குப் பாலூட்டுங் காலம் முதல் கற்பித்த மொழி நமது இரத்தத்தோடு சுவறியுள்ளது. அது பற்றியே எல்லாருக்கும் தமது தாய்மொழியிடத்து அளவிறந்த பற்று உண்டாகியிருக்கின்றது. நமது நாடு, மொழி என்பவைகளின் வரலாறு பழங்கதைப் போக்கில் எழுதப்பட்டு வந்தன. ஆராய்ச்சி முறையான கல்வி பரவி வருகின்ற இக் காலத்தில் அவை ஏற்றனவாகத் தோன்றவில்லை. நமது நாடு, மொழி என்பவைகளைக் குறித்து ஆராய்ச்சிவல்ல அறிஞர் பலர் எழுதி யுள்ளனர். அக் கருத்துக்களை எல்லாம் சுருக்கிச் சிறுவரும் சுற்றறியும் வகையில் இந் நூலகத்துத் தந்துள்ளோம். இந் நூலகத்துக் கூறப்பட்ட ஒவ்வொரு முடிவுக்கும் தக்க ஆதாரங்கள் உள்ளன. பொது மக்களும் சிறாரும் பயில்வதற்கென இந் நூல் ஆக்கப் பட்டமையின் அம்மேற் கோள்களை இங்குத் தவிர்த் துள்ளோம்.

சென்னை
1-11-1948

*ந.சி.கந்தையா*

# நமது தாய்மொழி

## தோற்றுவாய்

தாய்மொழி என்பதற்குத் தாய் தனக்குக் கற்பித்த மொழி, அல்லது நாட்டுக்குரிய மொழி எனப் பொருள் கொள்ளலாம். நமது நாட்டுக்குரிய மொழி தமிழ். தமிழ், தென்னிந்தியாவின் கிழக்கிலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு, கிழக்குப் பகுதிகளிலும், தமிழர் சென்று குடியேறியுள்ள மலாயா, தென்னாபிரிக்கா, மொரிசஸ் முதலிய பலவிடங்களிலும் வழங்குகின்றது. இம் மொழியின் பழமையைப் பற்றியும் பிற சிறப்புக்களைப் பற்றியும் இச் சிறிய நூலிற் படிப்போம்.

## தமிழின் பழமை

தமிழ் மிகமிகப் பழைய மொழி. அது எக்காலம் முதல் தோன்றி வழங்குகின்றதென எவராலும் அறிந்து கூறமுடியாது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளின்முன் தமிழ்ச் சொற்கள் சில பாலத்தீன நாட்டு மொழியாகிய எபிரேயத்தில் சென்று வழங்கின. கிரேக்க மொழியிலும் பல தமிழ்ச்சொற்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளின் முன் சென்று வழங்கின.

இவ்வுலகில் மிகப் பழமையே பல சாதியினர் நாகரிக உயர்வுபெற்று விளங்கினார்கள். அவர்கள் வழங்கிய மொழிகளிற் பல, பேச்சு வழக்கற்று இலக்கிய வழக்கில் மாத்திரம் உள்ளன; சில இரு வழக்கும் அற்று இறந்தொழிந்தன. தமிழ் மொழி ஒன்று மாத்திரம் பழமைபோல் இன்றளவும் தனது இளமைத் தன்மை குன்றாததாய் இரு வழக்கிலும் இயலுகின்றது. இக் கருத்தினைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

*பல்லுயிரும் பலவுலகும்*
*படைத்தளித்துத் துடைக்கினுமோர்*
*எல்லையறு பரம்பொருள்முன்*
*இருந்தபடி இருப்பதுபோல்*
............................................................
....................................*உலக வழக்*
*கழிந்தொழிந்து சிதையாவுன்*
*சீரிளமைத் திறம் வியந்து*
*செயல் மறந்து வாழ்த்துதுமே*

என அழகு பெறக் கூறியுள்ளார்.

### தமிழின் பரப்பு

தமிழ், உலகின் பெரும் பகுதியில் வழங்கிற்று என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். உலகில் ஆங்காங்கு வழங்கிய பல மொழிகள் அமைப்பில் தமிழுக்கு உறவுடையனவாகக் காணப்படுகின்றன. தமிழ்ச்சொல் மூலங்கள் பலவும் அவைகளில் காணப்படுகின்றன. மிகப் பழங்காலத்தில் ஐரோப்பா வில் வழங்கிய இடப்பெயர்கள் ஆற்றுப் பெயர்கள் பல தமிழாயிருத்தலை, ஜெர்மன் ஆசிரியர் ஒருவர் எடுத்து விளக்கியுள்ளார். மேற்கு ஆசியாவிலே வழங்கிய மிகப் பழைய சுமேரிய மொழியில் தமிழ்ச் சொற்கள் பல காணப் படுகின்றன. இவை போன்ற சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சிலர் உலகம் முழுமையிலும் ஒருகால் தமிழ் வழங்கிற்று எனக் கூறுவர். இக் கருத்து ஆராய்ச்சிக்குரியது.

***“சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுது நினதாயின்***
***முதுமொழி நீயனாதியென மொழிகுவதும் வியப்பாமே”***

என்பது மனோன்மணியப் பாடல்.

### மிகப் பழைய காலத்தில் தமிழ் நாட்டெல்லை

மிகமிகப் பழைய காலத்தில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரை யில் ஒரே மொழி வழங்கிற்று. அம் மொழி தமிழ். ஆப்கானிஸ்தானத்தில் பிராகூய் என்னும் மொழி வழங்குகின்றது. இது தமிழுக்கு உறவுடையது. வேத மொழியில் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுதலை ஆராய்ச்சி வல்லார் காட்டியுள்ளார்கள். ஆரிய மக்கள் இந்திய நாட்டை அடைவதன்முன் அங்குத் திராவிட மக்களே வாழ்ந்தார்கள் என ஆராய்ச்சியாளர் ஒரு முக மாகத் துணிந்துள்ளார்கள்.

ஐயாயிரம் ஆண்டுகளின்முன் சிந்து ஆற்றுவெளிகளில் நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்தார்கள். அம்மக்கள் அமைத்து வாழ்ந்த நகர்களின் அழிபாடுகள் சிலகாலத்திற்குமுன் வெட்டி ஆராயப்பட்டன. அங்குப் பழம் பொருள்கள் பல கிடைத்தன. அப் பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்கள் திராவிடர் என்பதை வெளியிடுகின்றன. ஒரு வகைச் சுண்ணாம்புக்கல்லில் வெட்டப்பட்ட முத்திரைகள் அங்குக் காணப்பட்டன. அவை களில் அக்கால மக்கள் வழங்கிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ் வெழுத்துக்களை ஹெரஸ் என்னும் ஸ்பானியர் ஒலிமுறையாக வாசித்தார். அவ்வாசிப்பில் காணப்படும் சொற் கள் பல இன்றும் தமிழ் மொழியில் வழங்கும் சொற்களாகக் காணப்படுகின்றன. இவை போன்ற பல காரணங்களால் இந்திய நாடு முழு மையிலும் ஒருகாலத்தில் தமிழ் வழங்கிற்று



எனத் துணியப்படுகின்றது. எச்.ஜி. வெல்ஸ் போன்ற மேல்நாட்டு ஆராய்ச்சிப் பேராசிரியர்களும் இக் கருத்துடையராய் ஆரிய மக்கள் வருகைக்குமுன் இந்தியநாடு முழுமையும் திராவிட மொழி வழங்கிற்று எனக்கூறியதோடு அமையாது படமும் அமைத்துக் காட்டியுள்ளார்கள்.

### தமிழ் நாட்டெல்லை சுருங்குதல்

நாலாயிரம் ஆண்டுகளின்முன் மத்திய ஆசியாவினின்றும் ஒரு புதிய மக்கட் கூட்டத்தினர் இந்தியாவை அடைந்தார்கள். அவர்கள் ஆரியர் எனப் பெயர் பெறுவர். அவர் சிந்து ஆறும் அதன் கிளைகளுமாகிய ஐந்து ஆறுகள் பாய்கின்ற பகுதிகளில் தங்கி வாழ்ந்தார்கள். அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கும் புதிய மக்களுக்கு மிடையே சிலகாலம் போர்கள் நடந்தன. பின்பு இரு இன மக்களும் இணைந்து ஒன்றுபட்டார்கள். இதனால் இரு இன மக்களின் கொள்கைகளும் மொழிகளும் கலந்தன. வடக்கே வழங்கிய தமிழ் சிறிது சிறிதாக மாறுபட்டுப் பற்பல மொழிக ளாயிற்று. திரிபடைந்த இம் மொழிகளையே மக்கள் பேசப் பயன்படுத்தினர். இலக்கிய மொழி ஆரியமாக இருந்துவந்தது. இன்று ஆங்கிலம் இந்திய மக்கள் எல்லோருக்கும் பொதுமொழியாக இருப்பதுபோல அக் காலத்தில் ஆரிய மொழி வடநாட்டு மக்கள் எல்லோருக்கும் இலக்கிய மொழியாக இருந்துவந்தது. விந்திய மலைக்கு வடக்கே வாழ்ந்த மக்கள் தமது தாய்மொழி ஆரியம் எனக் கொண்டார்கள். கி.மு. 1000 வரையில் விந்திய மலைக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நாடுகள் ஆரியா வர்த்தம் என்னும் பெயரைப் பெற்றன.




"இன்று சமக்கிருதம் சம்பந்தப் பட்டவை எனக் கொள்ளப்படும் வடநாட்டு மொழிகள் அமைப்பில் தமிழாகவும் சொல் வகையில் ஆரியமாகவுங் காணப்படுகின் றன. வடநாட்டு மொழிகளில் எழுதப்பட்டுள்ள வசனங்களைச் சொல்லுக்குச் சொல் தமிழ்ச் சொற்களை வைத்து மொழி பெயர்த்துவிட லாம். ஒரு மொழி எம் மொழிக்கு இனமுடைய தென அறிவது அதன் அமைப்பைக் கொண்டு; சொற்களைக் கொண்டன்று. ஒரு மொழியின் அமைப்பு அல்லது இலக்கணம் ஆற்றின் இரு மருங்குமுள்ள அணைகள் போன்றது. சொற்கள் அவ்வணைகளி னிடையே ஓடும் நீரைப் போன்றவை. நீர் மாறுபடுவது போலச் சொற்கள் மாறுபடலாம். அவைகளின் அமைப்பு மாறுபடாது," என ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்கள். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகள் வரையில் தமிழ் நாட்டின் வட எல்லை விந்திய மலையாக விருந்தது.

### திராவிடம் என்னும் சொல்

கிறித்துவுக்கு முற்பட்ட காலம் முதல் திராவிடம் என்னும் சொல் வடமொழி நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. இச் சொல் பிற்காலத்தில் பெரும் மயக்கம் அளிப்பதாயிற்று. திராவிடம் என்பதிலிருந்து தமிழ் என்னும் சொல் உண்டாயிற்று எனச் சிலர் கூறினர். இது தவறுடைய தென்றும் தமிழ் என்பதே திராவிடமாயிற்றென்றும் வேறு சிலர் கூறினர். இச் சொல்லைக் குறித்துப் பலர் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். தமிழ் என்னும் சொல்லே ழகரத்தை உச்சரிக்க அறியாத வடநாட்டாரின் உச்சரிப்பு வேறுபாட்டால் திராவிடம் ஆயிற்று என முடிவு கட்டப்பட்டுள்ளது.

### விந்தியத்துக்குத் தெற்கிலும் மொழி மாறுபடுதல்


கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சைனம் பௌத்தம் என்னும் இருமதங்கள் வடநாட்டில் எழுந்தன. இம் மதக் கொள்கைகள் விரைவில் பரவின. பொது மக்கள் பெரும்பாலும் இம் மதங்களைத் தழுவி இருந்தார்கள். இம் மத நூல்கள் மக்கள் பேசும் மொழிகளில் எழுதப்பட்டன. இது ஒரு புதிய முறை யாகும். மௌரிய சந்திரகுப்தன் அசோகச் சக்கரவர்த்தியின் பாட்டன். இவன் காலத்தில் பெரும் பஞ்சம் ஒன்று உண்டாயிற்று. அக் காலத்தில் சைன முனி வர்கள் பலர் கன்னட, தெலுங்கு நாடுகளிற் சென்று வாழ்ந்தனர். அவர்கள் தென்னாட்டு மொழியைப் பயின்று அம் மொழியில் நூல்கள் செய்தனர். இதனால் பிறமொழிக் கலப்பு உண்டாகியும் அங்கு வழங்கிய தமிழ் உறழ்ந்தும் பிறழ்ந்தும் உச்சரிக்கப்பட்டும் கன்னடம், தெலுங்கு மொழிகளாக மாறுதலடைந்தது. கன்னடம், தெலுங்கு என்னும் இரு மொழிகளுக்கிடை யில் அதிக வேறுபாடு இருக்கவில்லை. பிற்காலத்தில் தெலுங்கு சமக்கிருதப் போக்கைப் பெரிதும் தழுவினமையால் அது கன்னடத்துக்கு இனமுடை யதோ என்று ஐயுறும்படி மாறுபடுவதாயிற்று. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சயங்கொண்டார் என்னும் புலவர் தமிழ் நாட்டில் விளங்கினார். இவர் கலிங்கத்துப் பரணி என்னும் சிறந்த நூலைச் செய்தார். அந் நூலில்,

> ***"மழலைக்குறு மொழியிற்சில வடுகும் பல தமிழுங்***
> ***குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்"***

எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் அக் காலத்தில் கருநாடக மொழியில் தமிழ்ச் சொற்கள் பல வழங்கின என அறிகின்றோம்.

மலையாளம் ஒரு காலத்தில் செந்தமிழ் நாடாகவிருந்தது. சிலப்பதி காரம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற உயர்ந்த செந்தமிழ் இலக் கியங்கள் சேரநாட்டுப் புலவர்களாற் செய்யப்பட்டவை. கம்பர் காலத்தில் மலையாளம் தோன்றவில்லை. பிற்காலத்தில் நம்பூதிரிகள் என்னும் பிராமண வகுப்பினர் மலையாளத்தில் குடியேறினார்கள். அவர்களின் கூட் டுறவால் அங்கு வழங்கிய தமிழோடு வட சொற்கள் பல கலந்தன. அதனால் சேரநாட்டுத் தமிழ் மலையாள மொழியாக மாறுபடுவதாயிற்று.

## தமிழ் நூல்கள் குறிப்பிடும் தமிழ் நாட்டெல்லை



தமிழிலிருந்த பழைய நூல்கள் பெரும் பாலும் இறந்து போயின. இன்று கிடைத்துள்ள நூல்களுள் பழமையுடையது தொல்காப்பியம். இதன் காலம் இற்றைக்கு முன் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டு வரையில் ஆகலாம். அந் நூலில் தமிழ் வழங்கும் எல்லை குறிப்பிடப் பட்டுள்ளது. வடக்கே திருப்பதி மலை, தெற்கே கன்னியாகுமரி ஆகிய எல்லைகளுக்குட்பட்ட நிலத்தில் அக்காலத்தில் தமிழ் வழங்கிற்று. தொல்காப்பியம் செய்யப்படுகின்ற காலத்தில் தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகள் தோன்றியிருந்தன. கன்னடமும் தெலுங்கும் தமிழ் நாட்டுக்கு வடக்கே வழங்கும் மொழிகளாதலின் அவை வடுகு எனப்பட்டன. வடுகு என்பதற்கு வடக்கு என்பது பொருள்.

## மொழி தோன்றும் வகை

மொழி திடீர் எனத் தோன்றுவதில்லை. வித்திலிருந்து முளை கிளம்பி முளை மரமாக வளர்வதுபோல மொழியும் சிறிது சிறிதாகவே வளரும். விலங்குகளும் பறவைகளும் மற்றும் உயிர்களும் தத்தம் கருத்துக்களை வெளியிடச் சிற்சில ஒலிக்குறிகளையும் சைகைகளையும் பயன்படுத்துகின் றன. நாய் தனது மகிழ்ச்சியை வாலையாட்டியும் ஒருவகையாகக் குரைத்தும் தெரிவிக்கின்றது. பேட்டுக்கோழி ஆபத்து, ஆபத்தின்மையை வெவ்வேறு ஒலிக்குறிகளால் தன் குஞ்சுகளுக்கு அறிவிக்கின்றது. நாம் கூர்ந்து கவனித் தால் ஒவ்வொரு உயிரும் சில ஒலிக் குறிகளாலோ சைகைகளாலோ பேசு வதை நாம் அறியலாம். ஒருவர் மொழியை ஒருவர் அறியாத இருவர் தனி வழியிடத்தே சந்தித்தால் அவர்கள் எவ்வாறு பேசுவார்கள்? நாம் ஊம ரோடும் செவிடரோடும் எவ்வாறு பேசுகின்றோம்? இவ்வாறே ஆதிகால மனிதன் பேச்சுமிருந்தது. அவன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்கள் பறவைகள் விலங்குகளிடத்திலிருந்து எழும் ஓசைகளை உற்றுக் கேட்டான்; அவ்வப் பொருள்களிடத்திருந்து எழுந்த ஒலிக்குறி களையே அவ்வப் பொருள்களுக்குப் பெயராக இட்டு வழங்கினான். காகா எனக் கரையும் பறவைக்குக் காகம் எனப் பெயரிட்டான்; கூகூ எனக் கூவும் பட்சியைக் குயிலென அழைத்தான்; மா மா என அழும் விலங்கை மாடு என்றான். இவ் வகையில் தோன்றிய பெயர்களைப் பல மொழிகளில் இன்றும் காணலாம். இவ் வகையிலல்லாது வேறு சில வகைகளிலும் தன்னைச் சூழ்ந் துள்ள பொருள்களுக்கு அவன் பெயர்களை இட்டான். அப் பெயர்களின் காரணங்கள் எல்லாவற்றையும் இன்று அறிந்து கொள்ளுதல் கடினமாகும். பின்பு செயல்கள் பண்புகளைக் குறிக்கவும் சொற்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு தோன்றிய சில ஒலிக்குறிகளும் சைகைகளும் ஆதிகால மக்களின் பேச்சாக இருந்து வந்தன. காலந்தோறும் தோன்றிய சொற்கள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்தன. புதிதாக மக்கள் கண்டறியும் பொருள்களையும் செயல்களையும் குறிக்கும் சொற்களும் தோன்றின. இவ்வாறு மொழி சிறிது சிறிதாக நீண்டகாலம் வளர்ச்சியடைவ தாயிற்று. இவ்வாறு மொழி தோன்றி வளர்ச்சி யடைவதற்குப் பல்லாயிர ஆண்டுகளாயின.

**எழுத்து நிலை**

மொழி பேச்சு நிலையை அடைந்தபின் எழுத்து நிலையை அடைந்தது. ஆதிகால மக்கள் தமது கருத்துக்களை எழுதிக்காட்ட விரும்பினார்கள். அவர்கள் தமது எண்ணங்களைப் பட வடிவில் எழுதினார்கள். மனிதனைக் குறிக்க மனித வடிவமும், விலங்குகளைக் குறிக்க விலங்குகளின் வடிவங் களும், பறவைகளைக் குறிக்கப் பறவைகளின் வடிவங்களும் எழுதப் பட்டன. செயல்களைக் குறிக்க அச்செயல்களைக் காட்டும் படங்கள் எழுதப் பட்டன. பின்பு ஒரு சொல்லைக் குறிக்க ஒரு குறியீடு அமைத்து வழங்கப் பட்டது. பின்பு மொழியில் உள்ள ஒலிகளை உச்சரித்துப் பார்த்து ஒலிக்கும் ஒவ்வோர் எழுத்து அமைக்கப்பட்டது. இம் முறையினால் தனிஒலி எழுத்துக்களைக் கொண்டு சொற்களையும் சொற்களைக் கொண்டு வசனங்களையும் அமைத்தல் இலகுவாயிற்று. மொழி பேச்சு நிலையி லிருந்து எழுத்து நிலையை அடையும்போது ஒரு திருத்தம் உண்டாகின் றது. அப்பொழுது இலக்கியங்கள் தோன்றுகின்றன. பின் இலக்கணங்கள் தோன்றுகின்றன. இலக்கண அமைவுக்கு உட்படும் மொழிநடை செம்மை யான நடை எனப்படுகின்றது. இவ்வாறு மொழி எழுத்து நிலை அடைந்து இலக்கண வரம்பு பெறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகும்.

சிந்துவெளி நாகரிகத்தின் காலம் முன்பின் ஆறாயிரம் ஆண்டு களாகும். ஆரியர் வருகைக்கு முன் வடநாடு முழுமையும் பரவி வாழ்ந்த மக்கள் திராவிடர் என்பது முன்னோரிடத்திற் கூறப்பட்டுள்ளது. சிந்து வெளிகளில் வாழ்ந்த மக்கள் எழுத்துக்களைப் பயன்படுத்தினார்கள். அவ் வெழுத்துக்களினின்றும் வட பிராமி, தென் பிராமி என்னும் எழுத்துக்கள் பிறந்தன. இவ் வெழுத்துக்ளினின்று வடநாடு தென்னாடுகளில் வழங்கும் எழுத்துக்கள் எல்லாம் தோன்றின.

பிராமி எழுத்துக்கும், மத்திய தரைக்கடலின் கிழக்கு ஓரங்களில் வாழ்ந்த பினீசியர் என்னும் பழைய மக்களின் எழுத்துக்கும் உறவு உண்டு. பினீசிய மக்கள் பண்டை நாளில் பெருங்கடலோடிகளாயிருந்தனர். இவர்கள் தமது எழுத்தை இந்தியாவினின்றும் பெற்றார்கள். பினீசியரிடமிருந்து, கிரேக்கரும், கிரேக்கரிடமிருந்து உரோமரும், உரோமரிடமிருந்து மற்றைய ஐரோப்பிய சாதியினரும் எழுத்தெழுதும் முறையைக் கற்றுக் கொண் டார்கள்.

## முத்தமிழ்

தமிழ், இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறுபாடுகளை உடையது. இம் மூன்று கூறுபாடுகளும் தன் வளர்ச்சிக் காலத்தில் தமிழ் அடைந்திருந்த மூன்று நிலைகளாகும். மக்களின் உணர்ச்சிக் கேற்ப உடலில் சில அசைவுகளும் வேறுபாடுகளும் உண்டாகின்றன. இவ் வசைவுகளையும் உடல் வேறுபாடுகளையும் குறிக்கொண்டு முற்கால மக்கள் தமது கருத்துக் களை நடித்துக் காட்டிவந்தார்கள். முற்கால மக்கள் தாம் செய்யப் புகும் ஒவ்வொரு செயலையும் முன்னதாகவே ஆடிக் காட்டினார்கள். இன்று கோவில்களில் ஒலிக்கப்படும் வாத்தியங்கள் முன் ஆட்டங்களோடு பயன் படுத்தப்பட்டன. காலத்தில் ஆட்டம் நின்று போக வாத்தியங்கள் ஒலிக்கப் படுகின்றன.

மொழி தோன்றி வளர்ச்சியுறாத ஒரு காலத்திய மக்கள் தமது எண்ணங்களை உடல் நிலை பார்வை, சாடைகளால் விளங்கினார்கள் என ஓரிடத்திற் கூறினோம். உணர்ச்சி உடம்பில் வெளிப்பட்டு நிற்கும்படி நடித்துக் காட்டுதல் அபிநயம் எனப்படும். அபிநயமே நடிப்புக்கு முக்கியம். இன்று சதிர் என வழங்கும் ஆட்டம் ஒரு கருத்தை உடல் நிலைகளாலும் சாடைகளாலும் நடித்துக் காட்டுதலேயாகும். இதனை ஊமைக் கூத்து எனினும் பொருந்தும். நடிக்கப் படும் பாட்டை ஒருவர் பக்கத்தில் நின்று பாட அல்லது நடிப்பவர் தாமே பாட்டைப் பாடிக் கொண்டு நடித்தலாகிய முறை பின்பு தோன்றிற்று. பாடி ஆடுதற்கு அமைந்த பாடல்களும், நடிப்பு விதிகளைக் கூறுவனவுமாகிய நூல்கள் நாடகத் தமிழில் அடங்கும். ஒரு கதையை நடித்துக் காட்டலாகிய நாடகம் நடிப்பின் பின் எழுந்தது. நடித்தற்கன்றி, மக்கள் உள்ளத்தில் கோபம், வீரம், சோகம் மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை எழுப்புதற் கேற்ற பாடல் வகைகளும் நடைபெற்றன. இப் பாடல்கள் இசைக்கருவிகளின் துணை கொண்டு பாடப்பட்டன. இவ் வகைப் பாடல்களைப் பற்றிய இயல்புகளைக் கூறும் நூல்களும் இசைத் தமிழின்பாற்படும்.

"முற்கால இசைப் பாட்டுக்கள் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. இப்பொழுது கீர்த்தனங்கள் என்று கூறப் படுவன உருவில் அடங்கும். பலவகையான கூத்துக்களிலும் வரிப் பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சிந்து, அண்டி, அம்மானை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்துவகைகளும் அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. இவை பெரிதும் மகளிருடைய விளையாட்டுக்களாக விளங்கின. மற்றும் மகளிர் கிளியோட்டுவதும் பாட்டு, சாந்தியடிப்பதும் பாட்டு, களை பறிப்பதும் பாட்டு, இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுக்களோடு நிகழ்ந்தன."

முற்காலத்தில் நூல்கள் வசன நடையில் எழுதப்படவில்லை; செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டன. அச் செய்யுட்கள் அவைகளின் வகைக்கேற்ற ஓசைகளில் படிக்கப்பட்டனவாயினும், அவை இசைக்கருவிகளின் துணை யோடு பாடப்படும் இசைப்பாடல்கள் போன்றனவல்ல. இவ்வகை நூல் களும், தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் இலக்கண நூல் களும் இயற்றமிழின்பாற் படுவன.

**தமிழ்ச் சங்கம்**

தமிழ்ச் சங்கம் என்றால் என்ன? தமிழ்ப் புலவர்களின் கூட்டமே. இவ் வுலகில் ஆங்காங்குச் சீர்திருத்தம் பெற்று வாழ்ந்த பழைய மக்கள் எல்லோரும் நூல் நிலையங்கள் அமைத்தும் புலவர்களைக் கூட்டியும் தம் மொழிகளை வளர்த்தார்கள். அவ்வாறே தமிழ் அரசரும் தமிழ் மொழியை வளர்த்தார்கள். தமிழ் அரசருள் பாண்டியரால் கூட்டப்பட்ட புலவர் சபை யின் வரலாறே சங்க வரலாறாகும். இச் சங்க வரலாறு செவி வழக்கில் நீண்ட காலம் தொடர்ந்து வந்தது. அது பிற்காலத்தில் ஏட்டில் எழுதிவைக்கப் பட்டது. நீண்ட காலம் செவிவழக்கில் வந்த இவ் வரலாற்றில் பல கற்பனை களும் இடம் பெற்றுள்ளன. அவ் வரலாற்றைக் கொண்டு மிகமிக முற்காலம் முதல் தமிழ் நாட்டில் பெரிய நூலகமும் தமிழ்ப் புலவர் கூட்டமும் இருந்து வந்தன என்பதை நாம் தெள்ளிதில் அறிந்து கொள்ளுதல் கூடும்.

**முதற்சங்கம்**

முற்காலத்தில் பாண்டிய நாடு கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் விரிந்து கிடந்தது. அப்பகுதி ஒரு காலத்தில் கடலுள் மறைந்து போயிற்று. கடலுள் மறைந்து போன நாட்டில் பாண்டியர் தலைநகரம் இருந்தது. அந் நகரம் மதுரை எனப் பெயர் பெற்று விளங்கிற்று. முதற் சங்கம் இம் மதுரை நகரிற் கூட்டப்பட்டது. தமிழ் நாட்டின் பல பாகங்களில் விளங்கிய புலவர்கள் அதன் உறுப்பினர்களாக விருந்தார்கள். சங்கம் நீண்டகாலம் நடைபெற்ற பின் பாண்டியர் தலைநகரைக் கடல் கொண்டது. அப்போது சங்கம் குலைந்தது. சங்க நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நூல்களும் அழிந்தன.

**இரண்டாஞ் சங்கம்**

பின்பு பாண்டிய அரசர் பொருநை ஆற்று முகத்துவாரத்தில் தமது தலைநகரை அமைத்தார்கள். அந்நகர் கவாடபுரம் எனப்பட்டது. பாண்டிய அரசர் மறுபடியும் தமிழ்ச் சங்கத்தை அங்குக் கூட்டினார்கள். வான்மீகி இராமாயணம் கவாடபுரத்தைப் பற்றிக் கூறுகின்றது. கவாட புரமும் கடலால் அழிக்கப்பட்டது. அப்பொழுது பாண்டியர் மணலூர் என்னுமிடத்தில் தமது நகரை அமைத்தார்கள். பாண்டியர் தலைநகரம் மணலூரில் இருந்தமையை மாபாரதம் கூறுகின்றது.

### மூன்றாஞ் சங்கம்

பின்பு பாண்டியர் திருப்பரங்குன்றத்துக்கு நேர் தெற்கிலே தமது தலைநகரை அமைத்து அதற்கு மதுரை எனப் பெயரிட்டனர். அங்கு, பாண்டியர் புலவர்களைக் கூட்டித் தமிழை வளர்த்தார்கள். புலவர் கூட்டம் இருந்தமையால் மதுரைக்குக் கூடல் என்னும் பெயரும் வழங்கிற்று. இச் சங்கம் கிறித்துவுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டளவிற் குலைந்து போயிற்று. மூன்றாவது தமிழ்ச் சங்க நூல்நிலையத்திலிருந்த பாடல்களின் தொகுப்பே எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்பன. யாப்பருங்கல விருத்தியுரை, தொல்காப்பிய உரை, சிலப்பதிகார உரை முதலிய பழைய உரைகளில் இன்று கிடைக்காத பல அரிய நூல்களின் பெயர்களைக் காண்கின்றோம்.

### செந்தமிழ்




செந்தமிழ் என்பதற்குத் திருத்தமான தமிழ், அல்லது திருத்தஞ் செய்யப்பட்ட தமிழ் என்பது பொருள். மதுரையும் அதன் சூழலும் தமிழ் வழக்குக்கு மத்திய இடங்களாகக் கொள்ளப் பட்டன. பழைய இலக்கண நூல்களில் "செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம்" எனக் குறிக்கப் பட்டுள்ளது. செந்தமிழ்நாடு ஒன்று அதனைச் சூழ்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளிருந்தன எனப் பிற்காலத்தார் மயங்கிக் கூறினர். வடக்கே வேங்கடமும், தெற்கே குமரியும், கிழக்கும் மேற்கும் கடலுமாகிய எல்லைகளுக்குட்பட்ட நிலத்தில் தமிழ் வழங்கியதென முன்னோரிடத்திற் கூறியுள்ளோம். தெய்வச்சிலையார் என்னும் உரையாசிரியர் தொல்காப்பிய உரையில் குறிப்பிட்டிருப்பது பின்வருமாறு:

> ***"வட வேங்கடந் தென்குமரி***
> ***ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து***
> ***வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்***
> ***எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி"***

என்றமையாலும் இதனுள் தமிழ்கூறு நல்லுலகமென விசேடித்தமையாலும், கிழக்கும் மேற்கும் எல்லை கூறாது தெற்கெல்லை கூறியதனாற் குமரியின்

தெற்காகிய நாடுகளை ஒழித்து வேங்கட மலையின் தெற்கும், குமரியின் வடக்கும் குண கடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ் நில மென்றுரைப்ப.

**திசைச்சொல்**

செந்தமிழ் வழக்குக்கு மத்திய இடமாயிருந்த மதுரையையும் அதன் சூழலையு மொழிந்த பிறதமிழ் வழங்கும் நாட்டு எல்லைகளுள் மாத்திரம் வழங்கும் சிற்சில சொற்கள் திசைச் சொற்கள் எனப்பட்டன. திசைச் சொற்கள் எனப்பட்டவை தமிழ் நாட்டில் வழங்கிய சொற்களே. உரையாசிரியர்கள் திசைச் சொல்லுக்கு உதாரணமாகக் காட்டியுள்ள சொற்கள் தமிழ் நாட்டில் வழங்கிய சொற்களே. தமிழ் நாடொழிந்த பிற நாட்டு மொழிகளினின்றும் வந்து தமிழில் வழங்கும் சொற்களே திசைச் சொற்கள் எனப் பிற்காலத்தார் கொண்டனர். இக் கருத்துத் தவறு உடையதாகும்.

**வடசொல்**

ஒரு காலத்தில் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கவில்லை. வட நாட்டவர்களின் கூட்டுறவு உண்டான காலத்தில் வடசொற்கள் சில அருகித் தமிழில் வழங்கின. சங்க நூல்களில் வடசொல் என்று சந்தேகித்தற்குரிய சில சொற்கள் காணப்படுகின்றன. அவை இரு மொழிகளுக்கும் பொதுவாயுள்ள சொற்களாகலாம் என்றும் சிலர் கருதியுள்ளார்கள். வடசொற்களின் உச்சரிப்புக்கும் தமிழ்ச் சொற்களின் உச்சரிப்புக்கும் வேறுபாடு உண்டு. வடசொற்கள் தமிழில் கலக்கும் இன்றியமையாமை நேர்ந்தால் அச் சொற்கள் எப்படிக் கையாளப்படுதல் வேண்டுமென்பதைப் பற்றிப் பழைய இலக்கண நூலாசிரியர்கள் கூறியிருக்கின்றனர். வடசொற்களை வட எழுத்து உச்சரிப்பு இன்றித் தமிழ் உச்சரிப்பு முறையாக மாற்றித் தமிழில் வழங்க வேண்டுமெனத் தொல்காப்பியங் கூறுகின்றது. பிறமொழிச் சொற்களைத் தத்தம் மொழிகளில் இயல்புக்கேற்பத் திரித்துத் தம்மொழிகளில் வழங்குவதே பண்டுமுதல் மக்கள் கையாளும் முறையாகும். ஆங்கிலத்தில் சென்று வழங்கும் பிற மொழிச் சொற்களெல்லாம் ஆங்கில மொழி ஒலி முறைக்கேற்பத் திரித்து வழங்கப்பட்டிருத்தலை நாம் காணலாம். இம் முறை இன்று தமிழிற் கையாளப்படாமை இழுக்காகும்.

**மொழிகளில் புதிய புதிய ஒலிகள் காணப்படுதற்குக் காரணம்**

மக்களின் ஓசை அவர்கள் வாழும் இடங்களின் வெப்ப நிலைக் கேற்ப மாறுபடுகின்றது. வெப்ப நாடுகளில் வாழும் மக்களின் ஓசைக்கும் தட்ப நாடுகளில் வாழும் மக்களின் ஓசைக்கும் வேறுபாடு காணலாம். மக்களின் ஓசை மாத்திரமன்று பறவை விலங்குகளின் ஓசையும் மாறுபடுதலுண்டு. இப் பூமியின் நடுக்கோட்டினின்று கீழ் நோக்கி அல்லதுமேல் நோக்கிச் சென்றால் செல்லுந் தோறும் படிப்படியே வெப்பம் குறைகின்றது. அவ் விடங்களில் வாழும் மக்களின் ஓசைகளும் சிறிது சிறிதாக மாறுபடு

கின்றன. இக் காரணத்தினாலேயே சிற்சில மொழிகளில் சிறப்பாகச் சிற்சில ஒலிகள் காணப்படுகின்றன. ஒரு மொழியில் காணப்படும் சிறப்பொலிகள் இன்னொரு மொழியிற் காணப்படாவிடின் அது அம் மொழியின் குறை பாடு எனக் கருதுதல் ஆகாது. வெவ்வேறு மொழிகளை வழங்கும் மக்கள் ஒருவரோடு ஒருவர் கலக்கும்போது ஒருவர் மொழிச் சொற்கள் மற்றவர் மொழியில் கலக்க நேர்கின்றன. அப்பொழுது அவர்கள் புதிய எழுத்தொலி களுடைய சொற்களை உச்சரிக்க மாட்டாதவராகின்றனர். அப் புதிய உச்சரிப் புள்ள சொற்களை ஒரு மொழியில் சேர்த்து வழங்குதல் அம் மொழியின் இயல்புக்கு ஏலாததாகவும் இனிமையில்லாததாகவும் தோன்றும். அது பற்றியே பிற மொழிச் சொற்களை ஆளுமிடத்து அவை ஆளும் மொழி யின் இயல்புக்கேற்பத் திரித்து வழங்கப்படுதல் வேண்டுமென்னும் விதிகள் உண்டாயின.

### சமக்கிருதம்

சமக்கிருதம் என்பதற்கு நன்றாகச் செய்யப்பட்ட மொழி என்பது பொருள். சமக்கிருதம் என்பது செந்தமிழ் என்பது போன்ற வழக்கு. வடநாடு களில் மக்கள் பேசும் மொழிகள் பலவாய் இருந்தபோதும் இலக்கிய மொழி சமக்கிருதமாக விருந்தது. பௌத்த சைன மதங்கள் வீழ்ச்சியுற்றுப் புது முறையான இந்து மதம் தெற்கே தலையெடுத்த காலத்தில் தென்னாட்டிலும் சமக்கிருதம் வித்துவான்களின் இலக்கிய மொழியாகவும், சமய மொழியாக வும் இருந்து வந்தது. இன்றும் அது சமய மொழியாகக் கொள்ளப்பட்டு வரு கின்றது. இந்து மதம் இந்தியாவினின்றும் கம்போதியா, சுமத்திரா, யாவா, பாலி முதலிய பிற நாடுகளிற் சென்று பரவியபோது சமய மொழியாகிய சமக்கிருதமும் உடன் சென்றது. இதனால் பற்பல மொழிகளில் சமக்கிருதச் சொற்கள் சென்று கலந்துள்ளன. சமக்கிருத மொழியில் திராவிடம், கொண்டு முதலிய இந்திய மொழிச் சொற்களும் சென்று கலந்துள்ளன. அவை சமக் கிருத மொழியின் இயைபுக்கு ஏற்பப் புதிய வடிவோடு காணப்படுகின்றன.

### சங்க நூல்கள்

மதுரையில் நடந்த சங்கம் தமிழ்க் கல்வி சம்பந்தமானவைகளை மாத்திரம் கவனித்து வந்தது. ஆகவே, அங்கு இலக்கண இலக்கிய சம்பந்த மான ஆராய்ச்சிகளே நடைபெற்று வந்தன. நகரங்களில் பட்டி மன்றங்கள் என்னும் விரிவுரை நிகழ்த்தும் சாலைகளும் இருந்தன. அங்கு விதுவான்கள் சமயம், தர்க்கம் போன்ற பல துறைகளில் விரிவுரைகளும் வாதங்களும் நடத்தினர். எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்பன சங்கநூல்கள் என வழங்குகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் சங்கநூல்கள் என வழங்குகின்றன. இந் நூல்களிற் பெரும்பாலான பிற்காலத்துச் செய்யப்பட் டவை. ஆகவே, பதினெண் கணக்கு நூல்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்ற வைகளைச் சங்கநூல் வரிசைகளில் சேர்த்தல் இயலாததாகின்றது. எட்டுத்

தொகை பத்துப் பாட்டு என்பன தமிழ்ச் சங்க நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பாடல்களின் தொகுப்பு என முன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். எட்டுத் தொகை நூல்களாவன: அகநானூறு, புறநானூறு, கலித் தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து என்பவை. பத்துப் பாட்டில் அடங்கியவை: முருகாற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம், பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை, பொருநராற்றுப்படை என்பன. இவை தமிழ் நாட்டில் ஆங்காங்கிருந்த பற்பல புலவர்களால் செய்யப்பட்டவை. சங்கநூற் பாடல்களைச் செய்த புலவர்கள் ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்டவராவர். இப் பாடல்கள் அரசரால் பெரும் புலவர்களைக் கொண்டு தொகுப்பிக்கப்பட்டவை.

**அகம்**

அகநானூறு, கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய நூல்கள் கூறும் பொருள் அகப்பொருள் சம்பந்தமானது. அகம் என்பது கணவன் மனைவியரிடையே நிகழும் அன்பொழுக்கம். இவ் வுலகிலே உண்மை அன்புடைய கணவன் மனைவியரிடையே நிகழக் கூடிய அன்பொழுக்கங்களை நிகழ்ந்தனவாக வைத்து அழகு பெற அகப் பொருட் பாடல்கள் கூறுகின்றன. அகப் பொருள் நூல்களால் பழங்காலத் தில் தமிழரின் பண்பட்ட இல்லற வாழ்க்கை எவ்வாறிருந்தது, அவர்களின் சீர்திருத்த முறைகள் எவ்வாறிருந்தன என்பன போன்ற பல அரிய செய்திகளை நாம் நன்கு அறிகின்றோம்.

**புறம்**

புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய நூல்களில் கூறப்படும் பொருள் புறம். புறப் பொருட் பாடல்கள் அரசரின் வெற்றி, கொடை, வீரம் முதலிய வைகளைப் புகழ்ந்து பாடப்பட்டவை. புலவர்களின் திறமைக்கேற்ப அரசர் அவர்க்குப் பொருள் வழங்கினார்கள். புறப்பொருட் பாடல்கள் அக்கால அரசரின் வீரம், கொடை, ஞாயம், ஆட்சி முறை முதலியவைகளைத் தெரிவிக்கின்றன. புறப்பொருட் பாடல்களுள் ஒன்றின் பொருளை இங்குத் தருகின்றேம்.

"வளையல் அணிந்த கையுடைய மகளிர் அவலிடிப்பார்கள். அவர்கள் உலக்கையை வாழை மீது சார்த்திவைத்து விட்டு வள்ளைக் கொடியைக் கொய்வார்கள். கதிர்க்கனத்தால் நெல் வளைந்து நிற்கும். இவ்வாறு செழிப்புடைய வயலிடத்து நீண்ட காலுடைய நாரை பரந்திருக் கும். இந்நாரைகளும், மீன்களை உண்ணும்படி மரங்களில் இருக்கும் கூட்ட மாகிய கொக்குகளும் வெருண்டு ஓடும்படி வெள்ளிய வளை அணிந்த கையுடைய மகளிர் கைகளை அசைத்து அவைகளை ஓட்டுவர். நாட்டிலே இடையறாது விழாக்கள் நிகழும். யாழில் வார்க்கட்டைத் தளர்த்தாத கூத்தர்

சாவடிகளில் சென்று பண்ணமைத்துப் பாடுவர். இவ்வாறு செல்வமும் செழிப்பும் மிகுந்த செல்வமுடைய நாடுகளைப் பல் யானைகளையுடைய குட்டுவன் வெற்றி கொண்டான். அவனுடைய படைகள் பரந்து சென்ற மையால் அந் நாடுகள் அழகு கெட்டன."[1]

அகப்பொருள் புறப்பொருள் பற்றிப் பாடும் மரபு மிகப் பழங்காலம் முதல் இருந்து வருகின்றது. இவ் வகைப் பாடல்கள் செய்வதற்கு இலக்கணம் தொல்காப்பியத்திற் கூறப்படுகின்றது. தொல்காப்பியம் அதற்குமுன் இருந்த பல இலக்கணங்களைப் பின்பற்றிச் செய்யப்பட்டது. புறநானூற்றுப் பாடல் ஒன்று பாண்டவருள் ஒருவராகிய தருமன் மீது பாடப்பட்டுள்ளது.

பத்துப் பாட்டிலடங்கிய பாடல்களும் அரசரைப் புகழ்ந்து பாடப்பட்ட வைகளே. இப் பாடல்கள் மக்களின் வாழ்க்கை, இயற்கை முதலியவைகளை நன்கு சித்திரித்துக் காட்டுகின்றன. பத்துப்பாட்டில் ஆற்றுப் படை என்னும் தலைப்பின் கீழ்ச் சில பாடல்கள் வந்துள்ளன. இவை அரசனை நேரில் புகழாமல், அவனைப் பாடிப் பொருள் பெற்று மீள்கின்ற ஒருவன், வறுமை யாலலைந்து திரியும் இன்னொருவனைப் பார்த்துத் தன்னை வரவேற்றுப் பொருள் நல்கிய அரசனின் புகழை அவனுக்கு எடுத்துச் சொல்வது போல அமைந்துள்ளன. இப் பாடல்கள் படிப்பதற்கு மிக மிகச் சுவை அளிப்பன. சங்க நூல்களைக் கற்பதால் அக் காலத் தமிழரின் பண்பாடு, வீரம், கொடை, சமயக் கொள்கை, மணமுறை, பழக்க வழக்கங்கள் போன்ற பல செய்தி களை நாம் நன்கு அறிகின்றோம். சங்க கால நூல்கள் பிற்கால நூல்களைப் போலச் சமயத்தையே குறிக்கோளாகக் கொண்டு செய்யப்பட்டனவல்ல.

## தமிழில் வடசொற் கலத்தற்குரிய காரணம்

தமிழ் நாட்டில் பௌத்த சைன மதக் கொள்கைகள் பரவின. தமிழ் மக்கள் பலர் அம் மதங்களைத் தழுவினர். பௌத்த சைன நூல்கள் பாலி, சமக்கிருதம் முதலிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. அம் மொழிகளில் எழுதப்பட்டிருந்த நூல்களைப் பயில்வதற்குப் பலர் அம் மொழிகளைப் பயின்றனர். இன்னொரு சாரார் அம் மதக் கொள்கைகளை எதிர்த்து நின்ற னர். அம் மதக் கொள்கைகளைக் கற்று எதிர் வாதம் புரியும் பொருட்டும் பலர் வட மொழியைப் பயின்றனர். இவை போன்ற காரணங்களால் வட மொழி பண்டிதர்களறிந்த மொழியாக விருந்தது. இன்று பேச்சு வழக்கில் தமிழோடு ஆங்கிலம் எவ்வாறு கலந்து நிற்கின்றதோ அதேபோல வட மொழிச் சொற்களும் தமிழிற் கலப்பவாயின. தமிழிற் கலந்துள்ள வட சொற்கள் பெரும்பாலும் சமயத் தொடர்பானவையே. சங்ககாலத்தில் வட சொற்கள் தமிழில் அருகி வழங்கின. அச் சொற்கள் வடமொழிக்குரியனவோ என்னும் ஐயத்துக் கிடமானவை.

1. பதிற்றுப் பத்து பாடல் 29

**மணிப்பிரவாளம்**

தமிழோடு வடமொழி மிகக்கலந்து வழங்கத் தலைப்பட்ட ஒரு காலத்தில் மணிப்பிரவாளம் என்னும் புதிய நடை என்று தமிழில் வழங்குவ தாயிற்று. மணிப்பிரவாள மென்பது சரிக்குச்சரி தமிழும் சமக்கிருதமுங் கலந்தநடை. இந் நடை சைனராலும் வைணவராலும் பெரிதும் பயன்படுத்தப் பட்டது. மணிப்பிரவாள நடைக்கு எடுத்துக்காட்டு பின்வருமாறு:

"கந்யகா யோக்கியனாகிய பர்த்தா ஸஹஸ்ர கூட ஜின பவனத்தை யடைதலும் சம்பக விகாசமும் கோகில கோலாஹலமும் தடாக பூர்ணமும் தக்கதகுமுதவிகாசமும் மதுரசஞ்சாரமும் கோபுரகவாட விகடனமுமாகிய அதிசயங்களுள்ள வாகுமென்று ஆதேசித்தனர்."

பன்னிரண்டாம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட வீரசோழியத்தில் மணிப் பிரவாள நடையில் செய்யுள் செய்வதற்கு விதி காணப்படுகின்றது. தமிழ் உலகு மணிப்பிரவாள நடையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, அந் நடை நாளடைவில் நின்று போயிற்று. மணிப்பிரவாள நடை மலையாள நாட்டில் கைக்கொள்ளப் பட்டமையினாலேயே அங்கு வழங்கிய தமிழ் கெட்டு மலையாளமாயிற்று என ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றனர்.

**பிற்கால நூல்களின் இலக்கு**

சங்க காலத்திற்குப் பின் தென்னாட்டில் மதக் குழப்பங்கள் உண்டா யிருந்தன. அக் காலத்திற்றோன்றிய இலக்கியங்கள் சமயக் கொள்கை களைப் பரப்பும் பொருட்டு எழுந்தன. பிற்காலத்தில் நூல் இயற்றியவர்கள் பெரும்பாலும் பௌத்த, சைனர்களே யாவர்.

**சமயப் பாடல்கள்**

கி.பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் பௌத்த சைன மதங்களை நசித்துத் தென்னாட்டு மதம் தலை எடுத்தது. தென்னாட்டு மதமென்பது சிவன், திருமால் வழிபாடுகள். அக் காலத்தில் இவ்விரு மதங்களும் தனித் தனியே இரண்டாகப் பிரிந்து வளர்ச்சியுறவில்லை. தென்னாட்டவரின் இவ் வழிபாட்டு முறைகளோடு வட நாட்டவர் மதக் கொள்கைகளும் கலந்தன. அதனால் சமய மொழி சமக்கிருதமாயிற்று. வடநாட்டிற் போலவே தென் னாட்டிலும் சமக்கிருதம் தெய்வ மொழியாகக் கொள்ளப்பட்டது. அக் காலத் தில் சமய நூல்கள் வடமொழியில் எழுதப்பட்டன. கோயிற் பெயர்கள் கடவுட் பெயர்களிலும் சில மாற்றங்கள் உண்டாயின. அக் காலத்தில் சைவ சமயா சாரியர்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றித் தமிழில் பல செந்தமிழ்த் துதிப் பாடல்கள் செய்தார்கள்.

இவர்களைக் கண்டு சைன, பௌத்த மதத்தினர் வாளா இருக்க வில்லை. அவர்களும் கதை விடிவில் பல இலக்கியங்களைச் செய்தார்கள். தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என்று சொல்லப்படும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் நூல் களைச்

செய்தோர் பௌத்த, சைனர்களே யாவர். மணிமேகலை, வளையா பதி, குண்டலகேசி என்னும் மூன்றையும் பௌத்தரும், சிலப்பதிகாரம், சிந்தாமணி என்னும் இரண்டையும் சைனரும் இயற்றினர்.

ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படும் யசோதர காவி யம், உதயணன் கதை, நாக குமார காவியம், நீலகேசி, சூளாமணி முதலியனவும், நாலடியார், பழமொழி, நேமி நாதம், காரிகை, சூடாமணி நிகண்டு, வீரசோழியம், நன் னூல் முதலியனவும் சைன பௌத்தப் புலவர்களாற் செய் யப்பட்டவை. திவாகரம், பிங் கலந்தை முதலிய நிகண்டு களைச் சைவப் புலவர்கள் செய்தனர்.



இந்திய நாட்டில் வழங்கும் முக்கிய மொழிகள்

## மொழிபெயர்ப்பு நூல்கள்

சைவ வைணவ ஆசாரியர்களுக்குப் பின் நூல்கள் பல வடமொழி யிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பெருந்தேவனார் வடமொழி மாபாரதத்தை வெண்பாவிற் பாடினார். கம்பரும் ஒட்டக்கூத்தரும் இராமா யணத்தைத் தமிழில் இயற்றினர். பரஞ்சோதி முனிவர், நம்பி என்போர் ஆலாசிய மான்மியத்தைத் திருவிளையாடற்புராணம் என்னும் பெயராற் றமிழிற் செய்தனர். நம்பியாண்டார் நம்பி (கி.பி. 1025) அங்குமிங்கும் சிதறிக் கிடந்த தேவாரப்பாடல்களை ஒருங்கு சேர்த்துத் தொகுத்தார். நாதமுனி (கி.பி. 1025) வைணவ ஆழ்வார்களின் பாடல்களாகிய நாலாயிரப் பிரபந்தத்தைத் தொகுத்தார். சேக்கிழார் (கி.பி. 1135) பெரிய புராணத்தைப் பாடியருளினார். பின்பு சந்தான குரவர்கள் எனப்படும் மெய்கண்டார், அருணந்திசிவாச்சாரி யார், உமாபதிசிவம், மறைஞான சம்பந்தர் முதலிய ஆசாரியர் பலர் தோன்றிச் சித்தாந்த சாத்திரங்களைச் செய்தனர்.

## உரை ஆசிரியர்கள்

இக் காலத்திலேயே நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலிய புகழ்பெற்ற உரையாசிரியர்கள் தோன்றியிருந்தார்கள். பேராசிரியர், திருக்கோவையார், தொல்காப்பியப் பொருளதிகாரம் முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். நச்சினார்க் கினியர் தொல்காப்பியம், சிந்தாமணி, கலித்தொகை பத்துப் பாட்டு முதலிய கடிய நூல்களுக்கு உரை விரித்துள்ளார்கள். இளம்பூரணர் தொல்காப்பியத்

துக்கும், பரிமேலழகர் திருக்குறள், பரிபாடல் என்னும் நூல்களுக்கும், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கும் உரை எழுதியுள்ளனர். இதன் பின் சைவ, வைணவ மதப் போராட்டங்கள் நிகழ்ந்தன. அக் காலத்தில் புற்றீசல் போலத் தல புராணங்கள் பல எழுந்தன.

**வசன நடை**

முற்காலத்தில் நூல்கள் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டன. இந் நூல்கள் சிலவற்றுக்குப் பிற்கால உரை ஆசிரியர்கள் உரை எழுதியிருக் கிறார்கள். இவ் வுரைகளைத் தவிர முற்காலத்தில் வசன நடையில் செய்யப்பட்ட நூல்கள் காணப்படவில்லை. முற்காலத்தில் வசனமும் செய்யு ளும் கலந்த நூல்கள் இருந்தன வென்று தொல்காப்பியமென்னும் பழைய இலக்கணத்தால் அறிய வருகின்றது.[1] அவ்வாறு அமைந்த பாடல்கள் உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்பட்டன. முற்காலத்தில் இவ்வாறு செய்யப்பட்டிருந்த நூல்கள் இறந்து போயின. சிலப்பதிகாரத்தின் இடை யிடையே சில உரைப்பகுதிகள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு:

"குடத்துப் பாலுறையாமையும் குவியிமிலேற்றின் மடக்கண்ணீர் சோர்தலு முறியில் வெண்ணெயுருகாமையு மறிமுடங் கிடாமையு மான் மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மன மயங்காதே மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியுந்தான் காண வாயர் பாடியிலெரு மன்றத்து மாயவனுடன்றன் முனாடிய பால சரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவை யாடுதும்யா மென்றாள் கறவை கன்று துயர் நீங்குக வெனவே." சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட நூல். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இறையனார் களவியலுரையின் ஓர் பகுதியை ஈண்டு தருகின் றோம். அது அக்கால உரைநடை எவ்வாறிருந்த தென்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

"இவ்வூர் உம்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்ம னென்பான், பைங்கண்ணன், புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளையுளன்; அவனை அன்ன னென்றி கழாது கொடு போந்து ஆசன மேலிரீக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து."

**உரையாசிரியர்கள் காலத்து வசனநடை**

**நச்சினார்க்கினியரின் நடை**

உரையாசிரியர்கள் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்கும் 14ஆம் நூற்றாண்டுக்கும் இடையிலாகும்.

1. தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே (தொல். செய். 238)

“பாண்டியன் மாகீர்த்தி யிருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தா னாதலினவனு மவனவையிலுள்ளோரு மறிவுமிக் கிருத்தலினவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கு விடை கூறினர். அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி நீர் தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க வென்று கூறுதலானுந் தொல்காப்பயினாரும் பல்காலுஞ் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டு மென்று கூறுதலானு மவ் விருவரும் வெகுளாமலிந் நூற்குக் குற்றங் கூறிவிடுவ லெனக் கருதியவர் கூறிய கடாவிற் கெல்லாம் விடை கூறுதலினிறப வென்றார்.”

**அடியார்க்கு நல்லார் நடை**

“இனி, இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங் குருகும் பிறவும் தேவ விருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய மென்பன வற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணை அல்லது முதல் நடு இறுதிகாணாமையின் அவையும் இறந்தன போலும்.”

**பரிமேலழகர் நடை**

“இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்த மிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்தற்கு உரிய மாந்தர்க்கு உறுதி யென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு; அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாதலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமே.”

**உரைநடை வரலாறு**

முற்காலத்தில் உரைநடை அறியப்பட்டிருந்த தாயினும் உரைநடையில் நூல் எழுதும் வழக்கு இருக்கவில்லை. அக் கால வசனநடை அடிவரையறையில்லாத ஒருவகைச் செய்யுள் போலவே கருதப்பட்டது. உண்மையான வசனநடை ஐரோப்பிய பாதிரிமாரின் வருகையோடு ஆரம்பிக்கின்றன. ஐரோப்பியப் பாதிரிமார் 17-ம் நூற்றாண்டில் வந்தார்கள். அவர்கள் மொழிகளில் வசனநடை மிக வளர்ச்சியடைந்திருந்தது. தமிழைப் பயிலாத அளவில் தமது சமயத்தைப் பரப்பும் வாய்ப்பு தமக்கு இல்லை என அவர்கள் கண்டார்கள். இத் தூண்டுதலினால் தமிழைக் கற்றுத் திறமை பெற்று விளங்கியவர் கொன் தான்தியஸ் பிஸ்கி என்னும் இத்தாலியர். இவர் வீரமாமுனிவர் எனவும் அறியப்படுவர். உள்ளூர்ச் சமய போதகர்களை வசன நூல்கள் எழுதப் பழக்குவதற்கு முன்மாதிரியாக அவர் சில தமிழ் நூல்களை எழுதினார். அவை இலக்கியம் பயின்ற மாணவருக்கு இன்பம் அளிப்பன வாயிருந்தன. அவரது வசன நடையில் பல குறைபாடுகள் இருந்தபோதிலும்

அது வசனநடை வளர்வதற்குக் காலாக விருந்தது. வீரமா முனிவருக்கு முன் னிருந்த வசனநூல்கள் வசனக் கலைக்கு எடுத்துக்காட்டு ஆகமாட்டா. வீரமா முனிவர் செய்த நூல்களுள் வேதியர் ஒழுக்கம், அவிவேக பூரண குரு கதை முதலியன குறிப்பிடத்தக்கவை. இந் நூல்கள் தமிழ் இலக் கணத்தை மாத்திரம் கற்ற ஒரு அன்னியர் எவ்வகைத் தமிழ் வசனநடை எழுத முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

வீரமாமுனிவருக்கு இருபது ஆண்டுகளின் பின் வாழ்ந்த சிவஞான முனிவர் வசனநடையைத் தொடக்கியவர் எனலாம். இவர் போக்கையே பின்பற்றிக் கண்டனங்களும் சைவ மடங்களின் நூல்களும் எழுதப் பட்டன. வீரமாமுனிவர் சிவஞான முனிவர் என்னும் இருவரும் உயர்ந்த கல்வியறி வுடைய சமய போதகரேயாவர். சிவஞான முனிவரின் வசனநடை வித்து வான், பண்டிதர்களால் படித்து மகிழக்கூடியதா யிருந்ததே யன்றிப் பொது மக்கள் கற்றறியக் கூடிய எளிமையுடையதா யிருக்கவில்லை. இவர் உரை யாசிரியர்கள் சென்ற போக்கினின்றும் விலக விரும்பவில்லை. இவர் நடைக் கும் மேற்கு நாடுகளிலிருந்து வந்த பாதிரிமார் தோற்றுவித்த நடைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு.

1826இல் சென்னைப் பிரசிடென்சிக் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடத்திய தாண்டவராய முதலியார் (1826) மராத்தி மொழியிலிருந்து பஞ்ச தந்திரக் கதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் நடையில் வீரமா முனிவர், சிவஞான முனிவர் நடையிற் காணப்படாத சில மாறுதல்களைக் காணலாம். இவர் நடை விளக்கமும் எளிமையும் உடையது. ஆராய்ந் தெடுத்த முது மொழிகளை இவர் இடையிடையே ஆண்டுள்ளார். அதனாலும் அவர் நடை அழகுறுகின்றது. இவருக்குப்பின் வீராசாமிச் செட்டியார் (1826) விநோத இரசமஞ்சரி என்னும் நூலை எழுதினார். இவர் நூல் ஆண் பெண் என்னும் இரு பாலாராலும் பெரிதும் விரும்பப்பட்டது. மூலை முடுக்குகளி லிருந்த வசன நூல்கள் இப்பொழுது அம்பலத்துக்கு வந்தன. இவருக்குப் பின் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் பல வசன நூல்களைச் செய்தார். உரையாசிரியர்களதும், சிவஞான முனிவரதும் உரை நடையிற் றோய்ந்த நாவலர் எவரும் விளங்கக்கூடிய முறையில் வசன நூல்களை வெளியிட்டது வியப்பளிப்பதேயாகும். தமிழ்க் கிறித்துவ வேதத்தை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் திருத்தி எழுத நேர்ந்தமை அவருக்கு நல்ல வசனங்களை ஆக்கும் பழக்கம் அளித்திருக்கலாம். வீரமாமுனிவர் தாழ்ந்த பொதுமக்களுக்காக எழுதினார். ஆகவே, அவர் நடை எளியநடை யில் அமைந்துள்ளது. இவ்வாறு ஐரோப்பிய பாதிரிமார் வருகைக்குப் பின் தொட்டே தமிழில் வசன நூல்கள் எழுதப்படலாயின. இக் காலம் வசனகால மெனப்படுகின்றது.

வசனநடை சம்பந்தமாகப் பேராசிரியர் ஒருவர் எழுதியுள்ள பகுதியை இங்கு தருகின்றோம். அதில் பல அரிய செய்திகள் அறியக் கிடக்கின்றன.

"நூறு வருடமாகத்தான் வசன நடைக்கு ஒருவித கௌரவம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தமிழ் நூலார் 'உரைநடை' யென்பது, வெகு காலமாக, அஃது உரைகளில் மட்டுமே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வந்த காரணத்தினாற் போலும். பெருந்தேவனார் பாரதம் முதலிய பழைய நூல்களில் வசனங்கள் காணப்படுமாயினும், அவை பொருளைப் புலப்படுத்துமாறு இடையிடையே வைக்கப்பட்டவையே; பிற்காலத்து எழுதி நுழைக்கப்பட்டவை என்று சொல்வாரும் உளர். வசன நூலெனத் தனிநூல் தோன்றி வெகுகால மாகவில்லை. தற்காலத்துள்ள 'கர்நாடக' பண்டிதருட் பெரும்பான்மையர் இலக்கண இலக்கியங்களில் எவ்வளவு தேர்ச்சியடைந்தவராயினும், இம் என்னுமுன் ஈராயிரங் கவிபாட வல்லவராயினும், ஒரு பக்கம் வசன மெழுதவேண்டுமென்றால் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கின்றது; செய்தும், மலைகல்லி எலி பிடித்த கதைதான். இதனால், வசனம் எழுதுவதும் ஒருவகை வித்தை யென்றும், மற்ற வித்தைகளைப் போலவே அதுவும் பயிற்சி யளவிற்குத் தக்க பலனைக் கொடுக்குமென்றும் அறிந்துகொள்ள வேண்டும். வசனநடையிலும் செய்யுள் நடையுண்டு; சிங்காரநடை ஒன்றுண்டு. உரையாசிரியர் நடை ஒரு விதமாயிருக்கும். இவையெல்லாம் உளவாயினும் தமிழுக்கு அவசியம் வேண்டிய நடை ஒன்றே; அஃது எளிதிற் பொருள் விளங்குவதும், வாசிக்கையில் இனிய ஓசை தருவதும், வருந்தி எழுதாததும், இலக்கண வழுக்கள் மரபு வழுக்கள் இல்லாதது மாகிய செந்தமிழ்நடை.

வெகு காலத்துக்கு முன் எழுதப்பட்டன வென்று சொல்லத்தக்கனவாய்த் தமிழ் வசனங்கள் நூல்களில் ஆங்காங்கே காணப்படினும், புலவர்கள் வசனத்தைப் போற்றவில்லை யென்பது நிச்சயம். செய்யுள் செய்யும் முறைகளைப் பற்றி அனேக இலக்கண நூல்கள் ஏற்பட்டிருக்க, வசனம் எழுத வேண்டிய ஒழுங்கைப்பற்றி ஒரு சிறு நூல்தானும் காணப்படாமை இதனை உறுதிப்படுத்துகின்ற தன்றோ? பழைய உரைகளிற் காணப்படும் வசனங்களெல்லாம் செய்யுள் களென்றே சொல்லப்படும் தன்மையன; சில இடங்களில் அவை ஞாபகத்திற்காக எழுதிவைக்குங் குறிப்புக்கள் போன்றிருக்கின்றன; அவ்வாறிருக்குந் தன்மையால் வசன ஒழுங்கோடு முற்றும் மாறுபடுகின்றன. அதனால், அவற்றை மாதிரி வசனங்களாகக் கொள்ளுதல் பொருந்தாது. சிவஞானயோகிகள் முதலிய தற்காலத்து ஆசிரியர் வசன நடைகளும் நூல் நுட்பம் அறியும் சாமர்த்தியமுடைய புலவர்க்கே பயன்படுவனவாயிருக்கின்றன. இவர்கள் நூல்களில் வாக்கியங்கள் சாமானிய கல்வியறிவுடையோரால் கிரகிக்கக் கூடாதபடி நீண்டிருக்கின்றன; திரிசொற்களும் சந்திகளும் நிறைந்திருக்கின்றன. இவற்றை வசன நடை வழுக்களென்றே சொல்லலாம். செய்யுள் நடை எப்படியிருப்பினும், வசன நடை எல்லார்க்கும் விளங்குந் தன்மைய தாயிருத்தல் வேண்டும்.

நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும் சிவஞான யோகிகளையும் பின்பற்றுவதாகச் சொல்லிச் சாமானியர்க்கு விளங்காத

வசனங்கள் எழுதிக் களிக்கின்ற இந்நாட் புலவர்களைப் பற்றி என் சொல்வது! பழைய நூல்களில் நடை வழுக்கள் காணப்படினும் அவற்றுட் பொதிந் திருக்கும் மாணிக்கங்களைக் காணும் பொருட்டுப் பொறுமை மேற்கொண்டு அவற்றைக் கற்றுணர்கின்றோம். அன்றியும், முற்காலத்தில், எளிமையின் உயர்வு அவர்களுக்குத் தெரியாதிருந்திருக்கலாம். செய்யுள் நடையோடு பழக்க மிகுதியால் வேறுவகை வசனம் எழுதல் அவர்களுக்கு அசாத்திய மான செய்கையாயு மிருந்திருக்கலாம். இன்னும், அவ் வுரைகளைக் கற்கப் புகுவோர் கீழ்க் கடையில் அநேக நூல்களைக் கற்றபின் அவற்றின் அருகே செல்வர். பழைய நூல்களைக் கற்பதற்குச் சாவகாசமும் சாமர்த்தியமும் குன்றிய இக் காலத்தில் எளிய நடை எழுதுவதே முறையாகவும் முற்காலத்து நூல்களை மாதிரியாகக்கொண்டு 'உயர் நடை' எழுதுதல் அக்கிரமமன்றோ! 'எளிய நடை எழுதுதல் நமக்குச் சாத்திய மன்று; யாம் எப்பொழுதும் பழைய நூல்களிலேயே பயின்றுள்ளோம்' என்று கூறுவது வீண் கர்வமன்றி வேறென்ன! ஆயினும், ஒன்று சொல்லத்தக்கது. தற்காலத்தில் பழைய நடையைப் பின்பற்றி ஒருவர் எழுதுவாராயின் அவர் எழுதுவதில் தொடர் எழுத்துக்களும் திரிசொற்களும் சந்திகளுமே நிறைந்திருக்கும்; சாரமாயுள்ள ஒன்றும் இராதென்பது நிச்சயம்; அவர் எழுதுவதை வாசிப்போர் ஆயிரம் பேரில் ஒருவரே யாவர். இதர சாதியரிடத்தும் இதர மதத்தாரிடத்தும் இதர மொழி வழியாற் சம்பாதிக்கும் அரும் பொருளை எவராயினும் இக் கடிய நடையில் அடக்கஞ் செய்வராயின், அச் செயல் தீச்செயலென்றே சொல்லத் தகும். அப்படிச் செய்யப்பட்ட நூலும் சில நாள் நின்று வாசிப்போரின்றி ஒழியும் என்று உறுதியாகச் சொல்லலாம்."[1]

## முற்காலக் கல்வி முறை

முற்காலத்தில் இன்று காணப்படுவது போன்ற கல்வி நிலையங்கள் இருக்கவில்லை. சிறுவர் ஆசிரியர்களை அடுத்துக் கல்வி பயின்றார்கள். சமீப காலம் வரையில் நடைபெற்ற திண்ணைப் பள்ளிக்கூடங்கள் முற்கால முறையைப் பின்பற்றியனவே. மாணவர் ஆசிரியருக்குப் வகையான பணிவிடைகள் செய்து அவரிடம் கல்வி கற்றார்கள். ஆசிரியரின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை அவர் அவர் இயல்புக்கு ஏற்றவாறு கொடுத்து வந்தனர்.

> ***"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்***
> ***பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"***

என்னும் பழைய பாடலினால் அக் காலக் கல்விமுறை எவ்வகையின தென்று விளங்குகின்றது.

பௌத்த குருமார் வடநாட்டினின்றும் வந்து தென்னாட்டில் தமது மதத்தைப் பரப்ப முயன்றனர். அப்பொழுது அவர்கள் தமிழ் மொழியைப்

1. அனவரத விநாயகம் பிள்ளை.

பயின்றனர். அவர்கள் பௌத்த மடங்களில் சிறுவரைக் கூட்டிக் கல்வி கற்பித் தனர். இம் முறையையே பிற்காலக் கிறித்துவ பாதிரிமாரும் கையாண்டனர். சைன, பௌத்த துறவிகள் வாழும் மடத்துக்குப் பள்ளி என்று பெயர். இம் மடங்களில் கல்வி கற்பிக்கப்படுவது பொது நிகழ்ச்சியாகவிருந்தமையால் பிற்காலங்களில் கல்வி கற்பிக்கப்படும் நிலையங்களுக்குப் பள்ளி என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

அக் காலத்தில் பள்ளிகளில் சிறுவர் எப்படிக் கல்வி பயின்றார்கள் என்பதைப் பற்றி நன்னூல் என்னும் இலக்கண நூலிற் சொல்லப்பட்டிருக் கின்றது. சிறுவர் காலையில் பள்ளிக்குச் சென்றார்கள்; சென்று ஆசிரியரை வணங்கினார்கள்; ஆசிரியர் இரு என்று சொல்ல அவர்கள் இருந்தார்கள்; நில் என்று சொல்ல எழுந்து நின்றார்கள்; பின்பு ஆசிரியர் சொல்லும் பாடங் களை மிகக் கவனமாகக் கேட்டார்கள்; கேட்ட வற்றை இருந்து சிந்தித் தார்கள்; மாணவர் தாம் கற்றவற்றை ஒருவரோடு ஒருவர் உரையாடித் தெளிந்தார்கள்.

இன்று நாம் பயன்படுத்தும் புத்தகங்கள் போன்றவை முற்காலத்தில் இருக்கவில்லை. மாணவர் எழுத்துக்களை மணலைப்பரப்பி அதன்மேல் வலக்கைச் சுட்டு விரலால் எழுதிப் பயின்றனர். எழுத்து எழுதப் பயின்றபின் பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதப் பயின்றனர். சிறுவர் கையில் வைத்துப் பயிலும் நூல்கள் பனை ஓலை ஏடுகளில் ஆசிரியரால் எழுதி உதவப்பட்டன. பள்ளிகளில் பயிலும் கல்வி முடிந்தபின் உயர்தர கல்வி கற்க விரும்பியவர்கள் ஆங்காங்கு புகழ் பெற்று விளங்கிய நல்லாசிரியர் களை அடைந்து அவரிடம் சிலகாலம் கல்வி பயின்றனர்.

***"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்***
***இனிதாவ தெங்குங் காணோம்***
***பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்***
***இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு***
***நாமமது தமிழரெனக் கொண்டிங்கு***
***வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்***
***தேமதுரத் தமிழோசை உலகமெலாம்***
***பரவும் வகைசெய்தல் வேண்டும்"*** *பாரதியார்*

***"ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி***
***ஏங்கொலி நீர்ஞாலத் திருளகற்று-மாங்கவற்றுள்***
***மின்னோர் தனியாழி வெங்கதிரொன் றேனையது***
***தன்னே ரிலாத தமிழ்"***

❋ ❋ ❋

# திராவிட மொழிகளும் இந்தியும்

# முன்னுரை

1931ஆம் ஆண்டு அரசினர் எடுத்த மக்கள் தொகை(Census)யின்படி இந்திய நாட்டில் வழங்கும் மொழிகள் 225. விந்தத்துக்கு வடக்கே உள்ள மொழிகள், திராவிடம், பிராகிருதம், பாரசீகம், கிரேக்கம், சித்தியம், மங் கோலியம், அரபு, துலுக்கு முதலிய பற்பல மொழிக் கலப்பினால் தோன்றி யவை. விந்தத்துக்குத் தெற்கே வழங்கும் மொழிகள் பெரும்பாலும் தமிழ் ஆரியம் என்னும் இருமொழிக் கலப்பினாலும் தோன்றியவை.

கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழி னின்றும் பிறந்தவை என்பது ஆராய்ச்சியாளரால் முடிவு கட்டப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் சகோதர மொழிகளென்றும், தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தாய், தமிழ் அன்று என்றும் இப்பொழுது தெலுங்கு மக்களுட் சிலர் கூறுகின்றனர். இக் கருத்துத் தவறுடையதென்பதை மொழி ஆராய்ச்சிவல்ல, அறிஞர் பல ஆண்டுகளின் முன்னரேயே கண்டித்துள்ளார்கள். வெவ்வேறு மக்கள் கலப்பதால் புதிய சாதியினர் தோன்றுவது போல, மொழிகள் கலப்பதாலும் புதிய மொழிகள் தோன்றுகின்றன. ஒரு மொழி மாறுபட்டு வேறு மொழியாவதை மக்கள் விரும்பாவிடில் அவர்கள் தமது மொழியை பிற மொழிக் கலப்பின்றி வழங்குதல் வேண்டும்.

பழைய இந்தி, பாரசீக, அரபு, துலுக்குச் சொற்களை ஏற்று உருதுவாக மாறிற்று. பின்பு உருதுவினின்று பாரசீக, அரபு, துலுக்குச் சொற்களை நீக்கி விட்டு இக் கால இந்தி எழுந்தது. சில ஆண்டுகளின் முன், மிக்க வடமொழிக் கலப்போடு வழங்கிய தமிழ் வடசொற்களை உதறிவிட்டுத் தனித்தமிழாக மாற்றமடைகின்றது. தமிழ்நாட்டிலே ஒரு கூட்டத்தினர், வட சொற்களைத் தமிழுடன் கலப்பதே தமிழ் வளர்ச்சிக்கு ஏற்றதெனச் சொல்லிக்கொண்டு தமிழோடு வடசொற்களை உருமாற்றமின்றிக் கலந்து வழங்குகின்றனர்.

---

Even such languages as Telugu, Canarese and Malayalam are merely offshoots of their Tamil Mother. Some scholars have fancied Telugu and other so calleb Dravidin languages are quite independent of Tamil. This is the old song of grown up children turning proud and disowning all relationship to their ancestry. If all Sanskrit words and derivatives as eleminated from these languages are taken the residue of words left will be found ot be ancient Tamil words, now considered obsolete, or found in the poetry of by gone days.

South Indian research V.I. I-Rev. J. LAZARUS. B.A.D.D

பழைய இந்தி, உருது, இந்தி மொழிகளாகப் பிரிந்தது போல, இன்னும் சில காலத்தில் தமிழ், தனித் தமிழ், வடமொழித் தமிழ் என இரண்டாகப் பிரிந்து வளர்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை. இந் நிலையில் இந்தியும் தமிழ் நாட்டில் வந்துவிட்டால் தமிழ், இந்தித்தமிழ் என இன்னொரு கிளையும் விடலாம். இவை போன்ற அடிப்படையான கருத்துக்களை விளக்கும் பொருட்டு இந் நூல் வெளிவருகின்றதாகும்.

***"பல்லுயிரும் பலவுலகும்***
***படைத் தளித்துத் துடைக்கினுமோர்***
***எல்லையறு பரம் பொருள் முன்***
***இருந்தபடி இருப்பது போல்***
***கன்னடமுங் களி தெலுங்குங்***
***கவின் மலையாளமுந் துளுவும்***
***உன்னுதரத் துதித் தெழுந்தே***
***ஒன்றுபல ஆயிடினும்***
***ஆரியம்போல் உலகவழக்***
***கழிந் தொழிந்து சிதையாவுன்***
***சீரிளமைத் திறம் வியந்து***
***செயன் மறந்து வாழ்த்துதுமே"***

- *மனோன்மணீயம்*

சென்னை,
20.7.1948.

*ந.சி.கந்தையா*

# திராவிட மொழிகளும் இந்தியும்

**திராவிடர் யார்?**

CÁº Põg]¦µzu¨ ¤Ó¨¢h©õPUöPõs hÁ. B v ø \ Á ¨ ¤µõ©n S»zvÚº. uªÌ, \©¸¢ Gß Ý ® C¸ ö©õÈ¾® ÁÀ¾|º. CÁº Põg]¦µz¾Ò S©µ¢P¢mh® Gß Ý ® ÷Põ°½À Aº¢PõPC¸¢uõº; ]Á\[Pµ \[Qøu Gß Ý ® Áh©õÈ~›ø»z uÊÂ P¢u¦µõn® Gß Ý ® ~›ø»¨ £õiÚõº. CvÀ 10346 £õh¢¢ÒÍ Ú. P¢u¦µõn®•¸PU Ph¢ßö£¸©¢¢GkzxUTÖQß Óx Cx ö£¸® £õ¾® ¯õÌ¨ £õn z¾Ò B »¯¢B s k÷uõÖ® £i zx¨ ö£õ¸Òö\õÀ»¨ £mkÁ¸Qß Óx C¢~›À £¢¢µõ® ~›ØÓõs iß ©¢¢\´¯¨ £mhõUS®.

13 ÷\UQÇõº

÷\UQÇõº SßÓz y ›÷» ÷ÁÎ õÍº S»zvÀ ¤Ó¢R. CÁ›ß C¯¢¢¯º A¸s ö©õÈz÷uÁº. ÷\UQÇõº Gß £x ÷ÁÍ õs ©µ¤Úß J¸ Si¨¢£¯º. A¸s ö©õÈz÷uÁµõQ¯ CÁº ÷\UQÇõº S»zuÁº B u¼ß S»¨¢£¯µõ÷»÷¯ A ø ÇUP¨ £¢µõ°Úº. CÁº AÚ£õ¯ ÷\õÇß Gß Ý ® Aµ\ Û ß ©¢õPC¸¢uõº. CÆÁµ\ß Q¤.1064&US® Q¤. 1113&USª øh¨B m]¢R. AUPõ»zÀ©¢¢£x® Â ¸ ®¢\Ú ~»õQ¯ ^ÁP¢uõ©o ø¯ ¨ £¢¢Á¢uõºPÒ

A uÚ õÀ Aµ\ÝUŠ® ©ÓŠÐ ø\Ú©ü £Ø
Es hõÁõº Ø BP-Á ÷\ÚÇõº ]¢Äõ©oS¢©õÓõP©U
PÒ £¾®£iö£¹ ¦µõn ® GßÝ ® ¬ø»aö\´ÛÓ. ö£¹
¦µõn ® ö\õØÄøÁ ö£õ¸mÓô\Ô¢u ¬À. AUPõ»zÀ
ø \Á Ai ¯õºPøÍ ¨ £ØÔßÚ£µ®£øµ¯õPÄ® ¤ÓÁÔ®
Á Ç[ Q¯ Áµ»õÖPøÍ GÀ»õ® C¯ßÓÁøu öuõSzx CÁº
ö £¹ ¦µõn zøuaö\´ Õº GÚ Â Í [ SQßÓx ö£¹
¦µõn zÛSz v¸ zöuõs hº ¦µõn ® Gß £x® Cßö Úõ¸
ö £¯º. CvÀ 4286 £õhÀPÒ Ú. ©øÓ¯ ¦µõn [PÒ
Á hö©õÈ¬ÀPÎ ¼ ¢x ö©õÈö£¯ºUP £mh øÁGÚ ¨£k
Qß ÓÚ CLx AÆÁõÔÀ»õø© P¸zvØöPõÒÍzUPx.

14. JÍøÁ

JÍ ø Á Gß Ý ® ö£¯¸hßC¸ ÷ÁÖ Põ»[PÎ À C¸
ö £s ¦»ÁPÒ ÁõÌ¢uõºPÒ. AÁºPÒ J¸Áº \[ P
Põ»zÁº. P®£ßPõ»zÀ JÍøÁ¯õº Gß Ý ® ö£¯¸hß
C ß ö Ú õ¸Áº ÁõÌ¢uõº. CßÖ £ÇÛ¢uõº £¾® B zv' i ,
ö PõßøÓÄ£%x øµ, |ÀÁÈ • u¼¯ ¬ÀPøÍ aö\´uÁ
C Á ÷µ¯õÁº. CÁº ªP• xø©ÁÍ® Áøµº ÀÁõÌ¢uÁº B uÀ
÷ Á s k ®. JÍøÁ Gß Ý ® ö\õÀ CßÖ • v¯ÁÍ Gß Ý ®
ö £õ¸Òu ÁuõÀ CLx AÔ¯¨£Sx JÍøÁ¯õº ö\´u
¬ÀPøÍ ÷©À|õmiÄ® ö£x® £õµõmi AøÁPøÍ
B [ Q»®, ö\º©Û¯®, hfiõÈPÎ À ö©õÈ
ö £¯ºzxÒÍõºPÒ.

*சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் ஔவையார் இருந்தார் என்னும் கன்னபரம்பரைக் கதையுண்டு. கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியவரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் ஔவையார் ஒருவார் இருந்தாராயின் அவர் இன்னொரு ஔவையார் ஆகலாம்.*

15 P®£º

P®£ß¤Ó¨ ¦, ÁÍ º¨ ¦ • u¼¯ Áµ»õÖPÒ©øÓÁõ
º ¸ ¢uÚ . P®£ |õmiØÓõ¢ ©¦CÁ¸ USUP®£ßGß Ý ®
¦ø»¯º ÁÇ[QÖ GÚUP¸u¨ £Rx ¤Øø»õzÁºPÒ
] » º P® ¦ Gß £øP®£® £¯ GÚ ¨ ö£õ¸ÒöPõs kP®£ß
Gß Ý ® ö£¯ºUPõµn zøu Â Í UPUPØ£øUPøuPÒ £»
¦øÚ¢uõºPÒ. P®£ß PõÎ º ß A¸øÍ ¨ ö£ØÖ
PÂ £õk® vÓø© Aø hÁß Gß Ý ® PøuÁÇ[ SQßÓx
C uÚ õÀ, P®£ß PõÎ ø¯US»öu´ Á©õPU öPõs k

Á È £mhõß GÚ |õ® E´ÔÁõ®. P®£ÝSU
C¯ØõPÁ PÂ£õk® B ØÓÀEs hõ°¸zuÀ÷Ás k®.
A Á ø Ú U Ps h ©ÈÛPõÎ °ß ÁµzuÚõÀ A Áß A Æ
Á õØÓ ø¨ ö£Øõß GÚ {øÚzuõºPÒ B Põ®. P®£ÝÁ
\ø h¯ ¨£ ÁÒÍ À Gß Ý ® ÷ÁÍ õs öÁÀÁº J¸Áº B uzx
Á ¢uõº. P®£Û ß£õhÀPÍ ® ©ÛuÁ¸ ®
Á ß ø © ² ø h¯ÚP®£ß£õmøh ¨ ¦Pu¦PÒCÀø».
P®£º ö\´ u ÀPÒ Cµõ©õ¯n®, \hÈ£º A¢uõv,\µì Áv
A ¢uõv, HÖµÊ£x• uÀ¯Ú

16. JmhUThu

J mhUTzuõ\[ S¢u ©µ¢Úº.CÁ›ß ¤Ó¨ ¦ ÁÍ º¨ ¦
• u¼¯Ú AÔ¯ ¨£ hÂÀ» CÁº P®£º Põ»zuÁº;
C µõ©õ¯ n® Ezuµ Ps h® ö\´ÁÁ CÁº ö\´ u ÀPÒ
uUP¯õP´ £µo , "DmiGÊ£x • u¼¯ÚCÁº öÁmiSÂU
P¨£mh ÌPÂuø»Pøí ][PõÚ©õPA kUQA uß
«v¸ ¢x Dmi GÊ£x£õiÚõº Gß Ý ® J¸ Pøu ÁÇ[
S Qß Óx A uØSa\õßÓõP´ £õhÀJßÖ® Põn ¨£kQÓx
C Æ Áµ»õÖöÁÖ[ PÆ£ØÁ¯¯ßG÷ÁÓÀ CÆÁµ»õÖ
• ØPõ»zÁß Pøuö\õÀ¾® ÷£õUPÂÍ [ QUöPõÒÁuØS
HØÓ |À» Gkzx UPõmhõS®.

17. ¦PÇ

¦PÇ\[ PÀ£mSA s ø©ºÔPí zy›Ø
¤Óõ¢º. CÁ›ß uõ´ u¢øu u¯ø¨ £Ø¯õx® AÔ¯ ¨
£ hÂÀ» CÁº ÷ÁÍ õÍ ÁS¨ Ø£Æ\º¢ÁöµÚUP¸u¨
£kQõº. öÁs £õ¨ £õkÁÀ CÁº vÓø© ö£¯Ðº.
CÁ µõØ£õh ¨£mh |Í öÁs £õ ªPÄ® ö\õØ\ÁÁ ö\Ô¢ux.
¦PÇ¦Ä, JmhUTuP®£ß JÍ øÁ¯õº • u¼÷¯õº
J ÷µ Põ»zÁº GÚ ¨£kQÓ Úº.

• UQ¯ P͡õ»USÔ¨ ¦PÒ

\[ PPõ»® ]Ôx HÚuõÇQ• .1000 • uÀ Q¤. 300 Áøµ

| | |
|---|---|
| ö uõÀP õ¨¤¯® | Q.• . 350 |
| \[ P¡ ÀPÒ | Q.• . 350 & Q¤. 300 |
| v¸ USÓÒ | Q.• . 100 |
| ] » ¨£vPµ® | Q.¤. 180 |
| ©o©ÊP | Q.¤. 180 |
| C » [ ø PUP¯ÁS | Q.¤. 173 & 195 |
| ÷\ µß ö\[ SmÁ | Q.¤. 173 & 195 |
| v¸ | õÄUP_ | Q.¤. 7® ¡ ØÓõs k |
| v¸ b õÚ®£¢ | Q.¤. 7® ¡ ØÓõs k |
| _¢uµº | Q.¤. 9® ¡ ØÓõs k |
| ] ¢uõ©o | Q.¤. 9® ¡ ØÓõs k |
| ' Í õ©o | Q.¤. 9® ¡ ØÓõs k |
| E u¯nßøu | Q.¤. 9® ¡ ØÓõs k |
| £mÈÚ | Q.¤. 10® ¡ ØÓõs k |
| A ª u\ õPº | Q.¤. 1095 & 1113 |
| A i ¯õºUS|À»õº | Q.¤. 1100 & 1141 |
| P®£º | Q.¤. 12® ¡ ØÓõs k |
| J mhUS | Q.¤. 12® ¡ ØÓõs k |
| £Á¢ Û Áº | Q.¤. 12® ¡ ØÓõs k |
| | ®¤v¸ ÂøÍ ¯õhÀ | Q.¤. 12® ¡ ØÓõs k |
| CÍ ®§n º | Q.¤. 12® ¡ ØÓõs k |
| ÷ £µõ]¯º | Q.¤. 12® ¡ ØÓõs k |
| | a] Ú õºUQÚ¯º | Q.¤. 12® ¡ ØÓõs k |
| £©¸P | Q.¤. 12® ¡ ØÓõs k |
| A vÃ µµõ© £õs i¯ß | Q.¤. 16® ¡ ØÓõs k |
| Â À¼ ¦yõº | Q.¤. 16® ¡ ØÓõs k |
| A ¸ n Q› | õu | Q.¤. 16® ¡ ØÓõs k |
| C µmøh ¯º | Q.¤. 16® ¡ ØÓõs k |
| PõÍ÷©P ¦Á | Q.¤. 16® ¡ ØÓõs k |
| uõ ² ©õÚÁº | Q.¤. 1608 & 1644 |
| Ã µ©õ• ÛÁº | Q.¤. 1680 & 1746 |
| C µõ©¼ÁõªPÒ | Q.¤. 1823 & 1874 |
| ÷ £µõ]¯º _¢uµ®¤À | Q.¤. 1855 & 1907 |
| hõUhº ÷£õ¨ø£¯º | Q.¤ . 1820 & 1907 |

❋ ❋ ❋


# நமது நாடு

# முன்னுரை

"**நமது நாடு**" என்னும் இந்நூல் சிறுவர் தமிழ் மக்களின் வரலாற்றைக் கற்று அறிந்துகொள்ளும் முறையில் சுருங்க எழுதப்பட்ட தொன்றாகும். இதன்கண் யாம் கூறியுள்ள ஒவ்வொன்றுக்கும் தக்க சான்றுகள் உள்ளன. அவைகளை இப் பொருள்பற்றிக் கூறும் விரிந்த நூலாகிய "தமிழ் இந்தியா"விற் காண்க. ஆதிமக்கள் ஒரே வகையினர். அவர் சமயம் ஒன்று, மொழி ஒன்று என்னும் கொள்கைகள் வலிபெற்று வருகின்றன. மேல்நாட்டு ஆராய்ச்சி அறிஞர்களின் ஆய்வுகளை ஒருங்கு வைத்து ஆராயுமிடத்து அவ்வாதி மக்கள் தமிழரே என நன்கு தெளிவாகின்றது. இது மிக வியப்புக் குரிய தொன்றாகும். ஆராய்ச்சி நூலை இளைஞர் எளிதில் கற்று விளங்கிக் கொள்ளமாட்டாதவர்களாவர். ஆகவே ஆராய்ச்சியிற் கண்ட முடிவுகள் வரலாறுபோலத் தொடர்புபடுத்தி எழுதப்பட்டிருக்கின்றன.

*"திருமலர் மணமென வொருமையின் மல்கி*
*எண்ணில் பொழிற்பயிர் பண்ணிக் காக்கும்*
*ஒப்பில் பெருமை மெய்ப்பொருள் அன்பு*
*பாங்கி னிலைபெற் றோங்குந் தமிழகத்*
*தாறறி வுடைமைப் பேறுறு மக்கள்*
*முன்னர்த் தோன்றி மன்னிக் கெழுமி*
*இமிழிய லொலிசேர் தமிழ்மொழி பேசி*
*மண்ணிற் பலவிட நண்ணிக் குடியிருந்*
*தவ்வவ் விடத்துக் கொவ்விய வண்ணம்*
*கூற்று நடையுடை வேற்றுமை யெய்தி*
*பற்பல வினப்பெயர் பெற்றுப் பெருகினர்."*


சென்னை,
9-9-1945. *ந.சி.கந்தையா*




இப்படத்தில் வளைகோடிட்ட பகுதி முற்காலத்தில் தெற்கே கிடந்த நிலப்பரப்பைக் குறிப்பது. அம்புக்குறிகள் மக்கள் பிரிந்துசென்ற வழிகளைக் குறிப்பன. தமிழ் நாட்டினின்றும் பிரிந்து சென்று வடதுருவ நாடுகளிற் றங்கிய மக்கள் ஆரியரானார்கள். இவர்கள் பின்பு மத்திய ஆசியாவிற் றங்கி இந்திய நாட்டை அடைந்தார்கள்.



சின்ன ஆசிய மக்களின்
தந்தைக் கடவுள்



சிரியா நாட்டிற் கிடைத்த தந்தைக் கடவுளின் வடிவம்

# 1

# நமது தாயகம்

நாம் எல்லாரும் தமிழர்; நாம் நம்மைப்பற்றி அறிதல் வேண்டும்; நம் நாட்டைப்பற்றியும் அறிதல்வேண்டும்; வேண்டுமாயின் பின்பு மற்ற நாட்டவர்களைப்பற்றி அறியலாம்.

தமிழர், உலகில் மிகப் பழைய சாதியினர். தமிழகத்தினின்றே உலகின் பல பாகங்களுக்கு நாகரிகம் பரந்து சென்றது. இதனை மேல்நாட்டு அறிஞர் சிலர் நன்கு ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். இவ்வாறு கூறுதல் பலருக்கு வியப்பைத் தரும். இப்பொழுது தமிழர் உலகில் பெரிய சாதியினராகக் காணப்படவில்லை அல்லவா? இதுவே அவ் வியப்பிற்குக் காரணமாகும். வறியவர் செல்வராதலும் செல்வர் வறியவராதலும் உலக இயல்பு. ஒரு காலத்தில் ஒருவரின் பின் ஒருவராகச் சாதியினர் பலர் உயர்நிலை அடைந் திருந்தனர்; பின்பு வீழ்நிலை அடைந்தனர். வீழ்நிலை அடைந்த சாதியாருள் தமிழரும் ஒருவர்.

மற்றைச் சாதியாரின் வரலாற்று நூல்கள் பல இருக்கின்றன. தமிழரின் வரலாறு கூறும் நூல்கள் பல வெளிவரவில்லை. ஆகவே நாம் நம்மைப் பற்றிய வரலாறுகளை எளிதில் அறிய முடியவில்லை. இப்பொழுது நமது நாட்டைப் பற்றிச் சிறிது படிப்போம்.

பூகோளப் படத்தில் இந்தியாவைப் பாருங்கள். அதன் தென்பகுதி யில் கன்னியாகுமரி என்னும் முனை இருக்கின்றது. அதற்குத் தெற்கே பெரிய கடல் ஒன்று அலைமோதுகின்றது. அதற்கு இக்காலத்தில் இந்துமாக் கடல் என்று பெயர். நாம் வாழும் உலகம் தோன்றி எண்ணில்லாத காலம் ஆகின்றது. இவ்வளவு எண்ணில்லாத காலத்துள், இது பல மாறுதல்கள் அடைந்து வந்துள்ளது. இந்துமாக் கடல் தோன்றுமுன் அங்கே பெரிய நிலப்பரப்பு ஒன்று இருந்தது. அது நாவலந் தீவு எனப்பட்டது. ஐரோப்பிய மக்கள் அதற்கு **லெமூரியா** எனப் பெயர் இட்டுள்ளார்கள். **'கொந்துவானா'** என்பதும் அவர்கள் அதற்குக் கொடுத்த மற்றொரு பெயர். இதன் நடுவில் மேருமலை நின்றது. அதன் ஒரு கொடுமுடியே இலங்கைத் தீவு. நாவலந்தீவு அல்லது லெமூரியா இப்பொழுது வடக்கே ஆசியாக் கண்டம் இருப்பது போலத் தெற்கில் இருந்தது.

நிலவுருண்டை ஒரு காலத்தில் அனற் பந்து போல இருந்தது. இதனுள் இன்றும் நெருப்பு இருக்கின்றது. இந் நெருப்பு இடையிடையே பூமியைக் கிழித்துக்கொண்டு வெளியே கிளம்புவதுண்டு. அப்பொழுது அது உள்ளே இருந்து கல்லையும் மண்ணையும் மேலே கக்கும். அதனால் அவ் வெடிப்புகளின் வாய்களில் பெரிய மலைகள் உண்டாகும். இவ்வாறு பூமியினின்று;ம நெருப்பு வெளியே வரும் இடங்கள் எரிமலைகள் எனப் படும். எரிமலைக் குழப்பங்களால் சில சமயங்களில் தரை கடலுள் மறைந்து போகும். நாவலந் தீவில் எரிமலைக் குழப்பங்கள் பல தோன்றின. அப் பொழுது அதன் பல பகுதிகள் கடலுள் மறைந்தன. அப்பொழுது கன்னியா குமரியைத் தொடர்ந்து ஒரு பெரிய நிலப்பரப்பு நீண்டிருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் தாய்க் கடவுளை வழிபட்டார்கள். தாய்க் கடவுளுக்குக் கன்னி அல்லது குமரி என்று பெயர். ஆகவே அந்தத் தரைக்குக் குமரிநாடு என்று பெயருண்டாயிற்று. நாவலந்தீவும் அதனைச் சார்ந்த குமரிநாடுமே தமிழ் மக்களின் தாயகம் என்பதை அடுத்த பாடத்திற் படிப்போம்.

# 2

# நம் முன்னோர்

உலகிற் காணப்படும் படைப்புகள் எல்லாவற்றிற்கும் ஒரு தொடக்கம் உண்டு. அதுபோலவே மக்கட் படைப்புக்கும் ஒரு தொடக்கம் உண்டு. ஆதி மக்கள் நாவலந்தீவிலேயே தோன்றிப் பெருகினார்கள். அவர்கள் ஆதியில் தோன்றிய பகுதி இப்பொழுது சுமத்திரா, யாவாத் தீவுகள் இருக்குமிடமாயிருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஒரு தாய்தந்தையரினின்று மக்கள் பெருகத் தொடங்கினால், 1750 ஆண்டு களில் இன்றைய மக்கள் அளவு பெருகிவிடுவார்கள். இவ்வாறு மேல் நாட்டு அறிஞர் ஒருவர் கணக்கிட்டுள்ளார். மக்கள் இவ்வளவு வேகமாகப் பெருகு வார்களானால் அவர்கள் இருப்பதற்கு இவ்வுலகம் போதாமல் இருக்கு மல்லவா? மக்கள் இவ்வளவு வேகமாகப் பெருகுவதில்லை. இடை யிடையே கொள்ளை நோயும் போரும் தோன்றி மக்களின் தொகையைக் குறைத்துவிடுகின்றன.

மனிதன் உயிர்நூல் முறைப்படி விலங்கினத்தைச் சேர்ந்தவன்; விலங்குகளிலும் பார்க்க நிறைவுடையவன்; சிந்தித்து ஒன்றினைக் கண்டு பிடிக்கும் அறிவு ஆற்றல் உடையவன். மனிதனுடைய பற்களும் குடலும், காய், கனி, விதை முதலிய **தாவரப்** பொருள்களை உண்டு வாழ்தற்கேற்ற அமைப்பு உடையன. ஆதிகாலத்து மனிதர் காடுகளிற் கிடைக்கும் காய், கனி, விதைகளை உண்டனர்; சுனை நீரைப் பருகினர்; மலைத் தாழ்வாரங் களிலும் நிழல் மரங்களின் கீழும் ஒதுங்கினர்; சுருங்கக் கூறுமிடத்துக் குரங்குகளைப் போலவே வாழ்ந்தனர்.

அவர்களின் தொகை பெருகத் தொடங்கிற்று. அப்பொழுது எல்லோருக்கும் போதிய உணவு ஒரே இடத்திலேயே கிடைத்தல் அரிதாயிற்று. ஆகவே அவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு சிறிது சிறிதாக அகன்று சென்று வாழத்தொடங்கினர். அப்போது அவர்கள் நிலம், வீடு, பொருள், பண்டங்கள் வைத்துக் கொள்ளவில்லை. ஆகவே அவர்கள் தாம் சென்ற இடங்களிலேயே தங்கி வாழ்ந்தனர். முன் வாழ்ந்த இடங்க ளுக்குத் திரும்பிச் செல்லும் கட்டாயம் அவர்களுக்கு உண்டாகவில்லை. இவ்வாறு மக்கள் இவ்வுலகின் எல்லாப் பாகங்களுக்குஞ் சென்று பரவினர்.

அவர்கள் பிரியத் தொடங்கிய நடுஇடத்தில் சிலர் தங்கி வாழ்ந்தனர். அவர்கள் படிப்படியே நாகரிக வளர்ச்சி யடைந்தனர். நாகரிகம் எப்படி வளர்ச்சி யடைகின்றது? வாழ்க்கைக்கு வேண்டும் ஊணும் உடையும் பிறவும் தேடும் வகைகளினாலேயே அது வளர்கின்றது. ஆதியில் மக்கள் காடுகளிற் கிடைக்கும் காய், கனி, விதைகளை உண்டு வாழ்ந்தனர். அவை எல்லாக் காலங்களிலும் கிடைப்பது அரிதாயின. ஆகவே அவர்கள் விலங்குகளையும் பறவைகளையும் கொன்று அவற்றின் ஊனையும் உணவாகக் கொண்டனர். பறவைகளையும் விலங்குகளையும் வேட்டை யாடிக் கொல்வது எந்நேரமும் முடியாமல் இருந்தது. பின்பு அவர்கள் காட்டில் வாழும் ஆடு மாடு முதலிய விலங்குகளைப் பிடித்துப் பழக்கி வளர்த்தனர்; தமக்குக் கிடைக்கும் மற்ற உணவுகளுடன் அவைதரும் பால் முதலிய பயன்களையும் உண்டு வாழ அறிந்தனர்; பின்பு மழைபெய்யும் பருவங்களை அறிந்து தானியங்கள் விளைவித்தனர். இவ்வாறு நாகரிகம் படிப்படியாக வளர்ந்தது.

இவ்வாறு நாகரிக வளர்ச்சியடைந்த மக்கள் நாவலந் தீவிலே வாழ்ந்தார்கள். எரிமலைக் குழப்பங்களால் நாவலந் தீவின் பல பகுதிகள் தீவுக் கூட்டங்களாக மாறின. அப்பொழுது இம் மக்களுள் பலர் கூட்டங் கூட்டமாகத் தனித்து வாழ நேர்ந்தது; பெரும் பகுதியினர் வடக்கு நோக்கிச் சென்றனர். நாவலந் தீவின் வடக்கே குமரிநாடு இருந்ததென முன் பாடத்திற் படித்தோம். குமரிநாட்டில் வாழ்ந்த மக்கள் திருந்திய நாகரிகம் அடைந் திருந்தார்கள்.

# 3
# குமரி நாடு

குமரி நாட்டிலே குமரி, பஃறுளி, பேராறு முதலிய ஆறுகள் பாய்ந்தன. குமரிக்குன்று, மணிமலை முதலிய மலைகள் இருந்தன. **தெங்குநாடு, பனைநாடு, பெருவளநாடு** முதலிய நாடுகள் விளங்கின. நாடு மிகச் செழிப்புற்றிருந்தது. மக்கள் தமிழ்மொழியை வழங்கினார்கள். அந்நாட்டை ஒருகாலத்தில் **செங்கோன்** என்னும் அரசன் ஆண்டான். இவன் பல நாடுகளைத் தன்னடிப்படுத்திப் பேரரசனாய் விளங்கினான். இவன் தமிழில் மிகப் பற்றுடையவன். இவன், நாட்டில் விளங்கிய தமிழ்ப் பெரும் புலவர்களைத் தன் தலைநகருக்கு அழைத்தான்; தமிழ்ப் பேரவை கூட்டினான்; புலவர்களுக்கு ஊக்கம் அளித்தான். அவர்கள் அரிய தமிழ் நூல்கள் பல இயற்றினர். நாடெங்கும் தமிழ் மணம் கமழ்ந்தது.

செங்கோன் மீது பாடிய பழைய நூல் ஒன்று உள்ளது. அதற்குச் 'செங்கோன் தரைச்செலவு' என்பது பெயர். தரைச் செலவு என்பதற்குப் படை எடுத்துச் சென்று வெற்றி பெறுதல் என்று பொருள். அந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை; சில பாட்டுக்களே கிடைத் துள்ளன. குமரி நாடு ஒரு காலத்தில் நாகரிகத்தில் உச்சநிலை அடைந்திருந் தது. அப்பொழுது அந் நாட்டைச் சிறிதுசிறிதாகக் கடல் விழுங்கிற்று. கடல்கோளுக்குப் பயந்து மக்கள் வடக்கு நோக்கி ஓடிச் சென்றனர்; சென்ற மக்கள் தென்னிந்தியாவில் தங்கி வாழ்ந்தனர்.

கடல்கோளினால் தமிழரின் பழைய நாகரிகக் குறிகள் மறைந்தன. அவர்களின் நூல்களும் மாண்டன. கடல்கோளுக்குப் பிழைத்து வந்த மக்கள் தெற்கில் கன்னித் தெய்வத்தின் திருவுருவை நாட்டி வழிபட்டார்கள். அவ்வுருவம் வைக்கப்பட்ட இடம் 'கன்னியாகுமரி' என்னும் பெயர் பெற்றது. இரண்டாயிரம் ஆண்டுகளின் முன் அத்திருவுருவம் அங்குக் காணப்பட்டது. அதனை இந்தியாவுக்கு வந்து மீண்ட உரோமைப் பிரயாணிகள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

# 4

# நாவலந் தீவு

தமிழ் மக்கள், தாம் இப்பொழுது வந்தடைந்த நாட்டுக்கு நாவலந் தீவு எனப் பெயரிட்டனர். இந்தியா என்பது தமிழர் கொடுத்த பெயரன்று. அது கிரேக்க மக்கள் நமது நாட்டுக்கு இட்ட பெயர்; இந்தியா என்பதற்குச் சிந்து நதியை உடைய நாடு என்று பொருள். சிந்து என்பதைக் கிரேக்கர் ஹிந்து என்று உச்சரித்தனர். ஹிந்துவிலிருந்து ‘இந்தியா’ தோன்றிற்று. சிந்து என்பதற்குச் சிந்துவது என்பது பொருள்.

நாவலந் தீவில் முன் உண்டானது போன்ற குழப்பங்கள் நேர வில்லை. மக்கள் அமைதியுடன் வாழ்ந்தார்கள். அவர்கள் பெருகத் தொடங்கினர். பலவகைத் தொழில்கள் தலையெடுத்தன. நாடு நகரங்கள் உண்டாயின. தமிழ்நாடு முழுவதையும் ஓர் அரசன் ஆண்டான். பின்பு நாடு மூன்றாய்ப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வொரு அரசன் ஆண்டான். மேற்குக் கடற்கரையை ஆண்ட அரசனின் பெயர் சேரன். அவனாட்சிக்கு உட்பட்ட பகுதி சேரநாடு எனப்பட்டது. சேரனுக்குக் கொடி, வில்; மாலை, பனங்குருத்து. கிழக்குப் பிரிவை ஆண்ட அரசன் சோழன் எனப்பட்டான். அவன் ஆட்சிக்குட்பட்ட பிரிவு சோழநாடு எனப்பட்டது. சோழனுக்குக் கொடி, புலி; மாலை, ஆத்தி. தெற்குப் பிரிவை ஆண்ட அரசனுக்குப் பாண்டியன் என்று பெயர். பழைய அரசன் இருந்த நாடு இது ஆதலின் இது **பண்டு நாடு** எனப்பட்டது. பண்டு நாட்டை ஆண்ட அரசர்[1] பாண்டியர் எனப்பட்டனர். பண்டுநாடு பின்பு பாண்டிநாடு எனப்பட்டது. சிலர், பாண்டியர் என்பது பாரதக் கதையிற் கூறப்படும் பாண்டுவின் பெயரி னின்றும் வந்ததென்பர். பாண்டுவுக்கு முன் பாண்டியர் உளர். ஆதலின் அது பொருந்தாது.

இம் மூவேந்தரும் பேரரசர் எனப்பட்டார்கள். இவர்கள் நாடுகளில் சிற்றரசர் பலர் ஆண்டனர். இவர்கள் பேரரசர்களுக்கு அடங்கி நடந்தார்கள். சிலர் அடங்காதும் இருந்தார்கள். இக் காரணத்தினால் இடையிடையே அவர்களுக்கிடையில் போர்கள் மூள்வது உண்டு.

1. பாண்டியர் என்பதிலுள்ள இயர் என்பது ஐயர் என்பதன் திரிபு. முற்காலத்தில் கடவுளுக்கும் அரசனுக்கும் ஐயன் என்னும் பெயர் வழங்கிற்று. பண்டு ஐயன் பாண்டியனாயிற்று.

மக்கள் வாழ் இடங்களும் அதனைச் சூழ்ந்த விளை நிலங்களும் அடங்கிய பாகம் கிராமம் அல்லது ஊர் எனப்பட்டது. கிராமங்கள் பல சேர்ந்தது கூற்றம்; கூற்றங்கள் பல சேர்ந்தது நாடு. இவ்வாறு நாடு பல உட் பிரிவுகளாக்கப்பட்டுக் கிராமசபைகளால் ஆளப்பட்டது. கிராம சபைகள் எல்லாவற்றுக்கும் தலைவனாக அரசன் இருந்தான்.

அரசன் வாழும் பட்டணம் நகர் எனப்பட்டது. அரசனின் வீட்டுக்குக் கோயில் என்று பெயர். கோயிலைச் சுற்றி மதில் இருந்தது. அரண் என்பது மதிலுக்கு மற்றொரு பெயர். அரசனது வீட்டைச் சூழ்ந்து அரண் இருந்தமை யின் அது அரண்மனை எனப்பட்டது. அரண்மனையைச் சூழ்ந்து அரச குடும்பத்தினரும் அவன் கருமகாரரும் வாழ்ந்தார்கள். இவர்கள் வாழும் வீதிகளைச் சூழ்ந்து ஒன்றன் பின் ஒன்றாகப் பல வீதிகள் இருந்தன. அவ் வீதிகளில் ஆடை நெய்வோர், அணிகலன் செய்வோர் முதலிய பல தொழிலாளரும் வணிகரும் வாழ்ந்தனர். இவ்வீதிகள் எல்லாவற்றையும் சூழ்ந்து மதில் இருந்தது. அதனைச் சூழ்ந்து பெரிய அகழியிருந்தது. அது ஆழமும் அகலமும் நீர் நிறைவும் உடையது. அகழியைச் சூழ்ந்து மரங்கள் நடப்பட்டிருந்தன.

# 5

# மொகஞ்சொதரோத் தமிழர்

தென்னிந்தியாவிலே மக்கள் பெருகத் தொடங்கினார்கள். அவர்கள் வடக்கே செல்ல முடியாதபடி **தண்டகம்** என்னும் பெரிய காடு கிடந்தது. கடற்கரைப் பக்கங்களில் வாழ்ந்த மக்கள் பலர் குடியேற்ற நாடுகளை நாடிக் கடல் வழியே சென்றனர். இவ்வாறு சென்றவர்களுள் ஒரு சிலர் சிந்துநதி முகத்துவாரத்தை யடைந்தனர். அவ்வாற்றோரங்கள் மிகச் செழிப்புடையன. அங்கு இம்மக்கள் தங்கினார்கள்; ஆற்றினின்றும் நீரை வாய்க்கால்களாற் பாய்ச்சி வேளாண்மை செய்தார்கள். தானியங்கள் நன்றாய் விளைந்தன. அங்குக் குடியேறிய மக்களின் தொகை பெருகத் தொடங்கிற்று. அவர்கள் சிறிது சிறிதாகச் சிந்து நதிவெளி முழுமையிலும் குடியேறி வாழ்ந்தார்கள். இம் மக்கள் கட்டி வாழ்ந்த இரண்டு பெரிய பட்டினங்கள் மண்ணினால் மூடுண்டு நீண்ட காலம் அறியப்படாமற் கிடந்தன. அண்மையில் அந் நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அப் பட்டினங்கள், இப்பொழுது **அரப்பா, மொகஞ்சொதரோ** என்று வழங்குகின்றன. பட்டினங்கள் இரண்டிற்கும் இடையிலுள்ள தூரம் நானூறுமைல்.இரண்டு நகரங்களிலும் வாழ்ந்த மக்களின் நாகரிகமும் ஒரே வகையாகவுள்ளது. இதனால் அக்காலத்தே தமிழ் மக்கள் மிக அகன்ற இடப்பரப்பிற் குடியேறியிருந்தார்கள் என விளங்குகின்றது.

இப் பட்டினங்களில் பழந்தமிழரின் நாகரிகக் குறிகள் பல கிடைத்தன; இவைகளைக் கண்டு உலகமே வியப்படைந்தது. இக்கால மக்கள் தாமும் அவ்வகை அழகிய நகரங்களை அமைக்க மாட்டார்கள். நகரங்களின் இடையிடையே அகன்ற வீதிகள் நீளமாகச் செல்கின்றன. அவைகளை ஒடுங்கிய வீதிகள் பல குறுக்கே கடக்கின்றன. வீதிகளின் இரு பக்கங்களிலும் வீடுகள் வரிசையாகக் கட்டப்பட்டன. சூளையிட்ட செங்கற்கள் கட்டிட வேலைக்குப் பயன்படுத்தப்பட்டன. வீடுகளுக்கு ஒன்று முதல் மூன்று மாடிகள் வரையில் உண்டு. அவைகளின் முகப்புகள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடையன. வீடுகளுக்கு உள்முற்றம் உண்டு. உள் முற்றத்தே கிணறு இருந்தது. எல்லா வீடுகளுக்கும் குளிக்குமறை இணைக்கப்பட்டிருந்தது. உள் முற்றத்தே ஆடு மாடுகள் கட்டப்பட்டன. வீட்டிலிருந்து வீதியிலுள்ள சாக்கடை வரையும் வாய்க்கால்கள் இருந்தன.

இவை செங்கற்களாற் பதிக்கப்பட்டிருந்தன; கழிவு நீர், வாய்க்கால் வழியே சென்று வீதியிலுள்ள சாக்கடையில் விழுந்தது. சமைப்பதற்குத் தனியறை யிருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட அழகிய வீடுகளில் அக்கால மக்கள் வாழ்ந்தார்கள்.

மக்கள் ஆடை நெய்ய நன்கு அறிந்திருந்தனர். ஆடைகளுக்கு அழகிய நிறங்கள் ஊட்டப்பட்டன. குயவர் பலவகையான அழகிய மட்பாண்டங்களைச் செய்தனர். சிலவற்றிற்கு அழகிய நிறங்கள் பூசப் பட்டன; அவைமீது செடி, கொடி, பறவை, விலங்கு முதலிய ஓவியங்களும் எழுதப்பட்டன. வீடுகளிற் பயன்படுத்தும் ஏனங்கள் பல செம்பு வெண்கலம் முதலிய உலோகங்களாற் செய்யப்பட்டன. ஆடவர் முகத்தை மழித்துக் கொண்டனர். மழிக்கும் கத்திகள் வெண்கலத்தினாற் செய்யப்பட்டன. சிறுவர் பலவகை விளையாட்டுப் பொருள்களை வைத்து விளையாடினர்.

மகளிர், பொன் வெள்ளி வெண்கலம் செம்பு முதலியவைகளாற் செய்த அழகிய நகைகளை அணிந்தனர். முகத்துக்கு மணப்பொடி பூசினர். நெற்றியில் சாதிலிங்கப் பொட்டிட்டனர்.

வழிபாட்டிற்குரிய கடவுளரில் சிவன், அம்மன் என்போர் தலைமை பெற்றிருந்தனர். அவர்களுக்குக் கோவில்கள் இருந்தன. கோவிலின் பக்கத்தே படிக்கட்டுகளுடைய கேணியிருந்தது. ஆலயங்களுக்குச் செல்வோர் இதில் நீராடினர். கேணியின் பக்கத்தே அறைகள் பல இருந்தன. இவைகளில் நீராடுவோர் தங்கினர். கேணியின் அடியில் ஒரு புறத்தில் பெரிய துவாரம் ஒன்று விடப்பட்டிருந்தது. இதனால் கேணியின் நீர் இடை யிடையே வெளியே போக்கப்பட்டது. அத்துவாரத்தின் கீழ் பெரிய மதகு இருந்தது. கேணியின் பக்கத்தே மூன்று கிணறுகள் இருந்தன. இவைகளி லிருந்து இறைக்கப்படும் நீரால் கேணி நிரப்பப்பட்டது. இங்குக் கூறப்பட்ட வற்றால் அக்கால மக்கள் எவ்வாறு நாகரிகம் அடைந்திருந்தார்கள் என்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

# 6
# எகிப்தியர்

தமிழ் நாட்டினின்றும் புறப்பட்ட இன்னொரு கூட்டத்தினர் மேற்கு நோக்கிச் சென்றனர்; அவர்கள் செங்கடல் வழியாக வட ஆப்பிரிக்காவை அடைந்தனர். அங்கு என்றும் நீர் வற்றாத ஆறு ஒன்று உண்டு. அதற்கு நீல ஆறு(நைல்) என்று பெயர். அதன் பள்ளத்தாக்குகள் பயிர் இடுவதற்கு மிகவும் வாய்ப்புடையன. இவ் வாற்றோரங்களில் வந்து அக்கூட்டத்தினர் தங்கினர்; நாடு நகரங்கள் உண்டாயின. அங்கு எழுந்த நகரங்களுள் மெம்பிஸ், தீப்ஸ் என்னும் பட்டினங்கள் சிறந்திருந்தன. அம்மக்கள் குடியேறிப் பெருகிய இடம் எகிப்து எனப் பெயர் பெற்றது. எகிப்தில் வாழ்ந்த மக்கள் எகிப்தியர் எனப்பட்டனர்.

எகிப்தியர் பைபிரஸ் என்னும் ஒருவகைத் தாளில் எழுதினார்கள். அவர்கள் நூல்களில் அவர்கள் பண்டு நாட்டினின்றும் வந்து குடியேறி னார்கள் எனக் கூறப்படுகின்றது. பண்டு என்பது பாண்டிநாட்டின் பழைய பெயர் என்று முன்பாடம் ஒன்றிற் படித்தோம் அன்றோ?

ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் எகிப்தியர் தென்னிந்தியாவோடு வாணிகம் நடத்தினார்கள். குரங்குக்கும் யானைத் தந்தத்துக்கும் அவர்கள் மொழியில் வழங்கிய பெயர்கள் இன்றும் தமிழில் காணப் படுவன. அவை கவு, எவு என்பன. இவை கவி, இபம் என்னும் தமிழ்ச் சொற்களின் திரிபுகள். தமிழர்களிடையும் பழைய எகிப்தியரிடை யும் காணப்பட்ட பழக்கவழக்கங்கள் பெரும் பாலும் ஒரே வகையின. அவர்கள் எழுதுவ தற்கு ஓவியங்களைப் பயன்படுத்தினர். ஓவியங்களே தமிழ்மக்களின் எழுத்துக்களாக ஒரு காலத்தில் இருந்தன. அவர்கள் தினமும் பருகும் ஏனங்களைச் சுத்தஞ் செய்தார்கள். குருமார் தோய்த்துலர்ந்த ஆடையுடுத்தனர்; ஒவ்வொரு மூன்றாவது நாளும் உடல் முழு



எகிப்திய மக்கள் பயிருக்கு நீர்ப் பாய்ச்சுவதைக் காட்டும் ஓவியம். கி.மு. 1250 வரையில் வரையப் பட்டது.

வதையும் மழித்துக் கொண்டனர்; காலில் மிதியடி தரித்தனர்; இடபத்துக்கும் ஞாயிற்றுக் கடவுளுக்கும் பூசை செய்தனர்; விரதமிருந்தனர்; மரணத்துக்குப்பின் உயிர் நிலைபெறுவதை நம்பினர். இறந்தவர்களை அடக்கம் செய்யும்போது உணவும், அவர்கள் பயன்படுத்திய பொருள்களும் பக்கத்தே வைக்கப்பட்டன. எகிப்தியர் வழிபட்ட தாய்க்கடவுளுக்கு ஊர்தி சிங்கம். எகிப்தியரின் மரக்கலங்கள் இன்றும் இந்திய நாட்டில் காணப்படுவன போன்றவை.

எகிப்திய மக்கள் ஆறாயிரம் ஆண்டுகளின் முன் பெரிய கூர்நுதிக் கோபுரங்களைக் கட்டினார்கள். இவை அரசரின் உடலை அடக்கஞ் செய்வதற்காகக் கட்டப்பட்டன. இவை இன்றும் உலக வியப்புகளுள் ஒன்றாக விளங்குகின்றன. இவர்களின் நாகரிகம் மிகப் பழமையுடையது.

# 7
# சுமேரியர்

மேற்கு ஆசியாவிலே தைகிரஸ் யூபிரதர்ஸ் என்னும் இரண்டு ஆறுகள் ஒன்று சேர்ந்து பாரசீகக் குடாக்கடலுள் விழுகின்றன. அந்த ஆறுகளின் ஓரங்கள் மிகச் செழிப்பு வாய்ந்தன. அங்குக் கூலப் பொருள்கள் நன்கு விளையும். தமிழ் நாட்டினின்றும் வந்த மக்களின் ஒரு கூட்டத்தினர் அங்குத் தங்குவாராயினர். முன்னர் கூறப்பட்ட சிந்து, நீல ஆற்று ஓரங்களிற் போலவே அங்கும் மக்கள் பெருகினார்கள்; நாடு நகரங்கள் உண்டாயின. அங்கு வாழ்ந்த மக்களுடையவும் தமிழருடையவும் நாகரிகங்கள் எல்லாவகையாலும் ஒரே வகையின. அங்குச் சென்று குடியேறிய மக்களின் தலைவர்கள் உவண்ணா, ஓடக்கோன் என அவர்கள் வரலாறுகளிற் காணப்படுகின்றது. உவண்ணா என்னும் பெயர் தமிழரின் ஒரு பிரிவின ராகிய துளுவ மக்களின் இடையே வழங்குகின்றது. அதற்குப் பூவின் அண்ணன் என்பது பொருள்.

அம் மக்கள் குடியேறி வாழ்ந்த நாட்டுக்குச் சுமேரியா என்று பெயர். சுமேரியாவின் தலைநகரம் சுசா. அவர்கள் ஆற்று நீரை வாய்க்கால் வழியே வயல்களுக்குப் பாய்ச்சி வேளாண்மை செய்தனர்.

மொகஞ்சொதரோ மக்கள் வழிபட்ட பெரிய கடவுளுக்கு ஆண் என்று பெயர். சுமேரியரும் தமது பெரிய கடவுளை ஆண் என்னும் பெயர் கொடுத்து வழிபட்டனர். ஆண் என்பதிலிருந்தே ஆண்டவன் என்னும் பெயர் வந்திருக்கலாம். அவர்களுடைய தாய்க் கடவுளின்பெயர் அம்மா. நம் தாய்க் கடவுளை நாம் இன்றும் அம்மன் என வழங்குகின்றோம்.

குலநூலார் சுமேரியரும் தமிழரும் ஒரு பொது உற்பத்தியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறுகின்றனர். இதற்கு, இரு மக்களின் நாகரிகம், மொழி, எழுத்து ஆகியன சான்று பகர்கின்றன.


தைகிரஸ், யூபிரதர்ஸ் என்னும் ஆறுகளின் வடக்கேயுள்ள நாடுகளில் இன்னொரு மக்கட் கூட்டத்தினர் குடியேறி வாழ்ந்தனர். அவர்கள் தமது நாட்டுக்கு சால்தியா எனப் பெயர் இட்டனர். சால்தியா என்பது சோழ தேசம் என்பதன் திரிபு. சோழ நாட்டினின்றும் வந்து குடியேறிய மக்கள் தமது தாய் நாட்டின் பெயரையே குடியேற்ற நாட்டிற்கும் இட்டு வழங்குவாராயினர்.


பபிலோனியரின்
தந்தைக் கடவுள்

பிற்காலங்களில் சால்தியாவும் சுமேரியாவும் இணைக்கப்பட்டுப் பபிலோனியா என்னும் பெயர் பெற்றன பபிலோனியா என்பதற்குப் பகற் கடவுளின் நாடு என்பது பொருள். அது முன்னைக் காலத்தில் தமிழ் மக்களால் பவேரு என வழங்கப்பட்டது. புத்தரின் பழம் பிறப்பைக் கூறும் சாதகக் கதைகள் என்னும் பழைய நூல் ஒன்று உண்டு. அதில் பவேருவைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அக் காலங்களில் இந்திய மக்கள் மரக்கலங்கள் வழியாகப் பவேருவுக்குச் சென்றார்கள். அங்குப் பறவைகளைக் காண்பது அருமை. இந்திய வணிகர் ஒருமுறை காகம் ஒன்றைப் பவேருவுக்குக் கொண்டு சென்றனர். அந் நாட்டு மக்கள் அதன் வடிவைக் கண்டு அதனைக் கொண்டாடினார்கள். அடுத்த பயணத்தில் அவர்கள் நன்றாய் ஆடும் மயில் ஒன்றைக் கொண்டு சென்றனர். அதன் அழகைக் கண்ட மக்கள் காக்கையின் வடிவினால் வியப்படையவில்லை. இவ்வாறு பவேரு சாதகத்திற் காணப்படுகின்றது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் பவேருவில் கடை வைத்து வாணிகம் செய்த தமிழர் ஒருவரின் கணக்கு சூளையிட்ட களிமண் ஏட்டில் காணப்படுகிறது. அத் தமிழரின் விலாசம் மு. ர. சு. வ. ரா. பபிலோன் மக்கள் கனத்த களிமண் தட்டுகளில் குச்சிகளால் எழுதினார்கள்; எழுதியபின் அவைகளைச் சூளையிட்டுக் காப்பாற்றி னார்கள். இவ்வாறு களிமண் ஏடுகளில் எழுதப்பட்ட நூல்கள் பல பபிலோன் நாட்டிற் கண்டுபிடிக்கப்பட்டன.

# 8


# மேற்கு ஆசியாவிற் குடியேறிய வேறு தமிழர் சிலர்



அராபியர் யூதரின் சிவலிங்கங்கள்

தமிழ் நாட்டினின்றும் சென்ற வேறு மக்கட் கூட்டத்தினர் சிலர் மேற்கு ஆசியாவின் வெவ்வேறு இடங்களிற் குடியேறினார் கள். இவர்கள் பாலஸ் தீனியர், பொனீசியர், சீரியர், அசீரியர், சின்ன ஆசிய மக்கள் என்போர். இவர்கள் நாடுகளைப் படத்தில் பாருங்கள். பாலஸ்தீனியர், யூதர் அல்லது எபிரேயர் எனவும் படுவர். இவர்கள் தமிழர்களைப் போலவே பிறப்பு இறப்பினால் தீட்டு உண்டு என்றனர்; தீட்டுக்காலங்களில் அவர்கள் ஆலயங்களுட் செல்வதில்லை; தூய பொருட்களைத் தீண்டுவதும் இல்லை. அவர்கள் மரங்களின்கீழ் சிவலிங்கங்களை வைத்து வழிபட்டனர். சியன் என்னும் கடவுளையும் அவர்கள் வழிபட்டார்கள். சிவன் என்பது அம்மக்களின் மொழியில் சியன் எனத் திரிந்து வழங்கிற்று. இடபத்தையும், பாம்பையும் அவர்கள் வழிபட்டார்கள். நமது ஆலயங்களிலும் இடபம், பாம்பு முதலிய சிலைகள் உள்ளன. இவை மாத்திரமல்ல இன்னும் அவர்களின் பழக்க வழக்கங்களும் தமிழ் நாட்டிற் காணப்படுவன போன்றன.

பாலஸ்தீனத்துக்கு மேற்பகுதியிற் குடியேறினோர் பொனீசியர் எனப்பட்டார்கள். பொனீசியா என்பது பனை நாடு என்பதன் திரிபு என்று கருதப்படுகின்றது. அங்குப் பேரீந்து எனப்படும் பனைகள் அதிகம். அவர்கள் தென்னாட்டு ஆலயங்களைப்போலவே பெரிய கோயில்கள் கட்டினார்கள். அங்கு அவர்கள் சிவலிங்கங்களை வைத்து வணங்கினார்கள். அவர்களின் எழுத்து, பிராமி எனப்பட்ட முற்காலத் தமிழ் எழுத்தினின்றும் பிறந்தது. பிராமி எழுத்து மொகஞ்சொதரோ எழுத்தினின்றும் தோன் றியது.


சிரியரின் சிவன் சிலை

பொனீசியாவுக்கு வடக்கே குடியேறிய மக்கள் சிரியர் எனப்பட்டனர். இங்கு இடபத்தின் மீது நிற்கும் சிவன் சிலைகள் காணப்படுகின்றன; சிங்கத்தின்மீது வீற்றிருக்கும் தாய்க்கடவுள் வடிவங்களும் இருக்கின்றன. இவர்களின் கடவுள் வழிபாடு தமிழரின் கடவுள் வழிபாட்டை மிக ஒத்தது. அவர்கள் நாகரிகமும் பழந்தமிழர் நாகரிகம் போன்றதே. சிரியாவுக்கு வடகிழக்கிற் குடியேறிய மக்கள் அசீரியர் எனப்பட்டனர். தமிழரில் ஒரு பிரிவினர் அசுரர் எனப்பட்டார்கள். இரணியன், சூரன் எனப் புராணங்களிற் கூறப்படுவோர் அசுரர். இவர்கள் அக்காலத்தில் சிறந்த நாகரிகமும் வலிமையும் பெற்றிருந்தனர். இவர்கள் சிவனையே வழிபட்டனர். அசுரரில் ஒரு பிரிவினரே அசீரியர் என்று கருதப்படுகின்றனர்.

சின்ன ஆசிய மக்களின் மொழி தமிழுக்கு இனமுடையதாகக் காணப்படுகின்றது. அந்நாட்டு மக்கள் சிவனையும் காளியையும் வழிபட்டனர். இடபத்தின் மீது நிற்கும் சிவன் கடவுட் சிலைகளும் சிங்க வாகனத்தின் மீது இருக்கும் தாய்க்கடவுளின் சிலைகளும் அங்குக் காணப்படுகின்றன. மேற்கு ஆசியா முழுமையிலும் வாழ்ந்த எல்லா மக்களின் நாகரிகமும் ஒரு வகையினது.


சின்ன ஆசிய மக்களின் தாய்க் கடவுள்

கிரீசுக்குத் தெற்கில் கிரேத்தா என்னும் ஒரு தீவு இருக்கின்றது. அங்கு வாழும் மக்களும் தமிழ் நாட்டினின்றும் சென்று குடியேறினோராவர். இவர்கள் தமிழர் என்றே முற்காலத்தில் மற்றவர்களால் சொல்லப்பட்டார்கள். இவர்கள் நாகரிகம் மொகஞ் சொதரோ மக்களின் நாகரிகம் போன்றது. ஸ்பெயின் தேசத்திலும் தமிழ் மக்கள் குடியேறியிருந்தார்கள். அங்கு வழங்கிய பழைய மொழி **பாஸ்க்கு** எனப்பட்டது. அது தமிழோடு மிக ஒற்றுமையுடையது. இத்தாலியில் வாழ்ந்த மக்களும் தமிழர்களேயாவர். ஒரு காலத்து இந்தியா முதல் அயர்லாந்து வரையும் தமிழர் பரவியிருந்தனர்.

# 9

# ஆரியர்

**நாலாயிரம்** ஆண்டுகட்கு முன் இந்திய நாட்டுக்குப் புதிய மக்கட் கூட்டத்தினர் ஒருவகையினர் வந்தனர். அவர்கள் மத்திய ஆசியாவில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஆடு மாடுகளை மேய்த்து அவை கொடுக்கும் பால் முதலிய பயன்களைக் கொண்டு வாழ்ந்தனர். ஒரு காலத்தில் பல ஆண்டுகள் மழை இன்மையால் அவர்களின் ஆடுமாடுகள் மேய்வதற்கு எவ்விடத்தும் புல் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் கூட்டங் கூட்டமாகத் தமது ஆடுமாடுகளுடனும் பெண்டு பிள்ளைகளுட னும் பல திசைகளை நோக்கிச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்களுள் ஒரு கூட்டத்தினர் இந்தியாவின் வடமேற்கே உள்ள கைபர் கணவாய் வழியாக இந்தியாவுள் புகுந்தனர். அவர்கள் புகுந்தபோது இந்தியா முழுமையிலும் வாழ்ந்து கொண்டிருந்தோர் தமிழ் மக்களே யாவர்.

ஆரியர் நிறத்தில் வெண்ணிறமுடையோர். உலகில் மக்களின் நிறங்கள் வெவ்வேறாகக் காணப்படுவதற்குச் சில இயற்கைக் காரணங்கள் உண்டு. இவ்வுலகில் எல்லா இடங்களும் ஒத்த வெப்ப தட்ப நிலையுடையன வல்ல. இடங்களின் வெப்ப தட்ப நிலைகளுக்கேற்ப மக்களின் நிறம் மாறுபடுகின்றது. பூமியின் நடுக்கோட்டை(மத்திய **இரேகை**) அடுத்த நாடுகள் மிக வெப்பமுடையன. நடுக்கோட்டில் இருந்து வடக்கு அல்லது தெற்கு நோக்கிச் செல்லச் செல்லப் படிப்படி கருமை குறைந்து வெண்மை அடைந்த மக்களைக் காணலாம். மத்திய தரைக்கடலை அடுத்த நாடுகளில் தமிழர் சென்று குடியேறினார்கள் என முன் பாடங்களிற் படித்தோம். அம் மக்களின் ஒரு கூட்டத்தினர் வட துருவ நாடுகளில் நீண்ட காலம் வாழ்ந்து வெண்ணிற மடைந்தனர். அவர்களே பின்னர் மத்திய ஆசியாவிற் றங்கிப் பின் இந்தியாவுள் நுழைந்த ஆரியராவர்.

இந்தியாவை அடைந்த ஆரியர் அங்குத் தமது மாடு முதலியன மேய்வதற்கு ஏற்ற புல் வளர்ந்திருப்பதைக் கண்டனர். தொடக்கத்தில் அவர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் தங்கி வாழ்ந்தனர். அவர்கள் வந்த வழியைப் பின்பற்றி இன்னும் அவர் கூட்டத்தினர் பலர் வந்தடைந்தார்கள்.

அவர்கள் அங்குத் தங்கிப் பெருகலாயினர். அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களை வென்று நிலங்களைத் தமக்குச் சொந்தமாக்க விரும்பினார்கள். ஆரியர், தமிழரிலும் பார்க்க உடல் வலியும் முரட்டுத் தன்மையும் உடையவர்களா யிருந்தனர் அவர்களிடத்தில் குதிரை களும் இருந்தன. ஆரியர் வருகைக்கு முன் தமிழர் குதிரையைப் பற்றி அறிந்ததில்லை. தமிழர் நாகரிக உயர்வும் அமைதியும் உடையவர்களாய் வாழ்ந்து கொண்டு இருந்தனர்.

# 10

# ஆரியர் தமிழர் போர்

ஆரியருக்கும் தமிழருக்கும் இடையில் நீண்டகாலம் போர் நடந்தது. ஆரியர், தமிழரை வென்று சிறிது சிறிதாகப் பஞ்சாப் மாகாணம் முழுவதையும் கைப்பற்றினார்கள். அவர்கள் அம் மாகாணத்தைக் கைப்பற்றுவதற்கு அறுநூறு ஆண்டுகள் சென்றன. அவர்கள் தமக்கு வெற்றியை வேண்டித் தாம் வழிபட்ட கடவுளர் மீது பல துதிப்பாக்களைப் பாடினார்கள். அப்பாடல்களில் அவர்கள் தாம் எதிர்த்துப் போராடிய தமிழர்களைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள். அக் கூற்றுகளால் அக்காலத் தமிழரின் நாகரிகம் எவ்வகையினது என்று நாம் அறிந்துகொள்ளலாம். அவர்களுடைய பாடல்களில் தமிழர் தாசர் என்று கூறப்பட்டிருக்கின்றனர்.

அக் காலத்தில் தமிழர் மதிலாற் சூழப்பட்ட பெரிய நகரங்களில் வாழ்ந்தார்கள். அவர்களிடத்தில் நிலம், ஆடு, மாடு முதலிய செல்வப் பொருள்கள் இருந்தன. மக்கள் பொன், வெள்ளி முதலியவைகளாற் செய்யப்பட்ட பலவகை அணிகலன்களைப் பூண்டார்கள். அவர்களின் கடவுளர் பொன், வெள்ளி, செம்பு முதலியவைகளாற் புனையப்பட்ட கோயில்களில் வைத்து வழிபடப்பட்டனர். தேர், குதிரை, காலாள் முதலிய படைகள், அவர்களிடத்தில் இருந்தன. இவ்வாறு ஆரியர் தாமே தமிழரின் செல்வத்தையும் நாகரிகத்தையும் பற்றித் தமது பாடல்களில் நன்கு எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

அக்கால ஆரியரது சிறந்த கடவுள் இந்திரன். அவர்கள், தமக்கு வெற்றியை அளிக்குமாறு இந்திரன் மீது பல பாடல்கள் பாடினார்கள். தமிழர் ஆரியரின் கடவுளர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இக் காரணத்தினாலும் அவர்களுக்கிடையில் போர்கள் நடந்தன.

படை எடுப்பு வாணிகம் போன்ற காரணங்களால் பல சாதியினருக்கிடையே கலப்பு உண்டாகின்றது. ஆரியர் கலப்பின்றி நீண்ட காலம் வாழவில்லை. புறத்தே இருந்து வந்த ஆரியரிலும் பார்க்க இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர் மிகப் பலர். இவ்விரு சாதியினருக்குமிடையில் கலப்புமணஞ் செய்வதில் தடை ஏற்படவில்லை. இரு மக்களுக்குமிடையில் கலப்பு மணங்கள் நிகழ்ந்தன. புதிய மக்கள் தோன்றினார்கள்.

அவர்கள் தம்மை ஆரியர் என்றே சொல்லிக்கொண்ட னர். அவர்கள் சிறிது சிறிதாகக் கங்கைச் சமவெளி வரையிற் சென்று தமது வெற்றியை நாட்டினர். ஆரியர் வழங்கிய மொழி பிராகிருதம் எனப்பட்டது. வடக்கே வாழ்ந்த தமிழர் பிராகிருதச் சொற்களைத் தமிழுடன் கலந்து பேசினர். பேசுமிடத்து அச்சொற்களைத் திரித்து வழங்கினர். ஆரியர் பிராகிருதத்துடன் தமிழ்ச் சொற்களைக் கலந்து வழங்கினர். அவர்களும் தமிழ்ச் சொற்களைப் பிறழ உச்சரித்தனர். இக் காரணங்களால் வடக்கே பல மொழிகள் தோன்றலாயின. நாள் ஏற ஏற ஆரியர் தமிழரின் கொள்கை களையே பின்பற்றுவாராயினர். அவர்கள் தமிழரின், சிவன், உமை முதலிய கடவுளரை வழிபட்டனர். அவர்களின் இந்திரன், பிரமா, வருணன் முதலிய கடவுளர் சிறு தெய்வங்களாயினர். இவ்வாறு இந்திய மக்கள் எல்லோரது நாகரிகமும் தமிழர் நாகரிகமாக மாறியுள்ளது. தமிழரின் கொள்கைகள் அல்லாதன சிலவும் அதன் இடையிடையே காணப்படுகின்றன.

# 11

# தமிழர் சாதிகளும் ஆரியர் வருணங்களும்

தமிழ்நாட்டில் சாதி எப்படித் தோன்றிற்று என்று முன் பாடங்களிற் படித்தோம். வடநாட்டார் சாதிகளை நிறம்பற்றிப் பிரித்தனர். ஆகவே அவர்கள் செய்த சாதிப் பிரிவு வருணம் எனப்பெயர் பெற்றது. வருணம் என்பதற்கு நிறம் என்று பொருள். ஆரியரிற் பிராமணர் முதற் குலத்தின ராவர். இரண்டாங் குலத்தினர் சத்திரியர் எனப்பட்டனர். சத்திரியர் என்பதற்கு அரசர் அல்லது போர் வீரர் என்பது பொருள். மூன்றாங் குலத்தினர் வைசியர். அவர்கள் வாணிகத் தொழில் நடத்துவர். நான்காவது குலத்தினர் சூத்திரர். அவர்கள் போரில் சிறையாகப் பிடிக்கப்பட்டோரும் பரம்பரையாக அடிமைத் தொழில் புரிவோருமாவர். ஆகவே சூத்திரர் என்பதற்கு அடிமைகள் அல்லது வேலைக்காரர் என்பது பொருள். வடநாட்டாரின் வருணப் பிரிப்புக்குப் பிறப்பே காரணம். பிறப்புரிமையை வலுப்படுத்து வதன் பொருட்டுப் பல கட்டுக் கதைகள் எழுந்தன. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்போர் முறையே பிரமாவின் முகம், தோள், தொடை, கால்களினின்றும் பிறந்தார்கள் என்பது அக் கதைகளுள் ஒன்று. இதனை மக்கள் நீண்ட காலம் உண்மையென நம்பிவந்தனர். சாதிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்குக் கட்டப்பட்டதோர் கதையே இதுவாகும்.

ஒவ்வொரு வருணத்தவர்களும் ஒழுகவேண்டிய ஒழுக்க முறைகள் அவர்கள் நீதி நூல்களில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருணத்துக்கும் வெவ்வேறு ஒழுக்கங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வருண தருமங்கள் சமயத்தோடு இணைக்கப்பட்டிருந்தன. அவர்கள் நீதி நூல்கள் வருணத் துக்குத் தக்கவாறு நீதிகள் விதித்துள்ளன. தமிழர் பிறப்பினால் சாதி இல்லை; ஒழுக்கத்தினாலும், செய் தொழிலினாலும் சாதி உண்டு என்றனர். ''பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமை யான்'' எனத் திருவள்ளுவனாரும் ஆணை இடுவாராயினர்.

***"வள்ளுவர்செய் திருக்குறளை வழுவறநன் குணர்ந்தோர்கள்***
***உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொருநீதி''***

என்னும் செய்யுளில் தமிழர் ஆரியர் நீதிகளின் உயர்வு தாழ்வுகள் நன்கு கூறப்பட்டிருத்தல் காண்க.

தமிழ்நாட்டில் மக்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்குலத்தினராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் குருமார், அரசர், வியாபாரிகள், பயிரிடுவோர் என்பவர்களை ஒத்தவர்களேயாவர். இவர்களை அன்றிப் பலவகைத் தொழில்கள் புரிவோரும் வாழ்ந்தனர்.

தென்னாட்டில் ஆரியக் கொள்கைகள் ஒரு காலத்திற் பரவத் தொடங்கின. அப்பொழுது தமிழர் நாற்குலங்களுக்கும் பதில் பிராமணர் சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பெயர்கள் முறையே வழக்கத்தில் வந்தன. வேளாண் மக்கள் சூத்திரர் என்னும் பிரிவினராகக் கருதப்பட் டார்கள். அதனை ஏற்றுக்கொள்ள ஒருப்படாத வேளாண் மக்கள் தம்மைத் சற்சூத்திரர் என்றும், பூவைசியரென்றும் பலவாறு கூறிக்கொள்வாராயினர். வேளாளர் சூத்திரரும் அல்லர் வைசியரும் அல்லர்.

# 12
# ஆரியர் வேதங்கள்

ஆரிய மக்கள், இந்தியாவை அடைந்தபின் தங்கள் கடவுளர் மீது பாடிய பாடல்களின் திரட்டு வேதம் எனப்படும். வேதங்கள் பாடப்பட்ட காலத்தில் ஆரியர் எழுத்தெழுதும் முறையை அறியாதிருந்தனர். ஆகவே ஒருவர் பாட மற்றவர்கள் கேட்டு அப் பாடல்களை நெட்டுருச் செய்தனர். நீண்ட காலம் எழுதப்படாது செவி வழக்கில் வந்தமையின் அவை எழுதாக் கிளவி என்னும் பெயர் பெற்றன. அப் பாடல்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இருக்கு, எசுர், சாமம் என்னும் பெயர் பெற்றன. பின்பு அதர்வணம் என்னும் ஒரு வேதமும் சேர்க்கப்பட்டு வேதங்கள் நான்கு ஆயின. அவை தமிழர் வழிபட்ட கடவுளர் மீது பாடப்பட்டனவல்ல.

ஆரியர் தமிழர்களைப்போல ஆலயங்களை அமைத்து அவை களிற் சென்று கடவுளை வழிபடவில்லை. அவர்கள் வேள்விச் சாலைகள் அமைத்து அவைகளில் பெரிய வேள்விகள் செய்தனர். வேள்விகளில் பல விலங்குகள் பலியிடப்பட்டன. நூறு வேள்வி வேட்கின்றவன் இந்திர பதவியை அடைகின்றான் என்று அக்கால அரசர் நம்பினார்கள். இந்திரன் வானுலகத்துக்கு அரசன் என ஆரிய மக்கள் நம்பிவந்தனர்.

வேதங்களுக்குப்பின் ஆரணியகங்கள் என்னும் நூல்கள் எழுந்தன. அவை, முதுமைக் காலத்திற் காட்டிற் சென்று தவஞ்செய்வோர் படிப்பதற் காக எழுதப்பட்டவை.

ஆரணியகங்களுக்குப் பின் பிராமணங்கள் என்னும் நூல்கள் எழுதப்பட்டன. பிராமணங்கள் வேள்விக் கிரியைகளைப்பற்றி விரிவாகக் கூறும் நூல்கள். அந் நூல்களிற் பயிற்சி யடைந்தோர் பிராமணர் எனப் பட்டனர். அவை கூறும் வேள்வி முறைகள் தமிழர்க்குரியனவல்ல. பிராமணரும் தமிழ் மரபினரல்லர். ஒரு காலத்தில், சமக்கிருதம் வேதமொழி என்றும், தமிழ் மனிதமொழி என்றும் மக்கள் தமது அறியாமையால் நம்பத் தலைப்பட்டார்கள். அப்பொழுது தென்னாட்டு ஆலயங்களுக்கு வழங்கிய தமிழ்ப் பெயர்களுக்குப் பதில் வடமொழிப் பெயர்கள் இடப்பட்டன. தமிழ் அந்தணரான பார்ப்பனருக்கும் பிராமணர் என்னும் பெயர் வழங்குவ தாயிற்று. இதனாலேயே பார்ப்பனர் ஆரியரே என்னும் தவறான கருத்து ஏற்படலாயிற்று.

# 13
# தமிழ் மறை

தமிழ் மக்களிடம் மிகப் பழங் காலத்திலேயே மறைகள் இருந்தன. மறை என்பதற்குப் பிறர் அறியாவண்ணம் மறைத்துச் சொல்லப்படுவது என்பது பொருள். வேதம் என்பதற்கும் பொருள் இதுவே. உண்மையில் ஆரிய வேதங்கள் மறைகள் ஆகமாட்டா. அவை மறைத்துக் கூறப்படுவன வல்ல. தமிழர் அறிந்திருந்த சமய உண்மைகள், குரு மாணாக்க முறையில் தொன்றுதொட்டு வந்தன. அவற்றைக் கேட்கும் பக்குவம் அடைந்தவர் களுக்கு மாத்திரம் அவை வெளியிடப்பட்டன. ஆரிய வேதங்கள் சூத்திரருக்கும் பெண்களுக்கும் மாத்திரம் மறைக்கப்பட்டிருந்தன.


தமிழ்மொழியிலுள்ள மிகப் பழைய நூல், தொல்காப்பியம். அது, தமிழில் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருள்கள் பற்றியே நூல்கள் செய்யப்படும் எனக் கூறுகின்றது. ஆகவே தமிழ் மறைகள் நூல்களாக இருந்தில என நாம் நன்கு அறியலாகும்.

ஆரியர், தமிழரிடமிருந்து அவர்கள் சமய உண்மைப் பொருள் களை அறிந்தனர். அவர்கள் அவ்வுண்மைப் பொருள்களை அமைத்து உபநிடதம் என்னும் நூல்களைச் செய்தனர். உபநிடதமென்பதற்குக் குரு மாணாக்க முறையில் கிட்ட இருந்து கேட்கப்படுவது என்று பொருள். உபநிடதங்களிற் கூறப்படுவனவே தமிழரின் மறை என்று சொல்வதற்குரிய பல ஆதாரங்கள் உண்டு. அவை ஓங்காரத்தின் பெருமையைக் கூறுகின்றன. வடமொழியில் ஒகரமாகிய குறில் இல்லை. குறிலின் நீட்டமே நெடில் ஆகும். இதனால் **ஓம்** என்னும் பிரணவம் தமிழருக்கே உரியது என்று விளங்குகின்றது.

பிராமணர் அரச வகுப்பினரிடம் மாணாக்கராயிருந்து உபநிடத ஞானங்களைப் பயின்றனர். ஆரிய வேதங்கள் சூத்திரருக்கும் பெண்களுக் கும் மாத்திரம் மறைக்கப்பட்டிருந்தனவென்பது முன் கூறப்பட்டது. வேதங்களைப் பிராமணன் மாத்திரம் ஆசிரியனாகவிருந்து மூன்று வருணத்தவர்களுக்கும் ஓதலாம் என அவர்கள் நீதி நூல்கள் கூறுகின்றன. பெண்களும் அரசரும்அரசர் அல்லாதாரும் உபநிடத ஞானங்களில் பயிற்சி யடைந்திருந்தார்கள். இக்காரணங்களினால் உபநிடதங்களிற் கூறப்படும் உண்மை ஞானங்களே தமிழரின் மறை என்றும் தெளிவாகின்றது.

தமிழரின் மறை எழுதப்படாது செவி வழக்கில் நீண்டகாலம் வந்தது. ஆதலின் அது எழுதாக் கிளவி எனப்பட்டது. தமிழ் மறைப் பொருள் களைக் திரட்டித் திருமூலநாயனார் திருமந்திரம் என்னும் நூலாகச் செய்தார். திருமந்திரத்திற் காணப்படும் உண்மைகள் தேவார திருவாசகங்களிலும் காணப்படுகின்றன. இவைகளின் பொருள்களைச் சாரமாகக் கொண் டனவே தமிழர் போற்றும் சைவ சித்தாந்த நூல்களாகும். ஆரியரின் மதம் தென்னாட்டிற் பரவிய காலத்தில் தமிழரின் மறை என்பது ஆரியரின் வேதம் எனத் தவறாகக் கருதப்படலாயிற்று.

# 14
# பார்ப்பனர்


சிந்துவெளித் தமிழர் 5500 ஆண்டுகளின் முன் வைத்து வழிபட்ட அருட்குறி (சிவலிங்கம்)

தமிழர் மிகப் பழைமை தொட்டே ஆலயங்களை அமைத்து அவைகளில் கடவுளின் அருட்குறி களை வைத்து வழிபட்டு வரு கின்றனர். ஆதியில் ஆலயக் குரு அரசனாகவிருந்தான். பின்பு அரசனுக்கு அடுத்தபடியிலிருந்த மேன்மக்கள் குருமாராயினர். அக் குருமார் பல தரங்களாகப் பிரிக்கப்பட் டிருந்தனர். கோயிற் கருமங்களைப் பார்ப்போர் பார்ப்பார் எனப்பட்டனர். பார்ப்பார் என்பதற்குக் கண்காணிப்பவர் என்பது பொருள். கடவுளுக்கு ஐயன் என்பதும் ஒரு பெயர். ஐயனைச் சேவிப்பவர்கள் ஐயர் எனப் பெயர் பெற்றனர். ஐயர், பார்ப்பார் என்போர் தமிழ்மக்களே.

முற்காலங்களில் குருமார் அதிகாரமுடையவர்களாயிருந்தனர். மக்கள் அவர்களிடத்தில் பெரிதும் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்கள் கடவுளுக்கு அண்மையில் உள்ளவர்கள் எனக் கருதப்பட்டனர். அரசனும் அவர்களுக்கு மிகுந்த மரியாதை செய்தான். அரசனுக்குப் புத்தி கூறுவோ ரில் பார்ப்பானும் ஒருவனாகவிருந்தான். பார்ப்பானே பெரும்பாலும் அரசனது மந்திரியாய் இருந்தான். இதனை மாணிக்கவாசகர் பாண்டியனுக்கு மந்திரியாகவிருந்தமை கொண்டு நன்கு அறிதல் ஆகும். அரசாங்க உத்தி யோகங்களிலும் பார்ப்பார் இடம் பெற்றனர்.

பிற்காலங்களில் வடநாட்டுப் பிராமணர் தெற்கே வந்தனர். பிராம ணங்கள் என்னும் வடமொழி நூல்களைக் கற்றவர்கள் பிராமணராயினர் என முன் கூறப்பட்டது. அவர்களுட் சிலர் பார்ப்பன வகுப்பினரிடையே

திருமணக் கலப்புடையராயினர். அவர்கள் தமது மதத்தைத் தென்னாட்டி லும் புகுத்துவாராயினர். பொதுமக்கள் அவர்களின் கொள்கைகளுக்கு இணங்கவில்லை. அதனால் அவர்கள் அரசரைத் தம் வயப்படுத்தினார்கள். அவர்களை வேள்விகள் செய்யும்படி தூண்டினார்கள். வேள்விகளுக்கு அவர்கள் ஆசிரியர்களாகவும் இருந்தனர். அக்காரணத்தினால் அரச வட்டாரங்களில் பிராமணருக்கு மதிப்பு உண்டாயிற்று. பார்ப்பார் நாளடை வில் தம்மைப் பிராமணர் எனக் கூறுவாராயினர். அவர்களும் வடமொழி யைக் கற்றுப் பிராமணங்களைப் பயின்றனர்; தமக்கு இருக்கு முதலிய வேதங்கள் முதல்நூல்கள் எனவுங் கூறினர்; சமக்கிருதம் தேவமொழி என அரசரை நம்பச் செய்தனர். அரசர் ஆணையினால் ஆலயங்களில் சமக்கிருத மொழியில் துதிபாடும் வழக்கு ஏற்பட்டது. பார்ப்பனர் தம்மை ஆரியர் எனக் கருத ஆரம்பித்தனர்; உண்மை அவ்வாறன்று. இப்பொழுது நாம் பார்ப்பாரை ஆரியர் எனக் கருதுகின்றோம். தமிழரில் பலர் இஸ்லாம், கிறித்துவ மதங்களைத் தழுவியிருக்கின்றார்கள். இவர்களை நாம் அராபியர் அல்லது ஐரோப்பியர் எனக் கூறுகின்றோமா? இல்லை. அவ்வாறே ஆரிய மதத்தைத் தழுவிய தமிழராகிய பார்ப்பனரும் ஆரியராகமாட்டார். தமிழர் எனக் கூறுவதிலும் தம்மை ஆரியர் எனக் கூறுவதே பெருமை எனப் பார்ப்பன வகுப்பினர் கருதுகின்றனர். வரலாற்றில் ஆரியமக்களே எல்லா மக்களுக்கும் பின்னால் நாகரிகம் அடைந்தோராவர்.

பார்ப்பனரிடையே வடநாட்டுப் பிராமணரின் கலப்பு உண்டு என்பது உண்மையே. அவர்கள் நரம்புகளில் ஓடும் ஆரிய இரத்தம் ஒரு சிறிதளவேயாகும். இருவேறு நிறமுடைய சாதிகள் கலக்கும்போது இரு நிறங்களுக்கும் இடைப்பட்ட நிறமுடைய மக்கள் தோன்றுகின்றனர். அப் புதிய மக்களின் நிறம் ஏறியும் தாழ்ந்தும் காணப்படுமேல் அது இரு மக்களின் கலப்பின் அளவைக் காட்டுவதாகும். புதிதாக இந்திய நாட்டை அடைந்த ஐரோப்பிய சாதியினருக்கும் இந்திய மக்களுக்கும் தோன்றிய மக்கள் யூதேசியர் எனப்படுகின்றனர். இவர்களில் கருமை முதல் வெண்கலம், வெண்மை வரையில் நிறமுடையவர்களைக் காணலாம். இது பார்ப்பனர்களிடையில் நிறங்கள் பலவாயிருப்பதன் காரணத்தை அறிந்து கொள்வதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும்.

# 15
# புராணங்கள்

தமிழ் அரசர் அவைகளில் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் அரசர்களுடைய வெற்றிகளையும் பிற புகழ்களையும் குறித்துப் பாடி னார்கள். அரண்மனைகளில் பலவகை விழாக்கள் நடை பெறுவதுண்டு. அக்காலங்களில் புலவர்கள் அரசனின் முன்னோர்களுடைய பழைய வரலாறுகளை எடுத்துச் சொல்வது வழக்கம். ஒவ்வோர் அரச மரபினருடைய பரம்பரை வரலாறுகளும் இவ்வாறு புலவர்களாற் காப்பாற்றப்பட்டு வந்தன. வடநாட்டு அரசர் அவைகளிலிருந்து அரசர் வரலாறுகளைக் கூறிய புலவர்கள் சூதர் எனப் பெயர்பெற்று விளங்கினார்கள். இதுபற்றியே புராணங்கள் சூத முனிவராற் சொல்லப்பட்டன என்று கூறப்படுகின்றன. இந்திய நாட்டை ஆண்ட அரசரின் வரலாறுகள் ஒருகாலத்தில் எழுதப் பட்டன. அவை புராணம் எனப் பெயர் பெற்றன. புராணம் என்பதற்கு பழைய வரலாறு என்பது பொருள்.

கோயிற் குருமாராலும் அரசரின் வரலாறுகள் எழுதி வைக்கப் பட்டன. இவ்வாறு செய்தல், இந்தியர் வழக்கு மாத்திரமன்று. இலங்கை, மேற்கு ஆசியா, எகிப்து முதலிய நாடுகளிலும் இம்முறை இருந்துவந்தது. இன்று, நிகழ்ச்சிகளை கிறித்துவுக்குப் பின் இத்தனையாவது ஆண்டில் இன்னவை இன்னவை நிகழ்ந்தன என்று குறிப்பிடுகின்றோம். முன்னைக் காலங்களில் ஆண்டுகள் இவ்வாறு தொடர்பாகக் கணக்கிடப்படவில்லை; இன்ன அரசன் ஆட்சியில் இத்தனையாவது ஆண்டு என்று கணக்கிடப் பட்டது. அவ்வாறாகவே முற்கால அரசரின் ஆட்சிக்காலங்கள் குறித்து வைக்கப்பட்டிருந்தன. இற்றைக்கு இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டு களின் முன் மயூரசந்திரகுப்தன் என்னும் அரசன் வட இந்தியாவை ஆண்டான். அவனுடைய அரண்மனையில் மெகஸ்தினஸ் என்னும் கிரேக்கர் ஒருவர் தங்கியிருந்தார். அவர் இந்தியாவின் வரலாறு ஒன்று எழுதியுள்ளார். அதில் அவர் அலக்சாந்தரின் படை எடுப்புக்கு முன் பாண்டிய நாட்டை ஆண்ட அரசரின் எண்ணிக்கை 154 எனக் குறிப்பிட் டிருக்கின்றார். அரசரின் ஆட்சிக்காலங்கள் குறித்து வைக்கப்பட்டிலவாயின் அவர் இவ்வாறு கூறியிருத்தல் இசையாது. தமிழர் தமது பழைய வரலாறு களை எழுதிவைத்ததில்லை எனச் சிலர் கருதுவது தவறு. பழைய

கல்வெட்டுகளையும் புராணங்களையும் நோக்குமிடத்து முன்னர் எழுதி வைக்கப்பட்ட வரலாறுகள் பிற்காலங்களில் சிதைந்து மறைந்தொழிந்தன என விளங்குகின்றது. திருவிளையாடற் புராணத்தில் மதுரையை ஆண்ட அரசரின் வரலாறுகளைக் காண்கின்றோம். புராணக் கதைகள் நம்பத்தக்கன வல்ல எனப் பலர் கருதுகின்றனர். அதற்குக் காரணம் புராணங்களிற் பல கற்பனைக் கதைகள் காணப்படுதலேயாகும். அக் கற்பனைக் கதைகளின் இடையிடையே சிற்சில இடங்களிற் கூறப்படும் அரசரின் வரலாறுகள் பொருத்தமாயிருக்கின்றன.

ஒருகாலத்தில் பிராமண மதம் இந்தியநாட்டில் தலை எடுத்திருந்தது. அக்காலத்தில் பிராமணர் தமக்கு நலம் பயக்கும் பல கோட்பாடுகளைப் புகுத்தியும் நலம் பயவாதனவற்றை நீக்கியும் கற்பனைக் கதைகளைப் புகுத்தியும் புராணங்களை மாறுபடுத்தினர். இக்காரணங்களே புராணங்கள் வரலாற்று நூல்களாகக் கொள்ளப்படுவதற்குத் தடையாயுள்ளன. பிராமண ரால் திருத்தப்பட்டதால் வரலாற்று நூல்களாகிய புராணங்கள் வெறும் சமய நூல்கள் எனக் கொள்ளப்படுகின்றன.

இதிகாசம் என்பதற்கும் பழைய வரலாறு என்பது பொருள். பாரதம் இராமாயணம் முதலிய நூல்கள் இதிகாசங்கள் என வழங்கப்படுகின்றன. அவையும் நீண்ட காலமாகக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் எழுதப்பட்டு வந்தன. அதனால் அவைகளும் வரலாற்றுத் தன்மையை இழந்தன. பாரதப்போர் இற்றைக்கு மூவாயிரத்து இருநூற்று ஐம்பது ஆண்டுகளின் முன் நிகழ்ந்ததற்குச் சான்று உண்டு.

# 16

# தமிழ்நாட்டு இயற்கைப் பிரிவுகள்

இவ்வுலகம், கடல், மலை, நாடு, வயல், மணல்வெளி என்னும் இயற்கை அமைப்புகளுடையது. தமிழ் நாட்டின்கண்ணும் இவ்வகை இயற்கை அமைப்புக்களை நாம் பார்க்கலாம். மக்கள் தாம் வாழும் இடங்களுக்கு ஏற்பத் தமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்கின்றனர். இக் காரணத்தினால் தமிழ் நாட்டின் எல்லா இடங்களிலும் மக்கள் ஒரே வகையாக வாழ்ந்திலர். வாழ்க்கை என்பது ஊண், உடை, உறைவிடம் என்பவைகளை அடிப்படையாகக் கொண்டது.

# 17

# மலை நாட்டு மக்கள்

மலைநாடு குறிஞ்சி நிலம் எனப்பட்டது. குறிஞ்சி என்பது ஒருவகை மரம். மலைகளில் இம்மரம் பெரிதும் வளரும். ஆகவே மலைநாட்டுக்குக் குறிஞ்சி நிலம் என்னும் பெயர் வழங்கப்பட்டது. அங்கு வாழும் மக்கள் குறவர், வேடர், கானவர் எனப்பட்டார்கள்.

மலைகளில் தானே வளர்ந்து பயன்தரும் மரங்கள் பல உண்டு. உண்ணுதற் கினிய கிழங்குகளை வீழ்த்தும் கொடிகள் பல காடுகளின் இடையிடையே செழித்துப் படரும். மலைமுகடுகளில் தேன்கூடுகள் தொங்கும். மலைச்சாரல்களில் ஐவனம் என்னும் ஒரு வகை மலைநெல் விளையும். மலைகளின் இடையிடையேயுள்ள சமநிலங்களில் சாமை பயிரிடப்படும். மலை நாட்டினர் அங்குக் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, தேன், மலைநெல், சாமை என்பவைகளைத் தமது முதன்மையான உணவுகளாகக் கொண்டு வாழ்ந்தனர்.

காடுகளில் மான், மரை, பன்றி, புலி, கரடி, யானை முதலிய விலங்குகள் திரிந்தன. மான், மரை, பன்றி முதலிய விலங்குகள் உணவின் பொருட்டு வேட்டையாடப்பட்டன. தோல், நகம் என்பவைகளின் பொருட்டுப் புலிகளும், தந்தத்தின் பொருட்டு யானைகளும் வேட்டை யாடப்பட்டன.

பருவம் அறிந்து சாமை விதைக்கப்பட்டது. பயிரிடப்படும் இடம் கொல்லை எனப்பட்டது. காட்டு விலங்குகள் பயிரை மேய்ந்து அழித்து விடாதபடி கொல்லையைச் சுற்றி வேலியிடப்பட்டிருந்தது. இராக்காலத்தே யானை பன்றி முதலிய விலங்குகள் கொல்லைக்குட்புகுந்து பயிரை அழிக்காதபடி பரண்கள் மீதிருந்து குறவர் காவல் காத்தனர். பயிரை மேயவரும் விலங்குகள் கண்டு பயந்து ஓடும்படி அவர்கள் நெருப்புக் கொள்ளிகளை பரணின் பக்கங்களில் மாட்டிவைத்தார்கள்; கவணில் கற்களை வைத்து எறிந்து விலங்குகளை ஓட்டினார்கள்.

தினை, கதிர் வந்து முற்றின் கிளி முதலிய பறவைகள் கூட்டமாக வந்து தினையை உண்ணும். குறச் சிறுமியர் பகற்காலங்களில் பரண் மீதிருந்து தினைமீது விழும் குருவிகளை ஓட்டினர். அவர்கள் மூங்கில் தடியைக் கிழித்துச் செய்த தட்டை என்னும் கருவியைத் தட்டியும் ஆயோ எனச்

சத்தமிட்டும் குருவிகளை ஓட்டினர். தினை விளையும் காலம் குறச்சிறுமியரின் இனிய பொழுதுபோக்குக் காலமாயிருந்தது. குறவரின் குலதெய்வம் முருகன். அவர்கள் வெறி என்னும் ஒருவகைக் கூத்து ஆடியும் பலியிட்டும் முருகக் கடவுளை வணங்கினார்கள். முருகபூசை செய்பவன் முருகன் எனப்பட்டான். அவன் கையில் முருகக் கடவுளின் வேலைப் பிடித்திருந்தான்.

குறவரின் வீடுகள் மலைச்சாரலிலே பலாமரங்களின் கீழ்க் கட்டப்பட்டிருந்தன. அவை தழைகளால் வேயப்பட்ட சிறு குடிசைகள். அவர்கள், தேன், பலாப்பழம் என்பவைகளிலிருந்து ஒரு வகைக் கள்ளைச் செய்தார்கள். அக் கள்ளு மூங்கிற் குழாய்களில் இட்டுக் காரமேறும்படி வைக்கப்பட்டது. கள்ளை உண்டு மகிழ்ந்த குறவரும் குறத்தியரும் முற்றத்தே நிற்கும் பலாமரத்தின் கீழ் கைகோத்துக் குரவை என்னும் கூத்து ஆடினார்கள்.

முன்னைக் காலத்தே குறவர் தழைகளையும் மரப்பட்டையையும் உடையாகக் கொண்டனர். பழைய நூல்கள் முனிவர்கள் மர உரியை உடையாக அணிந்தார்கள் எனக் கூறப்படுகின்றன. குறமாதர் குறி சொன்னார்கள். அவர்கள் உடம்பில் பச்சை குத்திக்கொண்டனர்; சங்கு மணிகளைக் கோத்து மாலைகளாக அணிந்தனர். சங்கு வளைகளைக் கையில் இட்டு அழகு செய்தனர். குங்குமப் பொட்டிட்டனர். பூக்களைத் தலையில் சூடினர்.

## 18

# முல்லை நில மக்கள்

காடும் காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலம் எனப்பட்டன. முல்லை என்பது ஒருவகைக் கொடி. காடுகளிலும் காடு சார்ந்த இடங்களி லும் முல்லைக் கொடிகள் செழித்து வளர்ந்தன. அக் காரணத்தினால் அவைகளுக்கு முல்லை நிலம் எனப்பெயர் உண்டாயிற்று. அவ்விடங்க ளில் ஆடுமாடுகள் புல் மேய்வதற்கேற்ற மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. முல்லை நில மக்கள் ஆடு மாடு முதலியவைகளை வளர்த்து அவை தரும் பயன்களையே பெரிதும் தம் உணவாகக் கொண்டு வாழ்ந்தனர். காடு சார்ந்த நிலங்களில் வரகு, அவரை, துவரை, முதலிய கூல வகைகளும் விளை விக்கப்பட்டன.

முல்லை நில மக்கள், ஆயர், இடையர், கோவலர், அண்டர் முதலிய பல பெயர்களாற் குறிப்பிடப்படுவர். அவர்கள் காட்டு ஒதுக்குகளில் சிறு இல்லங்கள் கோலி வாழ்ந்தனர். இல்லங்கள் வரகு வைக்கோலால் வேயப்பட்டன. முற்றத்தே இறுக்கப்பட்ட முளை களில் இராக்காலங்களில் ஆடு மாடுகள் கட்டப்பட்டன. குடியிருப்பைச் சுற்றி மிருகங்கள் நுழையாதபடி முள் வேலியிடப்பட்டிருந்தது. விடியற்காலத்தே இடைப் பெண்கள் தாழிகளில் உறைந்திருக்கும் தயிரை மத்துப்பூட்டிக் கடைந் தார்கள். அவர்கள் மோரையும் வெண்ணெயையும் அயல் இடங்களுக்குக் கொண்டு சென்று விற்றார்கள். ஆடவர் விடியற் காலத்தே மாடுகளையும் ஆடுகளையும் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் சென்றார்கள்; அவை களைப் புலி கோநாய் முதலிய விலங்குகள் கொல்லாதபடி காவல் காத்தார்கள். ஆடுகளும் மாடுகளும் மேயும்போது அவர்கள் மர நிழல் களில் இருந்து இனிய இராகங்களைப் புல்லாங்குழலில் வாசித்தனர். கொன்றைப் பழத்தைக் குடைந்து நெருப்புக் கொள்ளியால் துளையிட்டுச் செய்த குழல்களிலும் அவர்கள் இனிய இசைகளை அமைத்துப் பாடினார்கள்.

தமிழரின் செல்வம் ஆடு மாடுகளே ஆகும். மாடு என்னுஞ் சொல் ஒருகாலத்தில் செல்வம் என்னும் பொருளில் வழங்கிற்று. அதனால், மக்கள் ஒரு காலத்தில் மாட்டையே செல்வமாகக் கொண்டிருந்தார்கள் என அறிகின்றோம். ஆடு மாடுகள் மேய்வதற்குப் பொது மேய்ச்சல் நிலங்கள்

இருந்தன. அவை குடும்பங்களுக்குச் சொந்தமாயிருந்தன. குடும்பங்களுக் குரிய மேய்ச்சல் நிலங்கள் சிறிது சிறிதாகப் பிரிக்கப்படின் அவை ஆடு மாடுகள் மேய்வதற்கு ஏற்றனவாகா. ஆகவே இடையர் குடும்பங்களாக வாழ்ந்தனர். சொத்து, குடும்பத்தவர்கள் எல்லாருக்கும் பொதுவாக விருந்தது. குடும்பத்தவருள் மூத்தவன் குடும்பத் தலைவனாயிருந்தான். மற்றவர்கள் அவனுக்கு அடங்கி நடந்தார்கள். பல குடும்பங்களுக்குப் பெரிய தலைவன் ஒருவன் இருந்தான். இவ்வாறு ஆதி மக்களிடையே ஆட்சி முறை உண்டா யிற்று. கோ என்னும் சொல் மாட்டைக் குறிக்குமாதலால் அதனையுடைய வன் கோன் எனப்பட்டான். கோன் என்னுஞ் சொல் அரசனையும் குறிக்கும். அதனால் ஆட்சி முறை இடையருள்ளேயே ஆரம்பித்ததெனக் கருதப்படுகின்றது. கோன் ஆட்டு மந்தைகளை மேய்க்கும் கோலைக் கையிடத்தே வைத்திருந்தான். அக் கோலே அதிகாரத்தை உணர்த்தும் செங்கோலாக மாறிற்று.

இடையரின் குலதெய்வம் திருமால். ஆயர் பாற் பொங்கல் இட்டுத் திருமாலை வழிபட்டனர். மகளிர் கைகோத்துக் குரவை ஆடித் திருமாலின் புகழ் பாடினர். கண்ணபிரான் இடை குலத்தினர். பாரதப் போருக்குப்பின் முல்லை நிலத்தாரின் திருமால் வணக்கம் கண்ணன் வணக்கமாக மாறிற்று.

# 19

# வேளாண் மக்கள்

ஆற்றோரங்களில் வாழ்ந்து தானியங்களை விளைவித்தோர் வேளாளர் எனப்பட்டனர். வேளாளர் என்பதற்கு நிலத்தை ஆள்பவர் என்பதுபொருள். வேள் என்பது நிலத்தைக் குறிக்கும். வேளாளரைக் குறிக்க வெள்ளாளர் என்னும் சொல்லும் வழங்கும். இச் சொல்லில் **வெள்** என்பது வெள்ளம் என்பதன் மரூஉ. வெள்ளாளர் என்பதற்கு வெள்ளத்தை ஆள்பவர் என்பது பொருள். வயல் நிலங்களில் மருத மரங்கள் செழித்து வளர்ந்தன. ஆகவே வயலும் வயல் சார்ந்த இடங்களும் மருதநிலம் அல்லது மருதம் என்னும் பெயர் பெற்றன. வேளாண்மை செய்யும் ஒருவன் தனக்கு நீண்ட நாட்களுக்குப் போதுமான உணவைப் பெறக்கூடியவனா யிருந்தான். வேளாண் மக்கள் பயிரிட்டுத் தானியங்களை அறுக்குங் காலங்கள் போக மற்றக் காலங்களில் ஓய்ந்திருந்தனர். இந்த நல்ல நிலைமை யில்தான் மக்கள் ஓரிடத்தில் தங்கியிருந்து தம் அறிவைப் பெருக்கிச் சிந்தித்துப் பல்வகை நற்கலைகளை வளர்த்தனர். மனிதனுக்குப் போதுமான உணவும் உடையும் கிடைப்பின் அவன் உல்லாசமாக வாழவும், பொழுது போக்கவும் விரும்புகிறான். தனக்கு அவ்வகைப் பொழுதுபோக்கும் முறைகளைக் காண்பிப்பவர்களுக்கு அவன் தனது களஞ்சியத்தினின்றும் தானியங்களைக் கொடுத்தான். ஆதலின், பொழுது போக்குக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உரிய நற்கலைகளைப் பலர் பயின்றதனால் கலைகள் வளர்ச்சி யடைந்தன.

தானியம் விளைவிக்கும் வேளாளர் செல்வராயிருந்தனர். அவர் களின் பெண்டுபிள்ளைகள் அணிவதற்கு அழகிய பொன் அணிகள் வேண்டப்பட்டன. வீட்டிற் பயன்படுத்துவதற்கு வேண்டிய நாற்காலி, முக்காலி, கட்டில், பெட்டி, ஏணி போன்ற பல பொருள்கள் தேவைப்பட்டன; பயிரிடுவதற்கு உதவியான கலப்பை, நுகம், கொழு, மண்வெட்டி, அரிவாள் போன்ற பல பொருள்களும் தேவையாயிருந்தன. இவைகளை எல்லாம் செய்து அளிக்கும் தொழிலாளர்கள் வந்து வேளாண்மக்கள் வாழ்ந்த இடங்களைச் சுற்றிக் குடியிருந்தார்கள். அவர்கள் தாம் வேளாளனுக்குச் செய்து உதவும் பொருள்களுக்கு விலையாகத் தானியங்களைப் பெற்றனர்.

வேளாளர் வேந்தன் என்னும் கடவுளைத் தமது குலத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர். வேந்தன் என்பதற்கு அரசன் எனவும் பொருள் உண்டு. கடவுள் உலகுக்கு அரசன் எனவும், அரசன் அக் கடவுளுக்கு ஏற்ப மக்களைக் காக்கும் உரிமையாளன் எனவும் முற்கால மக்கள் நம்பினார்கள்; இந் நம்பிக்கை தமிழர்களிடையே மாத்திரமன்று, பழைய மக்கள் எல்லாரிடையும் காணப்பட்டது.

வேளாண் மக்கள் கொலையும் புலையும் நீக்கித் தூய வாழ்க்கை நடத்தினர். மக்கள் கடவுளை வழிபடும் பொருட்டு அவர்கள் ஊர்கள் தோறும் பெரிய ஆலயங்களைக் கட்டினார்கள்; பிறர் நலங் கருதிப் பல்வேறு அறங்களைப் புரிந்தார்கள். வேளாளர் விருந்தினரை அகமலர்ந்து வரவேற்றனர். கம்பரும், திருவள்ளுவரும் வேளாண்மக்களின் சிறப்பை வேண்டிய அளவு விளக்கிக் கூறியுள்ளார்கள். வேளாண் மக்கள் உலகுக்கு அச்சாணி போன்றோர். அவர்களே உலகில் சிறந்த வள்ளல்களாக விளங்கினார்கள்.

# 20

# கடற்கரை மக்கள்

கடற்கரைகளில் நெய்தல் என்னும் ஒருவகை நீர்ச்செடி பெரிதும் வளர்ந்திருக்கும். அக் காரணத்தால் கடலும் கடல்சார்ந்த இடங்களும் நெய்தல் என்னும் பெயர்பெற்றன. நெய்தல் நிலத்தே, புன்னை, பனை, தெங்கு முதலியன செழித்து வளர்ந்தன. அவ்விடங் களில் வாழுநர் பரதவர் எனப்பட்டனர்.

பரதவர் கட்டுமரங்களிற் கடலிடத்தே சென்று மீன் பிடித்தனர். அவர்கள் மீனைத் தமது முக்கிய உணவாகக் கொண்டனர். பரதவர் கொண்டுவந்த மீனைப் பரத்தியர் மற்றைய இடங்களுக்குக் கொண்டு சென்று விற்றனர்; மீனின் விலையாகத் தானியங்களையும் தமக்கு வேண்டும் பிற பண்டங்களையும் பெற்றனர். கடற்கரைகளில் உப்பு விளைவிக்கும் வயல்கள் உண்டு. அவர்கள் கடல் நீரை வயல்களிற் பாய்ச்சி உப்பு விளைவித்தனர். உப்பு வியாபாரிகள் உமணர் எனப்பட்டனர். உமணர் உப்பை வண்டிகளின் மேலும் கழுதைகளின் மீதும் ஏற்றிச்சென்று மற்றைய இடங்களில் விலைப்படுத்தினர்.

கட்டுமரத்துக்குத் திமில் என்பது மற்றொரு பெயர். திமில்களிலே கடலிற் சென்றோர் திமிலர் எனவும் பட்டனர். திமில்களிலே சென்று மீன்பிடித்த பரதவர் நாளடைவில் பெரிய மரக்கலங்களில் கடல் கடந்து அயல்நாடுகளுக்குச் சென்றனர். அவர்கள் அந் நாடுகளிலுள்ள அரிய பண்டங்களை இந் நாட்டுக்குக் கொண்டு வந்தனர்; இந் நாட்டுப் பண்டங்களை அந் நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். நாளடைவில் பிறநாட்டு மரக்கலங்கள் தமிழ்நாட்டுக் கடற்கரைகளுக்கு வரத்தொடங்கின. இவ்வாறு கடற்கரைகளில் வாணிகம் தொடங்கிற்று. உள்நாட்டுப் பண்டங்கள் வண்டிகளிலும் கழுதைகளிலும், பொதிமாடுகளிலும் கடற்கரைகளுக்குக் கொண்டு வரப்பட்டன. கடற்கரைகளில் வந்திறங்கிய பிறநாட்டுப் பண்டங்கள் உள்நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. உள்நாடுகளி லிருந்து கடற்கரைத் துறைமுகங்கள் வரையில் வண்டிகளும் மக்களும் செல்லக்கூடிய வீதிகள் அமைக்கப்பட்டன. இவ்வாறு கடற்கரைகளில் பட்டினங்கள் உண்டாயின. அவ்விடங்களில் வணிகரும் மரக்கலங்கள்

வைத்திருப்போரும் பெரிய மாளிகைகள் அமைத்து அவைகளில் வாழ்ந்தனர். ஏற்றுமதியாகும் பண்டங்களுக்கும் இறக்குமதியாகும் பண்டங் களுக்கும் தீர்வை பெறும்பொருட்டு அரசினராற் பண்டசாலைகள் அவ் விடங்களில் அமைக்கப்பட்டன. பல்வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் வாணிகத்தின் பொருட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வந்தார்கள். தொழில் செய்து பிழைக்கும்பொருட்டு அவ் விடங்களுக்கு உள்நாடுகளி னின்றும் மக்கள் சென்று தங்கினார்கள். பட்டினங்கள் மக்கள் நெருங்கி நடமாடும் இடங்களாயின. மக்கள் நெருங்கி வாழும் இடங்களில் பொழுது போக்குக்கேற்ற பல வகைக் களியாட்டங்கள் நடைபெற்றன. இராக்காலங் களில் மரக்கலங்கள் திசை அறிந்து துறைபிடிக்கும் பொருட்டுத் துறை முகங்களில் வெளிச்ச வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை கலங்கரை விளக்கங்கள் எனப்பட்டன.

தமிழ்நாட்டில் காவேரி ஆற்று முகத்துவாரத்திலிருந்த புகார் என்னும் நகர் பெரிய துறைமுகப்பட்டினமாயிருந்தது. அங்குப் பல மொழிகளைப் பேசும் பிறநாட்டு மக்கள் தங்கி வாழ்ந்தனர்.

பட்டினங்களல்லாத மற்றைய கடற்கரைப் பக்கங்களில் பரதவர் மீன்பிடிக்கும் தொழிலையே பெரிதும் கைக்கொண்டிருந்தனர். அவர்கள் பனந்தோப்புகளில் சிறுசிறு குடிசைகள் கட்டி வாழ்ந்தனர்; மீன் இறால் முதலியவைகளை வெயிலில் உலர்த்தினர். பரதவச் சிறுமியர் புன்னை நிழலில் இருந்து மீனைக் கவர வரும் புட்களை ஓட்டினர். பரதவர் பனை தென்னை முதலியவைகளினின்றும் எடுக்கப்படும் கள்ளை உண்டு மகிழ்ந்தனர்.

பரதவரின் குல தெய்வம் வருணன். அவர்கள் சுறாக்கொம்பை நட்டு, மாலைகள் சூடி, ஆடல் புரிந்து அக் கடவுளை வழிபட்டனர். தமிழர் கடவுளாகிய வருணனை ஆரிய மக்களும் வழிபட்டனர். வருணன் என்னும் கடவுளை வழுத்திப் பாடிய பாடல்கள் பல அவர்கள் வேதங்களிற் காணப்படுகின்றன.

# 21

# பாலை நில மக்கள்

மணல்வெளிகள் பாலைநிலம் எனப்பட்டன. அவைகளின் இடை இடையே புல் பூண்டுகளும் மரஞ்செடிகளும் காணப்பட்டன. வெயிலின் வெம்மையால் கரிந்துபோகாத பாலை என்னும் மரங்கள் அவ்விடங்களில் பெரிதும் வளர்ந்தன. ஆகவே மணல் வெளிகளும் அவைகளைச் சார்ந்த இடங்களும் பாலை என்னும் பெயர் பெற்றன. பாலைநிலம் மிக வெப்ப முடையது.

அங்கு வாழ்ந்த மக்கள் புளிஞர், வேடர், எயினர், மறவர் எனப்பட் டனர். அவர்கள் குன்றுகளில் வாழ்ந்த குறவரிலும் பார்க்க நாகரிகத்தில் கீழ்நிலையினர். அவர்கள் தானியங்களைப் பயிரிடவும் ஆடுமாடுகளை வளர்த்து அவை தரும் பயன்களைப் பெறவும் அறிந்திருக்கவில்லை; வேட்டை ஆடுதலாற் கிடைக்கும் விலங்குகள் பறவைகளின் ஊனையே அவர்கள் பெரிதும் உண்டு வாழ்ந்தனர்.

அவர்கள் வழிபறிப்போரும், கொள்ளையிடுவோருமா யிருந்தனர். சில சமயங்களில் அவர்கள் அயல் இடங்களிற் சென்று ஆடுமாடுகளைக் கொள்ளையிடுவர். வணிகர் பண்டங்களைக் கழுதைகள்மீது ஏற்றிக் கொண்டு மணல் வெளிகளைக் கடந்து செல்வார்கள். வேடர் அவர்களைக் கொன்று பண்டங்களைக் கொள்ளையிடுவர். ஆனமையின் அவர்கள் முற்காலங்களில் மணல் வெளிகளைக் கடந்து செல்ல நேர்ந்தால் கூட்டங்க ளாக ஆயுதங்கள் தாங்கிச் செல்வது வழக்கம். அக் கால வணிகர் சிறந்த போர் வீரர்களாயும் இருந்தனர்.

எயினர் சிறு குடிசைகள் கட்டி வாழ்ந்தனர். அவை ஈந்தின் ஓலையால் வேயப்பட்டிருந்தன. அவைகளின் மேற்புறம் முள்ளம் பன்றியின் முதுகு போல் தோன்றின. வேடப்பெண்கள் பாரையினால் எறும்புப் புற்றுகளைக் கிண்டி எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் புல் அரிசியைச் சேர்த்தார்கள்; அதனை முற்றத்தே கிடக்கும் நில உரலில் தீட்டி ஆக்கி வேட்டைநாய் பிடித்துக் கொண்டுவந்த உடும்பின் இறைச்சியோடு தேக்கிலையில் இட்டு உண்டனர். அவர்கள் மான் தோலில் படுத்து உறங்கினார்கள்; சங்குமணி, சோகி, என்பு முதலிய வகைகளை நகைகளாக அணிந்தனர்.

பாலைநில மக்கள் காளியைத் தமது குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர். காளிக்கு ஊர்தி சிங்கம். வேடர் காளிக்கு உயிர்ப்பலி இட்டு வழிபட்டனர். மக்கள் வேடன் இடையன் உழவன் என்னும் மூன்று வாழ்க்கை நிலைகளை ஒன்றின்பின் ஒன்றாக முறையே அடைந்தார்கள். அவைகளில் வேடரின் வாழ்க்கைமுறை முதல் நிலையினது. இந்நிலையில் மக்கள் உணவு ஒன்றுக்காக மாத்திரம் முயன்றுகொண்டிருந்தார்கள். ஆகவே அவர்கள் ஓர் இடத்தில் தங்கி ஆறியிருந்து நாகரிகம் பெற முடியவில்லை.

# 22
# தமிழ்


தமிழ் ஒரு காலத்தில் இவ்வுலகம் முழுவதிலும் வழங்கிற்று. இவ்வாறு கூறுதல் வியப்பாயிராது. ஏன்? ஆதியிற்றோன்றிப் பெருகிய மக்கள் தமிழரே என்று முன் பாடங்களிற் படித்தோம். கூட்டங்கூட்டமாகச் சென்று ஆங்காங்கு தனித்து வாழ்ந்த மக்கள் பேசிய தமிழ் சிறிதுசிறிதாக வேறு பட்டது. அவ்வாறு வேறுபட்ட மொழி நெடுநாட்களின்பின் வெவ்வேறு மொழிகள் ஆயின.

ஆதியில் மொழி எப்படி உண்டாயிற்று? தொடக்கத்தில் மக்கள் தமது எண்ணங்களை வெளியிடச் சில ஒலிக்குறிகளை வழங்கினர். காலஞ் செல்லச்செல்ல இவ்வொலிக் குறிகள் சிறிது சிறிதாகப் பெருகி மொழி ஆயின. பேச்சு வழக்கிலுள்ள மொழிக்குப் பின்பு எழுத்துக்கள் உண்டா யின. பின்பு இலக்கியங்கள் உண்டாயின. இவைகளுக்குப்பின் இலக்க ணங்கள் தோன்றின. இவ்வாறு மொழி தோன்றி படிப்படியே வளர்ச்சி யடைந்தது.

கடவுள் தமிழையும் சமக்கிருதத்தையும் அருளிச்செய்தார் எனப் பலர் நம்பிவருகின்றனர். இக் கருத்து மொழி வளர்ச்சி நூலுக்கு மாறுபட்டது. இம்மொழிகளின் உயர்வை மக்கள் ஏற்றுக் கொள்ளும்பொருட்டு முற்கால மக்கள் இவ்வகைக் கதைகளை எழுதிவைத்தார்கள்.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழுக்கு எழுத்துகள் இருந்தன. அவ்வெழுத்துகளின் திரிபே இக்காலத்து மக்கள் எல்லோ ருடைய எழுத்துகளும் ஆகும். ஆதியில் தோன்றியது ஓவிய எழுத்து. ஓவிய எழுத்து என்றால், கால், கை, நடத்தல், இருத்தல், படுத்தல் போன்ற வைகளை விளக்க அவ்வவ் வுறுப்புக்களையும் அவ்வகைச் செயல்களை யும் படத்தின்மூலம் வரைந்து காட்டுதல்.

பட எழுத்துக்கள் விரைந்து எழுதிய விடத்துக் கீறுகளாக அமைந்தன. பின்பு ஒவ்வொரு சொல்லின் உச்சரிப்பையுங் குறிக்க ஒவ்வோர் குறி கண்டுபிடிக்கப்பட்டது. இதற்குப்பின் மொழியிலுள்ள ஓசைகள் எத்தனை என்று உச்சரித்துப்பார்த்து ஒவ்வொரு ஓசைக்கும் ஒவ்வோர் எழுத்து உண்டாக்கப்பட்டது. மொகஞ்சொதரோவில் வழங்கிய தமிழ் எழுத்துக்கள் சில மாற்றம் அடைந்து பிராமி எழுத்துக்கள் ஆயின.




தமிழகம் (மூவேந்தர் நாடுகள்)

இவ்வெழுத்துகளைப் பொனீசிய மக்கள் வழங்கினர். பொனீசியரிடமிருந்து கிரேக்கர் எழுத்தெழுத அறிந்தனர். கிரேக்கரிடமிருந்து உரோமரும், உரோமரிடமிருந்து மற்றைய ஐரோப்பிய மக்களும், எழுத்தெழுத அறிந்தனர். இன்று ஆங்கில மொழியில் வழங்கும் எழுத்துகளும் பழந் தமிழ் எழுத்துகளினின்றும் பிறந்தனவே.

தமிழில் பல அரிய நூல்கள் முற்காலங்களில் இருந்தன. அவை ஏடுகளில் எழுத்தாணியால் எழுதப்பட்டன. அப்போது ஒவ்வொரு நூலிலும் ஒன்று அல்லது சில படிகளே இருந்தன. ஓலைச்சுவடிகள் சில காலத்திற்குப்பின் பூச்சிகளால் துளைக்கப்பட்டும், ஒடிந்தும் இறந்துவிடும். இக் காரணத்தினால் தமிழ் நூல்கள் பல இறந்தன. தமிழ் நாட்டைப் பலமுறைகளிற் கடல் கொண்டது. கடல்கோள் போன்ற ஆபத்துக் காலங் களில் மக்கள் தமது பொருள் பண்டங்களை எல்லாம் போட்டுவிட்டு உயிர் பிழைப்பதற்காக ஓடியிருப்பார்கள். இக் காரணத்தினாலும் பழைய நூல்கள் இறந்தொழிந்தன. ஆகையினாலேயே தமிழ் மொழியில் எழுதப்பட்ட மிகப் பழைய நூல்கள் கிடைக்கவில்லை.

# 23

# தமிழ்ச் சங்கம்



இற்றைக்கு 2200 ஆண்டுகளின் முன் இலங்கைத் தீவை ஆண்ட தமிழ் அரசன் ஒருவனின் வடிவம். (வாலகம்வாகு அரசனின் உருவம் அவன் காலத்தில் மரத்தில் வெட்டப்பட்டுத் தம்பளை மலைக்கோயிலுள் வைக்கப்பட்டுள்ளது.)

தமிழ்நாட்டு மூவேந்தரும் தமிழைக் கருத்தோடு வளர்த் தார்கள். அவ்வேந்தரின் அரண்மனைகளில் தமிழ்ப் புலவர்கள் இருந் தார்கள். அவர்கள் அரசனது வெற்றிகளையும் பிற புகழ்களையும் அழகிய இனியபாடல்களாகப் பாடினார்கள். அப் பாடல்கள் அரண்மனை விழாக் காலங்களில் அரசனதும் பெருமக்களுடையவும் முன்னிலையிற் படிக்கப் பட்டன. புலவர்கள் அரிய கல்விப் பொருள்களை விரிவுரை நிகழ்த்துவதற் கெனத் தனி மண்டபங்கள் பல நகரில் இருந்தன. அவை பட்டி மண்டபங் கள் எனப்பட்டன. அரசர் சபைகளில் தமிழ்ப்புலவர் கள் பெரிதும் வரவேற்கப் பட்டனர். அரசன் அவ ரவர்களின் தரங்களை அறிந்து அவரவர்களுக்கு வேண்டுவன நல்கினான்.

பாண்டிய அரசன் ஒருவன், தமிழ் நாட்டில்

ஆங்காங்கு வாழ்ந்த தமிழ்ப் பெரும்புலவர்களைத் தனது தலைநகருக்கு அழைத்தான். அவன் தனது ஆதரவின்கீழ் தமிழ்க் கழக மொன்றை நிறுவினான்; அக்கழகம் பல பாண்டிய அரசர்கள் காலம் வரையில் நன்கு நடைபெற்றது. சங்கப் புலவர் கூடியிருந்து தமிழ் ஆய்வதற்கெனத் தனி மண்டபம் இருந்தது. அதனகத்தே கனமாப் பலகையினால் செய்யப்பட்ட பீடங்கள் இடப்பட்டிருந்தன. இப் பீடங்களில் சங்க உறுப்பினர்களாகிய புலவர்களே வீற்றிருந்தார்கள். புதிதாகப் புலமையில் அரங்கேறிய புலவர்களுக்கும் அவ்வாசனம் இடப் பட்டது. இது, பிற்காலத்தே சங்கப் பலகை விரிந்து புலவர்களுக்கு இடங்கொடுக்கும் கதையாக மாறிற்று.

புதிய நூல்களை இயற்றுவோர் தமது நூல்களுடன் பாண்டியனது தலைநகருக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் தமது நூல்களைச் சங்கப் புலவர் முன்னிலையிற் படித்துக் காட்டினர். சங்கப் புலவர்களால் குற்ற மற்றன என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களைச் செய்தோர் சிறந்த புலவர்க ளாக மதிக்கப்பட்டனர். முற்காலத்தில் கல்வி அறிவாற் சிறந்தவன் என மக்களால் மதிக்கப்படுதலே எல்லாப் புகழ்களிலும் மேலானதாகக் கருதப் பட்டது. “ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்” என்னும் திருக்குறளும் இதனையே குறிக்கின்றது.

ஆதியில் சங்கம் பாண்டியரின் தலைநகராகிய தென்மதுரையிற் கூடிற்று. அது இப்பொழுதுள்ள மதுரையன்று. அது கன்னியாகுமரிக்குத் தெற்கேயிருந்து கடலாற்கொள்ளப்பட்டது. கடல் கோளுக்குப்பின் பாண்டி யர் தமது தலைநகரைக் கவாடபுரத்துக்கு மாற்றினார்கள். அது திருநெல் வேலி மாகாணத்திலே தாமிரவர்ணி என்னும் பொருநை ஆற்று முகத் துவாரத்திலிருந்தது. அங்கு மறுபடியும் தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டது. பின்பு கவாடபுரமும் கடலாற்கொள்ளப்பட்டது. அப்பொழுது பாண்டியர் தமது தலைநகரை மணலூருக்கு மாற்றினர். அது திருச்செந்தூருக்குப் பக்கத்தில் இருந்தது. சில காலத்தின் பின்னர் பாண்டியர் தமது தலைநகரை வையை ஆற்றுக்கு அருகே இருந்த கடம்பவனத்தில் அமைத்து அதற்கு மதுரை எனப் பெயரிட்டனர். மறுபடியும் தமிழ்ச் சங்கம் இங்கு கூடி நீண்டகாலம் நடைபெற்றது. ஆதியில் தொடங்கிய சங்கம் தொடர்ந்து நடவாமல் இடையிடையே நின்றுபோயிற்றல்லவா? அக் காரணத்தினால், முதல் நடைபெற்ற சங்கம் முதற்சங்கம் என்றும், அதற்குப்பின் நடைபெற்ற சங்கம் இடைச்சங்கம் என்றும் இறுதியில் நடைபெற்ற சங்கம் கடைச்சங்கம் என்றும் பெயர் பெற்றன.

# 24
# நாடகத் தமிழ்

தமிழ், இயல் இசை நாடகம் என மூவகைப்படும். ஆதியில் நாடகத் தமிழும், பின் இசைத் தமிழும், அதன் பின் இயற்றமிழும் தோன்றின. இம்மூவகைத் தமிழும் மொழியின் இயற்கை வளர்ச்சிப்படிகளாகும்.


ஒருகாலத்து மக்கள் பேச அறியாதிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் தமது கருத்துக்களை உடல்நிலை, முகம், பார்வை என்பவை களால் வெளியிட்டனர். சதிர் என்று சொல்லப்படும் நாட்டியம் ஒரு பாட்டின் கருத்தை நடித்துக் காட்டுதலாக அமைந்துள்ளது. முற்காலத்தில் சிவனாடல், வேலன் ஆடல், திருமால் ஆடல் எனப் பலவகை ஆடல்கள் வழங்கின. இவ்வாடல்களும் சதிர் ஆட்டங்கள் போன்றனவே. நடிப்பு, நாடகம், கூத்து, துள்ளல் என்னும் சொற்கள் ஒரு காலத்தில் ஒரு பொருளில் வழங்கின. பிற்காலத்தில் நாடகம் என்பது பலர் சேர்ந்து ஒரு கதையை நடித்துக் காட்டுவதை மாத்திரம் குறிக்க வழங்குவதாயிற்று.

ஒரு கருத்தை நடித்துக் காட்டும் ஆடலுக்குப்பின் கதையை நடித்துக் காட்டும் நாடகந் தோன்றிற்று. தமிழரிடையே நாடகத் தமிழ் மிகப் பழைய காலத்திலேயே தோன்றி வளர்ச்சியடைந்திருந்தது. தமிழருடைய கடவுள் நடராசன் எனப்படுகின்றார். நடராசன் என்பதற்கு நடன சபைக்குத் தலைவன் என்பது பொருள். பொழுதுபோக்குக் கலையாகத் தொடங்கிய நாட்டியக் கலை கடவுட் புனிதமுடையதாகத் தமிழராற் கொள்ளப்பட்டு ஒருகாற் போற்றப்பட்டது.

நாடகத் தமிழுக்கு உயிர், மெய்ப்பாடு. மெய்ப்பாடு என்பது உள்ளத்தே தோன்றும் உணர்ச்சி மெய்யிடத்திற் றோன்றுதல்.

நாடகம் நடிக்கும் மேடை அரங்கு எனப்பட்டது. நாடகத் தமிழ் வளர்ச்சியடைந்த காலத்தில் நாடகத் தமிழ் இலக்கணங்கள் பல எழுதப் பட்டன. அவ்வகை இலக்கணங்கள் இன்று தமிழ்மொழியிற் காணப்பட வில்லை.

இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளின் முன் சிலப்பதி காரம் என்னும் சிறந்த தமிழ் நூல் ஒன்று இளங்கோவடிகள் என்னும் சேர இளவரசனால் எழுதப்பட்டது. அந்நூலில் அரங்கேற்று காதை என்னும் ஒரு



சங்க காலத் தமிழகம்

பகுதி உள்ளது. அதனகத்தே பழைய நாடகத் தமிழ் வழக்குகள் பல காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் என்னும் புலவர் ஒருவர் உரை எழுதியுள்ளார். அவர், பழைய நாடகத் தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்து தமது உரைக்கு மேற்கோள் காட்டியிருக்கின்றார். அதனால் முற்காலத்து நாடக இலக்கணங் கூறும் தமிழ் நூல்கள் பல இருந்தனவென்று நாம் நன்கு அறிகின்றோம்.

சிறுமியர், குரவை கும்மி கோலாட்டம் எனப் பல ஆடல்கள் புரிந்தனர். அரசர் முன்பும், பெருமக்கள் முன்பும் ஆடி அவர்களை மகிழ்விக்கும் கூத்தர் கூத்தியர் பலர் இருந்தனர்.

நாடக அரங்கு வட்டமாக இருந்தது. அதன்மீது இடப்பட்ட கொட்டில் வட்டவடிவினது. பலவகை ஓவியங்கள் எழுதிய ஆடைகள் மேற்கட்டி யாகக் கட்டப்பட்டிருந்தன. அரங்கில் திரைச் சீலைகள் பயன்படுத்தப் பட்டன.


பலர் முன்னிலையில் ஆடுதல் பாடுதல் முதலியன குலமகளிர்க்கு ஏற்ற செயலாக முற்காலத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் குல மகளிரும் ஆடல் பாடல்களை நன்கு அறிந்திருந்தனர். அரங்கு ஏறி நடிப்போர் கணிகையர் குலத்தினராகவே யிருந்தனர்.

# 25


# இசைத் தமிழ்

மனிதனுடைய உள்ளத்தெழும் உணர்ச்சிகளுக்கேற்றவாறு எழும் மெய்ப்பாட்டிலிருந்து நாடகம் வளர்ச்சி யுற்றதென்று முன்பாடத்திற் படித்தோம். உணர்ச்சிகளுக்கேற்ப மனிதன் தோற்றுவிக்கும் ஓசைகளி லிருந்து இசை வளர்ச்சியுற்றது. வீரம், மகிழ்ச்சி, அழுகை போன்றவைகளை உணர்த்தப் பாடப்படும் பாடல்கள் வெவ்வேறு ஓசைகளிற் பாடப்படுதலை நாம் காண்கின்றோம். இசையினால் மனிதனின் உள்ளத்தில் எவ்வகை உணர்ச்சியையும் எழுப்பலாம் எனக் கருதப்பட்டது. ஆகவே கால இடங்களுக்கேற்ற இசைகள் பாடப்பட்டன. தமிழர் மிகப் பழைய காலத்திலேயே மிக்க இசைப்பயிற்சி யுடையவர்களாயிருந்தார்கள். குழந்தைகளைத் தாலாட்டுதல் முதல் எல்லாவற்றுக்கும் இசை பயன்படுத்தப் பட்டது. இறந்தவர்களைக் குறித்து அழும் அழுகை தானும் இசை யுடையதாகும். ஆடவரும் மகளிரும் இசையைப்பற்றி நன்கு அறிந் திருந்தார்கள். அரசர் அவைகளில் பாடி அவர்களை மகிழ்விக்கும் பாடன் மகளிர் பலர் இருந்தனர். கதைகள் நாடக முறையில் நடிக்கப்பட்டன. அவைகளுக்கு இசை வேண்டப்பட்டது.

தமிழ்நாட்டில் வழங்கிய இசைக் கருவிகளுட் சில யாழ், வீணை, குழல், மத்தளம், கொம்பு, சங்கு, தாளம் முதலியன. அவை தோற்கருவி,




**முற்கால வீணைகள்**



கின்னரம், (ஒரு வகை வீணை) இது 'வயலின்' என்னும் கருவிக்கு நேரானது. இந்திய மக்களே ஆதியில் வில்லால் இயக்கப்படும் வீணையைக் கண்டுபிடித்தார்கள்.

துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என நால்வகையாக வழங்கின. வாய்ப்பாட்டு மிடற்றுப்பாட்டு எனப்பட்டது. தமிழில் வழங்கிய ஆதி யிசைகள் ஏழு. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன.

பண்டை நாளில் பாணர் என்னும் ஒரு வகுப்பினர் இருந்தனர். அவர்கள் இசை பாடுவதில் மிகத் தேர்ச்சியுடையவர். அவர்கள் ஊர் ஊராகச் சென்று அரசரையும் செல்வரையும் பாடினார்கள்.அவர்களின் இசைப் பாடல்களுக்கு உவந்து அன்னோர் அவர்களுக்குப் பொருள் வழங்கினர். பெரிய புராணத்திலும் நாலாயிரப் பிரபந்தத்திலும் காணப்படும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் திருப்பாணாழ்வாரும் பாணர் மரபினரேயாவர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண்மணியாரே சைவத் திருமுறைகளுக்குப் பண் வகுத்தார்.



பழைய காலத்து யாழ்

இசை தொடர்பாக மூன்று பொருள்கள் கருத்திற் கொள்ளத் தக்கன. பாடல்கள் எளிதில் பொருள் விளங்கத்தக்கனவா யிருத்தல் ஒன்று. பாடல்களில் இனிய சொற்களும் மேலான கருத்தும் அமைந்திருத்தல் மற்றொன்று. பாட்டுகள் பொருளுக்

கேற்ற இசையிற் பாடப்படுதல் இன்னொன்று ஆகும். பொருள் விளங்கமுடியாத பாடலில் நுகர்வதற் குரியது மூன்றில் ஒரு பகுதியே யாகும்.

தமிழ் நாட்டில் தெலுங்கு கன்னட இந்திப் பாடல்கள் பெரிதும் இசைப் புலவர்களால் பாடப்பட்டு வந்தன. அவைகளின் குறையைத் தமிழ் மக்கள் அறியலானார்கள். தமிழ்மக்கள் இசையைக் கேட்டு நுகர்வதற்குத் தமிழ்ப் பாடல்களே வேண்டும் என்னும் கிளர்ச்சி எழுந்தது. இதனை எதிர்த்து வாதம் புரிந்த ஒரு கட்சியும் உண்டு. இப்பொழுது தமிழ் இசை உணர்ச்சி நாடெங்கும் கமழ்கின்றது.

# 26
# இயற்றமிழ்

உள்ளத்து எழும் உணர்ச்சிகளுக்கேற்ற ஓசைகளிற் பாடப்படும் இசைப்பாடல்களையன்றி, வரலாறு, கதை, இலக்கணம் முதலிய பிற பொருள்களை விளக்கும் நூல்களும் செய்யுள் நடையில் எழுதப்படலாயின. அவ்வகை நூல்கள் இயற்றமிழ் என்னும் தலைப்பில் அடங்கும். தமிழ் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே எழுத்து நிலை அடைந் திருந்தது. ஆகவே அதன்கண் பல இயற்றமிழ் நூல்கள் தோன்றியிருந்தன எனக் கொள்ளலாம். இன்று காணப்படும் இயற்றமிழ் நூல்களுள் மிகப் பழமையுடையது தொல்காப்பியம். இது இடைச்சங்க காலத்துச் செய்யப் பட்டதென நம்பப்பட்டு வருகின்றது. தொல்காப்பியக் காலத்துக்கு முன் பல இலக்கண நூல்கள் இருந்தனவென்பது தொல்காப்பியச் சூத்திரங்கள் பலவற்றால் அறியக்கிடக்கின்றன. முன் மிக விரிந்து கிடந்த இலக்கண நூற் கருத்துக்கள் தொல்காப்பியர் காலம் முதல் சுருக்கி எழுதப்படலாயின. இதனால் தமிழ் மிக உச்சநிலை அடைந்திருந்த காலம் தொல்காப்பியத்துக்கு முன்னர் என்று நன்கு தெளிவுறுகின்றது. தொல்காப்பியத்தில் தமிழ் தொன்மொழி என வழங்கப்பட்டுள்ளது.

இன்று தமிழிற்கிடைக்கும் இயற்றமிழ் நூல்களிற் பழையன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, நீலகேசி முதலியன. இராமாயணம், பாரதம், தலபுராணங்கள், நிகண்டு நூல்கள் முதலியன பிற்காலத்தெழுந்த இயற்றமிழ் நூல்களுட் சில.


பழைய இயற்றமிழ் நூல்கள் வெண்பா, அகவல், கலிப்பா, வஞ்சிப்பா முதலிய பாடல்களாற் பாடப்பட்டுள்ளன. அவைகளைப் பாடுதற்கேற்ற ஓசைகள் செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் முதலியனவாகும். விருத்தப் பாக்கள் பிற்காலத்துத் தோன்றியன. இன்று வசன நடையிற்றோன்றி மிளிரும் நூல்களையும் இயற்றமிழ் நூல்களில் அடக்கலாம். வசன நடையில் இயன்ற நூல்கள், மேடையில் ஏறிச் சொற்பொழிவாற்றுவோன் தான் கூறும் கருத்துகளுக்கேற்ப ஓசையை எடுத்தும் படுத்தும் நலித்தும் பேசுவதுபோலப் பொருளுக்கேற்பப் படிக்கப்பட வேண்டியன. இயற்றமிழ் நூல்களிலும் இசைத்தமிழுக்குரிய சிறு பகுதிகள் காணப்படுதல் இயல்பு.

நாடகம், இசை, இயல் என்னும் இம்மூன்று வளர்ச்சிகளும் படிமுறையே தமிழ் மக்களிடையே தோன்றி இயற்கையாக வளர்ச்சி யுற்றமையினாலேயே இயல் இசை நாடகம் என்னும் வழக்குத் தமிழ்மொழி யில் மாத்திரம் காணப்படுகின்றது. பிற மொழிகளிலும் இயல் இசை நாடகம் என்னும் மூன்றும் காணப்படுகின்றன வாயினும் அவைகளை மொழியோடு தொடர்புபடுத்தி, "இயல் இசை நாடகச் சேர்மனியம்," "இயலிசை நாடக ஆங்கிலம்" என வழங்கப்படாமை அறிக.


# 27

# சமயம் உண்டான வகை

ஆதிகாலந் தொட்டு மக்கள் மரணத்துக்கு மிக அஞ்சினார்கள். இறந்தபின் உயிர்கள் இவ்வுலகத்திலோ வேறு உலகத்திலோ ஆவிகளாக உறைகின்றன என்று அவர்கள் எண்ணினார்கள். ஆகவே இறந்தவர்களை அடக்கஞ் செய்யும் போது அவர்களின் பக்கத்தில் உணவும் அவர்கள் பயன்படுத்திய பொருள்களும் வைக்கப்பட்டன. இறந்தவர்களின் ஆவிகள் மக்களுக்கு நன்மைகளை யும் தீமைகளையும் செய்யவல்லன என்னும் நம்பிக்கை மக்களிடையே இருந் தது. ஆகவே அவர்கள் இறந்த வர்களின் ஆவிகளை மகிழ்விக்கும் பொருட்டு அவைகளுக்கு மடை களும் பலிகளும் இட்டு வழிபட் டார்கள். இவ் வழிபாடு தென்புலத்தார் வழிபாடு எனப்படும். இதன் வளர்ச்சியே சிறு தெய்வ வழிபாடாக மாறியுள்ளது. இன்றைய மக்கள் பெரும்பாலோரின் சமயம் இதுவே யாகும். பின்பு மக்கள் ஒளியுடைய ஞாயிற்றை முழுமுதற் கடவுளாகக் கருதி வழிபட்டார்கள். பழைய மக்கள் எல்லோரும் கடவுளுக்கு இட்டு வழங்கிய எல்லாப் பெயர்களும் ஒளியுடையவன் என்னும் பொருள் உடையனவா யிருக்கின்றன. மக்கள் தொடக்கத்தில் கடவுளை மலைமுகடுகளிற் கண்டு வழிபட்டார்கள். பின்பு மலையின் வடிவைக் குறிக்கும் முக்கோணக் கற்கள் ஞாயிற்றின் குறியாக நட்டு வழிபடப்பட்டன. இக் கற்களே சிவலிங்கங்களாகும். சிவலிங்கங்கள் நிழல் மரங்களின் கீழ் வைத்து வழிபடப்பட்டன. அவைகளைச் சுற்றிக் கட்டிடம் எழுந்தது. அது அமைப்பில் அரசனின் அரண்மனையை ஒத்தது. அங்கு நடத்தப்படும் கிரியைகள் ஒரு அரசனுக்கு அவன் ஏவலாளர் நாள் முழுவதும் செய்யும் தொண்டுகளை ஒப்பன.



‘‘பெத்தெல்’’ பழைய பாலஸ்தினியரின் சிவலிங்கம்



பழைய அயர்லாந்து மக்கள் வழிபட்ட சிவலிங்கங்கள்

மக்கள் நல்வினை தீவினைகளைப் பற்றிப் பகுத்தறியுடையவர்களானார்கள். ஆகவே நல்லொழுக்க விதிகள் சமயத்துடன் சேர்க்கப்பட்டன. இதனை வலியுறுத்தும் பொருட்டு சுவர்க்கம் நரகம் கொள்கைகளும் அவைகளைப்பற்றிய ஐதீகங்களும் எழுந்தன. பின்பு படிப்படியே உயிர், உலகம், இறை என்பவைகளைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சி உண்டாயிற்று.

# 28

# கடவுட் கொள்கை



மொகஞ்சொதரோ மக்கள் வழிபட்ட பசுபதிக் கடவுள்

மிகப் பழைய காலத்திலேயே தமிழ் மக்கள், எல்லாம் வல்ல கடவுள் ஒருவர் உண்டு என அறிந்து அவரை வழிபட் டார்கள். நினைவுக்கு எட் டாதவர், எல்லாவற்றையும் இயக்குபவர் என்னும் பொருளில் அவர்கள் எல்லாம்வல்ல அம் முழு முதற் பொருளுக்குக் கடவுள், இயவுள் என்னும் பெயர்களை இட்டு வழங் கினர். ஆறாயிரம் ஆண்டுகளின்முன் பொறிக்கப்பட்ட மொகஞ்சொதரோ முத்திரைகளில் கடவுள் என்னும் பெயர் காணப்படுகின்றது.

கடவுள் உயிர்களிடத்துத் தாயுந் தந்தையும் போன்று அருள் வழங்குபவர் என அவர்கள் நம்பினார்கள். ஆகவே அவர்கள் கடவுளை அம்மை வடிவிலும் அப்பர் வடிவிலும் வைத்து வழிபட்டார்கள். அம்மையும் அப்பரும் வெவ்வேறினர் அல்லர் என்பதை விளக்கும் பொருட்டுப் பாதி ஆணும் பாதி பெண்ணுமாயுள்ள வடிவங்களையும் வைத்து அவர்கள் வழிபட்டார்கள்.

நல்வினை தீவினைகளின் விளைவாகிய ஊழ், மறுபிறப்பு, உயிர்களின் அழிவின்மை போன்ற உண்மைகள் அவர்களால் நன்கு அறியப்பட்டிருந்தன. உள்ளத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை நினைத்தலாகிய யோகத்தைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மொகஞ்சொதரோ முத்திரைகளில் இறைவன் யோகத்தில் அமர்ந்திருக்கும் கோலமுடைய வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இறைவன் பசுவின் (உயிர்களின்) பதி என்னும் கருத்தை விளக்க அவ் வடிவைச் சுற்றிப் பல விலங்குகள், மக்கள் முதலியவற்றின் வடிவங்களும் வெட்டப்பட்டுள்ளன.

உள்ளத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை நினைப்பதால் மனிதன் பெரிய ஆற்றல்களைப் பெறுகின்றான். அவ்வகை ஆற்றல் அடைந்தோர் சித்தர் எனப்பட்டார்கள்.

இவ்வகை ஆற்றல் பெற்றோர் உலக மக்களும், அரசனும் நல்வழிப் படுதல் வேண்டும் என்று ஆலயங்களில் சென்று கடவுளை வேண்டி னார்கள். இவ்வாறு செய்யப்படும் பூசை பரார்த்த பூசை (பிறர் பொருட்டுச் செய்யப்படும் பூசை) எனப்படும் இதற்கு எடுத்துக்காட்டு,

***"வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்***
***வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக***
***ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே***
***சூழ்க வையகமும் துயர்தீரவே"***

என்னும் சம்பந்தர் தேவாரமாகும்.

ஆலயங்கள் நல்லார் வந்து கூடும் இடங்கள் ஆதலின் அவர் இணக்கத்தினால் மக்கள் நல்வழிப்படுவார்கள் என்னும் கருத்துப் பற்றியே ஔவைப் பிராட்டியாரும் கோயிலில்லாத வூரிற் குடியிருக்க வேண்டாம் என அருளிச்செய்தார்.

தமிழ்மக்களின் வழிபாட்டுக்குரிய ஆலயங்களில் "மலங் கெடுத்து மனங்கரைக்கும்" திருவாசகம், தேவாரம் முதலிய தமிழ்ப் பாடல்கள் பக்திச் சுவை ததும்பப் பாடப்படுதல் வேண்டும். தமிழ் மக்கள் பொருள் விளங்க மாட்டாத வடமொழிச் சுலோகங்களைத் தமிழ்க்கடவுளர் முன்னிலையில் ஓதுதல் அறிவுடையார் செயலாகமாட்டாது. மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் அவர்கள் தமது உயர்நிலையாயுள்ள ஆலயங்களில் சீர்த்திருத்தஞ் செய்தல் வேண்டும்.

# 29
# தமிழரின் வீரவாழ்க்கை

வீரம் என்பது மக்கள் எல்லோராலும் கொண்டாடப்படும் சிறந்த மன உணர்ச்சி. ஒரு சிறந்த கொள்கையின் பொருட்டுத் தமது உயிருக்கு நேரும் ஆபத்தைப் பொருட்படுத்தாது எதிர்த்துப் போராடுதலே வீரம் என ஒருவாறு கூறலாம். உயிர் துறக்க ஆயத்தமாயிருத்தலின் வீரம் என்பது துறவுபோன்ற அரிய உணர்ச்சியாகும்.

தனது நாட்டைப் பகைவரினின்றும் காத்தற்பொருட்டு ஒருவராற் காட்டப்படும் வீரம் மிக உயர்வுடையதாகக் கொள்ளப்பட்டது. முற்காலத் தில் வீரத்தாற் சிறந்தவன் ஒருவனே அரசன் ஆனான். அவனே படையை நடத்திச் சென்றான். அரசனுக்கு அடுத்தபடியில் படைத்தலைவன் அதிகார முடையவனாயிருந்தான். வீரர்களுக்குப் பட்டங்கள் அரசனால் வழங்கப் பட்டன. இன்றும் அரசினரால் பெருமக்களுக்கு அளிக்கப்படும் பட்டங்களிற் பல அவ் வீரப் பட்டங்களின் எதிர் ஒலிகளேயாகும்.

முற்கால ஆடவர் தாம் வீரர் என்னும் பெயர் பெறுதல் வேண்டுமென விரும்பினார்கள். வீரனை மக்களும் அரசனும் மதித்தனர். பெண்கள் யாதேனும் ஒரு வீரச் செயலைக் காட்டுகின்ற ஒரு வீரனையே மணக்க விரும்பினார்கள். இன்று பெண்கள் கழுத்தில் அணியும் தாலியும் வீரத்தை உணர்த்துவதே. முற்காலப் பெண்கள் தம் கணவர் புலியைக் கொன்று வீரத்தின் அறிகுறியாகக் கொண்டுவந்த அதன் பற்களைக் கயிற்றிற் கோத்துக் கழுத்தில் மாலையாக அணிந்தார்கள். இன்றும் பொன்னினாற் செய்யப்பட்டுத் திருமணக் காலத்தில் அணியப்படும் தாலி அவ் வழக்கத்தின் எதிரொலியேயாகும். ஆரிய மக்களே தமிழ்நாட்டுக்கு இவ் வழக்கத்தைக் கொண்டுவந்து புகுத்தினார்கள் என வரலாறு அறியாத சிலர் கூறுவர். ஆரியர்களிடத்தில் தாலிதரிக்கும் கிரியைகளோ வழக்கங்களோ ஒருபோதும் இருக்கவில்லை.

நாட்டின் பொருட்டு யாதேனும் ஒரு வீரச் செயலைக் காட்டி மடிந்து போகின்றவனே வானுலகம் புகுகின்றான் என்று மக்கள் நம்பினார்கள். போரில் இறவாது நோய்வாய்ப்பட்டு இறந்த அரசரை வாளாற் பிளந்து, பின்பு அடக்கஞ் செய்தல் முற்கால மரபு என்பது தமிழ் இலக்கியங்களிற்

காணப்படுகின்றது. அவ்வாறு செய்தல் அவர்கள் போரில் வாளால் வெட்டுண்டிறந்தார்கள் என்பதைக் குறிப்பதற்கேயாம். இதனால் போரிடத்து மடிதலை அக்கால மக்கள் எவ்வளவு உயர்வாகக் கருதினார்கள் என்பது நன்கு விளங்குகின்றது. போரிற் புறங்கொடுத்தலும் முதுகிற் காயம் படுதலும் இழிவுடையன என்று கருதப்பட்டன. முதுகிற் புண்பட்ட அரசர் பலர் நாணத்தினால் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்தார்கள். முகத்திலும் மார்பிலும் பட்டு ஆறிய வாள், அம்புத் தழும்புகள் வீரப்பதக்கங்களிலும் (Medals) சிறந்த அணிகலன்களாக மதிக்கப்பட்டன. ஒவ்வொரு வீரனும் தனது நாட்டின் பொருட்டு உயிரைத் துரும்பென மதித்தான். போரிடத்தே வியக்கத்தகும் வீரச் செயலைக் காட்டி ஒருவன் இறந்தால் இறந்த இடத்தில் அவன் வீரச் செயல்களை எழுதிய கல் நடப்பட்டது.


ஆடவர் மாத்திரமல்லர், பெண்டிரும் வீரம் செறிந்து விளங்கினார்கள். தங்கணவரும் புதல்வரும் போர்க்களத்தே சென்று வீரச் செயல்களைக் காட்டுவதை அவர்கள் விரும்பினார்கள். வியக்கத்தகும் வீரச் செயலைக் காட்டி அவர்கள் போர்க்களத்தே மாண்டனராயின் அது குறித்துஅவர்கள் கவன்று கண்ணீர் வடித்திலர்; அவர் போரிற் புறங்கொடுத்தோடி வந்தாராயினும், முதுகிற் புண்பட்டாராயினும் பெரிதும் வருந்தினார்கள். பழைய தமிழரின் வீரத்தை நினைக்கும்போது எமது உள்ளம் சுழலுகின்றது. இன்று அவ் வீரம் எங்கு ஒளிந்தது?

# 30
# வாணிகம்

ஓரிடத்தில் உள்ள பண்டங்களை இன்னோரிடத்திற் கொண்டு சென்று விற்றுப் பொருள் ஈட்டுதல் வாணிகம் எனப்படும். பல இடங்களிலுள்ள மக்கள் பண்டங்களை விற்கவும் வாங்கவும் கூடும் இடங்கள் சந்தைகள் எனப்பட்டன. சந்தை என்பது சந்தி என்பதினின்றும் பிறந்தது. உள்நாட்டுச் சந்தைகளுக்குப் பண்டங்கள், கழுதை, பொதிமாடு, வண்டிகளிற் கொண்டு போகப்பட்டன. இன்று நமது நாடுகளில் ஆங்காங்கே நடைபெறும் சந்தை களுக்கும் முற்காலச் சந்தைகளுக்கும் அதிக வேறுபாடு இருக்கவில்லை.

தமிழ் மக்கள் மேற்கு ஆசிய நாடுகளோடு மிகப் பழங்காலந் தொட்டுக் கடல் வழியாகவும் தரைவழியாகவும் வாணிகம் நடத்தினர். சிந்துநதி முகத்துவாரத்திலிருந்து எகிப்திலுள்ள மெம்பிஸ் நகர் வரையில் பாரசீகத்துக்கூடாகப் பெரிய தரைப்பாதை யிருந்தது.

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளின் முன் எகிப்தியர் மரக்கலம் வழியாகத் தமிழ்நாட்டுக்கு வந்து மீண்ட வரலாறு அவர்களின் பட எழுத்துப் புத்தகங்களிற் காணப்படுகின்றது. அவர்கள் மொழியில் குரங்கு, யானைத் தந்தம் என்பவைகளைக் குறிக்க வழங்கிய பெயர்கள் தமிழ்ச் சொற்களின் திரிபுகள் என்று கருதப்படுகின்றன.



தென் இந்தியாவினின்றும் யாவாத் தீவுக்குச் சென்ற இந்திய மரக்கலம் (யாவாச் சிற்பத்திற் காணப்பட்டது).

"திரைகடலோடியுந் திரவியந் தேடு" "தெண் ணீர்க்கடல் கடந்தும்" "நாவாய் கவிழ்ந்த நாய் கன் போல்" என்னும் தமிழ் வழக்குகளால் தமிழ் மக்கள் கடல் கடந்து தூர தேசங் களுக்குச் சென்று பொரு ளீட்டினார்கள் என நன்கு அறிகிறோம். சுமத்திரா, யாவா, இந்துச் சீனம் முத லிய நாடுகளில் வாணிகத் தின் பொருட்டு இரண்



**அசுர் பானிப்பால் என்னும் அசீரிய அரசன் (கி.மு.850) நாட்டிய கற்றூணில் வெட்டப்பட்டுள்ள இந்திய யானையும் குரங்குகளும்**

டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சென்று தங்கிய தமிழரே அந் நாடுகளில் இராச்சியங்களைக் கோலி அவைகளை ஆண்டு வந்தனர். இன்றும் அந் நாடுகளில் தமிழர் நாகரிகத்தின் அடையாளங்கள் பல காணப்படுகின்றன.

கிறித்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தின் நாட்டை ஆண்ட சாலமன் என்னும் அரசன் தனது மாலுமிகளை அனுப்பித் தந்தம், மயில், குரங்கு, பொன், யானைத் தந்தம், அகிற் கட்டை முதலிய பல பொருள்களைத் தமிழ் நாட்டினின்றும் பெற்றான். இப் பண்டங்களைக் குறிக்கப் பாலஸ்தின் மக்கள் வழங்கிய தமிழ்ப் பெயர்கள் சிறு மாறுபாடுடன் எபிரேய மொழியிற் காணப்படுகின்றன.

கறுவா, இஞ்சி, திப்பிலி, அரிசி முதலிய பொருள்களைக் குறிக்கக் கிரேக்க மொழியில் வழங்கிய பெயர்களும் தமிழ்ச் சொற்களின் திரிபுகள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் எகிப்து, மேற்கு ஆசியா, சீனம் முதலிய நாடுகளுக்குச் சென்று வாணிகம் நடத்தியதற்கு ஆதாரங்கள் பல பிறமொழிகளில் எழுதப்பட்ட பழைய நூல்களிற் காணப்படுகின்றன.

தமிழர் 6000 ஆண்டுகளுக்கு முன்னரேயே நாணயங்களின் பயனை அறிந்திருந்தனர். இது பழைய சிந்துவெளிப் புதைபொருள் ஆராய்ச்சியால் நன்கு தெளிவுறுகின்றது.

# 31
# ஓவியமும் சிற்பமும்

இயங்கும் பொருள்களையும் இயங்காப் பொருள்களையும் அவை களின் இயற்கைத் தோற்றம் மாறுபடாது வரைதல் ஓவியம் எனப்படும். சிற்பம் என்பது அவ்வகைப் பொருள்களை, மண் கல் உலோகம் என்பவை போன்ற பருப்பொருள்களில் அமைத்தல். தமிழர் மாத்திரமேயன்றி உலக மக்கள் எல்லோருமே இவ்வகைக் கலைகளில் சிறந்து விளங்கினார்கள் எனப் பழம்பொருள் ஆராய்ச்சியாற் றெளிவுறு கின்றது. இதற்குக் காரணங்கள் ஆதியில் மக்கள் ஓவிய எழுத்துகளைப் பயன்படுத்தினமையே யாகும்.

சிந்துநதிப் பள்ளத்தாக்கிலே கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் மரம், செடி, காண்டாமிருகம், யானை, மாடு முதலிய விலங்குகளும் பிறவு மாகிய அழகிய வடிவங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவை தமிழ் மக்கள் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் அடைந்திருந்த ஓவிய, சிற்பக் கலைகளின் அறிவை உணர்த்துவனவாகும்.

தமிழ் மக்கள் அணிந்துகொண்ட அணிகலன்களும், அடி முதல் நுனி வரையும் சிற்ப வேலைப்பாடுடைய அவர்களின் கோயில்களுமே தமிழ்நாட்டில் ஓவியக்கலையும் சிற்பக்கலையும் எவ்வளவு ஓங்கியிருந்தன என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பெண்கள் முற்றத்தே இடும் அழகிய கோலங்கள் பழந்தமிழரின் ஓவியத்திறமையை நன்கு விளக்க வல்லன.

தமிழ்ச் சிற்பிகள் மரத்தில் வேலை செய்வது போல் கற்களில் வேலை செய்தார்கள் என்பது மதுரையிலுள்ள புதுமண்டபத்தையும், பெரிய ஆலயத்தையும் நோக்கும்போது நன்கு தெளிவாகின்றது. மாவலிபுரத்தில் பெரிய குன்றுகளே தேர் யானை குதிரைகளாக மாற்றப்பட்டுள்ளன. அவை இன்றைய மக்களுக்குப் பெருவியப் பளிப்பனவா யிருக்கின்றன.

ஓவியங்களையும் சிற்பங்களையும் பற்றிய விதிகளைக் கூறும் நூல்கள் பல விருந்தன. அவைகளிற் சிற்சில பகுதிகள் சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்குநல்லார் செய்த உரையிற் காணப்படுகின்றன.

இற்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பல்வகை வண்ணங்களாற் றீட்டப்பட்ட அழகிய ஓவியங்கள் அசந்தாக் குகையிலும், இலங்கையிலுள்ள சிங்க மலையிலும் காணப்படுகின்றன. அவை, நிறம் சிறிதும் மங்காது புத்தம் புதியனபோல் தோன்றுகின்றன.

# 32


# நெசவுத் தொழில்

தமிழ் நாட்டுக் கைத்தொழில்களுள் நெசவுத் தொழில் மிகப் பழங்காலத்திலேயே வளர்ச்சியுற்றிருந்தது. பழைய சிந்து வெளித் தமிழர் அழகிய ஆடைகளை நெய்ய அறிந்திருந்தனர். இந்தியாவினின்றும் மேற்குத் தேசங்களுக்கு ஆடைகள் அனுப்பப்பட்டன. ஆடை சிந்து நதி முகத்துவாரத்தினின்று சென்றமையின் அது மேற்குத் தேச மக்களால் சிந்து என வழங்கப்பட்டது. பிற்காலத்தில் கிரேக்க உரோம வணிகர் தமிழ்நாட்டி னின்றும் அழகிய பஞ்சு ஆடைகளையும் பட்டாடைகளையும் வாங்கிச் சென்றனர். இந்தியப் பட்டாடைகள் உரோமரால் 'சிலந்தி வலை' என்று கூறப்பட்டுள்ளன.

பழைய தமிழ் நூல்கள், பால் நுரை, ஆவி அனைய மென்மை யுடையன பட்டாடைகள் என்று கூறுகின்றன. கம்பளியினாலும் அழகிய போர்வைகள் நெய்யப்பட்டன. ஆடையைக் குறிக்கத் தமிழில் ஐம்பதிற்கு மேற்பட்ட சொற்கள் காணப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை ஆடையைக் குறிக்கத் தொடக்கத்தில் வழங்கிய பெயர் களாக இருந்தனவாதல் வேண்டும்.

நெசவுத் தொழில் முற்காலத்தில் குடிசைத் தொழிலாகவும் இருந்த தெனத் தெரிகின்றது. பழைய நூல்கள் பெண்களே நூல் நூற்றார்கள் என்று கூறுகின்றன. ஆங்கிலர் ஆட்சி தொடங்குவதற்கு முன் இந்திய நாட்டி லிருந்தே ஆடைகள் மேற்குத் தேசங்களுக்கு அனுப்பப்பட்டன.

# 33
# அணிகலன்கள்



5500 ஆண்டுகளின் முன் சிந்துவெளித்தமிழர் அணிந்த இருதய வடிவான கைவளை.

பெண்கள் பெரும் பாலும் தம்மைப் பலவகை யாக அலங்கரித்து அழகு செய்வதில் பிரியமுடையோர். அலங்காரம் செய்யும் முறையி லிருந்தே அணி அணியும் பழக்கம் உண்டாயிற்று.

ஒரு காலத்தில் மக்கள் தாழ்ந்த நிலையில் இருந் தார்கள். அப்பொழுது அவர்கள் உலோகங்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அவர்கள் பூக்களையும், கொடிகளையும், இலைகளையும், இப்பிகளையும் நகைகளாக அணிந்து தம்மை அழகுபடுத்தினார்கள். சிலர் அவைகளைப் போல நிறக்குழம்பு களால் உடலில் எழுதிக் கொண்டார்கள். பின்பு பச்சை குத்திக்கொண்டனர். மக்களின் நாகரிகம் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தது. அப்பொழுது அவர்கள் உலோகத்தைக் கண்டுபிடித்து அவைகளில் வேலை செய்ய அறிந்தார்கள். அப்பொழுது அவர்கள் தாம் அணிந்த இலை, கொடி, பூக்களின் வடிவங்களை உலோகங்களிற் செய்து அணியலாயினர். இவ்வாறு நகை அணியும் வழக்கு உண்டாயிற்று.

பெண்கள் காதில் அணியும் நகை தோடு எனப்படும். தோடு என்பதன் பொருள் பூ. இன்றும் தோடு கற்கள் பதித்துப் பூவின் வடிவாகச் செய்யப்படுகின்றது. சில பெண்கள் காதைத் துளையிட்டுத் துளையில் நிறமூட்டிய ஓலைகளைச் செருகியிருந்தார்கள். அவை காதோலை எனப்

பட்டன. ஓலைச் சுருள் வடிவாக உலோகத்தாற் செய்யப்பட்ட காதோலை களைப் பழைய சிற்பங்களிற் காணலாம். ஆதியிற் பெண்கள் சங்கு வளைகளையே அணிந்தார்கள். பின்பு சங்கு வளைகளுக்குப் பதில் பொன் வளைகள் அணியப்பட்டன.

மக்கள் நாகரிகம் முதிர்ச்சியடைந்தபோது பொன் வெள்ளி முதலியவைகளில், மணிகளும், முத்துக்களும் அழுத்திப் பலவகையான அணிகலன்கள் செய்யப்பட்டன. அவ்வகை அணிகலன்களைப் பழைய சிற்பங்களிலும் பழந்தமிழ் நூல்களிலும் காணலாம்.

# 34

# உடை

இடங்களுக்கு ஏற்ப மக்களின் உடை மாறுபடுகின்றது. வெப்ப நாடு களில் வாழ்வோர் அற்ப உடைகளை அணிவர். குளிர் நாடுகளில் வாழ்வோர் உடம்பு முழுவதையும் போர்த்துக் கொள்வர். தமிழ் நாட்டில் வெப்பம் அதிகம். ஆதலின் மக்கள் உடையை அற்பமாக அணிந்தார்கள். “உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்” என்னும் ஒளவையார் கூற்றினால் தமிழர் நான்கு முழ அளவினதாகிய ஆடையை இடுப்பிற் கட்டியிருந் தார்கள் என அறியலாம். தமிழ்ப் பெருமக்கள் தலையில் பாகை தரித்தார்கள்; மார்பில் உத்தரியம் அணிந்தார்கள்; இடுப்பில் உடுத்திய ஆடைக்கு மேல் ஆடை அவிழாதபடி நீளமான துணியைச் சுற்றிக் கட்டியிருந்தார்கள். பழைய தமிழ் மக்களின் உடை எவ்வகையின தென்பதை நாம் பழைய சிற்பங்களிற் கண்டுகொள்ளலாம்.

தமிழர் சட்டை தரிக்கவில்லை. அரசர் அரண்மனைகளில் வேலை புரியும் சேவகர் சட்டை தரித்தனர். தொப்பூழுக்கு மேலும் ஒடுங்கிய ஆடை ஒன்று கட்டப்பட்டது. அது உதர பந்தன ஆடை எனப்பட்டது. அரசன் நீண்டு குவிந்த முடியை அணிந்தான்.

மேல் நாடுகளில் குளிர் அதிகம். அங்கு வாழ்ந்த மக்கள் தமது உடல் முழுவதையும் ஆடையினால் மூடிக்கொண்டனர். அம்மக்கள் வெப்ப நாடு களுக்குச் சென்றபோதும் அவ்வகை உடைகளையே அணிந்தனர். அவர்கள் கிழக்கே நாடுகளைக் கைப்பற்றி அவைகளை ஆளத் தொடங்கினர். அப் பொழுது அரசினரின் கீழ் அலுவல் பார்ப்போர் மேல் நாட்டவரைப்போல உடுத்தல் வேண்டுமென்னும் சட்டம் இருந்தது. ஆகவே கிழக்கு நாடுகளி லும் குளிர் மிகுந்த மேற்கு நாட்டு மக்களைப்போலச் சட்டை தரிக்கும் வழக்கம் உண்டாயிற்று. இவ்வழக்கம் நாள் வீதம் சிறிது சிறிதாகப் பரந்தது. இப்பொழுது கிழக்குத் தேச மக்கள் மேற்கு நாட்டவர் களைப் போல் உடுப்பதிற் பெருமை கொள்கின்றனர். வெவ்வேறு மக்கள் கலப்பதினால் ஒருவர் பழக்கவழக்கங்கள் மற்றவர்க ளிடையே பரவுவது வழக்கம். நம் முடைய முன்னோர் குடுமி வைத்திருந்தார்கள். குடுமி மிகவும் பரிசுத்த முடையதென்று கருதப்பட்டது. இன்று நம்மவருள் பலருக்குக் குடுமி இல்லை. இரு வேறு மக்களின் நாகரிகம் கலப்பதால் இவ்வகை மாறுதல்கள் பல உண்டாவது இயல்பு.

# 35

# உணவு

தமிழ் மக்கள் ஊன்வகைகளையும் தாவர வகைகளையும் நாவுக்கினிய நல்ல உணவுகளாகச் சமைத்து உண்டார்கள். அவர்கள் தாவர வகைகளையும் தானிய வகைகளையும் முக்கிய உணவாகவும், ஊனைக் கறியாகவும் பயன்படுத்தினர். மேற்குத் தேசமக்களின் உணவுமுறை இதற்கு நேர் மாறானது.

தமிழரின் உணவு வகைகள் பலவகையின. தாளிதக்கறி, பொரிக்கறி, வறை, துவட்டல், துவை, புளிங்கறி, காடி, ஊறுகாய் முதலியன கறிவகை களுட் சில. அடிசில், அமலை, அமுது, அயினி, அவி, அவிழ், அமுப்பு, உணா, ஊண், உண்கூழ், சதி, சாதம், சொன்றி, சோறு, துப்பு, தோரி, பருக்கை, பாத்து, பிசி, புகா, புழுக்கு, புற்கை, பொம்மல், பொருவு, மடை, மிசை, மிதவை, மூரல்,வல்சி என்பன சோற்றின் பெயர்கள். ஒவ்வொரு பெயரும் வெவ்வேறு வகையாகச் சமைக்கப்பட்ட சோற்றை உணர்த்தும். பருப்போடு சேர்த்துச் சமைக்கப்பட்ட சோறு பொங்கல் எனப்பட்டது. களி, கூழ், துழவை, கஞ்சி, நீராரம், தோசை, அடை முதலியன வெவ்வேறு வகையாகச் சமைக்கப் பட்ட உணவுகளாகும். அப்பம், பிட்டு, அஃகுல்லி, இலையடை, நொலையல், மெல்வடை, பொல்லல், இடி, சஃகுல்லி, நுவணை, துவை, சீடை, வடை முதலியன பணியாரங்களுட் சில.

தமிழ் மக்கள் சுவைகளின் நுட்பங்களை அறிந்து நுகர்தற்கினிய உணவுகளைச் செய்து உண்டனர். உடல் நலத்தைப் பேணும் பொருட்டுச் சரக்கு வகைகளை உணவுடன் கலந்தனர். ஏற்ற உணவுகளை உண்பதால் நோயின்றி வாழலாமென நம்பப்பட்டது. நாம் கறிகளுடன் சேர்த்துச் சமைக்கும் சரக்குகள் பெரும்பாலும் மருந்தாகப் பயன்படுவனவாகும். இவ்வளவு நுட்பமாக வேறெந்த மக்களும் சமையல் செய்யும் முறையை அறித்திருந்தார்கள் எனக் கூற முடியாது.

✪✪✪